
# GOLDEN JUBILEE
## 1950-2000





**KM/ Vipulananda Central College**
**Karaitivu (E. P.)**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்விழா ஞாபகார்த்த மலர்

## 1950-2000

வெளியீடு

**கமு/ விபுலானந்த மத்திய கல்லூரி**

**காரைதீவு (கி.மா).**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்விழா மலர்க்குழு

**காப்பாளர்**


**திரு.செ. அருள்மொழி** (அதிபர்)

**தொகுப்பாசிரியர்**

**திரு.தெ. செல்லத்துரை** (ஆசிரியர்)

**உறுப்பினர்கள்**

**திரு. இரா. கிருஷ்ணபிள்ளை** (இ.அதிபர்)
**திரு.க.விஜயரெட்ணம்** (R.D.O.)
**திரு.ந.லோகராஜ®** (முதலியார்)
**திரு.தி.கிரிநிவாசன்** (ஆசிரியர்)
**திரு.க.புண்ணியநேசன்** (ஆசிரியர்)
**திரு.எஸ்.சிவராசா** (ஆசிரியர்)
**திரு.து.யோகநாதன்** (ஆசிரியர்)



இடமிருந்து வலமாக :-

முன்வரிசை

**திரு. இரா. கிருஷ்ணபிள்ளை, திரு.செ.அருள்மொழி, திரு.தெ.செல்லத்துரை.**

பின்வரிசை

**திரு.ந.லோகராஜ® , திரு.தி.கிரிநிவாசன், திரு.க.விஜயரெட்ணம், திரு.க.புண்ணியநேசன், திரு.எஸ்.சிவராசா, திரு.து.யோகநாதன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர் மலர உரமிட்டோர்
என்றும் மறக்க முடியாதவர்கள்.
திரைகடலோடி திரவியந் தேட முனையும்
அன்பு நெஞ்சங்களே!
நீங்கள் செய்தது சாமானிய செயலல்ல
ஒரு கிராமத்தின் இதயத்திற்கு இரத்தம்
பாய்ச்சி உள்ளீர்கள். உங்களது நிகரற்ற
வள்ளன்மை மேலும் வியாபிக்க
கல்வித்தாய் அருள்புரிவார்.

**ஐக்கிய இராச்சியத்தில் உள்ள அன்பு இதயங்கள் :-**

01. S. Kathirkamanathan
02. S. Sinnakannu
03. Kanthithasan
04. S. Sivananthan
05. Uthayan
06. Jeganathan
07. Puvanenthiren
08. T. Shritharan
09. Subakaran
10. Rajasingam
11. Yogarajah (Master)
12. Sivakumar
13. S. Karunanithy
14. Thayapaskaran
15. Kumar
16. Archchunan
17. Premananthan
18. Arulchelvam
19. Maran
20. Sothy
21. Sri
22. M. Sivananthan
23. V. Soundaramoorthy
24. Yogarajah

**அவுஸ்ரேலியாவில் வாழும் எம் அன்பு நெஞ்சங்கள் :-**

01. V. Sathiyamoorthy
02. Thaya Srikandarajah
03. T. Devathasan
04. K. Jegatheswaran
05. S. Ganesaretnam
06. T. Kanesanaathan
07. N. Gunaratnam
08. Eng. Alagaiyah
09. A. Mahendran
10. T. Nadesan
11. Eng. S. Vickineswaran

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய கீதம்

சிறீ லங்கா தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நல்லெழில் பொலி சீரணி
நலங்கள் யாவும் நிறை வான்மணி லங்கா
ஞாலம் புகழ வள வயல் நதி மலை மலர்
நறுஞ்சோலை கொள் லங்கா
நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்
நமதுதியேல் தாயே
நமதலை நினதடி மேல்வைத்தோமே
நமதுயிரே தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதாரருள் ஆனாய்
நவை தவிர் உணர்வானாய்
நமதோர் வலி யானாய்
நவில் சுதந்திரம் ஆனாய்
நமதிளமையை நாட்டே
நகு மடி தனையோட்டே
அமைவுறும் அறிவுடனே
அடல்செறி துணிவருளே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே.

நமதார் ஒளி வளமே
நறிய மலர் என நிலவும் தாயே
யாமெல்லாம் ஒரு கருணை அனைபயந்த
எழில்கொள் சேய்கள் எனவே
இயலுறு பிளவுகள் தமை அறவே
இழிவென நீக்கிடுவோம்
ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி
நமோ நமோ தாயே நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக் கீதம்

*பல்லவி*

ஒரு தனி முதல் நிலை மொழி தமிழ் வாழ்க
ஓது நல் மாணவர் வாழ்க

*அனுபல்லவி*

மருவெனத் தரமுயர் எமதுயிர் மத்திய
மாவித்தியாலயம் வாழ்க
தெருள் அருள் பல கலை இருளகல் தெய்வ
தேசுநல் ஆசிரியர் வாழ்க

எறிகடல் அலையின் எழுமொலி முழவம்
என விளை செந்நெல் குலைகள்
பறிசுமையாக பரதமும் ஆடும்
பழனமும் சூழக் கயல்கள்

தெறிதடி ஓடப் புனல்கள்
தெளிந்திசை பாடத் திசைகள்
அறிந்திடும் காரேர் மூதூர்
அமைந்த வித்யாலயம் வாழ்க (ஒரு தனி)

*சரணம்*

1. பத்தினித் தெய்வம் சித்தருள் காவல்
பார்த்திடத் திருப்பலவாக
வித்தகராக இத்தரை பேணும்
விபுலானந்தன் வாழ்க
முத்தமிழ் ஏடாம் யாழின்
முழுவுயர் நூலாய்க் காணும்
புத்தெழில் காரைதீவை
புதுக்கும் வித்தியாலயம் வாழ்க (ஒரு தனி)

2. ஆத்மீக நெறியும் அறிவியல் கலையும்
ஆக்கிய மொழியினை நிலமும்
காத்திடும் வீரக்காதலும் சேர்த்து
காவியப் பண்பாடுறவும்
ஏத்திடப் பாருயர் வேத்தும்
ஏடுறு கல்விக் கூடம்
வாழ்த்திடும் தாயே நீடு
வாழிய வாழி வாழி (ஒரு தனி)

ஆக்கம் : பொன். தவநாயகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே !

வான மளந்த தனைத்தும் அளந்திடு
வண்மொழி வாழியவே !

ஏழ் கடல் வைப்பினுந் தன் மணம் வீசி
இசை கொண்டு வாழியவே !

எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே !

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே !

தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ் நாடே !

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ் மொழியே !

வானம் அறிந்த தனைத்து மறிந்து
வளர்மொழி வாழியவே !

மகாகவி சுப்பிரமணிய பாரதியார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன் விழாக் கீதம்

வங்காள விரிகுடா பூமங்கள வாழ்த்தோத,
வாய்ப்பளிக்கும் ஒளிக்கதிரால் இளம் பரிதி கழுவ,
சங்க மொழி கலைமகளின் வீணையிலே எழும்ப,
சகல கலைக் காவலுக்கும் "விபுல முனி" நிற்க,
திங்கள் முகச் சிலம்பரசி சீரனைத்தும் வழங்க,
திசை முகங்கள் செப்பமிட்டு ஆலயங்கள் பேச
இங்கு வாழ் "சித்தானை" தத்துவங்கள் பாய்ச்ச
இலங்குகல்விக் கூடமிதன் பொன்விழவு பொலிக !

பிள்ளையார் சுழி, குடிசைப்பந்தலுக்குள் எழுதிப்
பொன்விழா கொண்டாடும் வாலையிவள் பெருமை
அள்ளியிந்த உலகெங்கும் தெளிக்கின்ற செயலால்
ஆர்ப்பாட்டம் காட்டாத அடக்கத்தின் அருமை
உள்ளத்தின் பள்ளமெலாம் அறிவுமெழுகாலே
உயிர்ப்பூட்டி மெழுகித் தன்கையாலே "பொத்தி" த்
துள்ளாமல் அசையாமல் விழுது விட்டு வளர்ந்து
தூரத்தும் எழுபுகழால் உள் நிறைவாய் ! ஓங்க !

மரபுவழி இனங்கண்டு மனிதநேயத்தை
மாணவராய் அணைவோரின் மனங்களிலே இருத்தித்
தரத்துக்குள் வழிகாட்டித் தக் கோராய்ப் புதுக்கும்
தலைவியிவள் வரம்பெற்ற பேறு நமக்கின்று
உரமுறிப் புத்தாயிரத் தாண்டில் ஏறி
உலாவந்த பொன்விழா வழியவிட்ட "பாணி"
அரம் உரசி இரத்தினத்தை ஒளியேற்றுமாப்போல்
அறிவரசி ஐம்பதாண் டெழுச்சி நடை பாய்க !

"விபுலபுரி" மண்தந்த வித்தகனின் பெயரில்
விண்ணளக்கும் அறிவுதரும் வித்தகியின் மூச்சு
சமூகத்தின் தாற்பரியந் தளைத்தெழுந்த விலாசம்
சளைக்காத உழைப்புக்குச் சான்றான பேச்சு
சுமக்கின்ற பாரமொரு சுக மென்றே தாங்கித்
தூசு தட்டிக் கலை நிறைத்துச் சுவை பிலிற்றும் வீச்சு,
இமை மூடி விழிப்பதற்குள் இவள் கொள்ளை யழகாய்,
எத்தனையோ பூணாரம் பூட்டி நின்றாள் வாழ்க !

உறவுகளாய்ச் சேவை பெற எங்கெங்கோ தேடி
அழைத்துத்தன் ஊர்க்கல்விப் பசியடக்கி வென்றாள்.
பொறுமைக்கும் அடையாளம், ஆலயமாய்ப் பேணப்
பொருந்துமிவள் செயற்பாடு பூரித்தோம் இதயம்.
நிறைமாதக் கர்ப்பிணியாய்க் காலமெலாம் வருடி
நிறைமதியாய், இருப்பியலின் நீட்சியிலே நீள
இறையருளால் இவள் வளர்ச்சி இன்னுமின்னும் உயர்ந்து
எழுத் தொலியாய் வாழ்க வென நிதம் வாழ்த்துகின்றோம்.

**கவியாக்கம் : பொன். சிவானந்தம்**

*கவிச்செல்வர், மதுரக்கவிமணி, கவிமுத்து.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரிதழின் உள்ளே.....


| | பக்கம் |
|---|---|
| ☞ பாடசாலைக் கொடியும் இலச்சினையும் | |
| ☞ கல்லூரி முதல்வர் மொழிந்தவை | |
| ☞ தொகுப்பாசிரியர் சொல்வது | |
| ☞ ஆசிச்செய்தி | |
| ➤ சுவாமி ஆத்மகனாநந்த ஜீ அவர்கள் | i |
| ➤ சுவாமி ஜீவனானந்த ஜீ அவர்கள் | ii |
| ➤ சிவயோகச் செல்வர் த. சாம்பசிவம் அவர்கள் | iii |
| ☞ வாழ்த்துச் செய்தி | |
| ➤ கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் | iv |
| ➤ கௌரவ பிரதி அமைச்சர் சோ.கணேசமூர்த்தி அவர்கள் | v |
| ➤ கௌரவ மா. குணசேகரம் (சங்கர்) - பாராளுமன்ற உறுப்பினர் | vi |
| ➤ திரு. கே. பரமேஸ்வரன் - செயலாளர்,கல்வி கலாசார வி-துறை அமைச்சு | vii |
| ➤ திரு. இ.சிவானந்தன் - மாகாண கல்விப் பணிப்பாளர் | viii |
| ➤ திரு. கே. தியாகராசா - பிராந்திய இணைப்பாளர் (அம்பாறை/மட்டக்களப்பு) | ix |
| ➤ ஜனாப். எம்.ஏ.எம். சாபீடீன் - மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் | x |
| ➤ ஜனாப். மருதூர் ஏ. மஜீத் - வலயக் கல்விப் பணிப்பாளர், கல்முனை | xi |
| ➤ திரு. ரீ. லங்காநேசன் - மேலதிக செயலாளர், புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு | xii |
| ➤ திரு.எஸ். இராமகிருஷ்ணன் - பிரதேச செயலாளர், காரைதீவு. | xiii |
| ➤ திருமதி. எம். சத்தியதேவா-கோட்டப்பொறுப்பு உதவிக் கல்விப் பணிப்பாளர், காரைதீவு. | xiv |
| ➤ திரு. ரீ. சண்முகரெட்ணம் - உதவிக் கல்விப்பணிப்பாளர்(விஞ்ஞானம்) | xv |
| ➤ திரு. என். நடராஜா - முதல்வர், கல்விக் கல்லூரி, மட்டக்களப்பு. | xvi |
| ➤ திரு. எம். செல்வராசா-சிரேஷ்ட விரிவுரையாளர், கிழக்கு பல்கலைக்கழகம். | xvii |
| ➤ திரு. எஸ். மகேசன் - செயலாளர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் | xviii |
| ➤ திரு. பீ. பத்மநாதன் - தலைவர், பழைய மாணவர் சங்கம். | xix |
| ➤ திரு. வீ. சுப்பிரமணியம் - உதவிக் கல்விப்பணிப்பாளர்(தமிழ்) | xx |
| ☞ ஆரம்பகர்த்தாக்கள் | 01 |
| ☞ முதல் மாணாக்கரின் நினைவுகூர்வு - ச.சச்சிதானந்தம் | 02 |
| ☞ சேவைபுரிந்த அதிபர்கள் | 03 |
| ☞ "வாழக்கற்றுக்கொள்" - எம். ரவீந்திரன், பிரதி அதிபர் | 05 |
| ☞ வரலாற்று நோக்கு - இரா. கிருஷ்ணபிள்ளை, முன்னாள் பிரதி அதிபர் | 07 |
| ☞ ඉතිහාසය - ජයසේන සෝමාවති | 19 |
| ☞ கவிதை : "நதிமகளே" - காரை. செல்வன் | 22 |
| ☞ சிறுகதை : ஊருக்கு வந்த உதய நிலா-எஸ். நாகராஜன், பழைய மாணவன் | 23 |
| ☞ பாட இணைப்பாடவிதான செயற்பாடுகள்-எஸ். கங்காதரன், முன்னாள் பிரதி அதிபர் | 26 |
| ☞ சேவையாற்றிய ஆசிரியர்கள் | 31 |
| ☞ பாடசாலை அபிவிருத்திச் சங்கம் | 34 |
| ☞ பழைய மாணவர் சங்கம் | 35 |
| ☞ கல்விசார், சாரா ஊழியர்கள் | 36 |
| ☞ முகாமைத்துவக் குழுவும் செயற்பாடுகளும் | 39 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | பக்கம் |
|---|---|
| ☞ ஒழுக்காற்று சபையும் செயற்பாடுகளும் | 40 |
| ☞ பாட இணைப்பாளர் குழுவும் அவர்களின் செயற்பாடுகளும் | 41 |
| ☞ மாணவர் தலைவர்கள் 2000, வெளியேறிய மாணவ தலைவர்கள் | 42 |
| ☞ கவிதை "நமது விபுலானந்தா நற்றுணையானதே" - ரீ. யோகநாதன், ஆசிரியர் | 44 |
| ☞ Discipline - M. Sivapalan. LSA (English) | 45 |
| ☞ முன்னாள் மாணவ தலைவனின் செய்தி - எஸ். ராதீந் | 47 |
| ☞ முன்னாள் பிரதி மாணவ தலைவியின் செய்தி - வி. பிரசாந்தினி | 48 |
| ☞ விபுலானந்தாவும் நானும் - ரீ. மயில்வாகனம், முன்னாள் அதிபர் | 50 |
| ☞ பெருமகிழ்வெய்துகிறேன் - கே. நடராஜா, முன்னாள் அதிபர் | 54 |
| ☞ எனது கால எண்ணச் சிதறல்கள் - எஸ். மகாலிங்கம், முன்னாள் அதிபர் | 56 |
| ☞ எனது நினைவுகளில் - கே. கணபதிப்பிள்ளை, இளைப்பாறிய காரியாலய உதவியாளர் | 59 |
| ☞ The Roles of the Teacher in the Reading Classroom - N. Thiyagarajah, Teacher | 60 |
| ☞ பரீட்சை செயற்குழுவும் அதன் செயற்பாடுகளும் | 62 |
| ☞ விளையாட்டு செயற்குழுவும் அதன் செயற்பாடுகளும் | 63 |
| ☞ சாரணர் செயற்குழு | 64 |
| ☞ சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் | 65 |
| ☞ எமது பாடசாலை பாண்ட் வாத்திய அணியினர் | 66 |
| ☞ செய்தி - எஸ். தங்கவேல், முன்னாள் பாடசாலை அபிவிருத்திச்சங்கச் செயலாளர் | 67 |
| ☞ செய்தி - கே. விஜயரெட்ணம், முன்னாள் பாடசாலை அபிவிருத்திச்சங்கச் செயலாளர் | 68 |
| ☞ கவிதை "பொன்விழாக் காணும் எனது விபுலானந்தா" - எஸ். சிவராஜா, ஆசிரியர் | 71 |
| ☞ A Teacher's Service and the expectation of the Society - K. Punniyanesan, Teacher | 72 |
| ☞ செய்தி - கே. மகாலிங்கசிவம், முன்னாள் பாடசாலை அபிவிருத்திச்சங்கச் செயலாளர் | 75 |
| ☞ விதிபடைத்த விபுலானந்தா - பொன். தவநாயகம், ஓய்வு பெற்ற அதிபர் | 76 |
| ☞ கள்ள இளனியும் கந்தப்பு வாத்தியாரும் - ரீ. செல்லத்துரை, ஆசிரியர் | 78 |
| ☞ உயர்தர மாணவர் ஒன்றியமும் அதன் செயற்பாடுகளும் | 81 |
| ☞ உயர்தர மாணவர் கலா மன்றமும் அதன் செயற்பாடுகளும் | 82 |
| ☞ இறும்பூதெய்துகிறேன் - ஈ. விநாயகமூர்த்தி, முன்னாள் கிரா. ம. தலைவர் | 83 |
| ☞ கவிதை - "வளமுடன் வாழ்கவென்று வாழ்த்துகின்றேன்" - பீ. வினோத் | 85 |
| ☞ பொன்விழா பொலிவுற்று மணம்வீசட்டும் - டாக்டர் மா. பரசுராமன், மு.கிரா. ம. தலைவர் | 86 |
| ☞ கவிதை - "தாய் போல வாழ்க" - பழைய மாணவன் | 88 |
| ☞ The Role of School in Maintaining Peace and Happiness - T. Vithyarajan, Teacher | 89 |
| ☞ அந்த இனிய நாட்கள் - எஸ். தியாகராஜா, அலுவலக உதவியாளர் | 92 |
| ☞ தமிழ் இலக்கிய மன்றமும் அதன் செயற்பாடுகளும் | 93 |
| ☞ ஆங்கில இலக்கிய மன்றமும் அதன் செயற்பாடுகளும் | 94 |
| ☞ கணித விஞ்ஞான மன்றமும் அதன் செயற்பாடுகளும் | 95 |
| ☞ இந்து சமய மன்றமும் அதன் செயற்பாடுகளும் | 96 |
| ☞ சுற்றாடல் மன்றமும் அதன் செயற்பாடுகளும் | 97 |
| ☞ விவசாய மன்றமும் அதன் செயற்பாடுகளும் | 98 |
| ☞ பொன்விழா போட்டி முடிவுகள் | 99 |
| ☞ பொன்விழாக் கட்டுரைப் போட்டியில் முதலாமிடம் பெற்ற கட்டுரைகள் | 100 |
| ☞ பொன்விழாக் கவிதைப் போட்டியில் முதலாமிடம் பெற்ற கவிதைகள் | 105 |
| ☞ க.பொ.த. சா/த, உ/த பெறுபேறுகளின் கண்ணோட்டம் | 109 |
| ☞ இதுவரை பல்கலைக்கழக அனுமதி பெற்றோர் | 112 |
| ☞ நன்றியுரை | 114 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக் கொடியும் இலச்சினையும்





ஒரு தாபனத்தின் தனித்துவத்தை வெளிப்படுத்திக் காட்ட கொடி - இலச்சினை ஆகியவை உதவுவனவாகும்.

பாடசாலை ஒன்றின் உன்னத சிறப்பு மிக்கதும், மதிப்பு வாய்ந்ததுமான அம்சங்களாக கணிக்கப்படுபவை இவைகளாகும். அவையாவன :

1. இலச்சினை (Emblem)
2. கீதம் (Anthem)
3. கொடி (Flag)

வரலாற்றுப் பின்னணி, பாடசாலையும் அதன் பிரதேச வளநிலைகளும், மத, மரபுவழி, கலாசார விழுமியங்கள், மேற்கோள் என்னும் அடிப்படை உட்குறிப்புக்களை சூசகமாக விளக்கிக் காட்டுவதாக இந்த மூன்று அம்சங்களும் இடம்பெறும்.

எங்கள் கல்லூரிக் கொடியானது ***கருஞ்சிவப்பு*** (Maroon) வர்ணத்துடன் ***மஞ்சள்*** வர்ணமும், (Yellow) கொண்டதாக அமைந்துள்ளது. இந்த இரு வர்ணங்களும் பார்வைக்கு எடுப்பாகவும், துலாம்பரமாகவும் உள்ளதை யாம் அறிவோம். வண்ணத்துப்பூச்சி சிறகடிப்பது போல் எங்கள் கல்லூரிக் கொடி அசைவது பெருமை அளிக்கிறது அல்லவா.

***அடுத்து இலச்சினை பற்றி நோக்குவோம்.***

எமது இலச்சினையில் உள்ள ***சூரியன்*** ஒளிமூலமாகும். இது அகிலத்தில் உள்ள எல்லாவற்றையும் இயங்க வைப்பதாக உள்ளது. உயிர்கள் எல்லாவற்றையும் இயங்கச் செய்து மானிட வாழ்வையே வளமூட்டும் கல்வியை ஒரே சீராக வழங்கும் கல்வியூட்டலை அதாவது கற்றல் கற்பித்தல் செயற்பாட்டின் இலட்சியத்தை வெளிப்படுத்துவதாக உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்காக்கும் வேளாளர்கள் தொன்றுதொட்டு உழவுத்தொழிலை மேற்கொண்டு சீர்சிறப்புடன் வாழ்ந்துவரும் எமது கிராமத்தின் பெரும்பான்மைத் தொழிலின் பெருமையினையும் நெற்கழனிகள் சூழ்ந்த மருத நிலத்தின் வயற்பிரதேசங்களை உள்ளடக்கியதாக **உழவனும் எருதுகளும்** ஏர் பிடிக்கும் காட்சி தமிழர் பெருமையையும் பறைசாற்றுவதாக உள்ளது.

***தென்னை மரமானது*** கரையோரக் கிராமம் என்பதையும் இயற்கை வனப்பு மிக்க தென்னஞ்சோலைகள் சூழ்ந்த பிரதேசம் என்பதையும் எடுத்துக் காட்டுவதாக உள்ளது.

***யாழ்*** என்னும் பண்டைத் தமிழனின் இசைக்கருவியும், **யாழ்நூலும்** முத்தமிழ் வித்தகன் பிறந்த மண் இதுதான் என்று எடுத்து இயம்புகின்றது. சுவாமி விபுலானந்தரின் நாமத்தால் அழைக்கப்படும் எமது கல்லூரியுடனும் இந்த எழில் மிகுந்த கிராமத்தின் அதாவது காரைதீவுடனும் இரண்டறக் கலந்து பெருமை பேசும் அந்த ஈழக்கரிகாலனை மரபு வழியாகச்சுற்றி நிற்கும்.


மங்கலச் சின்னமான **குத்துவிளக்கு** சமய கலாசார விழுமியத்தினை சுட்டிக்காட்டி நிற்பதோடு இந்துமத பண்பாட்டுக் கோலங்களின் உறைவிடமான எமது கிராம பண்பாட்டை மட்டுமன்றி ஞானச்சுடர் பரப்பும் கல்லூரியின் விழுமியங்களையும் அறிவிக்கும் சின்னமாக காணப்படுகின்றது.

அடுத்து அறிவொளி பரப்பும் சாதனமான **நூல்** கல்விச் சாதனங்களின் தலையாயது. கல்லூரியின் குறிக்கோளை எடுத்துச் செல்லும் பிரதான ஊடகம் இந்தக் கல்வியின் பூரணத்துவமானதும் இறுதி இடமானதுமான மானிட சாதியின் நன்மையை இலக்காகக் கொண்ட மேற்கோளாக ''ஒன்றே குலம்" என்பது ("One world - One Nation") மனிதகுலம் எல்லாம் ஒன்றே என்ற பரந்த மனப்பான்மையை மாணவரெல்லாம் அடைவதற்குரிய இடம் என்னும் பொருளை எடுத்து இயம்புகின்றது.

இத்தகைய குறிப்புக்களை விளக்கி கல்லூரி அப்பணியினை முன்னெடுத்துச் செல்லுவதை இரத்தினச் சுருக்கமாக எமது இலச்சினை விளக்குவது யாமெல்லாம் பெருமைபடத்தக்கது. பொன்விழா நிகழ்வுகளில் இவற்றையும் நாம் அசை போடும் பொழுது இந்த இலச்சினையை ஆக்கி அளித்தவர்கட்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *Our Principal*




**MR. C. ARULMOLY,**

B. Sc.(Agri.), PGDE, PGDEM, M. Sc. (Edu. Mgt.), SLEAS - III

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்லூரி முதல்வர் மொழிந்தவை

காரைதீவு விபுலானந்த மத்திய கல்லூரி 1950 ஜனவரி 15ந் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இக்கால கட்டத்தில் இவ்வாறான கல்வி நிலையமொன்றின் அத்தியாவசியத் தேவையை உணர்ந்த கல்விமான்களும் சமூகப்பற்றுள்ளவர்களுமான பல பிரமுகர்கள் மேற்குறித்த தினத்தில் கால் நட்டு ஆரம்பித்த விருட்சமே இன்று தண்ணிழல் பரப்பி கல்விப்பயிரானது காரைதீவில் செழித்தோங்க வழிவகுத்து இன்று கோலாகல முறையில் பொன்விழாக் காணும் மங்கலநாள் நோக்கி வீறு நடைபோடுகிறது. கல்வி அபிவிருத்திப் பாதையில் அடியெடுத்து வைத்த அந்நாளில் ஆங்கில கனிஷ்ட பாடசாலை என்னும் மழலையாய் குதலை மொழிபேசி பல்வேறு பருவங்களைக் கடந்து பக்குவமடைந்து முழுமையுடன் மிளிர்கிறது.

சிரேஷ்ட பாடசாலை தராதர மட்டம் முதல் உயர்தர பாடசாலை தராதர மட்டம் வரையிலும் கல்விப் பொதுத்தராதர சாதாரணம் முதல் உயர்தரம் வரையிலும் மேம்படுத்திய பெருமை இக்கல்லூரிக்கு உண்டு. இக்கல்லூரியின் வளர்ச்சியில் தம்மை அர்ப்பணித்த அரசியல் தலைவர் முதல் அதிபர்கள் வரை, பிரமுகர்கள் முதல் ஆசிரியர்கள் வரை பழைய மாணவர் முதல் இன்றைய மாணவர் வரை நினைவு கூர வேண்டியவர்களாக உள்ளோம்.

பொன்விழாக்காணும் இவ்வேளையில் வெளிவரும் இம்மலர் மேற்கூறிய கடந்த கால வரலாறுகளையும் நாயகர்களையும் வளர்ச்சி விபரங்களையும் அறிந்து கொள்வதற்கு கிடைக்கும் ஓர் நற்பேறே எனலாம். இந்த விருட்சத்தின் தண்ணிழலில் சமூகத்தின் உயர் மட்டங்களில் அமர்ந்திருப்போரை எண்ணுகையில் யான் பேருவகை அடைகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் வரட்சியும், நாட்டில் அமைதியினங்களும் ஏற்படும் போதெல்லாம் இப்பாடசாலையின் செழுமை பாதிக்கப்பட்டே வந்துள்ளது. பல்வேறு அபிவிருத்திப் பணிகளையும் எதிர் நீச்சலின் மத்தியிலேயே சாதிக்கக் கூடியதாக உள்ளமை தெளிவாகின்றது.

பாடவிதான இணைப்பாடவிதான செயற்பாடுகளில் பெற்றோர்களினதும் நலன்விரும்பிகளினதும் ஒத்துழைப்பு மேலும் அதிகரிப்பதன் மூலம் இன்னும் அபிவிருத்தியடைய வாய்ப்புகள் நிறைய உண்டு. எனினும் நகர்ப்புற பாடசாலைகளில் காணப்படும் கரிசனையையும் ஒத்துழைப்பினையும் காணவியலாதிருப்பது துரதிஷ்டமே.

பொன்விழாக்காலம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இவ்வேளையில் பழைய மாணவர் ஒன்றியம் புனருத்தாரணம் செய்யப்பட்டு புதிய உத்வேகம் பெற்றிருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும். எமது கல்லூரி போன்ற வளப்பற்றாக்குறை உள்ள தாபனங்கட்கு சகலரும் ஒன்றுபட்டு முழுமனதோடு ஈடுபாடு வைத்தாலே முன்னேற்றத்திற்கான ஒரே வழி எனலாம். தனது ஐம்பதாவது அகவையின் புதிய உத்வேகம் பெற்று புத்தாயிரத்தில் பேறு யாவற்றையும் பெறுவதற்கு எல்லோரினதும் ஒத்துழைப்பையும் கேட்டுக்கொள்வதோடு இந்த மங்களகரமானதோர் விழாவினைக் கொண்டாடுவதற்கு சந்தர்ப்பத்தை நல்கிய இறைவனுக்கு மாநன்றிகள் கூறிக் கொள்வதுடன் பொன்விழாவோடு இணைந்த பல்வேறு நிகழ்வுகளிலும் இதயபூர்வமான ஒத்துழைப்பு வழங்கிய நலன்விரும்பிகள், அதிகாரிகள், ஆசிரியர்கள், பணியாளர்கள், மாணவர்கள் அனைவர்க்கும் நன்றி கூறுவதோடு இந்த ஆக்கத்தினை அழகிய முறையில் ஆழ்ந்த கருவூலங்களோடு வெளியிட உதவிய அனைவர்க்கும் விசேடமாக ஆசியுரை, கட்டுரை வழங்கி உதவி புரிந்தோர் அனைவர்க்கும் எனது நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

**திரு. செ. அருள்மொழி**
*அதிபர்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தொகுப்பாசிரியர் சொல்வது...

வித்தகமும் முத்தமிழும் சத்தமிடுங் காரைதீவில் கத்து கடலலையின் கனமான ஓசையிடை தென்னங்காற்று சலசலக்கும் சனசந்தடியற்ற பெருவெளியிடை நெய்தலங்கானத்து நீண்டபுதர்க்காடுகள் இருமருங்கும் தோணாவின் சதுப்பேரியும், வங்கக் கடற்கரையும் ஆம்! இதுதான் இந்தக் கலாலயத்தின் அமைவிடம் மட்டுநகர் பொத்துவில் நீண்ட நெடுஞ்சாலை அந்தச் சாலையைத் தொட்டுச் செல்லும் அம்பாறை பிரதான வீதி.

அந்த நெடுஞ்சாலையில் காவல் தெய்வமாம் கற்புடை அம்மன் பத்தினி கண்ணகிக்கு ஓர் ஆலயம். அங்கிருந்து கிழக்கு நோக்கிச் செல்லும் வீதியில் 800 மீற்றர் தூரத்தில் இக்கிராமத்து எதிர்காலக் கல்விநிலைக்கு ஓர் வித்து இடப்பட்டது. 1950 ஜனவரி 15 அன்று கிராம மக்கள் நெஞ்சம் நிறைந்த திருநாள். ''எண்சாண் உடம்பிற்குசிரசே பிரதானம் '' என்பதற்கொப்ப அம்பாறை மாவட்ட சிறுபான்மை மக்களின் கல்விப்பசி தீர்க்க வந்த அமுதசுரபியென முளைத்தெழுந்து கிளைத்து நிற்கும் இக்கலாலயம் இன்று மகத்தான ''பொன் விழா'' க் காணுகின்றது. இக்காலகட்டத்தில் அதன் கடந்த கால கண்ணோட்டங்களை பறைசாற்றுவதாக அதன் பேச்சொலியை முச்சொலியெனக் கொண்டு இப் '' பொன்விழா மலர் '' பொலிவுற்று மலர்கின்றது.

இம்மலரின் தொகுப்பாசிரியர் என்ற வகையில் மணம் கமழும் அம்மலர்த் தாம்பாளத்தை மன நிறைந்த மகிழ்வோடு எங்கள் ஆசிரியகுழாத்தின் அனைத்துக் கரங்களையும் ஒரு கரமாய் உருவகித்து உங்கள் முன் நீட்டுகின்றேன்.

மிகக்குறுகிய காலத்திலே அரசியலின் எதிர்அலைகளுக்கு பலமுறை முகங்கொடுத்து நின்றபொழுதிலும் ஓர் அளவிலான சாதனைகளைப் புரிந்து சாதித்த பெருமை இக்கலைக்கூடத்திற்கான தனிப்பெருமை எனலாம். வறியோர்க்கு அறிவூட்டும் இந்நிலையம் தத்தக்க பித்தக்க வெனத் தவழ்ந்து நிமிர்ந்து நடந்த கதையினை இக்கால சந்ததியினர் தெரிந்து கொள்ள, நல்லதோர் வாய்ப்பினை நல்கும் ஓர் ஊடகமாக இம்மலர் விளங்குகின்றது. இக்கிராம மட்டத்தில் அச்சுருப்பதிப்புக்கள் வெளியாகுவதும் வெகு அருமையாகவே உள்ளது. சான்றோரும் ஆன்றோரும் இக்கிராமத்திற்கு ஆற்ற வேண்டிய பங்களிப்பு தீர்க்க தரிசனமுள்ள சமூகக் கண்ணோட்டத்தில் எழுத்துக்கலையை வளர்க்க வேண்டும் என்பதே இன்றைய நிலைப்பாடாகும். இன்னும் இக்கலையகத்தின் வளர்ச்சிக்கு வித்திட்ட எம்கிராம முந்தையரான தந்தையர்களுக்கு தென்புலம் நோக்கி நின்று எம் குருதித்துளியுள்ளவரை நன்றி கூறுவதற்கு நாம் கடமைப்பட்டுள்ளோம். பழம்பெருமைகளையே மீளவும் மீளவும் அசைபோடாது நவீன யுகத்திற்கேற்ற அறிவுசார் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என யாம் ஒவ்வொருவரும் திடசங்கற்பம் கொள்ளல் வேண்டும். இன்றைய நிகழ்வுகள் நாளைய வரலாறு. எதிர்கால சந்ததியினரால் நினைவுகூரப்படுவதற்கு இம்முயற்சி நிச்சயம் வழிவகுக்கவே செய்யும்.

இக்கல்லூரியின் கடந்த கால முதல்வர்கள், பிரதி முதல்வர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பணியாளர்கள் அனைவரினதும் பெரும்பணிகளை உளப்பூர்வமாக எண்ணிப் புளகாங்கிதம் அடைந்து நிற்கும் இவ்வேளையில் தற்பொழுதில் கடமையில் உள்ள கல்லூரி முதல்வர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதிமுதல்வர் தம்மை அர்ப்பணிப்போடு ஈடுபடுத்திவரும் குழாத்தினர், பொன்விழாக்குழுவினர், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், அபிவிருத்திச் சங்கத்தினர், பணியாளர் குழு, நலன்விரும்பிகள் ஆகிய இந்த தாபனத்தின் ஒவ்வோர் உறுப்பினர்களது ஆலோசனையும் ஆக்கங்களும் ஒன்றுபட்டு உழைப்பதற்கு "கல்லூரிப் பொன்விழா " எனும் மகுடமானது நல்ல வாய்ப்பினை அளித்துள்ளது.

இக்கல்லூரியின் "வெள்ளி விழா" வாய்ப்பினை சில அசாதாரண சூழ்நிலைகள் நழுவவைத்துவிட்டமை துரதிஷ்டமானதே. இருப்பினும் ஐம்பது ஆண்டுகள் எவ்வளவு வேகமாக ஓடிவிட்டன. இப்பொன்விழாவினை இந்த அளவிற்கு கொண்டாடுவதற்கு வாய்ப்பளித்த எல்லாம் வல்ல அந்த திருவருளுக்கு நன்றி கூறியே ஆக வேண்டும். பொன்விழா அங்குரார்ப்பண வைபவத்தை சென்ற ஜனவரி 15 இல் நடாத்தி வைத்த பொன்விழாக்காணும் அதிஷ்டசாலி முதல்வரான திரு. செ. அருள்மொழி அவர்களது உழைப்பிற்கும் சிரமத்திற்கும் நன்றி கூறுவதென்றால் வார்த்தைகளில் இயலாதெனலாம்.

மேலும் இக்கலாலயத்தின் பயணம் முடிவில்லாதது. அந்தப் பயணத்தின் மைல்கற்களான வைரவிழா, நூற்றாண்டுவிழா என்பவற்றை எதிர்கால சந்ததிகள் செவ்வனே மேற்கொள்வதற்கு தேவையான வழிவாறுகளை இப்பொழுதிருந்தே முன்னெடுத்துச் செல்லல் இனிதாக அமையலாம். இப்பொன்விழாக் கைங்கரியத்தை பல்வேறு வழிகளிலும் அதாவது நிதி சேகரித்தல் - விளம்பரங்கள் - சீட்டிழுப்பு விவகாரங்கள் கதை, கட்டுரை, கவிதை ஆகியன ஈந்தளித்தமை, எல்லாவற்றிற்கும் மேலாக துறவுக்கோல அருள்வழிகாட்டிகளான ஆத்மஞானிகட்கும், எழுத்தறிந்த இறைவர்களான எம் ஆசிரிய உள்ளங்கள் மனங்கோணாது நல்கிய ஒத்துழைப்புகட்கும், ஆலோசனைகட்கும் இன்னுமோர் படி நவீன அறிவியலின் ஆர்வமுள்ள ஆசிரிய இளவல்களது அச்சுருப்பதித்தல் - கணனிக்கையாள்கை - அது தொடர்பான பொருளியற் சிக்கனங்களால் எமக்கு அளித்த ஆதரவுகள் - புகைப்படப் பிரதிகளில் ஏற்பட்ட இடர்பாடுகளை கடமை எனக் கொண்டு துணைக்கரங்களாய் விளங்கிய படக்கலைவல்லோர் - வெளியீட்டாளர்கட்கும், எமக்குமிடையே மேம்பாலமாய் நின்ற எமது அன்பிற்கும் கடமையின் கண்ணியத்திற்குமுரிய "மலர்க்குழு"வினருக்கும் உங்கள் சேவை ஒரு மலராக மலர்ந்துள்ளது எனக் கூறுவதில் தொகுப்பாசிரியரென்ற முறையில் புளகாங்கிதமடைகிறேன். "துன்புறுவாரெல்லாந் தொண்டு செய்வாரே" என்பதற்கிணங்க உங்கள் யாவரினதும் தொண்டு எதிர்காலத்திலும் மணம் வீசிநிற்கும் என்பது உண்மை. இக்கலாலயத்தின் வாழ்க்கைப் பேரேட்டை அறிய ஆர்வங் கொண்ட அன்புள்ளங்களே! இவ்வாசமலரின் பொன்னிதழ்களைப் பரிசிக்கும் உங்களுக்கு எனது இதயபூர்வமான அன்பு வணக்கங்கள்.

**உங்கள் அன்புக்குரிய தொகுப்பாசிரியன்**

**திரு. தெ. செல்லத்துரை**

*(ஆசிரியர்)*

*கமு/ விபுலானந்த மத்திய கல்லூரி*

*காரைதீவு.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அகில இலங்கை

இராமகிருஷ்ண சங்க தலைவர்

# சுவாமி ஆத்மகணானந்தா ஜீ

அவர்களின்

# ஆசியுரை

இராமகிருஷ்ண மிஷனின் ''ஆத்மனோ மோசஷார்தம் ஜகத் ஹிதாய ச" (தனிமனித முன்னேற்றமும் உலக நன்மையும்) என்னும் குறிக்கோளுக்கமைய ஸ்ரீமத் சுவாமி விபுலானந்தரின் வாழ்க்கை அமைந்திருந்தது. இறைநாட்டமும், முத்தமிழ் நாட்டமும் இணைந்த தூய துறவு நெறிவாழ்க்கையும், கல்விப்பணியாகிய பொதுத்தொண்டும், அவரது வாழ்க்கையும் பின்னிப்பிணைந்திருந்ததை காணலாம்.

தனது சீரிய வாழ்க்கையின் காரணத்தினால் இன்று தமிழ்கூறும் நல்லுலகம், மனம் நிறைந்து போற்றும் புருஷராக விளங்குகிறார். இன்று பல சமய, சமூக அமைப்புகள் அவரது திருநாமத்தை தங்கள் அமைப்பிற்குச் சூட்டி பெருமை பெறுகின்றார் எனின், அவரது வாழக்கையின் சிறப்பை என்ன என்பது.

அவரது பிறந்த மண்ணாகிய காரைதீவில் அவரது திருநாமத்தை தாங்கிப் பெருமையுடன் விளங்கும் ''காரைதீவு விபுலானந்த மத்திய கல்லூரி" தொடங்கி இன்று 50 ஆண்டுகள் நிறைவுறுகின்றன. இதனை ஒட்டி இவ்வாண்டு பொன்விழா கொண்டாடப்படவுள்ளது. பொன்விழாவின் முக்கிய அம்சமாக மூன்று மாடிக் கட்டிடம் ஒன்று அமைய உள்ளது. தவிர, ஞாபகார்த்த மலர் ஒன்றும் வெளியிடப்படவுள்ளது. இந்நிகழ்சிகள் அனைத்தும் சிறப்புடன் அமைய எனது நல்லாசிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

உளக்கல்வியோடு உயர்ந்த ஒழுக்கத்தையும், சமயப்பண்புகளையும் சேர்த்து அளிக்கும் போதே மனிதனின் ஆளுமை முழுமை பெறுகிறது. அத்தகைய கல்வியின் மூலம் தான் சமுதாயத்தில் அன்பு, அமைதி, ஒற்றுமை முதலியன நிலவ முடியும். சுவாமி விவேகானந்தரின் கல்விப்பணி அவரால் நிர்வகிக்கப்பட்ட பள்ளிகள் கல்வியோடு ஒழுக்கத்தையும் பேணுவதில் அதிக கவனம் செலுத்தின. அப்பள்ளிகளின் வாழ்நாள் முழுவதும் பணியாற்றிய அதிபர், பலர் தங்கள் தன்னலமற்ற சேவையின் காரணத்தினால் இன்றும் மக்களது மனதில் நீங்கா இடம் பெற்றுள்ளளனர். இன்று பல பள்ளிகள் காத்து போற்றி வருகின்றன.

1950ம் ஆண்டு தொடங்கப்பட்ட கமு/விபுலானந்தா மத்திய கல்லூரியில் சுவாமி விபுலானந்தர் போற்றி வளர்த்த கல்விக் கொள்கை பின்பற்றப்படுகின்றது எனில், அதுவே இக்கல்லூரியின் சிறந்த பெருமையாகும்.

தற்பொழுது 1400 மாணவர்கள் கல்வி பயிலும் இக்கல்லூரியில் 55 ஆசிரியர்கள் போதிக்கின்றனர். வருடந்தோறும் பொறியியல், வைத்திய பீடங்களுக்கு இக்கல்லூரி மாணவர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர் எனும்பொழுது சுவாமிகளின் பெயருக்குப் பெருமை சேர்ப்பதாக அமைந்துள்ளது.

பொன்விழாக்காணும் இக்கல்லூரி மென்மேலும் சிறப்புக்கள் பல எய்தி சுவாமி விபுலானந்தர் விரும்பிய இலட்சிய மாணாக்கர்களை உருவாக்க எல்லாம் வல்ல இறைவனின் திருவருளைப் பிரார்த்திக்கிறோம்.

இக்கல்லூரியின் இன்றைய அதிபர், ஆசிரியர், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவரது சேவையையும் பாராட்டி வாழ்த்துகிறோம்.

பொன்விழா சிறப்புடன் அமைய எனது நல்லாசிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பொன்விழாக் காணும் காரைதீவு விபுலானந்த மத்திய கல்லூரிக்கு எனது நல்லாசிகள்.

*தன்னை உணர்வது ஞானம்,*
*ஞானத்தைத் கொடுப்பது கல்வி*
*அது நீராலோ நெருப்பாலே*
*அழியாத செல்வம், ஆயினும் காலம்*
*கரைத்து விடும்.*

காலத்தை உணர்ந்து காலத்துக்கேற்ற வழிகளிலெல்லாம் கற்றலைத் தொடர்ந்த பண்டிதர் மயில்வாகனனார், தன்னை உணர்ந்து சுவாமி விபுலானந்தராகத் திருநாமம் பெற்றார். அவரின் தீர்க்க தரிசனத்தினால் மட்டக்களப்பில் உருவான ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் கிளையானது இப்பிரதேசத்தில் தனது மன்னுயிர்ச் சேவையினைத் தொடங்கிய பவள விழாவும், சுவாமி விபுலானந்தரின் திருநாமத்தில் அன்னாரின் ஜன்ம ஸ்தானமாகிய காரைதீவில் திகழும் மத்திய கல்லூரியின் 50 வருட பொன்விழாவும் இப்புத்தாயிரமாண்டில் இணைவது திருவருள் கூட்டிய பொருத்தப்பாடே.

பொன்விழாக் காணும் இக்கல்லூரியானது ஆரம்பத்தில் கனிஷ்ட ஆங்கிலப் பாடசாலையாகத் தொடங்கி 55 ஆசிரியர்களையும், 1400 மாணவர்களையும் கொண்டு 16வது அதிபரின் முகாமைத்துவத்தில் எழுச்சி நடைபோட்டு வருடந்தோறும் வைத்தியம், பொறியியல், விஞ்ஞானம், வர்த்தகம், முகாமைத்துவம், கலை பண்பாட்டுத்துறைகளில் பல்கலைக்கழகத்துக்கு மாணவர்ளை அனுப்பிப் புகழ் பரப்புவதை அறியும் போது அதனை பாராட்டி வாழ்த்தாதிருக்க முடியாது.

இவ்வேளையில் இதனை உருவாக்கிய சமுகத் தொண்டர்கள் அர்ப்பணிப்புடன் சேவையாற்றிப் புகழ் சேர்க்கும் ஆசிரியர்கள், அதிபர்கள், ஊழியர்கள் இவர்களுக்குத் துணை நிற்கும் கல்வித்திணைக்கள உத்தியோகஸ்தர்கள் உள்ளிட்ட அனைவரையும் பாராட்டுகின்றேன்.

எதிர்காலத்தில் இதன் தரம் மென்மேலும் வளர்ந்து இப்பிராந்தியத்தின் புகழ்சேர்க்கும் சிறப்புக் கல்லூரியாக உயர்வடைய எல்லாம் வல்ல பரம்பொருளைப் பிரார்த்திக்கின்றேன்.

இப்பொன்விழா காணும் நிகழ்வு சிறப்புறவும் அதன் ஆவணப் பதிவான பொன்விழா மலர் பொலிவுறவும் சுவாமி விபுலானந்தரின் பாரம்பரியத்தில் நின்று வாழ்த்துக் கூறுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

**பகவான் ஸ்ரீராமகிருஷ்ண தேவரின் திருவருள் சுரப்பதாக.**
**கல்விச் செல்வம் நிறைவதாக.**

பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் சேவையில்,

**சுவாமி ஜீவனானந்தா ஜீ மகராஜ்**

*இராம கிருஷ்ண மிஷன்,*
*மட்டக்களப்பு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நின்னுடைய கழற்கீழ் வைப்பாய் கண்ணுதலே"

சிவகதா பூசணம், பிரசங்கபூசணம், உபன்யாசமணி, திருமுறை இன்னிசை விரிவுரைச் செல்வர்,

கதாகாலாட்சேபதிலகம், சரஸ்வதி கடாட்சர், முத்தமிழரசு

## சிவயோகச் செல்வர் த. சாம்பசிவம் B.Com.

பிரதம குரு ஸ்ரீ. சிவசுப்பிரமணிய தேவஸ்தானம், ஸ்ரீ படபத்திரகாளியம்பாள் தேவஸ்தானம்

பெரியகல்லாறு 01, கல்லாறு.

# ஓதும் எந்தன் நல்லாசி

அரிய திரு மாணிக்க மகுடமணி ஒளி காலும்
அழகு பிரகாச மன்ன
தெரியவரு கலைஞானம் சொரியுமிடமான விபு
லானந்த நடு கல்லூரி
வருடமைம்பதை கடந்தானந்த விழாக்கோலம்
காணுமின்னாளி லெந்தன்
உரிய வாழ்த்தொலியினை யுளமார வாயூறி
ஓதும் எந்தன் நல்லாசி.

காராளர் ஏரோசை களனி நிரை பரவி வரும்
காரைதீவுப் பதியினில்
சீரான சிவஞான சித்தானைக் குட்டி சிலை
ஆராதனைக் கருகில்
நேரான நெறிபேணு மாணவர் சமுதாயம்
நிம்மதியோடு கல்வி
ஓராது பெற்று வளர் மத்திய கல்லூரி புகழ்
ஓங்கிட என் வாழ்த்து இசைவே

பொறியியல் வைத்தியம் புதுமையறிவுக் கலை
பூரணப்புள்ளி பெற்று
அறியவே பல்கலைக் கழகத்தில் மாணவர்
ஆண்டு தோறும் சென்றிடும்
நறிய பைம்பொழில் மத்தியுறை இக் கல்லூரி
நாற்றிசையும் புகழீட்டியே
நிறைய வருபயன் பெற்று நீடுகொடையுருணியாய்
நீக்கமற நிறை வாழத்துக்கள்

ஆளுமை கொண்ட நல் அதிபர்கள்
ஈரைந்தைந்துபேர் செய்திட்ட பணியை
நாளுந்தான் கண்களென நினையும்
நீர்மை சேர் அருள்மொழி முதல்வனாகி
வாழும் நாள் பொன்விழா கண்டமை
வாழ்வாங்கு வாழ்ந்த பயனென
ஏழுசுரகானச் சிலம்பணி கற்
பரசி கண்ணகை அருளால் வாழி

எதிர்கால சந்ததிகள் புது வாழ்வில் நலமோங்க
என் வாழ்த்துக்கள் பலப்பல
இன்ப நல மோங்கி நனி துன்பநிலை யோட வென்
றன் வாழ்த்துக்கள் பலப்பல
பொதுவான பல கலைகள் பொலிந்தார்ப்பக் கல்லூரி
பொலிய வாழ்த்துக்கள் பலவாம்
புன்மை நிலை நீங்கி இருள் இன்மை நிலைமாய என்
புகழ் வாய்ந்த நல்லாசிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு கிழக்கு நிருவாக, வடமாகாண புனர்வாழ்வு, புனருத்தாபன, இந்து கலாச்சார அலுவல்கள் அமைச்சர்



# கௌரவ.டக்ளஸ் தேவானந்தா

அவர்களின்

## வாழ்த்துச் செய்தி

"கல்வியே கருந்தனம்" எனும் பொன்மொழி கல்வியின் ஒப்பற்ற உயர்வைப் பறைசாற்றுவதாகும். அந்தவகையில் அம்பாறை மாவட்டத்தில் அறிவொளி பரப்பும் கலைக்கூடங்களில் குறிப்பிடத்தக்கதோர் உயர்கல்வி நிலையமான காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரி பொன்விழா நிறைவு தினத்தை நினைவுகூருமுகமாக வெளியிடப்படும் இப்பொன்விழா மலருக்கு எனது வாழ்த்துரையை வழங்குவதில் பேருவகையடைகின்றேன்.

கல்விக்கூடமொன்றின் வரலாற்றில் ஐம்பதாண்டுகள் என்பது சாதாரணமானதோர் விடயமல்ல. இன்று இக்கலாநிலையம் பூரணமான கல்விக்கு நிலைக்களனாக சமூகத்தின் உயர்நிலைகளை அலங்கரித்து நிற்பதற்கும், கல்லூரியின் மேம்பாட்டிற்கும் தம்மை அர்ப்பணித்துக் கொண்ட அதிபர்கள் – ஆசிரியர்கள், நலன்விரும்பிகள் ஆகியோரைப் பாராட்ட வேண்டும்.

இக்கல்லூரியின் மேம்பாட்டிற்கு தேவையான சகல உதவி ஒத்தாசைகளையும் செய்ய வேண்டிய கடப்பாடு எமக்கு உண்டு.

பொன்விழாவானது வைரவிழா, நூற்றாண்டு விழா எனப் பொலிவுற்று இக் கல்லூரி நீடூழிவாழ்கவென வாழ்த்துகிறேன்.

~ நன்றி ~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இன விவகார, தேசிய ஒருமைப்பாடு, கனிப்பொருள் மூலவள அபிவிருத்தி பிரதி அமைச்சர்

# கௌரவ.கே.எஸ்.கணேசமூர்த்தி

அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

வரலாற்றுப் புகழ்மிக்க மட்டக்களப்புத் தமிழகத்தின் காரைதீவுப் பேரூரில் அமைந்திருக்கும் விபுலானந்த மத்திய கல்லூரி ஐம்பது ஆண்டுகள் நிறைவு தினத்தை கொண்டாடிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் எனது நல்வாழ்த்துக்களை அக்கல்லூரி அதிபர்கள், ஆசிரியப் பெருமக்கள், அங்கு கல்வி கற்ற, கற்றுக் கொண்டிருக்கும் மாணவ, மாணவிகள், இக்கல்லூரியை கட்டியெழுப்பிய ஊர்ப்பெருங் குடிமக்கள், ஏனைய பிரமுகர்கள், பொன்விழா ஏற்பாட்டுக்குழுவினர் உட்பட அனைவருக்கும் தெரிவிப்பதில் மட்டிலா மகிழ்ச்சி அடைகின்றேன்.

கிழக்கிலங்கையின் விடிவெள்ளியாக எம்மத்தியில் அவதரித்த முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளார் பிறந்த மண்ணில், அவர்தம் பெயரையேந்தி கல்விக்கு கலங்கரை விளக்கமாக உயர்ந்து நிற்கும் விபுலானந்த மத்திய கல்லூரியின் பொன்விழா நிகழ்ச்சிகள் சிறப்பாகவும், வெற்றிகரமாகவும் பூர்த்தியடைவதை நினைவு கூருமுகமாக வெளிவரும் பொன்விழா நினைவு மலர் பூத்துக் குலுங்க இறைவனின் அருட் கடாட்சத்தையும் வேண்டுகிறேன். இச்செய்தியை எழுதுகின்ற வேளையில் சுவாமி விபுலானந்தர் அவர்களின்

**வெள்ளை நிறமல்லிகையோ**
**வேறெந்த மாமலரோ**
**உள்ளக் கமலமடி**
**உத்தமனார் வேண்டுவது**

என்னும் அடிகள் என்மனதில் சாந்தியையும், சமாதானத்தையும் பற்றிய சிந்தனைகளைத் தோற்றுவிக்கின்றன. சாந்தியும், சமாதானமும் எமது இன்றைய தேவையாகும்.

பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியில் காரைதீவு மக்கள், தமது கல்விப் பாரம்பரியத்தையும் இந்து கலாசார விழுமியங்களையும், செழிப்பாக வளர்த்திருப்பதும், விபுலானந்த மத்திய கல்லூரியை மட்டக்களப்புத் தமிழகத்தின் குறிப்பாக அம்பாறை மாவட்டத்தின் முன்னணிக் கல்விக் கூடமாக வளர்ந்திருப்பதும், பாராட்டப்பட வேண்டியதும், மற்றவர்களால் முன் மாதிரியாக பின்பற்றக் கூடியதுமான ஒரு வரலாற்றுப் பணியாகும்.

50 வயது ஒருவரின் வாழ்கையில் ஞானமுதிர்ச்சியையும் அனுபவத் தேர்ச்சியையும் எடுத்துக் காட்டும் வயதாகும். விபுலானந்த மத்திய கல்லூரி 50 ஆண்டுகளில் அடைந்திருக்கும் வளர்ச்சியும் காரைதீவு மக்களுக்கு ஆற்றியுள்ள சேவையும் புனிதமானவைகளாகும். இப்புனிதமான பணிக்கு தமது வாழ்வை அர்ப்பணித்தவர்களும், உயிர்த்தியாகங்கள் புரிந்து கல்லறைப் பூக்களாகி விட்டவர்களையும் இச்சந்தர்ப்பத்தில் நினைவு கூருவது பொருத்தமானதாகும்.

விபுலானந்த மத்திய கல்லூரி, இன்னும் 50 ஆண்டுகளைக் கடக்கமுன்னர், ஒரு முத்தமிழ் பல்கலைக்கழகமாக பரிணமிக்க வேண்டும் என்பதே எனது அவாவும் பிரார்த்தனையுமாகும்.

- நன்றி -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்**

# கௌரவ குணசேகரம் சங்கர்

**அவர்களின்**

# வாழ்த்துச் செய்தி

கல்வி நிலையில் பின்தங்கியுள்ள எமது பிரதேச மக்களுக்கு சரியான கல்வி வாய்ப்புக்கள் கிடையாமையே முக்கிய காரணமாகும். வசதிபடைத்தோர் மாத்திரமே கல்வியை நாடிச் செல்லும் நிலை மாறிவரும் சமுதாய சூழ்நிலையில் இத்தகைய கல்லூரிகளின் பங்களிப்பு மிக அவசியமானதாகும்.

''தேடுகல்வியிலாதொரு ஊரை தீயினுக்கிரையாக்க வேண்டு''மென சூளுரைத்தான் பாரதி – சமுதாயத்தின் அறிவுக் கண்ணைத் திறந்து வைக்கும் அரும்பணியினைச் செய்து 1950 இலிருந்து பல்வேறு வளர்ச்சிக் கட்டங்களை கடந்து 2000ல் தனது ஐம்பதாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் இக்கல்லூரியினை வாழ்த்துதற்கு எனக்கும் வாய்ப்பு கிடைத்தமையையிட்டு இறைவனுக்கு நன்றி கூறுகிறேன்.

இன்று இக்கல்லூரி அம்பாறை மாவட்டத்திலேயே ஒரு உன்னத நிலையில் இருப்பதால் எமது சமூகத்தின் பல உயர்நிலையில் இருக்கும் புத்திஜீவிகள், நானும் இக்கல்லூரியில் பழைய மாணவன் தான் எனக் கூறிப் பெருமிதங் கொள்வதைக் கண்ணாரக் காண்கிறேன். இக்கல்லூரியில் பல்வேறு நிலைகளிலும் தோளோடு தோள் கொடுத்து உதவியும், தமது அரிய சேவையினை தியாக மனப்பாங்குடன் ஈந்தவர்களுமான அதிபர்கள் – ஆசிரியர்கள், ஆகியோரின் தன்னலமற்ற சேவையை எண்ணி மகிழ்ச்சியடைகிறேன்.

''பொன்விழா'' வையொட்டி நினைவு மலருக்கு இவ்வாழ்த்துரையை வழங்குவதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். மேலும் இக்கல்லூரியில் உயர்ச்சிக்கு இயன்ற உதவிகளை செய்ய வேண்டிய கடமையும் எனக்கு உண்டு. ஈழக்கரிகாலன் என இமயம் வரை தமிழ் முத்திரை பதித்த முத்தமிழ் வித்தகரது நாமத்தை கொண்ட இக்கல்லூரி மென்மேலும் அறிவுச்சுடர்பரப்பி தமிழன்னைக்கு மேலும் புகழ்சேர்க்க வேண்டுமென வாழ்த்துகிறேன்.

– நன்றி –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடக்கு-கிழக்கு மாகாண கல்வி,
பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை
அமைச்சின் செயலாளர்

## க. பரமேஸ்வரன் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

சுவாமி விபுலானந்தரின் பிறந்தகமான காரைதீவின் கண்ணே 1950 களில் ஆரம்பிக்கப்பட்ட விபுலானந்த மத்திய கல்லூரி இன்று பொன்விழாக் காணவிருப்பது மனதிற்குப் பெருமகிழ்ச்சியைத் தருகின்றது. மிகவும் திறமையுள்ள ஆசிரியர்களும், அதிபரும் பணிபுரிந்து வருவதால் வருடந்தோறும் பல மாணவர்கள் வைத்தியத்துறைக்கும், பொறியியல் துறைக்கும், கலைத்துறைக்குமாக பல்கலைக்கழகத்திற்குச் செல்கின்றனர். இங்கு மாணவர்கள் கல்வியில் மாத்திரமல்லாமல் ஏனைய புறக்கிருத்தியங்களிலும் திறமையுடன் ஈடுபட்டு வெற்றியீட்டி வருவதை அறியும் போது மனநிறைவை அளிக்கின்றது.

ஐம்பது ஆண்டுகள் கல்வித்துறையில் குறிப்பிடத்தக்க சேவை புரிந்துவரும் இக்கல்லூரி இவ்வாண்டு பொன்விழாவினை மிக விமரிசையாக கொண்டாடுவதோடு மட்டுமல்லாமல் சிறப்புமலர் ஒன்றையும் வெளியிட முன்வந்திருப்பது பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். இம்மலரில் மாணவர்களுடைய திறமையான ஆக்கங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். அத்தோடு அறிஞர் பெருமக்களின் நல்ல பல ஆக்கங்களும் இடம்பெறச் செய்வது மலருக்குக் கனதியைக் கொடுப்பதோடு எதிர்காலத்தில் சிறந்த ஒரு ஆவணமாக அமையும் எனவும் குறிப்பிடலாம். கல்லூரியின் பொன்விழாவும், நினைவு மலர் வெளியீடும் சிறப்புற அமைய வேண்டும் என வாழ்த்துக் கூறுவதில் மட்டில்லா மகிழ்ச்சி அடைகின்றேன்.

- நன்றி -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகாண கல்விப் பணிப்பாளர்

**இ. சிவானந்தன்** அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

கிழக்கிலங்கையின் பெரும் அறிஞர் சுவாமி விபுலானந்தரின் சொந்தக் கிராமத்தில் அமைந்துள்ள அவரின் பெயர் கொண்டதுமான இக்கல்லூரி காரைதீவில் கல்விக்கான கலங்கரை விளக்கமாக அமைந்துள்ளது. காரைதீவு விபுலானந்த மத்திய கல்லூரி தனது 50 வது ஆண்டு நிறைவு விழாவை கொண்டாடுவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறேன்.

கடந்த 50 ஆண்டுகளாக இக்கல்லூரி இப்பிரதேசத்தில் வாழுகின்ற மக்களின் அறிவு வளர்ச்சிக்கும், ஆன்மீக விருத்திக்கும் அருந்தொண்டாற்றி வருவதுகுறிப்பிடத்தக்கது. அத்துடன் மாணவர்களின் முழுமையான விருத்தியை இலக்காகக் கொண்டு அவர்களைச் சமூகப் பொருத்தப்பாடுடைய நற்பிரஜைகளாக உருவாக்கும் பொறுப்பும் இக்கல்லூரிக்கு உண்டு. இந்த வகையில் இக்கல்லூரி ஒரு சிறிய ஆங்கில கனிஷ்ட பாடசாலையாக ஆரம்பித்து இன்று பெரும் விருட்சமாக வளர்ச்சி பெற்று 1400 மாணவர்களுடன் முழுநிறைவான கல்லூரியாக வளர்ந்திருப்பதுகுறிப்பிடத்தக்கது. இவ்வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து பணியாற்றிய சகல அன்பு நெஞ்சங்களையும் இச்சந்தர்ப்பத்தில் நினைவு கூர்ந்து பாராட்டுகிறேன்.

வைத்தியர்களையும், பொறியியலாளர்களையும் பல்வேறு துறை வல்லுநர்களையும் உருவாக்குவதில் இக்கல்லூரி அரும்பணியாற்றி வருகின்றது. புறக்கிருத்தியங்களிலும் இக்கல்லூரி மாணவர்கள் தேசிய மட்டத்தில் சாதனைகள் பல புரிந்து வருவது மெச்சத்தக்கது.

பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் ஒருங்கி வைத்து இக்கல்லூரியின் வளர்ச்சிக்காகத் தம்மை அர்ப்பணித்துச் செயலாற்றுகிறார்கள். இது இக்கல்லூரியின் எதிர்கால முன்னேற்றத்துக்கு உத்வேகம் அளித்துள்ளது. இவர்கள் அனைவருக்கும் எனது பாராட்டுக்கள்.

தற்போதுள்ள அதிபரின் வழிகாட்டலிலும் வினைத்திறனுடைய ஆசிரியர்களின் உதவியுடனும் இக்கல்லூரி தொடர்ந்து வளர்ச்சி பெற்று எதிர்காலத்தில் பெரும் சாதனைகள் புரிய வேண்டும் என வாழ்த்துகின்றேன்

- நன்றி -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு-கிழக்கு மாகாண ஆளுனரின்
அம்பாறை-மட்டக்களப்பு பிராந்திய
ஆணையாளர்



# க. தியாகராசா அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

காரைதீவு விபுலானந்தா மகாவித்தியாலயம் 50 ஆண்டுக் கல்விச் சேவையினைப் பூர்த்தி செய்து பொன்விழாக் காண்கின்றது. இப்பெருவிழாவின் ஒரு நிகழ்வாக வெளியாகும் சிறப்பு மலருக்கு இவ்வாசியுரையினை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். விபுலானந்த அடிகளார் பிறந்த மண்ணில் அன்னாரது திருநாமத்தினைத் தாங்கி நிற்கும் கல்விக்கூடம் விபுலானந்த மகா வித்தியாலயமாகும். கடந்த இரு தசாப்த காலத்தில் குறிப்பிடும் படியான வளர்ச்சி கண்டுள்ள இவ் வித்தியாலயம் காரைதீவின் கல்வித் தேவைகளை பெரிதும் பூர்த்தி செய்யும் பணியினை மேற்கொண்டு வருகின்றது. கருத்தூன்றிச் செயற்பட்ட அதிபர்கள், ஆசிரியர்கள், அரசியல் தலைவர்கள், பெற்றோர்கள் ஆகியோரது அயராத முயற்சியின் பயனாக இவ்வித்தியாலயம் இன்றுள்ள நிலைக்கு உயர்ந்துள்ளது.

தற்போதைய நிலையில் இவ்வித்தியாலயத்தில் கடமையாற்றும் அதிபர், ஆசிரியர்களது முயற்சியும், ஊக்கமும், பங்களிப்பும் மிக இன்றியமையாதவையாகும். கல்வி மேம்பாட்டினை வழங்குவதை அத்தியாவசியத் தேவையாகக் கொண்டு செயற்படுத்துவது அவசியமாகும். பரந்து விரிந்துபட்ட கல்விப் பணியினை வழங்கி இப்பிரதேசத்தின் ஏற்றமிகு எதிர்காலத்திற்கு உறுதுணையாக விளங்க வேண்டும். குறிப்பாக உயர் கல்வித் துறையில் மிக உன்னத நிலையினை தக்க வைத்துக் கொள்வது இக்கல்லூரியின் செயற்பாடாக அமைதல் வேண்டும்.

எமது இளம் சந்ததியினருக்கு பூரணத்துவமான கல்வியினை வழங்குவதே எமது தலையாய கடமையாகும். இவ்வாண்டு விழா முயற்சிகள் எதிர்கால வளர்ச்சிக்கு உறுதுணையாகவும், உற்சாகமூட்டுவதாகவும் அமைய வேண்டும். வருங்காலங்களில் கல்வித் துறையில் விபுலானந்தா வித்தியாலயம் வரலாறு படைக்கவேண்டுமென வாழ்த்துகின்றேன்.

– நன்றி –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**அம்பாறை-கல்முனை பிரதேச மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்**

# ஜனாப். எம்.ஏ.எம்.சாபிடீன்

**அவர்களின்**

# வாழ்த்துச் செய்தி

சுவாமி விபுலாநந்த அடிகளாரின் நாமத்தை நாளாந்தம் விளங்க வைக்கும் இம் மத்திய கல்லூரியின் பொன்விழாச் சஞ்சிகைக்கு என் வாழ்த்துக்களை வழங்கி வைப்பதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

தென் கிழக்கின் பசுமையான ரெத்தினம் போல் தலைமை தாங்கும் இம் மத்திய கல்லூரி, தமிழர் கலை, கலாச்சாரம், பாரம்பரியத்தை தன்கூடவே வளர்த்துச் செல்லும் ஓர் உதய தாரகையாய் விளங்குவதையிட்டு யாவரும் மகிழ்வது மகிழ்ச்சிக்குரியதாகும்.

என் நிர்வாகத்திற்கும், பிரதேசத்திற்கும் உட்பட்ட இக்கல்லூரியோடு எல்லாக் காலங்களிலும் நான் கேட்டவைகளையும், தொடர்புகளையும் வைத்துக் கொள்ள தவறியதில்லை. குழுப்பரீட்சைகள், பரிசளிப்பு விழாக்கள், கால்நாட்டு வைபவங்கள், திறப்பு விழாக்கள், வருடாந்த விளையாட்டுப் போட்டிகள் இவ்வாறு நடைபெறும் வருடாந்த நிகழ்வுகளிலெல்லாம், கலந்து கொண்டமையை நினைவுகூர்ந்து மகிழ்ச்சியடைகின்றேன்.

இக்கல்லூரி கடந்த ஐம்பது வருட வளர்ச்சியில் எவ்வாறான இன்னல்களுக்கிடையே யெல்லாம் தன்நிலைதளராது மனங்கோணாது படைத்து வந்த சாதனைகளைக் கண்ணுறும்போது எவரும் ஆச்சரியப்படாமலிருக்க முடியாது. வருடந்தோறும் பல்கலைக்கழகங்களுக்கு வைத்திய, பொறியியல் துறைகளுக்கு இக்கல்லூரியும் தம்மாணவர்கள் பலரை அனுப்பி வருகின்றது. அவர்கள் பெரும் பெரும் பட்டங்களைப் பெறுவதற்குப் பின்னணியாகத் திகழ்ந்த இம்மத்திய கல்லூரியை நான் பாராட்டுகின்றேன்.

எத்தனை அதிபர்கள் வந்து போனாலும், அத்தனை அதிபர்களும், ஆசிரியர்களும் கனிஷ்ட நிலையிலிருந்த பாடசாலையை ஒரு மத்திய கல்லூரியாகவும், முதற்தர பாடசாலையாகவும் வளர்த்தெடுத்தமை உண்மையில் பாராட்டிற்குரிய விடயமாகும். இதில் பெரும் பங்கினை தற்போதைய அதிபரும், ஆசிரிய குழாத்தினருமே எடுத்துக் கொண்டமை மேலும் பாராட்டத்தக்கது.

இக்கல்லூரியும், இக்கல்லூரியின் கல்வி, கலாச்சார வளர்ச்சியும் மென்மேலும் வளர்ச்சியடைந்து, அது எம் பிரதேசத்திற்கும், சமுதாயத்திற்கும் நற்தொண்டாற்ற என்மனமார்ந்த வாழ்த்துக்களை வழங்குகின்றேன்.

- நன்றி -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்முனை வலய கல்விப் பணிப்பாளர்,
“மணிப்புலவர்”
**மருதூர் ஏ. மஜீட்** அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் அவர்கள் பிறந்த மண்ணிலே அமைந்துள்ள விபுலானந்த மத்திய கல்லூரியின் பொன்விழா நிகழ்வினை அடிபொற்றி எழுந்துள்ள சிறப்பு மலருக்கு எனது வாழ்த்துச் செய்தியினை தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன். இக்கல்லூரி 50 ஆண்டுகளை கடந்து விட்டது என்பது பெரிய விஷயமல்ல. 50 ஆண்டுகள் பல சாதனைகளைச் சாதித்துள்ளதென்பதனை இரைமீட்டிப் பார்க்கும் போது மகிழ்ச்சியாய் இருக்கின்றது.

அதிலும் குறிப்பாக அருள்மொழியின் ஆட்சிக்காலம் அபூர்வம், அற்புதம், அழகு இவை சேர்ந்த முக்கூட்டு.

விபுலானந்தரை நினைக்கும் பொழுது எவ்வாறு எங்கள் முத்தமிழை நினைக்கின்றோமோ அதேபோல அருள்மொழியை நினைக்கும் பொழுது அபூர்வம், அற்புதம், அழகு ஆகிய முக்கூட்டும் நினைவிற்கு வரும்.

இதற்கு பொன்விழாக் காலத்தில் நடந்த பரிசளிப்பு விழா சான்று பகரும்.

இதேபோல இவ்வருடம் நடைபெற்ற இல்ல விளையாட்டு போட்டி, உயர்தர மாணவர் ஒன்றியம் நடத்திய உயர்தர மாணவர் ஒன்றுகூடல் விழா, பாடசாலை விஞ்ஞான கண்காட்சி என்பவற்றையும் கூறலாம்.

இதேபோல எதிர்வரும் காலங்களில் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக பாடசாலை வளர்ச்சியடைய ஆசித்து வாழ்த்துகின்றேன்.

– நன்றி –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**புனர்வாழ்வு, புனர்நிர்மாண அமைச்சின்**
**முன்னைநாள் மேலதிக செயலாளர்**
# ரி. லங்காநேசன் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

கிழக்கிலங்கையின் தென்பால் அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள பழம்பெரும் கிராமம் காரைதீவு. அன்பும், பண்பும், அறமும், மறமும், சைவமும் தமிழும் தழைத்தோங்கும் தவத்திரு பூமி. உலகம் போற்றும் உத்தமர், பன்மொழிப் புலவர், பாரதியைப் பாரறிய வைத்த பகுத்தறிவுவாதி, முத்தமிழை முதன்மைப்படுத்திய வித்தகர் விபுலானந்த அடிகளின் கல்விப்பணியின் கலங்கரை விளக்கமாக அன்றுதொட்டு பாராட்டப்பட்டுவரும் பதி.

கல்முனைப் பிரதேசத்தின் கல்விக் கண்ணாக, ஞானவொளி பரப்பிய ஐயன் சுவாமி விபுலானந்தரின் திருநாமம் தாங்கி காரைதீவில் குன்றின் விளக்காக அப்பிரதேசமெங்கும் அறிவொளிபரப்பும் உன்னத நிலையமாக விபுலானந்த மத்திய கல்லூரி விளங்குவது பெருமைக்குரியதாகும். சகல துறைகளையும் தன்னகத்தே கொண்டு ஆண்டு தோறும் மருத்துவம், பொறியியல், கலை, விஞ்ஞான துறைகளுக்கு மாணவ மாணவிகளை பல்கலைக்கழகத்துக்கு அனுப்பி வருவது பாராட்டப்படக் கூடியதாகும்.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகிய நெறிகளை அடிப்படையாகக் கொண்டு கல்வியோடு, ஒழுக்கத்தையும் ஆன்மீக அறிவையும் ஊட்டுகின்ற உயர்சாலையாக விபுலானந்த மத்திய கல்லூரி விளங்கி வருவது இதயபூரிப்பை ஏற்படுத்துகின்றது. பல இடையூறுகளுக்கு மத்தியிலும் ஏறு நடைபோட்டு தன்னுடைய ஐம்பது வருடகால வாழ்க்கையைக் கடந்து சிறப்புற்று 'பொன்விழா'க்காணும் புத்தெழில் நிகழ்விற்கு தயார்படுத்தியிருப்பது வரலாற்றில் தடம்பதித்த செயலாகும்.

கல்வி வளர்ச்சியிலும், பௌதீக முன்னேற்றத்திலும், மாணவர் அதிகரிப்பிலும் கட்டம் கட்டமாக உயர்ந்து பொன்விழாக் காணப் புறப்பட்டிருப்பது எம்மையெல்லாம் புளகாங்கிதம் அடையச் செய்திருக்கின்றது. பல பாடசாலைகளுக்கு முன்னோடியாகவும், உயர்கல்விக்கு உயிர்நாடியாகவும் விளங்கும் விபுலானந்த மத்திய கல்லூரி பொன்விழாக்காணப் புதுக்கோலம் பூண்டுள்ளதை பாராட்டாமல் இருக்க முடியாது. ஒரு பாடசாலை பொன்விழாக் காணும்வேளை தன்னைப்புரிந்து கொண்டு எதிர்காலத்தில் பொலிவதற்குரிய புத்துணர்ச்சியைப் பெறுவதற்கு வழி ஏற்படுகின்றது. அந்த வகையில் காரைதீவு விபுலானந்த மத்திய கல்லூரியும் தன்னைப் புதுப்பித்து புகழடைய வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

மேலும், இந்தப் பொன்விழா நிகழ்வினை சிறப்புற நடாத்த அல்லும், பகலும் அயராதுழைத்த அதிபர் அவர்களையும் அவருக்கு உறுதுணையாக இருந்த ஆசிரியப் பெருமக்களையும், ஏனையோரையும் அவர்கள் பணி மென்மேலும் செயலூக்கம் பெற்று சிறப்படைய வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

- நன்றி -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காரைதீவு பிரதேச செயலாளர்

# செ. இராமகிருஷ்ணன்

அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

கல்லூரி என்பது நாட்டின் கண்கள். அது ஓர் கலைக்கோவில். நடைமுறை வாழ்வியலுக்கேற்ற நற்பண்புகளையும், அரிய குணாதிசயங்களையும்,கலை-கலாசார விழுமியங்களையும் மாணவர்க்கு ஏற்படுத்தி அவர்களை நற்பிரசைகளாக கட்டி எழுப்பும் பெரும்பணியினை குறிக்கோளாய் கொண்டு கல்லூரிகள் இயங்குவதனாற்றான் அவை எமது பார்வையில் கண்களாக - கலைக்கோவிலாகப் பரிணமிக்கின்றன. இன்று ''பொன்விழா" கோலத்துடன் பூரித்து நிற்கும் காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரி தன்னிகரற்று புகழோடு விளங்குவதை நோக்கும் பொழுது சுடரொன்று சூரியனாகிவிட்டது போலத் தோன்றுகின்றது.

எமது சமூகம் எதிர்பார்க்கும் இலட்சியக் கல்விமான்களை கல்லூரியொன்று உருவாக்கி வருகிறதென்றால் அப்பெருமைக்கு உரியவர்கள் அதிபர்- ஆசிரியர்கள்-பெற்றோர்கள் ஆகியோரே ஆவர். நாடுபோற்றும் நல்லவர்களை சந்திக்கும் போதெல்லாம் எம் நினைவில் நிழலாடுபவர்களும் அவர்களே. வான்மறை தந்த வள்ளுவன் மொழியில் கூறுவதனால்,

**"அறிவினால் ஆகுவதுண்டோ பிறிதின் நோய்**
**தந்நோய் போல் போற்றாக் கடை"**

என இக்கல்லூரியில் அறிவு பெற்ற அனைவரும் இதன் துன்ப, துயரங்களில் முகம் கொடுத்து பல வழிகளிலும் பேணிவருவது முழு மனதோடு பாராட்ட வேண்டிய ஒன்றாகும்.

1950ல் ஆரம்பிக்கப்பட்டு பதினாறாவது அதிபர் திலகங்களுள் ஒருவராக தமது செயற்திறனையும், தியாக மனப்பான்மையையும் செயல்வடிவாக்கி பிற கிராம மக்களும் தேடிவந்து கற்கும் நிலையை உருவாக்கிவிட்ட அந்த உன்னத இலட்சியம் மேலும் விருத்தியடைய வேண்டும். இதுவே நாடும் நாமும் வேண்டுவது.

''வெறும் கல்லும், சாந்தும் கொண்டு கட்டப்படும் எல்லாமே கட்டடமல்ல. நோக்கத்தை பூரணமாக வெற்றி கொள்ளும் கட்டடங்களே அந்த இடத்திற்குரியவை.

இப்பாரிய பணிக்கெனத் தம்மை அர்ப்பணித்திருக்கும் அனைவருமே பொறுப்பு மிக்க இக்கைங்கரியத்தில் தம்மாலான பங்களிப்புக்களை இதய பூர்வமாகச் செய்தல் வேண்டும். அதற்கு எல்லாம் வல்ல இறை அருள் பாலிக்க வேண்டுமென பிரார்த்திக்கின்றேன். வித்தகனது நாமத்தைக் கொண்ட இக்கல்லூரியானது ஐம்பதாவது ஆண்டினை நிறைவு செய்து இறும்பூதெய்தி நிற்கும் இவ்வேளையில் இப்பொன்விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்கும் நற்பேறு கிடைத்தமையையிட்டு இதயங்கனிந்த நன்றியறிதலைத் தெரிவிப்பதோடு இக்கல்லூரியானது காலைக்கதிரவனின் கதிரொளி போல் கல்வியெனும் புத்தொளி பாய்ச்சி மங்காப் புகழுடன் வைரவிழா, பவளவிழா, நூற்றாண்டுவிழா அனைத்தும் கண்டு அதற்கப்பாலும் முடிவிலியென பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றேன்.

- நன்றி -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காரைதீவு கோட்டப் பொறுப்பு உதவிக் கல்விப் பணிப்பாளரும், முன்னாள் அதிபருமான

# திருமதி. எம். சத்தியதேவா

அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

இமயம் வரை தமிழ் முத்திரை பதித்த ஈழக் கரிகாலனாம் சுவாமி விபுலானந்த அடிகளாரின் பெயரோடு விளங்கும் இம் மத்திய கல்லூரி தனது 50வது ஆண்டு நினைவாக இப்பொன்விழாவினைக் கொண்டாடுவதில் நானும் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். செல்வங்கள் அனைத்திலும் தலை சிறந்தது கல்விச் செல்வமென்பது யாமறிந்ததே. இருப்பினும் ''அன்ன யாவினும் புண்ணியங்கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்'' எனும் கூற்றிற்கமைவாக இவ் ஐம்பதாண்டுகளில் மாணவர்களை ஆயிரக்கணக்கில் நவீனவுலகிற்கு தயார் செய்து வெளியேற்றி யுள்ளமையை எண்ணிப் புளகாங்கிதமடைகின்றேன். இப்பொன்விழாவின் பதினைந்தாவது கல்லூரி அதிபராகவும் அவ்வரிசையில் ஒரேயொரு பெண்ணதிபரெனவும் 1996ன் இறுதியில் ஒன்றரை ஆண்டுகாலம் சேவையாற்றக் கிடைத்தமையை ஒரு பெரும் பாக்கியமாகவே கருதுகின்றேன்.

கல்வி அபிவிருத்திப் பணியில் பல்வேறு சிறப்பான செயற்திட்டங்களையும், மீத்திறன் மாணவர், பின்தங்கிய மாணவர் என்பவர்கட்கான பரிகாரக் கற்பித்தல் முறைகளையும் கையாண்டதுடன் இணைப்பாட முயற்சிகளையும் புத்துயிரூட்ட வேண்டிய நடவடிக்கைகளையும் எடுத்துள்ளேன். கல்லூரியின் வரலாற்றிலேயே முதல் முறையாகப் பரிசளிப்பு விழவொன்றை வெற்றிகரமாய் நடாத்தியமையையும் இச்சந்தர்ப்பத்தில் எண்ணி உவகையடைகின்றேன். அப்பணிகளை வெற்றிகரமாய் மேற்கொள்ள உதவிய அனைவர்க்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

இராமபிரானின் அணைகட்ட உதவிய அணில் போன்று நானும் இக்கல்லூரியின் பங்களிப்பில் ஆத்மதிருப்தி அடைகின்றேன். எங்கள் அளப்பரிய சொத்தான இக்கல்விக் கலாலயம் பொன்விழாக் காணும் இம் மங்களகரமான வேளையில் ''விபுலானந்தாவே நீ பல்லாண்டு வாழ வேண்டும்'' என வாழ்த்தி விடை பெறுகின்றேன்.

**வாழ்க.......... விபுலானந்தா !**

**வளர்க............ உன்சீரிய பணி!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்முனை வலய விஞ்ஞான உதவிக் கல்விப் பணிப்பாளரும், முன்னைநாள் அதிபருமாகிய

# திரு. த. சண்முகரெட்ணம்

அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

1991.06.10 இல் இருந்து 1996.11.05 வரை இக்கல்லூரிக்கு ஐந்தரை ஆண்டுகளாக அதிபராக இருக்கும் வாய்ப்பு எனக்கு கிட்டியமை எமது பிறந்த கிராமத்து இளம் சமுதாயத்திற்கு சேவை செய்யக் கிடைத்த அரும்பேறு எனவே கருதுகிறேன். அப்போது எனக்கு வாய்த்திருந்த பிரதி அதிபர்கள், ஆசிரியர்குழு, பெற்றோர், நலன்விரும்பிகள், கிராமத்து ஸ்தாபனங்கள் ஆகியோரின் இதயபூர்வமான ஒத்துழைப்பை இன்றுகூட எண்ணி மகிழ்ச்சி அடைகின்றேன்.

இக்கல்லூரியின் சாதனைகளை எண்ணுகையில் எம் எல்லோரினதும் ஒன்றுபட்ட பெருமுயற்சியின் பலன்தான் அதுவெனக் கூறலாம். பெய்த பெருமழை போன்றது அதன் ஒவ்வொரு துளியையும் ஒவ்வொரு உச்சப் பயன் கருதிப் பயன்படுத்த வேண்டும். கல்வியையும் அறிவையும் விட எமக்கு மிக உறுதிப்பாடானது எமது மரபு வழி விழுமியங்கள். மாறி வரும் சமூக அமைப்பில் இவற்றைக் கட்டிக் காத்து "கற்றவை கற்றபின் அதற்குத் தக நிற்றல் அவசியம்" என்பதற்கிணங்க மாணவர் சமுதாயம் வாழவேண்டுமென ஆசைப்படுவதோடு இக்கல்லூரித்தாய் பலநூறு ஆண்டுகள் இத்தகைய கோலாகல விழாக்கள் காண்பதுடன் நீடூழி வாழ்க எனவும் வாழ்த்துகிறேன்.

~ நன்றி ~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**மட்டக்களப்பு கல்வியியற் கல்லூரி முதல்வர்**

**என். நடராஜா அவர்களின்**

# வாழ்த்துச் செய்தி

காரைதீவு மத்திய மகாவித்தியாலயத்தின் பொன்விழா தொடர்பாக வெளியிடப்படும் பொன்விழா மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்வு அடைகின்றேன்.

சுவாமி விபுலானந்த அடிகளார் பிறந்து வளர்ந்த இம்மண்ணின் சிறப்புமிகு கலைக்கூடம் இது இம்மண்ணில் பிறந்தவன் நான். ஆரம்பம் முதல் காரைதீவின் இ. கி. ச. ஆண்கள் பாடசாலையில் கற்ற எனக்கு, பொன்விழாக் காணும் இம்மத்திய கல்லூரியில் ஓரிரு மாதங்கள் உயர்தர வகுப்பிலே கல்வி கற்கும் வாய்ப்பு கிடைத்தது. இக்கல்லூரியின் பழைய மாணவன் எனும் பேறும் எனக்குண்டு. நன்னெறி நின்ற பல ஆசான்களையும், சுயநலமற்ற ஆற்றல் மிக்க பல அதிபர்களையும் கண்டது இம்மத்திய கல்லூரி.

இதன் வளர்ச்சியிலே உருவான கல்விமான்கள் பலர். சிறந்த வைத்திய நிபுணர்களையும், பொறியியல் நிபுணர்களையும் , ஆற்றல் மிக்க விஞ்ஞான, வணிக, கலைப் பட்டதாரிகளையும் தொடர்ந்து உருவாக்கி நாட்டுக்கு அளித்த பெருமை இம்மத்திய கல்லூரிக்கு உண்டு. இராம கிருஷ்ண சங்கப் பாடசாலைகள் காரைதீவிலே தமிழையும் சைவத்தையும் வளர்த்த அதே வேளையில், 1950ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரி ஆங்கிலக் கல்வியையும், விஞ்ஞானக் கல்வியையும் கொடுத்து காரைதீவு வாழ் மக்களது கல்வியைச் செழுமைப்படுத்தியதை மறக்க முடியாது. ஒவ்வொரு அதிபர், ஆசிரியர்களது அர்ப்பணிப்பும், சேவை மனப்பான்மையும், பெற்றோரது ஊக்கமுமே இதன் வளர்ச்சிக்கு முக்கிய காரணங்களாக இருந்தன.

எதிர்காலத்திலே ஒரு நிறைவான கலைக்கூடமாக இம் மத்திய கல்லூரி வளர்வதற்கு பயிற்றுவிக்கும் ஆசிரியர்களது அர்ப்பணிப்புடன் மாணவ சமுதாயத்தினரின் ஒற்றுமையுடன் சேர்ந்த நல்லூக்கமும், ஒழுக்கமும், ஆக்கச் சிந்தனையும், அறிவியல் கலைத்திறனும் அவசியமாகின்றன.

**"கற்பதற்கு வழிகாட்டுவோம்**
**கல்லாமை எனும் இருளை அகற்றுவோம்"**

ஆசிரியர்களதும் மாணவர்களதும் சீரிய பணி இது. இக்கல்லூரியின் பதினாறாவது அதிபர் திரு.செ.அருள்மொழி அவர்கள் தகுதியானவர்; ஊர்ப் பிறந்தவர்; கொடுத்து வைத்தவர். அவரது காலத்தில் இம்முது நிறுவனம் பொன்விழாக் கொண்டாடுவது மிகவும் பொருத்தமானதும் சந்தோசத்திற்கு உரியதுமாகும்.

பொன்விழாக் கொண்டாடும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், உதவியாளர்கள் அனைவருமே இக்கல்லூரியின் பொறுப்பாளர்கள் ஆவர். இப்புத்தாயிரமாம் ஆண்டிலே அவர்களது பணி சிறக்க வேண்டும். பொன்விழாக்காணும் இக்கல்லூரியின் சமூகத்தொண்டு, செழித்தோங்க வேண்டும் என வாழ்த்துகிறேன்.

- நன்றி -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர்
**மா. செல்வராஜா** அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரியின் 50வது ஆண்டு நிறைவையொட்டி வெளியிடப்படும் பொன்விழா மலருக்கு செய்தியொன்றை வழங்குவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

1950ம் ஆண்டு தை மாதம் 15ம் திகதி ஆங்கில பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை இன்று மத்திய கல்லூரியாக உயர்ந்து 1400 மாணவர்களையும், 55 ஆசிரியர்களையும் கொண்டிருப்பதுடன் கல்விப் பொதுத்தராதர உயர்தரத்தில் கலை, வர்த்தக, விஞ்ஞான பிரிவுகளையும் கொண்டிருக்கின்றது. கடந்த 50 ஆண்டு காலத்தில் இக்கல்லூரி கல்முனை வலயக் கல்வி வளர்ச்சிக்குப் பாரிய பங்களிப்பை ஆற்றியுள்ளதை இதன் கடந்த காலச் சாதனைகள் நிரூபிக்கின்றன.

கிழக்கிலங்கையின் விடிவெள்ளியெனத் தோன்றி தமிழுக்கும், கல்விக்கும், கலாச்சாரத்திற்கும், சமூகத்திற்கும் அரும்பணியாற்றிய முத்தமிழ் வித்தகர் ஸ்ரீமத் சுவாமி விபுலானந்தரது நாமத்தை தாங்கியதாக இக்கல்லூரி விளங்குவது இதற்கொரு தனிச் சிறப்பாகும்.

இக்கல்லூரி ஏற்கனவே பதினைந்து அதிபர்களைக் கண்டது. அவர்களது அரும்பெரும் தொண்டைப் பெற்றது. இன்றுள்ள பதினாறாவது அதிபரும் எனது மாணவருமான திரு.செல்லையா அருள்மொழி அவர்களது காலத்தில் இப்பொன்விழா இடம்பெறுவது மிக்க மகிழ்ச்சியைத் தருகின்றது.

இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு இதுவரை காலமும் பணியாற்றிய அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள், பழைய மாணவர்கள் அனைவரையும் உளமாரப் பாராட்டுவதுடன் இக்கல்லூரிக்கான பொன்விழா நிகழ்வு சிறப்புற நிகழவேண்டுமெனவும், இக்கல்லூரி எமது நாட்டின் கல்வி வளர்ச்சிக்கு மேலும் பங்களிப்புக்கள் வழங்க வேண்டும் எனவும் இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

- நன்றி -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர்

## எஸ். மகேசன் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

1950ம் ஆண்டு காரைதீவின் சரித்திரத்தில் மற்றுமோர் மைல் கல். அதுதான், இன்று விபுலானந்த மத்திய கல்லூரி எனப் பெயர் பெற்று, பொன்விழாக் காணும் இக் கல்விக் களஞ்சியத்தின் ஆரம்ப நாளில் 04 ஆசிரியர்களுடனும் 16 மாணவர்களுடனும் 15-01-1950 அன்று அடிக்கல் நடப்பெற்ற இப்பாடசாலை தன்னுடைய ஐம்பதாண்டு கால ஓட்டத்தில், 16 அதிபர்களையும் 247 ஆசிரியர்களையும் 1400 மாணவர்களையும் சந்தித்தது மட்டுமன்றி, இரு தடவைகள் 1985 இலும், 1990 இலும், நாட்டின் இனக்கலவரங்களினால் ஏற்பட்ட சேத அனர்த்தங்களுக்கும் முகம் கொடுத்துள்ளது.

இவ்வாறான கால மாற்றங்களினூடாக வளர்ந்து மத்திய கல்லூரி என்ற நிலைக்கு வந்துள்ள இப்பாடசாலை, பிள்ளைகளின் கல்வி, ஒழுக்க வளர்ச்சியில் அளித்துள்ள பங்கு இவ்வூரின் நல்லொழுக்க, கல்விமான்களை எண்ணிப்பார்க்கையில் வெள்ளிடை மலையாகப் புலப்படுவது மறுக்க முடியாத உண்மை. ஓர் பாடசாலையின், பௌதீக வள வளர்ச்சியில் கல்வி விருத்தியுள்ளதா அன்றி மறுதலை உண்மையா என்பதை நாம் ஆராயத் தேவையில்லை. ஒன்று மட்டும் கூறலாம். இவ் இரண்டையும் வளர்த்துக் கொண்டிருக்கும் ஆசிரியப் பெருந்தகைகளை, ''ஏணிப்படி'' களாக உவமித்தது சாலப் பொருந்தும். இவ்வாறான தன்னிகரற்ற ஆசிரியர்களைக் கொண்ட இக்கல்லூரி, சிறந்த பரீட்சை மற்றும் போட்டிப் பெறுபேறுகளை அடைவதில் வியப்பேதுமில்லை.

இக்கல்லூரியின் நிர்வாக இயந்திரத்தை எடுத்துக் கொண்டால், அதிபர், ஆசிரியர்கள் ஆகியோரின் கூட்டு முயற்சியில், சமூகத்திலுள்ள கல்விமான்களினதும், புத்திஜீவிகளினதும் கண்ணோட்டங்களையும் கல்லூரி பற்றிய கருத்துக்கைளயும் அவ்வப்போது சீர்தூக்கி ஆராய்ந்து, குறைகள் நிவர்த்திக்கப்பட்டு சிறந்த பெறுபேறுகள் அடையப் பெறுவதை எண்ணுவது பெருமிதமடையக் கூடிய ஒன்றாகும். இவ் அடைவுகளுக்கு பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் உதவியும் ஒத்தாசையும் எப்போதும் கிடைக்குமென உறுதிகூறுவதோடு, இப்பொன்விழா நிகழ்வுகள் இனிதே நிறைவுபெற்று, இவ்வூரில் பிறந்த சுவாமி விபுலானந்தரின் நாமத்தைத் தாங்கி நிற்கும் இக்கல்லூரி மென்மேலும் வளர்ச்சியடைய, பொன்விழா நினைவு மலரினூடாக எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் உவகையடைகிறேன்.

- நன்றி -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பழைய மாணவர் சங்கத் தலைவர்

## க. பத்மநாதன் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

கிழக்கின் கல்வியூற்றாக விளங்கும் காரேறு மூதூராம் காரைதீவில் பிறந்து உலகம் முழுவதும் புகழ்பரப்பி முத்தமிழ் வித்தகன் எனப் பாராட்டப்படுபவர் சுவாமி விபுலானந்தர். இவரது திருநாமம் தாங்கி நிற்கும் விபுலானந்தா மத்திய கல்லூரி பல அரசியல், பொருளாதார, சமூக இடர்களையும் கடந்து மாவட்டத்திலுள்ள முதற்தர கல்லூரிகளுள் ஒன்றாக மிளிர்கின்றது.

1950ம் ஆண்டு 16 மாணவர்களுடன் கனிஷ்ட வித்தியாலயமாக ஆரம்பிக்கப்பட்டுப் பின் சிரேஷ்ட வித்தியாலயமாக, அரசினர் லித்தியாலயமாக வளர்ச்சி கண்டு இன்று விபுலானந்த மத்திய கல்லூரியாக பென்விழாக்காணும் சிறப்பைப் பெற்றுவிட்டது.

இக்கல்லூரியின் வளர்ச்சியில் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், அரசியல் வாதிகள், பாடசாலை அபிவிருத்திச் சபையினர், பழைய மாணவர் சங்கத்தினர், நலன்விரும்பிகள் ஆகியோரின் பங்கும் பணியும் மகத்தானது. இக்கல்லூரின் வளர்ச்சியில் பங்கு கொள்ளவும் பொன்விழா நிகழ்வுகளில் கலந்து கொள்ளவும் எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்ததைப் பெரும் பாக்கியமாகக் கருதுகின்றேன்.

சுவாமி விபுலானந்த அடிகளாரது நூற்றாண்டு விழாவைக் கொண்டாடிய நாம் இன்று விபுலானந்த மத்திய கல்லூரியின் பொன்விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றோம். இக்கல்லூரியின் சேவைகள், வளங்கள் மேலும் விஸ்தரிக்கப்பட்டு இன்னும் பல நூற்றாண்டுகள் கல்விப் பணியாற்ற வாழ்த்துகின்றேன்.

- நன்றி -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்முனை வலய

தமிழ்மொழி

உதவிக் கல்விப் பணிப்பாளர்

**வ. சுப்பிரமணியம்** அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரியின் ''பொன்விழா'' மலரில் எனது வாழ்துச் செய்தியைப் பதிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

கடந்த ஐம்பது ஆண்டுகால பாடசாலை வாழ்க்கை அனுபவங்களை வளர்ச்சிக் கட்டங்களை தடம்பதித்து வரும் இந்நூல் பொன்விழாவின் அழியாக் கோலான குறியீடாக விளங்கி எதிர்காலச் சமூகத்திற்கு விபுலானந்தாவின் கல்வி கலாச்சாரத்தை எடுத்துப் போதிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இக்கல்லூரியின் ஆரம்பம், வளர்ச்சி, இன்றைய உயர்நிலை சகலவற்றிற்கும் பங்களித்த சகல தரப்பினரையும் இச்சந்தர்ப்பத்தில் நினைவுகூர்ந்து பாராட்டுவது நமது கடப்பாடாகும்.

திருவாளர்.செ.அருள்மொழி அதிபர் அவர்களின் காலத்தில் பொன்விழா இனிது நிறைவேற உழைத்த சகலரையும் நன்றியோடு பாராட்டி எனது மனப்பூர்வமான வாழத்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

– நன்றி –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரியை வாழ்த்தும் கல்விக்கூடங்கள்

## பொன்விழா பொலிவுற அயராது உழைக்கும் அனைத்து உள்ளங்களுக்கும் எமது வாழ்த்துக்கள்

ஈழமணித் திருநாட்டின் கிழக்கு மாகாணத்தில் தமிழன் விடியலுக்காக அறிவுச் சுடராய்த் தோன்றி அணையாத தீபமென ஒளிவீசிக் கொண்டிருக்கும் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரை ஈன்றெடுத்த அன்னை இக்காரேறு மூதூர். அடிகளாரின் திருநாமத்தில் நிலைத்து நின்று திக்கெட்டும் தமிழின் அறிவியலின் தன்மையுந் தண்மையும் சிறப்புற தன் பொன்விழாவைக் கொண்டாடும் கல்லூரியின் சேவை தளராது வளர வாழ்த்துவதோடு உயர்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் அயராது உழைக்கும் அனைத்து உள்ளங்களையும் பாராட்டுகின்றோம்

**அதிபர் - ஆசிரியர்கள் - மாணவர்கள் - சிற்றூழியர்கள்**
**மட்/இ.கி.ச. சிவானந்தா வித்தியாலயம் (தேசிய பாடசாலை)**
**கல்லடி உப்போடை, மட்டக்களப்பு.**

## – மனம் நிறைந்த வாழ்த்துக்கள் –

ஒரு பாடசாலையின் ஐம்பதாண்டு வரலாறென்பது ஒரு சாதாரண விடயமல்ல. அது பெரியதோர் சாதனை. ''விபுலானந்த மத்திய கல்லூரி'' அதன் பொன்விழாவினைக் கொண்டாடும் இவ்வேளையில் மென்மேலும் இப்பாடசாலை வளரவும், நற்பிரசைகளை மேலும் மேலும் பிரசவிக்கவும் எங்கள் வாழ்த்துக்களை தெரிவிப்பதோடு மலர்கின்ற இப் ''பொன்விழா மலர்'' மணம்வீசிபொலிவு பெற வேண்டுமென மனமகிழ்வோடு வாழ்த்துகின்றோம்.

**அதிபர் - ஆசிரியர்கள் - மாணவர்கள் - சிற்றூழியர்கள்**
**மட்/விவேகானந்தா மகளிர் மகா வித்தியாலயம்**
**கல்லடி உப்போடை, மட்டக்களப்பு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வித்தைக்கு வித்திடும் ஞானதீபம்

சுவாமி முத்தமிழ் வித்தகர் விபுலானந்த அடிகளார் அவதரித்த மண்ணில் வித்தைக்கு வித்திடும் ஞானதீபமென எம் கிராமத்தில் விளங்கி நிற்கும் விபுலானந்த மத்திய கல்லூரி பல்கலைகள் பரிணமிக்கும் நெறிநின்று ஓங்கியுயர்ந்து பொன்விழாக் காண்பது கண்டு புளகாங்கிதமடைவதுமன்றி இவ்வாழ்த்துரையை வழங்குவதிலும் பேருவகையடைகிறோம்.

**அதிபர் - ஆசிரியர்கள் - மாணவர்கள் - சிற்றூழியர்கள்**
**கமு/இ.கி.ச. ஆண்கள் பாடசாலை**
**காரைதீவு.**

## அறிவுப்பசிபோக்கி ஆற்றலோடெழுக!

உலகெலாம் தமிழோசை கேட்க வழிசமைத்த வித்தகர் விபுலானந்த அடிகளாரின் நாமத்தினைத் தாங்கி ஈடிணையற்ற சேவையினை வழங்கிவரும் இக்கல்லூரியின் ஐம்பதாண்டு நிறைவு விழாவில் மேலும் மேலும் இக்கல்விக்கூடம் உயரிய உன்னத நிலையினை அடைந்து புகழ் பெறுவதோடு நூற்றாண்டுகளும் கண்டு எம்கிராம மக்களின் அறிவுப்பசிபோக்கி ஆற்றலோடு வளர எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவானாக. நீடூழி வாழ்க!

**அதிபர் - ஆசிரியர்கள் - மாணவர்கள் - சிற்றூழியர்கள்**
**கமு/இ.கி.ச. பெண்கள் பாடசாலை**
**காரைதீவு.**

## பல்லாண்டு கலைப்பணி புரிக!

மருதமும் நெய்தலும் வளம் பல பொழியும் எழிலான மட்டுநகர்–காரைதீவில் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் திவ்விய நாமந்தாங்கி அறிவுக்கண்திறக்கும் அரும்பணியில் ஐம்பதாண்டுகள் முத்திரை பதித்து கிராம இதயமாய் நின்று சுடரொளி பரப்பும் மத்திய கல்லூரி பன்னூறாண்டு காலம் கலைப்பணிபுரிய வேண்டும் என இதயபூர்வமாக வாழ்த்துகின்றோம்.

வாழ்க விபுலானந்தா !

**அதிபர் - ஆசிரியர்கள் - மாணவர்கள் - சிற்றூழியர்கள்**
**கமு/விஷ்ணு வித்தியாலயம்**
**காரைதீவு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்விக்கண்களுக்கு ஓர் கலங்கரை விளக்கம்

பழந்தமிழ்க் கிராமமாகிய காரைதீவின் கல்விக் கண்களுக்கு ஓர் கலங்கரை விளக்கமாக ஏனைய கல்வித் தாபனங்கட்கு முன்னோடியாக கிராம மக்களின் இதய ஊற்றாக எதிர்கால அறிவுலகத்திற்கோர் ஏணிப்படியாக விளங்கும் ''விபுலானந்த மத்திய கல்லூரி'' நெடிதுயர்ந்து சிறக்கவும் பொன்விழாவில் பொலிவுடன் திகழவும் எங்கள் நல்வாழ்த்துக்கள்.

**அதிபர் - ஆசிரியர்கள் - மாணவர்கள் - சிற்றூழியர்கள்**
**கமு/கண்ணகி இந்து வித்தியாலயம்**
**காரைதீவு.**

## பொன்விழாக் காணும் விபுலானந்தா வாழ்க

அன்று விபுலனைக் கண்ட இக்காரைதீவிலே ஆலம்வித்துப் போல் புதைந்து கொண்டு அறிவாற்றலை அள்ளி வழங்க நினைத்து இன்று ஆலவிருட்சம்போல் நின்று எண்ணிலாக் கல்விமான்களை ஆக்கியளித்த கல்விக் கூடமாக நிமிர்ந்து நிற்கும் இக்கல்லூரி இந்த மிலேனிய ஆண்டிலே பொன்விழாக் காணும் இன்னாளில் அதன் புகழ் சிறந்து ஓங்க எமது நல் வாழ்த்துக்கள்.

**அதிபர் - ஆசிரியர்கள் - மாணவர்கள் - சிற்றூழியர்கள்**
**கமு/ விக்னேஸ்வரா வித்தியாலயம்**
**காரைதீவு.**

## பல்லாண்டு வாழ வாழ்த்துக்கள்

காரைதீவுப் பிரதேசத்தின் தலைமைப் பாடசாலையான விபுலானந்த மத்திய கல்லூரி ஈட்டியுள்ள கல்விச் சாதனைகள் பிரமாண்டமானவை. இலங்கைப் பல்கலைக்கழகங்களின் சகல வளங்களுக்கும் மாணவர்களை அனுப்புவித்த பெருமை இக்கல்லூரிக்குண்டு. இன்று பொன்விழாவைக் காணும் இக்கல்லூரி மேலும் பல சாதனைகள் புரிய எமது நல்வாழ்த்துக்கள்.

**அதிபர் - ஆசிரியர்கள் - மாணவர்கள் - சிற்றூழியர்கள்**
**கமு/அல்-ஹுசையின் வித்தியாலயம்**
**மாளிகைக்காடு,**
**காரைதீவு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## -இதயபூர்வமாக வாழ்த்துகிறோம்-

கல்முனை சுவாமி விபுலானந்தர் பிறந்த மண்ணில் கலங்கரை விளக்காக விளங்கி 50வது ஆண்டினை கொண்டாடும் காரைதீவு விபுலாநந்த மத்திய கல்லூரியின் பொன்விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் பெருமகிழ்ச்சியடைகிறோம். எதிர்கால சமூக மேம்பாட்டிற்கு கல்வித்துறையில் சிறந்த சாதனைகளை படைக்க வேண்டுமென இதயபூர்வமாக வாழ்த்துகிறோம்.

**அதிபர் - ஆசிரியர்கள் - மாணவர்கள் - சிற்றூழியர்கள்**
**கமு/இராம கிருஷ்ண மிஷன் மகா வித்தியாலயம்**
**கல்முனை.**

## மேலும் சாதனைகள் புரிக!

பொன்விழாவைக் கொண்டாடும் விபுலானந்த மத்திய கல்லூரி அதிபர், ஆசிரியர், மாணவர்கள், பொற்றோர்கள் சகலருக்கும் எமது இதயபூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். தங்களது பாடசாலை கல்வியில் மேலும் சாதனைகளைப் புரிந்து ஒரு சீரான புரிந்துணர்வுடன் கூடிய சமுதாயத்தை உருவாக்க வேண்டும் எனவும் வாழ்த்துகிறேன்.

**அதிபர் - ஆசிரியர்கள் - மாணவர்கள் - சிற்றூழியர்கள் - பெற்றோர்கள்**
**கமு/அல்-அஷ்ரக் தேசிய பாடசாலை**
**நிந்தவூர்.**

## - உளங்கனிய வாழ்த்துகின்றோம் -

அலைகடல் அருகினில் ஆலயத்து அமைவிடத்தில் இயற்கை அன்னையின் இனிய அரவணைப்பில் அகிலமெலாம் அறிவொளி பரப்பி நிற்கும் இம்மத்திய கல்லூரி "பொன்விழாக்" கண்டு பொலிவுற்று நிற்கும் இவ்வேளை மேலும் ஓங்கி வளர்ந்து பயன்பல தரவேண்டுமென உளங்கனிய வாழ்த்துகின்றோம்.

**அதிபர் - ஆசிரியர்கள் - மாணவர்கள் - சிற்றூழியர்கள்**
**கமு/சண்முக வித்தியாலயம்**
**காரைதீவு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபுலாநந்த மத்திய கல்லூரியின் ஆரம்ப கர்த்தாக்கள்



திரு.எஸ்.பொன்னையா
(Former Milk Feeding Superviser)



திரு.கே.விஜயரெட்ணம்
(Head Master)



திரு.கே.சண்முகம்
(Head Master)



திரு.கே.கோவிந்தசாமி
(Head Master)



திரு.ரீ.எஸ்.வேலுப்பிள்ளை
(Head Master)



திரு.கே.வெற்றிவேல்
(Head Master)



திரு.வ.மார்க்கண்டு
(Head Master)



திரு.கே.வேல்நாயகம்
(Head Master)



திரு.கே.சாமித்தம்பி
(போடியார், உரிமையாளர்- பரமேஸ்வரி புத்தகசாலை)



திரு.கே.கந்தவனம்
(அரசலிகிதர்)

திரு.க.செல்லையா
(போடியார்)

"அன்று அவர்கள் ஏற்றிவைத்த தீப ஒளியில் இன்று பல்லாயிரமவர் பார்வை பெற்றுள்ளனர்"

**இவர்கள் தமது அயரா முயற்சியினால் 1950ல் ஒரு அரசாங்க கனிட்ட ஆங்கில பாடசாலையை நிறுவும் முகமாக இணைந்து செயற்பட்டமை வரலாற்றில் முதற்பக்கச் செய்தி. எல்லோருமே அமரர்களாகி விட்டமையையிட்டு இவை அவர்களுக்கு சமர்ப்பணமாகுக.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முதல் மாணாக்கரது நினைவு கூர்வு

முத்தமிழ் வித்தகர் விபுலானந்தரை ஈன்றளித்து தமிழ் உலகிற்கு பெருமை சேர்த்த புண்ணிய பூமியான காரைதீவில் பிரபலமானதோர் மத்திய கல்லூரியாக உயர்ந்து பொன்விழாக் காணும் காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரியின் சிறப்புக் கண்டு எனது உள்ளம் பெருமிதத்தால் நிறைந்து வழிகின்றது. வாயார வாழத்தி மனமாரப் புகழ்ந்து கல்விக் கோயிலின் வளர்ச்சியையும், அதன் சேவையையும், நினைந்து மனம் மகிழ்கின்றேன்.

பொன்விழாக் காணும் காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரி அன்றைய அரசினர் கனிட்ட ஆங்கில பாடசாலையின் முதல் மாணவன் என்ற காரணத்தினால் எனது மகிழ்ச்சி இன்னும் பல மடங்காகின்றது. இப்பாடசாலையை ஆரம்பிப்பதற்கும், தரமுயர்த்துவதற்கும் முன்னின்ற பெருமக்களுள் எனது தந்தை கதிரேசபிள்ளை சண்முகம் முக்கியமானவர். எனது தாய்மாமனான நல்லரெட்ணம் தங்கராசா அவர்கள் அதிபராக பணியாற்றிய அக்காலப்பகுதியில் முதல் மாணவனாக சேர்க்கப்பட்டேன். எமது காரைதீவு மக்களின் அயராத கடும் உழைப்பினால் இந்த பாடசாலை 15-01-1950 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அன்றைய நாட்களில் உயர்வகுப்பு கற்பதற்கு எமது கிராம மாணவர்கள் பிற இடங்களுக்கு செல்ல வேண்டிய நிலைமை காணப்பட்டது. அந்தச் சூழலில் தான் எமது மண்ணில் இந்த முதல் ஆங்கில அரச பாடசாலை எமது அரச உத்தியோகத்தர்களின் அயராத உழைப்பால் ஆரம்பிக்கப்பட்டது. அன்று இட்ட அந்த விதை இன்று பெரும் விருட்சமாக இருப்பதைக் கண்டு நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இப்பாடசாலையில் கல்வி பயின்ற பலர் இன்று உயர்ந்த பதவிகளில் இருந்து சிறந்த சேவையைப் புரிகின்றனர். தற்போதைய வலயக் கல்விப் பணிப்பாளர் த. மயில்வாகனம் போன்ற இன்னும் பலர் சீரிய சேவையை செய்து வருகின்றனர். தற்கால நவீன பிரஜைகளை உருவாக்கி வழிப்படுத்தி வரும் இவ்வித்தியாலயம் மென்மேலும் வளர்ந்து பயனுள்ள சேவையினை வழங்க வேண்டும் என வாழ்த்தி மகிழ்ச்சியடைகின்றேன்.

**சண்முகம் சச்சிதானந்தம்**
*முதலாவது பழைய மாணவன்*
*(FIRST OLD STUDENT).*

## அதிபர் பெருந்தகைகள்.


திரு.என்.தங்கராசா


திரு.பி.இராசரெட்ணம்



திரு.எஸ்.கே.கந்தப்பு


திரு.எம்.ஏ.ஜெபமாலை



திரு.எம்.சச்சிதானந்தசிவம்


திரு.வை.வேலுப்பிள்ளை


திரு.சீ.ஐ.கோயில்பரம்பில்


திரு.ரி.மயில்வாகனம்


திரு.பி.இராஜதுரை


திரு.வீ.ரீ.செல்லத்துரை



திரு.க.நடராஜா


திரு.எஸ்.மகாலிங்கம்


திரு.பி.பாக்கியராஜா


திரு.ரி.சண்முகரெட்ணம்


திருமதி.எம்.சத்தியதேவா


திரு.செ.அருள்மொழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எமது கல்லூரியின் வளர்ச்சிக்காகவும், மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்காகவும் தங்களை அர்ப்பணித்த அதிபர் பெருந்தகைகள்.**

| இல. | அதிபர் | காலம் | |
|---|---|---|---|
| | | இருந்து | வரை |
| 01. | திரு.என்.தங்கராசா | 01-02-1950 | 28-02-1950 |
| 02. | திரு.பி.இராசரெட்ணம் | 01-03-1950 | 01-02-1954 |
| 03. | திரு.எஸ்.கே. கந்தப்பு | 02-02-1954 | 31-04-1960 |
| 04. | திரு.எம்.ஏ.ஜெபமாலை | 01-05-1960 | 02.01.1961 |
| 05. | திரு.எம்.சச்சிதானந்தசிவம் | 03-01-1961 | 30-06-1968 |
| 06. | திரு.வை.வேலுப்பிள்ளை | 01-07-1968 | 03-09-1970 |
| 07. | திரு.சீ.ஐ.கோயில்பரம்பில் | 04-09-1970 | 06-04-1975 |
| 08. | திரு.ரி.மயில்வாகனம் | 07-04-1975 | 31-07-1979 |
| 09. | திரு.பி.இராஜதுரை | 01-01-1977 | 14-02-1977 |
| 10. | திரு.வி.ரி.செல்லத்துரை | 15-02-1977 | 31-12-1977 |
| 11. | திரு.க.நடராஜா | 01-09-1979 | 25-10-1983 |
| 12. | திரு.எஸ்.மகாலிங்கம் | 26-10-1983 | 14-01-1987 |
| 13. | திரு.பி.பாக்கியராஜா | 15-01-1987 | 09-06-1991 |
| 14. | திரு.ரி.சண்முகரெட்ணம் | 10-06-1991 | 05-11-1996 |
| 15. | திருமதி.எம். சத்தியதேவா | 06-11-1996 | 29-06-1998 |
| 16. | திரு.சி.அருள்மொழி | 30-06-1998 | இன்றுவரை |

**DO YOU KNOW HOW WE CALL THESE CELEBRATIONS?**
**TRY YOUR SELF.**

1. Completion of One year
2. Completion of 25 year
3. Completion of 50 year
4. Completion of 60 year
5. Completion of 75 year
6. Completion of 100 year

**ANSWERS**

1. Anniversary
2. Silver Jubilee
3. Golden Jubilee
4. Diamond Jubilee
5. Platinum Jubilee
6. Centenary



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழக்கற்றுக்கொள்...

இக்கல்லூரியின் வரலாற்றில் கடந்த ஐம்பது ஆண்டுகளும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தன. அயல் கிராமங்களிலுள்ள பாடசாலைகளோடு ஒப்பிடும் போது போஷாக்கின்மையால் வளரும் குழந்தை போன்று படிப்படியாக மெதுவாக இதன் வளர்ச்சிக் கட்டங்களும் அபிவிருத்திகளும் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பாடசாலையில் கல்வி கற்கின்ற ஒவ்வொரு மாணவனும் தமது கலாசாரத்தின் அடிப்படைகளை அறிந்திருத்தல் வேண்டும்.

பிறரின் பண்பாடுகளைக் கௌரவிக்கவும் அவர்கள் கற்க வேண்டும். அத்தோடு ''வாழக்கற்றல்'' என்பதும் வலியுறுத்தப்படுகின்றது.

கற்றலின் பெறுபேறுகளை மாணவர்கள் பரீட்சைகளில் தரும் சரியான விடைகளிலும் அவர்களுடைய நடத்தை மாற்றங்களிலும், ஒரு பணியைச் செய்வதில் அவர்களுடைய ஆற்றலிலும் கண்டு கொள்ள முடியும். பாடசாலை விட்டு கற்று வெளியேறும் மாணவர்கள் சில சட்டதிட்டங்களையும், பலதிறன்களையும் சிறந்த மனப் பாங்குகளையும், சிறந்த ஒழுக்க நெறிகளையும் அறிந்தவர்களாக இருத்தல் அவசியம்.

அந்த வகையில் பொன்விழாக் கண்டுள்ள இச்சந்தர்ப்பத்தில் எமது மாணவர்கள் நினைவில் நிறுத்தி என்றும் கடைப்பிடிக்க வேண்டிய சில சுயகட்டுப்பாடுகளை உங்கள் முன் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

- உன்னை நீ மதிப்பதன் மூலம் பிறரின் மதிப்பை சம்பாதிக்க முடியும். பிறரை மதிப்பின் அதிக நண்பர்களை தேடிக் கொள்ளலாம். பிறரைக் கெஞ்ச வேண்டாம். மாறாக எல்லோரிடமும் அவரின் தராதரத்திற்கேற்றவாறு மதிப்பளிக்கக் கற்றுக்கொள்.
- உமது இலட்சியம் உயர்வானதாக இருக்கட்டும். சந்தர்ப்பங்கள் திரும்ப வருவதில்லை. கிடைத்த வாய்ப்பை கெட்டியாக பிடித்துக் கொள்.
- பாடசாலை நாட்களைப் பயன்படுத்தும் முறையில்தான் உமது எதிர்காலம் தங்கியுள்ளது. அக்காலத்தை முறையாக பயன்படுத்தியிருந்தால் அது உன்னை மனிதப் பண்புடன் கூடிய முழுமனிதனாக உருவாக்கியிருக்கும்.
- வேலையை நேசிக்கக் கற்றுக்கொள். அதை உதாசீனப் படுத்தாதே. அது தான் வெற்றியின் இரகசியம். வாழ்வில் வெற்றியடைந்தவர்கள் எல்லாம் கடும் உழைப்பாளிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பிரச்சினைகள் வரும்போது உன்னைவிடச் சிறந்த அறிவாளிகளைக் கலந்தாலோசி. ஆயினும் சிந்திக்காமலும் செயல்பட வேண்டாம். பிறரின் கருத்தை ஆராயாமல் ஏற்றுக் கொள்ள வேண்டாம். ஒரு விடயத்தின் அனுகூலம், பிரதிகூலங்களை ஆராய்ந்து உனது சொந்தத் தீர்ப்பை எடு, இது தான் உனது பொது அறிவை வளர்க்கும்.

- தன்னம்பிக்கையுடையவனாக இரு, உமது கடமையை சரிவர அறிந்து செயல்படும் போது பிறரின் குற்றச்சாட்டிற்கோ குறைகூறுதலுக்கோ அச்சப்படத் தேவையில்லை. "மகிழ்ச்சிக்கு முன் கவலை" என்ற சொற்றொடரை நினைவில் கொள்.

- உமது பாடசாலைக் கடமைகளுக்கு மனச்சாட்சிக்கு கட்டுப்பட்டுச் செயற்படு, உரிய நேரத்தில் உரிய வேலைகளை செய்வதை பழக்கப்படுத்திக் கொள்ளின் விளையாட்டு நேரம் மிக இனிமையாகத் தோன்றும். பாடசாலைச் சட்டதிட்டங்களைப் பின்பற்றுவது உனது உயரிய பண்பு நெறியை வளர்க்க உதவும்.

- எதிலும் மிக நுட்பமாக, சந்தேகங்களை வினாக்களை எழுப்புவதன் மூலம் தெளிவாக்கிக் கொள், ஒவ்வொன்றையும் ஆழமாக ஒப்பிட்டு அவதானி, செய்ய வேண்டியவற்றை திருத்தமாகச் செய்.

- ஆசிரியர்களின் அறிவுறுத்தல்களையும் விளக்கங்களையும் கவனமாக அவதானி, அவற்றை மீண்டும் படிக்கின்றபோது அவற்றின் கருத்துக்களை விளங்குவதில் சிரத்தை எடு. உமது சொந்த அறிவு, அனுபவங்களைக் கொண்டு ஆராய்ந்து ஒரு முடிவை எடு.

- எப்போதும் எதிலும் ஒழுங்கைப் பின்பற்று. ஒவ்வொன்றையும் அதற்குரிய இடத்தில் வைக்கப் பழகிக் கொள். அது நேரச் சிக்கனத்தை ஏற்படுத்தும். இதை உன்னோடு சேர்ந்தவர்களுக்கும் பழக்கிவிடு.

- காலத்தின் பெறுமதியை மதிக்க வேண்டும். ஓய்வு நேரத்தை பயனுள்ள முறையில் திட்டமிட்டுப் பயன்படுத்தத் தெரிந்து கொள்.

- ஒழுங்கின் பிரகாரம் வாழ்க்கையை அமைத்துக் கொள். அதிகாலையில் எழுந்திரு, சமய வழிபாடு, வீட்டுவேலைப்பாடு (Home work) போன்றவற்றிற்கு ஒரு வரையறுக்கப்பட்ட நேரத்தை ஒதுக்கிக் கொள்வதன் மூலம் அவற்றை இலகுபடுத்தலாம்.

- குறிப்பிட்ட வேலைக்கு குறித்த நேரத்திற்கு சென்றடைந்துவிடு, நேரம் தவறும் மாணவன் பலரின் அசௌகரியங்களுக்குக் காரணமாவதோடு தனக்கும் தொந்தரவை ஏற்படுத்திக் கொள்கிறான்.

**திரு. எம். ரவீந்திரன்**
*பிரதி அதிபர்*
*கமு/ விபுலானந்த மத்திய கல்லூரி*
*காரைதீவு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபுலானந்த மத்திய கல்லூரி

## ~ ஓர் வரலாற்று நோக்கு ~

வரலாறு என்பது ஓர் காலக்கண்ணாடி. கடந்தகால நிகழ்வுகளை நினைவுகூர்வதற்கு ''வரலாறு'' இன்றியமையாததோர் சாதனமாகும். ஒரு நாட்டைப் பற்றியோ அன்றி ஒரு பிரதேசத்தைப் பற்றியோ அல்லது ஒரு தனிநபர் பற்றியோ அறிவதற்கும் கடந்தகால வளர்ச்சி படிவங்களை கண்முன்னே ஒளிப்படமாகக் கண்டுகொள்வதற்கும் உறுதுணை புரிவது வரலாறாகும். ஒரு பாடசாலையின் வரலாறு கல்வியை, கட்டிடங்களை, மாணவர்களை, ஆசிரியர்களை, சமுகத்தை, பண்பாட்டு ஒழுங்குகளை, அபிவிருத்தியைப் பெறுபேற்றைப் போன்ற பல தரப்பட்ட விடயங்களின் பரிணாம வளர்ச்சிப் பாங்கினை ஒட்டுமொத்தமாக எடுத்துக்காட்ட வல்லதாகும்.

அந்த வகையில் தான் காரைதீவு விபுலானந்த மத்திய கல்லூரியின் வரலாற்றை வடிப்பதற்கு முனைவோம். சைவமும் தமிழும் தழைத்தோங்கி சமரசம் நிலவுகின்ற கிராமம் காரைதீவு. முத்தமிழ் முனியாக வித்தகன் விபுலானந்த அடிகளை ஈன்றெடுத்துதவும் கணிசமான கற்றறிவாளரைக் கொண்டதும், ஆலயங்களையும் ஆன்மீக மடங்களையும் அணைத்துதவும் கற்புக்கரசியாம் கண்ணகியம்மனின் அருட்பார்வையைக் கொண்டதும், கல்விச் சாலைகள் பலவற்றை தன்னகத்தே கொண்டதுமான காரைதீவு, பண்டைய பெருமை மிக்கதாகும். இக்கிராமத்தின் கலங்கரை விளக்கமாக மிளிர்வது விபுலானந்த மத்திய கல்லூரி என்றால் அது மிகையாகாது. எனவே வழிகாட்டியாகவும், வாழ்க்கைத் துணையாகவும், வணக்கத்திற்குரியதாகவும் பரிணமிக்கின்ற இக்கல்லூரியின் வரலாற்றினை பொன்விழாக் காணும் இக்கால கட்டத்தில் பின்னோக்கிப் பார்ப்பது பொருத்தமானதேயாகும்.

அன்று கடற்கரையின் அண்மையில் புதர்கள் மண்டிய காடுகளின் மத்தியில் வெம்பு வளவிலே ஒரு தனி ஓலைக் கொட்டிலிலே ஐம்பதிற்கும் குறைவான மாணவரோடு ஆரம்பிக்கப்பட்ட காரைதீவு கனிஷ்ட ஆங்கிலப் பாடசாலை இன்று பெரும் ஆலவிருட்சமாக விழுது விட்டு வியாபித்து பல மாடிக்கட்டிடங்களோடு ஓங்கி உயர்ந்து விரிவடைந்து பல பிரிவு உயர்தர வகுப்புக்களை உள்ளடக்கி ஆரம்பித்து நூறுக்கு மேற்பட்ட மாணவ, மாணவிகளோடு பல்வேறு வளங்களும் பொருந்தி காட்சியளிக்கும் பாங்கினை காண்பதற்கு காலப் பெட்டகத்தின் கதவுகளைத் திறந்து பார்க்க வேண்டியது அவசியமாகும்.

அன்று காரைதீவில் இராமகிருஷ்ண சங்கம் தாய்மொழியிலான தமிழ்ப்பாடசாலைகளை அமைத்து நிருவகித்து வந்த பொழுது சர்வதேச மொழியான ஆங்கிலத்தை கற்பதற்கு கல்முனை - மட்டக்களப்பு போன்ற நகர்ப் புறங்களை

நாடிச் செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலை நிலவியது. இத்தகைய கல்வியின் மங்கிய நிலையினை உணர்ந்து கொண்டு புத்திஜீவிகள் சிலர் இராம கிருஷ்ண சங்க கல்வி முகாமையாளராகவிருந்த சுவாமியவர்களை அணுகியபொழுது காரைதீவில் ஓர் ஆங்கிலப் பாடசாலையை அமைக்க முடியாதென்றும் ஆங்கிலக் கல்வி பெற விரும்பின் மட்டக்களப்பிற்குச் செல்லும் படியும் அறிவுறுத்தப்பட்டது. எது எவ்வாறிருப்பினும் எப்படியாவது காரைதீவில் ஓர் ஆங்கிலப் பாடசாலையை அமைப்பதென்ற தீர்மானம் வலுவடைந்தது. பாலுணவு மேற்பார்வையாளராகவிருந்த திரு. எஸ்.பொன்னையா இன்ஸ்பெக்டர், பரமேஸ்வரி புத்தகசாலை உரிமையாளர் திரு. கே.சாமித்தம்பி (போடியார்), அரசினர் பாடசாலைத் தலைமை ஆசிரியர்களான திரு. க. விஜயரெத்தினம், திரு. ரீ. எஸ். வேலுப்பிள்ளை, திரு. வ. பூபாலபிள்ளை, திரு. க. வேல்நாயகம், திரு. கோவிந்தசாமி,. திரு. ந. தங்கராசா, திரு.க.சண்முகம், திரு. க. வெற்றிவேல், திரு. வ. மார்க்கண்டு போன்ற கிராமப் பிரமுகர் பலரின் மத்தியிலும் அன்றைய யூனியர் பாடசாலை (Junior School) ஓர் அரசாங்க ஆங்கிலப் பாடசாலையாக அடியெடுத்து வைத்தது. அவ்வாறு காரைதீவில் பவனிவர ஆரம்பித்த இப்பாடசாலையின் வளர்ச்சிப் படிவங்களை பல்வேறு கோணங்களிலும் நோக்க வேண்டியது இன்றியமையாததாகும். ஆகவே நிருவாகமும், பௌதிக வளர்ச்சியும், கல்வி வளர்ச்சியும், சமய கலை இலக்கிய விழாக்கள் எனவும் இரு தலைப்புக்களில் என ஒரு தலைப்பிலும் அமைவாக இவ்வரலாற்றை வகுத்தல் பொருத்தமுடையதெனக் கருதலாம்.

## நிருவாகமும் பௌதீக வளர்ச்சியும்

அரசாங்கப் பாடசாலையொன்றினை அமைப்பதற்கு இடையூறெனவிருந்த போட்டியாளர்களின் பலத்த எதிர்ப்புகளுக்கு மத்தியில் கனல் தெறிக்கும் கடற்கரை வெம்பு மணலில் புதர்களிடையே ஒரு ஓலைக் கட்டிடத்தில் 1950.01.15 திகதியில் அரசாங்க கனிஷ்ட ஆங்கிலப் பாடசாலையானது (Government Junior English School) அவ்வமையம் கொழும்பில் இருந்து வருகை தந்திருந்த வித்தியாபதி திரு.எஸ்.அருணந்தி அவர்களினால் முறைப்படி ஆரம்பித்து வைக்கப்பட்டது. முதல் மாணாக்கராய் பதியப்பட்ட பெருமை சண்முகம் சச்சிதானந்தன் என்ற மாணவனுக்கே கிடைத்தது. இப்பாடசாலையின் முதலாவது அதிபராக காரைதீவு மகனாக திருவாளர் திரு.என்.தங்கராசா அவர்கள் நியமிக்கப்பட்டார். அவருக்கு ஆசிரியை எம்.அழகுமலர் (திருமதி. கருணாகரம்பிள்ளை) அவர்களும் ஆசிரியர் திரு.வி.வடிவேல் அவர்களும் நியமிக்கப்பட்டு உதவி ஆசிரியராயினர். ஆறாம் வகுப்புடன் ஆரம்பிக்கப்பட்ட ஆங்கில கனிஷ்ட பாடசாலையின் 1950.02.01 திகதி முதல் 1950.02.28 வரையுள்ள ஒரு மாதகால அளவில் மாத்திரம் முதலாவது அதிபர் என்ற பெருமைக்குரிய திருவாளர் ந. தங்கராசா அவர்களால் சேவையாற்ற முடிந்தது.

பின்னர் மட்/களுவாஞ்சிக்குடியைச் சேர்ந்த ஆங்கில ஆசானாகிய திரு.பீ.இராஜரெட்ணம் 1950.03.01 திகதியில் அதிபராக நியமிக்கப்பட்டார். அவரோடு அவரது துணைவியாரும் நியமிக்கப்பட்டார். ஊடக மொழியாக ஆங்கிலமே முற்று முழுதாய்ப் போதிக்கப்பட்டது. படிப்படியாக மாணவர் தொகை அதிகரிக்கலாயிற்று. இராம கிருஷ்ண சங்கப் பாடசாலைகளில் மாணவர் தொகையானது படிப்படியாக வீழ்ச்சியடையத் தொடங்கியது. இதன் விளைவாக கிராமத்தில் மிஷன் அணியினர் எனவும், அரசினர் அணி எனவும் இரு குழுக்கள் தோன்றின. போட்டி நடவடிக்கைளும் இடம்பெற்றன. இருப்பினும் கல்வி தொடர்பான நடவடிக்கைகளில் எவ்வித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடங்கல்களோ இடையூறுகளோ ஏற்படவில்லை. இவ்வாறே 1954.01.01 வரையுள்ள நான்கு ஆண்டுகள் அதிபராயிருந்த திருவாளர் இராசரெட்ணம் அவர்களது காலத்தில் கல்வி வளர்ச்சியோடு மாணவர் தொகையிலும் அதிகரிப்பு காணப்பட்டது. இருந்த போதிலும், அதிபர் அவர்கள் இடமாற்றம் பெற்றதும் ஆங்கிலப் பாடசாலை என்ற அந்தஸ்தை பாடசாலை இழந்தது. அதன் பின்னர் யாழ்ப்பாணம் நெல்லியடியைச் சேர்ந்த பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியரான திரு. எஸ். கே. கந்தப்பு அவர்கள் 1954-02-02ல் அதிபராக நியமிக்கப்பட்டார். திரு. கந்தப்பு அவர்களது காலம் இப்பாடசாலையின் ஓர் திருப்பு முனையென்றே கூறலாம். ஆங்கிலப் பாடசாலை இல்லாது விட்டமையினால் ஆரம்பத்தில் மாணவர் தொகை குறைந்து காணப்பட்ட போதிலும் இவரது சேவைத்திறன் காரணமாக மாணவர் தொகையில் அதிகரிப்பு ஏற்பட ஆரம்பித்தது. புதர் மண்டிய பற்றைக்காடுகள் அழிக்கப்பட்டன. மேடுபள்ளமாய்க் காணப்பட்ட பாடசாலைக்காணி சீரமைக்கப்பட்டதோடு பாடசாலையின் எல்லைகள் மிலாறு கொண்டும் தழைக்கம்புகள் கொண்டும் சுற்றிவர வேலியமைக்கப்பட்டன. அவருக்கு உதவியாகவிருந்த ஏனைய ஆசிரியர்களும் தமது பரிபூரண ஒத்துழைப்புக்களை வழங்கினர். அதிபர் அவர்கள் ஒரு சைவஉணவுக்காரர் என்பதனாலோ என்னவோ சிறந்ததோர் மரக்கறித் தோட்டத்தினையும், பனைப்பிரயோசனங்களையும் நல்ல முறையில் பயன்படுத்தியிருந்தார். பெற்றார், ஆசிரியர்கள் உறவுகளை வலுப்படுத்தி பாடசாலையை மேலும் வளப்படுத்தினார். கிராமமக்கள் அவருக்கு மிகுந்த ஒத்தாசை புரிந்தமையும் ஆசிரிய வளம்பற்றாக்குறையாக இருந்தமையினால் இரவு வேளைகளில் கூட மாணவர்களை அழைத்து ஆங்கிலம், கணிதம் போன்ற பாடங்களில் மேலதிக கல்வி புகட்டியமையும் அறியக் கூடியதாக உள்ளது. அரசினர் ஆசிரியர்கள் மிகுந்த பற்றாக்குறையாக காணப்பட்டமையினால் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளுக்கான புதுமுகத்தேர்வுக்குரிய (Government Teachers' Training College Entrance Examinations) வகுப்புக்களை நடாத்துவதற்கும் அவர் வழிகோலியுள்ளார். இவ்வேற்பாட்டிற்கியைபாக பாடசாலையை ஸ்தாபிப்பதற்கு முன்னோடியாகளாகவிருந்த கிராமப்பிரமுகர்கள் வரிசையிலுள்ள அரசினர் பாடசாலைத் தலைமை ஆசிரியர்களில் குறிப்பாக திரு.க.விஜயரெத்தினம் (எண்கணிதம்), திரு.கா.வேல்நாயகம் (தமிழ்மொழி), திரு.க.வெற்றிவேல் (புவியியல்), திரு. மார்க்கண்டு (எண்கணிதம்), திரு.ந.தங்கராசா ஆகிய பெருமக்கள் தாமாகவே முன்வந்து இலவசமாக பகுதிநேர வகுப்புக்களை நடாத்தி ஆசிரிய பிரவேச எண்ணிக்கையினை அதிகரிக்கச் செய்தனர். காலவோட்டத்தில் ஆசிரியர்களது தொகையும், அதிகரித்தது. இருப்பினும் 1955ம் ஆண்டு முதலே சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திர (எஸ். எஸ். சி) பாடசாலைக்கு மாணவர்கள் தோற்றவாரம்பித்தனர். இவரது காலத்திலேயே கனிஷ்ட பாடசாலையாகவிருந்த நிலை மாறி சிரேஷ்ட பாடசாலையாகத் தரமுயர்த்தப்பட்டது. இவ்வமயம் பொத்துவில் தொகுதி பாராளுமன்ற உறுப்பினராகவிருந்த ஜனாப்.மெர்சா அவர்களது பெருந்தன்மையினால் முதன் முதலாக ஒரு கல்லாலான பாடசாலை மண்டபம் கட்டப்பட்டது. இது மட்டுமன்றி (களிமண் கல்லிலாலான) அதிபர் விடுதி ஒன்றும் மேற்படி வளாகத்தினுள் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அதிபர் கந்தப்பு அவர்கள் பின்னர் இவ்விடுதியிலே குடும்ப சகிதம் தங்கியிருந்தார். எல்லா வகையிலும் பின்தங்கிய அக்கால சூழ்நிலையிலும் 1958ம் ஆண்டில் முதல் முறையாக விளையாட்டுப் போட்டியொன்றும் விமரிசையாக நடத்தப்பட்டது. இவ்விதமாக கந்தப்பு அதிபர் அவர்களது கடின உழைப்பின் பயனாக பாடசாலை அதன் பரிணாம வளர்ச்சியில் ஒரு சிறந்த பெயரைப் பெற்றுக் கொண்டதெனலாம். எனினும் 1960.04.31 ம் திகதியில் அவர் இடமாற்றம் பெற்றுச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பிற்பாடு மட்டக்களப்பு கல்லடியைச் சேர்ந்த திரு. எம்.ஏ.செபமாலை அவர்கள் 1960.05.01 முதல் 1960.07.03 வரையும், 1960.10.29 முதல் 1961.01.02 வரை குறுகிய காலப்பகுதிகளில் அதிபராகச் சேவையாற்ற வேண்டிய நிலை உருவானது. அசாதாரணமான இச்சந்தர்ப்பங்களில் குறிப்பிடத்தக்க அபிவிருத்தி நடவடிக்கைகள் இடம்பெறவில்லையென்றே கூறலாம்.

அடுத்ததாக யாழ்ப்பாணம் காரைநகரைச் சேர்ந்த திரு.எம்.சச்சிதானந்தசிவம் அவர்கள் 1961.01.01 முதல் அதிபராக நியமிக்கப்பட்டார். துடிப்பும், ஆர்வமும் மிக்க ஆங்கிலப் பட்டதாரியான ''சிவம்'' அவர்களது கர்லம் குறிப்பிடத்தக்க சாதனைகள் நிறைந்த காலம் எனலாம். அவ்வமயம் பிரதி அதிபராகவிருந்த திரு.வே.தம்பிராசா அவர்களது ஆக்கமும் ஊக்கமும் சிவம் அவர்களது கரங்களை வலுவூட்டி நின்றது. ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோரின் ஒத்துழைப்போடு நைனாகாடு சென்று கூடாரம் அமைத்து அங்கே தங்கி நின்று களிஎடுத்து செங்கற்சூளை வைத்து மேலதிகமான மண்டபம் ஒன்று கட்டப்பட்டது. அரியதோர் பொருட்காட்சியும் நடாத்தப்பட்டது. மினி ஆய்வு கூடமொன்றினை அமைத்து அறிவியற் போதனைக்கும் ஓர் களம் அமைத்தமை குறிப்பிடத்தக்கதாகும். கல்வி நலனுக்கு இன்றியமையாத பரீட்சைகளை நடாத்துவதற்கு உதவியாக றோணியோ இயந்திரமொன்று பெறப்பட்டது. பதிவு கருவிகள்(Record players), இசைத்தட்டுக்கள (English by Radio) என்னும் பி.பி.சி திட்டங்கள் (B.B.C Programmes), கலைக்களஞ்சியம் (Encyclopedia-Britanica) போன்ற முன்னோடி நடவடிக்கைகள (OXFORD DICTIONARIES) ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழக வெளியீடான ஆங்கில அகராதிகளை மாணவருக்கு பெற்றுக்கொடுத்தமை போன்ற இன்னோரன்ன நடவடிக்கைகள் மூலம் ஆங்கிலக் கல்வியை எம் மாணவர் பெற அரும்பாடுபட்டுள்ளார். சிறிய அளவிலானதொரு நூலகமும் இவரால் உருவாக்கப்பட்டது. இவ்விடத்தில் பாடசாலைக்கல்வி பற்றிக் குறிபிடும் போது இவரது காலத்திற்கு முன்னர் அதாவது 1960களில் ஆரம்பித்து வைக்கப்பட்ட ஆரம்பக் கல்வி வகுப்புக்கள் ஏனைய ஆரம்ப பாடசாலைகளின் மாணவர் வரவு வீழ்ச்சி காரணமாக 1963ல் கலைக்கப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். மேலும் 1966.01.19 இல் சுவாமி நடராசானந்தஜீ அவர்களினால் அழைத்து வரப்பட்ட பாரதநாட்டு ஆன்மீகத் துறவியான சுவாமி ரெங்கானந்தாஜீ அவர்களின் வருகையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். மேற்படி சிவம் அதிபர் அவர்களின் காலத்திலேயே முதன் முறையாக கலைப்பிரிவில் ஓர் பரீட்சார்த்த முயற்சியாக உயர்தர வகுப்புக்கள் (எச்.எஸ்.சி) ஆரம்பித்து வைக்கப்பட்டது. தமது மாணவர்களும் கலைப்பட்டதாரிகளுமான பலரை அழைத்து வந்து தமிழ்மொழி போன்ற பாடநெறிகளை மேற்படி வகுப்பிற்கு துணையாக கற்பித்தலில் ஈடுபடுத்தியமை அவரது ஆர்வத்தை எடுத்துக்காட்டுவதாகும். எனினும் இம்முயற்சி வெற்றியளிக்கவில்லையென்றே கூறலாம். இவ்விதமாக தமது முழு நேரத்தையும் அபிவிருத்திப் பணிகளிலே செலவிட்டார். இந்தப் பாடசாலையின் அதிபர்கள் வரலாற்றிலே மிக நீண்டகாலம் சேவையாற்றியவரென்ற பெருமைக்குரியவரும் இவரே ஆவர்.

மேலும் 1968ல் அதிபர் சிவம் அவர்கள் மாற்றம் பெற்றுச் செல்ல மட்டுநகரைச் சேர்ந்த திரு. யோகம் வேலுப்பிள்ளை அவர்கள் 1968.07.01ல் இவ்வித்தியாலய அதிபரானார். நெடிதுயர்ந்த திடகாத்திரமான இவரது தோற்றம் ஆசிரியமாணவர் மத்தியில் அன்புகலந்ததோர் மரியாதையும் மதிப்பையும் தோற்றுவித்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவருக்குத் துணையாக பிரதி அதிபர் வே. தம்பிராசா அவர்கள் சேவையாற்றியுள்ளார். சிரிக்கப் பேசும் இவர் மாணவரின் ஒழுக்கத்தை செம்மைப்படுத்தியதோடு சிறந்த முகாமைத்துவம் வாய்ந்தவராகவும் இருந்தார். இரண்டாண்டுகள் சேவை புரிந்த இவரது காலத்தில் கல்வியில் பெரும் அபிவிருத்தி ஏற்பட்டதோடு மாணவர் வரவிலும் வளர்ச்சி காணப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். பல்வேறு சமயவாதிகளையும் ஆத்ம ஞானிகளையும் அழைத்து வந்து சமயப் பேருரைகள் நிகழ்த்த வழிசமைத்தமையும் குறிப்பிடத்தக்கதோர் அம்சமெனலாம். அக்காலகட்டத்தில் கல்முனை கல்வி பிரதேசத்தில் கடமையாற்றிய சிறந்த அதிபர்களில் ஒருவாரான யோகம் வேலுப்பிள்ளை அவர்கள் இனங்காணப்பட்டார்.

1970.09.03ல் திரு. யோகம் வேலுப்பிள்ளை அவர்கள் மாற்றலாகிச் செல்ல கல்முனை பாத்திமாக் கல்லூரியில் பணியாற்றியவரும், விஞ்ஞானப் பட்டதாரியும், தலைசிறந்த கலைஞருமான திரு. இக்நேசியஸ் கோயிற்பரம்பில் அவர்கள் 1970.09.04 முதல் மேற்படி விபுலானந்த வித்தியாலயத்தின் அதிபராக நியமனம் பெற்றார். புன்னகை தவழும் வதனமும், அன்பும் பண்பும் உள்ளவருமான இக்னேசியஸ் அவர்கள் நல்லதோர் வாசிப்பாளர். இவரது காலத்திலே ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அரசாங்க அமைச்சரவையில் கல்வியமைச்சராகவிருந்த ஜனாப்.பதியுதீன் முகமட் அவர்களின் விஜயமும் இடம்பெற்றுள்ளது. மேற்படி அதிபர்கள் அவர்களது காலத்திலேயே அவ்வை மண்டப கட்டிட வேலைகள் ஆரம்பமானதுடன், தளபாட வேலைகளும் சீர்செய்யப்பட்டன. பிரதி அதிபர்களாகச் செயலாற்றிய திரு.மு.சிவநாதபிள்ளை, திரு.எஸ்.சிவசம்பு ஆகிய தலைசிறந்த ஆசான்களின் அனுசரணையோடு பல்வேறு செயற்பாடுகளை நிறைவேற்றியுள்ளார். பெற்றோர் ஆசிரியர்கள் ஆகியோர்களது இதயபூர்வமான ஒத்துழைப்போடு மேற்கொள்ளப்பட்ட நூறு அடி நீளமான மண்டபம் ஒன்று கட்டி முடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதோர் சாதனையாகும். அது மட்டுமன்றி அதிபர் இக்னேசியஸ் அவர்களாலும் சித்திர ஆசிரியர் திரு. கே. காத்திகேசு அவர்களாலும் பெற்றார் ஆசிரியர் சங்க மண்டபத்தின் தூண்களில் மேலைத்தேய, கீழைத்தேய அறிஞர்களது உருவங்கள் ஓவியங்களாக தீட்டப்பட்டுள்ளன. விபுலானந்த அடிகளாரின் உருவச் சிலை மெருகு பெற்று பொலிவு பெற்றது. கலைமகள் வழிபாட்டிற்கென ஓர் சரஸ்வதி உருவப்படம் வரையப்பட்டது. இக்காலத்திலேயே கவிஞர். திரு.பொன்.தவநாயகம் ஆசிரியர் அவர்களால் பாடசாலைக் கீதமொன்று ஆக்கம் பெற்றதோடு அதற்கானதோர் இசைவடிவமும் வழங்கப் பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவரைத் தொடர்ந்து காரைதீவைச் சேர்ந்த கலைப்பட்டதாரியும் இப்பாடசாலையின் முதல் மாணவருள் ஒருவருமான திரு.ரி. மயில்வாகனம் அவர்கள் அதிபர் தரமுயர்ந்து 1975.04.07 முதல் 1979.07.31 வரை அதிபராக கடமையாற்றினார். அவர் காலத்துள்ளும் குறிப்பிடத்தக்க பல அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்றுள்ளன. அவ்வை மண்டபம் பூரணப்படுத்தப்பட்டதோடு ஆசை மண்டபமும் கட்டி முடிக்கப்பட்டது. வட பக்கத்தில் கடற்கரைவீதியில் சாதாரணமாய் அமைக்கப்பட்டிருந்த பிரதான நுழைவாயில் கிழக்குப் புறத்திற்கு மாற்றப்பட்டு உறுதிவாய்ந்த இரட்டை வாயில்களாக அமைக்கப்பட்டது. இவருக்கு உதவியாக திரு.பீ.இராசதுரை, திரு.எஸ்.சிவசம்பு ஆகியோர் பிரதி அதிபர்களாகவிருந்து பல வழிகளிலும் இவருக்கு உறுதுணையாகச் செயற்பட்டனர். முன்னைநாள் மாவட்ட அபிவிருத்திச் சபை உறுப்பினரும், வளர்ந்தோர் கல்வி அதிகாரியுமான திரு. இ. வினாயகமூர்த்தி அவர்களின் உறுதுணையோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராளுமன்ற உறுப்பினராகவிருந்த அமரர். திரு. ம. கனகரெத்தினம் அவர்களது சிபார்சின் பெயரில் இப்பாடசாலை விபுலானந்த மத்திய மகா வித்தியாலயமாக தரமுயர்த்தப்பட்டது.

மேலும், 1978ம் ஆண்டில் ஏற்பட்ட சூறாவளியின் காரணமாக சேதமுற்றிருந்த கட்டிடங்கள் மீளவும் திருத்தியமைக்கப்பட்டன. அத்துடன் சிரமதான அடிப்படையில் கிழக்குப்புற எல்லைச் சுவரும் கட்டப்பட்டது. இக்காலகட்டத்தில் பட்டப்பின் படிப்பிற்காக (Diploma) இதே கல்லூரியிலிருந்து அதிபர். திரு.த.மயில்வாகனம், ஆசிரியர்களான திரு.த.இராஜேஸ்வரன், திரு.எஸ்.சிவசம்பு ஆகிய மூவரும் தெரிவு செய்யப்பட்டு மேற்படி பயிற்சிக்காக கொழும்பு சென்றனர். இவர்கள் மூவரும் அப்பரீட்சையில் அதிதிறமைச் சித்தியைப் (Merit) பெற்றதோடு கல்லூரிக்கு பெருமையையும் தேடிக் கொடுத்தனர்.

மேலும் 1977.01.01ல் பாண்டிருப்பைச் சேர்ந்தவரும், இக்கல்லூரியின் பிரதி அதிபருமான திரு.பி.இராஜதுரை அவர்கள் 1977.02.14 வரை குறுகிய காலமே சேவையாற்றியுள்ளார். கண்டிப்புடன் செயற்பட்டு நல்ல பெயரைப் பெற்றவர். இவரை தொடர்ந்து 1977.02.15 முதல் அதிபராக காரைதீவைச் சேர்ந்த சைவப்புலவர் பண்டிதர் வீ.ரி.செல்லத்துரை அவர்கள் அதிபராக நியமனம் பெற்று 1977.12.31 வரை சேவையாற்றினார். சமய இலக்கியவாதியும் சிறந்த பேச்சாளருமான இவர் ஒன்றுகூடலை செம்மைப்படுத்தியதோடு ஆசிரிய மாணவருடனும் இனிமையாகப் பழகினார்.

பட்டப்படிப்பின் பின்னர் மீண்டும் அதிபரான மயில்வாகனத்தை தொடர்ந்து மன்னார் அடம்பனில் இருந்து திருகோணமலையைச் சேர்ந்த எம். ஏ. பட்டதாரியான திரு. சி. நடராசா அவர்கள் அதிபராக மாற்றம் பெற்று வந்து 1979.09.01 முதல் 1983.10.25 வரை அதிபராகச் செயற்பட்டார். இவரது காலத்தினை பாடசாலையின் பொற்காலம் எனக் குறிப்பிடலாம். நிர்வாகத்திறன் மிக்கதோர் அதிபராய் விளங்கினார். பௌதீக, பாடவிதான அபிவிருத்திகள் ஒட்டுமொத்தமாய் வளர்ச்சியுற்றன. ஆளுமைமிக்கவராயும் அதேவேளை தோழமைப்பண்பு மிக்கவராயும் செயற்பட்டார். காரியங்களைச் சாதிப்பதில் இதற்கு இணை இவரேதான். முன்னைநாள் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த திருமதி. ரங்கநாயகி பத்மநாதன் அவர்களது ஆதரவுடன் முன்னைநாள் மாவட்ட சபை உறுப்பினர் திரு.இ.வினாயகமூர்த்தி அவர்களது ஒத்துழைப்புடனும் பாடசாலை அபிவிருத்திச் செயலாளர் திரு.க.விஜயரெத்தினம் அவர்களின் உறுதுணையும், பிரதி அதிபர்களாய் இருந்த திரு.பி.பாக்கியராஜா, திரு. சி. தெட்சணாமூர்த்தி ஆகியோரின் பக்கத்துணையும் அவரது செயற்பாட்டிற்கு உரமேற்றின. இரண்டுமாடி புதிய விஞ்ஞான ஆய்வுகூடமும், இரண்டு மாடிக் கனகரெத்தினம் மண்டபமும் கட்டப்பட்டன. பெற்றார் ஆசிரியர் சங்கக் கட்டிடமும் மனையியல் ஆய்வுகூடமென மாற்றம் பெற்றது. உயர்தரத்திற்கான விஞ்ஞான/ வர்த்தக, கலை வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. யாழ்ப்பாணத்தில் இருந்து ஆசிரியர்கள் வரவழைக்கப்பட்டனர். மாணவர்/ஆசிரியர் தொகையிலும் அபிவிருத்தி ஏற்பட்டது. பழைய ஆய்வுகூடம் அதிபர் செயலகமாக மாற்றப்பட்டது. விளையாட்டு மைதானம் விரிவு படுத்தப்பட்டது. நூலகமும் அபிவிருத்தியடைந்தது. பாடசாலைக்கானதோர் கூட்டுறவுச் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. நீர் விநியோகம் சீரமைப்பிற்குள்ளானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழைய அதிபர் விடுதி அழிக்கப்பட்டது. விளையாட்டுப் போட்டியின் பொழுது உடற்பயிற்சிக் கண்காட்சி முதன்முதலாக நடாத்திக் காண்பிக்கப்பட்டது. அவ்விளையாட்டுப் போட்டிக்கு பிரதம அதிதியாக அவ்வமயம் ஆளும் கட்சியாக இருந்த ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்த கல்வி அமைச்சர் திரு.ரணில் விக்கிரமசிங்க வரவழைக்கப்பட்டார். வெளியிடங்களில் இருந்தும், கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இருந்தும் ஆசிரியர்கள் வரவழைக்கப்பட்டு உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு மேலதிக பயிற்சிகள் வழங்கப்பட்டன. அமெரிக்க அரசின் அனுசரணையுடனும் அதிகாரிகளின் துணையோடும் தட்டச்சு இயந்திரம் பெறப்பட்டு பாடசாலைக் கல்வி முடித்து வெளியேறிய மாணவர்களுக்கு மாலைவேளை தட்டச்சு வகுப்புகள் நடாத்தப்பட்டன.

ஹவாய்த்தீவில் இருந்து இந்துமதத்தை தழுவிய அமெரிக்கரான சுப்பிரமணிய சுவாமிகள் தலைமையில் வந்த சுவாமிகள் குழுவினர் நல்லாசிகள் வழங்கிய வைபவமும் இடம்பெற்றது. பாடசாலைக்கு வேண்டிய ஒலிபெருக்கி, ஒலிவாங்கி என்பன கொள்முதல் செய்யப்பட்டன. இவைகள் யாவும் ஒருங்கிணைந்து விபுலானந்த மத்திய மகா வித்தியாலயத்தினைப் பொலிவுற செய்தன. இவ்வாறு பாடசாலையில் ஒலிபெருக்கிப் பொலிவினை உருவாக்கிய அதிபர் திரு.நடராஜா அவர்கள் இந்திய கல்விப் பயணத்திற்காகவும் தெரிவு செய்யப்பட்டதோடு புதுடில்லியில் கல்வித் திட்டமிடல் முகாமைத்துவப் பயிற்சி ஒன்றினையும் மேற்கொண்டவர் என்பதும் பெருமைக்குரியதே. இத்தகைய அதிபர் அவர்கள் பின்னர் வடகிழக்கு மாகாண கல்வி பணிமனையில் கல்வி ஆலோசகராக பதவி உயர்வு பெற்றுச் செல்லவும் கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலையில் (Wesly High School) அதிபராயிருந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த முதுமாணிக் கலைப்பட்டதாரியான திரு. எஸ். மகாலிங்கம் (எம்.ஏ) அவர்கள் (தற்பொழுதில் வடக்கு கிழக்கு மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர்) அதிபராக நியமனம் பெற்று இப்பாடசாலைக்கு நியமிக்கப்பட்டார்.

1983.10.26 முதல் 1987.01.14 வரை அதிபராகச் சேவையாற்றிய திரு. மகாலிங்கம் அவர்களினால் தமது காலத்தில் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த திருமதி.ரங்கநாயகி பத்மநாதன் அவர்களினதும், மாவட்ட சபை உறுப்பினர் திரு. இ.வினாயகமூர்த்தி ஆகியோரது ஒத்தாசையுடன் மாணவர் தங்கி இருந்து பயிலக்கூடிய விடுதி (Hostel) ஒன்றும் கட்டிமுடிக்கப்பட்டது. புதிய ஒன்றுகூடல் மண்டபம் அமைப்பதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டது. வடகிழக்குப் புறத்து எல்லைச் சுற்று மதிலும் கட்டப்பட்டது. இவரது காலத்திலும் பாடவிதான, பௌதீக அபிவிருத்தி வேலைகள் மும்முரமாக நடைபெற்றன. இவரும் இப்பாடசாலையில் இருந்தே கோட்டக் கல்வி அதிகாரியாக பதவி உயர்வு பெற்று களுவாஞ்சிக்குடி செல்ல பிரதி அதிபராக இருந்த பட்டதாரியான திரு.பி.பாக்கியராசா அவர்கள் அதிபராக நியமிக்கப்பட்டார்.

1987.01.15 முதல் 1991.01.09 வரையுள்ள காலத்தில் அதிபராக இருந்த திரு.பி.பாக்கியராசா அவர்கள் தமது செயற்பாடுகளுக்கு உறுதுணைவர்களாக திரு.பொன்.தவநாயகம், திரு.இரா.கிருஷ்ணபிள்ளை, திரு.என்.மனோகரன் ஆகியோர்களை பிரதி அதிபர்களாக பெற்றிருந்தார். பயங்கரவாத நடவடிக்கைகள் காரணமாகவும், அகதிமுகாமாக பாடசாலை இயங்கியதன் காரணமாகவும் சேதமுற்றிருந்த தளபாடங்களும், கட்டிடங்களும் திருத்தியமைக்க நடவடிக்கைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுக்கப்பட்டன. காரைதீவுப் பிரதேச பாடசாலைகளில் கொத்தணி அதிபராக (Cluster Principal) திருவாளர் பாக்கியராசா அவர்கள் செயற்பட்டார். முடங்கிக் கிடந்த பாண்ட் வாத்திய (Band) இசைக் கருவிகளை சீரமைத்து புதியதோர் வாத்தியக்குழுவினரை ஏற்படுத்தியதோடு ஒரு விளையாட்டுப் போட்டியிலும் இசைக்கச் செய்து பாடசாலையின் புகழை மேலம் உயர்த்தினார். விளையாட்டு மைதானத்தில் அகதிகட்கான முகாம்களை இடம்பெயர்த்துவதற்காக பாடசாலையானது முகாம் அமைக்கும் செயற்பாடுகளையும் உதவி ஒத்தாசைகளையும் முழுமையுடன் செய்தது. கணனி அறைக்குத் தேவையான மின்விசிறி வாங்கப்பட்டது. காரைதீவு பிரதான வீதியில் பாடசாலையின் பெயர்ப்பலகை நிறுத்தப்பட்டது. புதிதானவோர் ஆராதனை மண்டபம் (Assembly Hall) திறந்து வைக்கப்பட்டது. அத்துடன் ஆசிரியர் பற்றாக்குறையினை நிறைவு செய்யும் பொருட்டு தொண்டர் ஆசிரியர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இத்தகைய பல்வேறு வேலைத்திட்டங்கள் இவரது காலத்தில் மேற்கொள்ளப்பட்டன.

அதன் பிற்பாடு பட்டிருப்பில் அதிபராய் இருந்த காரைதீவைச் சேர்ந்த விஞ்ஞானப் பட்டதாரியான திரு.த சண்முகரெத்தினம் அபிவிருத்திச் சபையினால் அழைக்கப்பட்டார். 1991.06.10 முதல் 1996.11.05 வரை அதிபராகச் சேவை புரிந்த இவரே சச்சிதானந்தசிவம் அவர்களது காலத்தின் பின்னர் நீண்டகாலம் அதிபராகச் சேவைசெய்தவரென்று குறிப்பிடத்தக்கது. திரு.சீ.நடராஜா அவர்களது காலத்தை பாடசாலையின் பொற்காலம் என்று கூறினால் திரு.சண்முகரெத்தினம் அவர்களது காலம் மறுமலர்ச்சிக் காலம் எனக் கூறல் மிகையாகாது. இவரது நடவடிக்கைகள் அனைத்திற்கும் வலது இடது கரங்களாக பிரதியதிபர்களாக திரு.இரா.கிருஷ்ணபிள்ளை, திரு.என்.மனோகரன் ஆகியோர் செயற்பட்டனர். ஆசிரிய வளமானது அதிகரிக்கவும் மாணவர் தொகையும் பெருமளவில் அதிகரித்தது. பௌதீக வளர்ச்சிகளும் மேலோங்கின பாராளுமன்ற உறுப்பினராக இருந்த திரு.ஜெ.திவ்வியநாதன் அவர்களும், ஐக்கி தேசியக் கட்சி அரசாங்க அமைச்சர்களான திரு.தயாரட்ன அவர்களும், ஜனாப்.ஏ.ஆர்.எம்.மன்சூர் அவர்களும் பாடசாலைக்கு வருகை தந்து சிறப்பித்தனர். சுவாமி விபுலானந்த ஞாபகார்த்த நூற்றாண்டு மண்டபமான மூன்று மாடிக் கட்டிடமானது திறந்து வைக்கப்பட்டது. ஆசை மண்டபம் அமைக்கப்பட்டது. மேலும் புதிய சுவாமி நடராஜாநந்தா ஆராதனை மண்டபம் உருவாக்கப்பட்டது. விபுலானந்த நூற்றாண்டு விழா வைபவமானது வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது. ஆன்மீக ஞானிகளான இராம கிருஷ்ண மிஷனைச் சேர்ந்த சுவாமிகள் பலர் சுவாமி ஜீவானந்தா அவர்களது அழைப்பிற்கிணங்க பாடசாலைக்கு விஜயம் செய்து ஆசி வழங்கியமை குறிப்பிடத்தக்கதாகும். அமெரிக்க சுவாமியான தந்திரதேவாஜி அவர்களது வருகையும் இவ்விடத்தில் நினைவு கூரத்தக்கது.

திரு பாக்கியராஜா அதிபர் அவர்களது காலத்தில் அமைக்கப்பட்ட கணனி அறை பூர்த்தி செய்யப்பட்டு கணனி வகுப்புக்களும் நடாத்தப்பட்டன. கனேடிய (Canadian) உதவிகள் பெற்று அதன் மூலம் விஞ்ஞானப் பிரிவு வளர்ச்சியை மேம்படுத்தியதோடு ( Ronio Machine, Projector, Micro Lens) போன்ற சாதனங்களும், காரியாலய மேசைக் கதிரைகள், இரும்பு அலுமாரிகள், தமிழ், ஆங்கில தட்டச்சு இயந்திரங்கள் ஆகியவற்றிலும் பாரிய திருத்த வேலைகள் இடம்பெற்றன. இவ்வாறான பல்வேறு சாதனைகளை மேற்கொள்வதற்கு உற்சாகமானதொரு பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிவிருத்திச் சங்கமும், அதன் செயலாளராகவிருந்த திரு. கு. மகாலிங்கசிவம் அவர்களும் உறுதுணையாக இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இவற்றிற்கு மேலாக அதிபர் அவர்களின் தூண்டுகோலினால் ஸ்ரீ கண்ணகை அம்மன் தேவஸ்தானத்தின் உதவியாக பாரிய முகப்பு வாயில்கள் (Gates) பொருத்தப்பட்டன. இதே போன்று ஸ்ரீ வீரபத்திர தேவஸ்தான அனுசரணையாக முகப்பிற் கருகாமையில் நீர்த்தடாகம் ஒன்றும் அமைக்கப்பட்டது. புதிய ஆராதனை மண்டபத்தின் மேடை அமைப்புக்களும் அமைக்கப்பட்டது. மேலும் அரச சார்பற்ற நிறுவனமான (WUSC) ''வூஸ்'' இன் உதவியுடன் (Air Conditioning & Refrigeration) குளிரூட்டலும், குளிரூட்டி பழுதுபார்த்தலும் எனும் பயற்சி நெறியொன்று (வெளியிலுள்ள இளைஞர் யுவதிகளுக்கான) ஆரம்பிக்கப்பட்டு வெற்றிகரமாக நடைபெற்று வந்தது. தொண்டர் அடிப்படையில் சிற்றூழியர்கள் நியமிக்கப்பட்டனர். பழைய ஆராதனை மண்டபமானது நூலகமாக வடிவமைக்கப்பட்டது. பாடசாலையின் நாமம் விபுலானந்த மத்திய கல்லூரி என அழைக்கப்பட்டது. பரீட்சைக்காகிய வேலைகட்கான அறையொன்று உருவாக்கப்பட்டது. பாடசாலைக்கென ஒரு தொலைபேசியும் பொருத்தப்பட்டது. புதிதான கிணறு ஒன்று அமைத்ததோடு சுற்றுமதில்கள் யாவும் உயர்த்தப்பட்டன. இவ்விதம் பல்வேறு சாதனைகளை நிலைநாட்டிய திரு. சண்முகரெத்தினம் அவர்கள் வெளிநாட்டுக்கான முகாமைத்துவப் பயிற்சி பெறுவதற்காகத் தெரிவு செய்யப்பட்ட அதிபர்களுள்ளும் ஒருவராகத் தெரிவு செய்யப்பட்டார். அதாவது 1995ல் புதுடில்லியில் அமைந்துள்ள ''நீபா'' (NIEPA) எனப்படும் ''கல்வித் திட்டமிடல் நிருவாகத்திற்கான தேசிய நிறுவனத் (National Institute for Educational Planning and Administration) திலும் பயிற்சி பெற்று வெளியேறினார். இக்கல்லூரியில் பெருமைக்குரிய சேவையாற்றியதன் பேறாக விஞ்ஞான உதவிக் கல்விப் பணிப்பாளராக கல்முனை வலயக் கல்வி அலுவலகத்திற்கு பதவி உயர்வு பெற்றுச் சென்றார். பின் நாட்களில் இவரது சேவைக்குத் துணையாய் பிரதியதிபர்களாக திரு.க முத்துலிங்கம் அவர்களும், திரு.சா.கந்தசாமி அவர்களும் இருந்துள்ளார்கள்.

திரு.சண்முகரெத்தினம் அவர்கள் மாற்றலாகிச் சென்றதும் புதிய அதிபர் நியமிக்கப்படும் வரையில் பிரதி அதிபர் க. முத்துலிங்கம் அவர்கள் பாடசாலையைப் பொறுப்பேற்று நடாத்தினார். அவ்வமயம் இராம கிருஷ்ண சங்க பெண்கள் வித்தியாலயத்தில் அதிபராக இருந்த திருமதி.எம்.சத்தியதேவா அவர்கள் 1996-11-06 முதல் 1998-06-29 வரை அதிபராகச் சேவையாற்றியுள்ளார். இக்கல்லூரியின் முதலாவது பெண் அதிபர் என இவரைக் குறிப்பிடுதல் பெருமைக்குரியதாகும். இவரது காலத்தில் உறுதுணையாக இருந்த திரு.சா.கங்காதரன் அவர்களும் திரு.என்.மனோகரன் அவர்களும் பிரதி அதிபர்களாக செயற்பட்டனர். இவரது காலத்தில் பரிசளிப்பு விழா (Prize Giving) ஒன்றை விமரிசையாக நடாத்தினார். பாடவிதான அபிவிருத்தி தொடர்பான புதிய பாடத்திட்ட பாடஅலகு முறையை அறிமுகப்படுத்தினார். இவ்வாறு கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்ட இவரும் உதவிக்கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றுச் சென்றதும் காரைதீவைச் சேர்ந்த இளமையும் துடிப்பும் மிக்க விவசாய விஞ்ஞானப் பட்டதாரியான தற்போதைய அதிபர் திரு.செ.அருள்மொழி 1998-06-30 முதல் விபுலானந்தா மத்திய கல்லூயின் அதிபரானார். ஸ்ரீ லங்கா கல்வி நிர்வாக சேவையில் (S.L.E.A.S) சித்தியடைந்த இவர் கடமையுணர்ச்சி மிக்கவர். கல்வி முகாமைத்துவத்தில (M.Sc) பட்டமும் பெற்றுள்ளார். செயற்றிட்டங்களுக்கு அமைவாக கல்வி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். வெகுவிமரிசையாக ''பரிசளிப்பு விழா'' ஒன்றினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடாத்தி முடித்துள்ளார். புனர்வாழ்வு, புனரமைப்பு கப்பல் போக்குவரத்து அமைச்சரான மாண்புமிகு ஜனாப்.எம்.எச்.எம்.அஷ்ரப் அவர்களை வரவேற்று இக்கல்லூரியில் இல்லாதிருந்த (St. John Ambulance) சென்ஜோண் அம்புலன்ஸ் என்ற அமைப்பினையும் உருவாக்கியுள்ளார்.

இக்கல்லூரியில் பொன்விழாக் காணும் ஒரு அதிஷ்டசாலி அதிபராக இந்தப் புத்தாயிரத்தில் கி.பி. 2000 இல் மிலேனியம் அதிபராக (அதிபர் வரிசையில் 16வது அதிபராக) 16th Principal புகழ்பெற்றதோர் காலகட்டத்தில் அதிபர் அருள்மொழி அவர்களும் விளங்குகிறார். கடந்த தை மாதம் 15ம் திகதி பொன்விழாவிற்கான அங்குரார்ப்பண விழாவினையும் நடாத்தி வைத்துள்ளார். பொன்விழாவிற்கான கட்டிடத்தை அமைத்திடுதற்கு (Golden Jubilee Hall) இவரும், பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் குறிப்பாக அதன் உற்சாகமான செயலாளரான திரு.செ.மகேசன் (பொறியியலாளர்) அவர்களினதும் அயராத முயற்சியும் காரணமெனலாம். இவருக்குப் பக்கத்துணையாக திரு.சா.கங்காதரன் அவர்களும், திரு.ம.ரவீந்திரன் அவர்களும் பிரதி அதிபர்களாக விளங்குகின்றனர்.

இவர்களது ஒத்தாசையுடன் மேலும் பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளிலும் வேக நடைபோட்டு வருகிறார். முப்பது ஆண்டுகள் பழமை வாய்ந்த கல்லூரி அலுவலக கட்டிடத்தை மாற்றுவதற்காக புதிய நிர்வாகக் கட்டிடத்தை (New Administrative Block) பெற்றமையும் குறிப்பிடத்தக்கதாகும். இன்னும் நிர்வாகத் துறைக்கு என்றும், பாடவிதான அபிவிருத்திக்கென்றும் பிரதி அதிபர்களது செயற்பாடுகளை இரு கூறுகளாக்கி செயற்படுத்தியுள்ளார். பரீட்சைகள் பகுதியை மேலும் சீர்அமைப்பதோடு பாடசாலை மட்டக் கணிப்பிற்கான (School Base Assessment ) எனும் புதிய கல்விச்சீர்திருத்தக் கூறுகள் தனியானதோர் பகுதியாகவும் செயற்படவும் வழிவகுத்துள்ளார். மேலும் மாணவர் கட்டொழுங்கு பகுதித்தலைவர்கட்கான தனியான அமர்விடங்கள் பற்றியும் (Exit Cards), தூர இட மாணவர்கட்கான பருவகாலச் சீட்டுப்பெறல், அடையாள அட்டை பெறல் போன்ற இன்னோரன்ன நடவடிக்கைகளிலும் பல சீராக்க நடைமுறைகளை மேற்கொண்டுள்ளனர். மேலும் மாணவர்களுக்கான சீருடைகளிலேயே கழுத்துப் பட்டியையும் (Tie) இணைத்து அதை பொன்விழாவின் ஒரு அம்சமாக்கியுள்ளார். சீருடைக்குப் புறம்பாக அமைந்த கல்லூரிச் சின்னம் (College Emblem) அகற்றப்பட்டு சீருடையிலேயே சின்னம் பொறிக்கத்தக்கதோர் முறையினையும் அறிமுகப்படுத்தியுள்ளார். மேலும் விளையாட்டுப்போட்டி சம்பந்தமாக முல்லை, குறிஞ்சி, மருதம் என இருந்த இல்லங்களை சுக்கிரன் (Jupiter), செவ்வாய் (Mars), வியாழன (Venus) எனும் துமையுடன் கூடிய கிரகங்களின் நாமங்களோடு உற்சாகமானதோர் விளையாட்டுப் போட்டியையும, இதற்கென கிராமப் பிரமுகர்களிடம் இருந்து பல வெற்றிச்சின்னங்களையும் (Trophies), வெற்றிக்கிண்ணங்களையும் தாமாகவே அவர்களிடம் ஞாபகார்த்த ரீதியில் பெற்று சிறப்பான முறையில் (Inter House Sportsmeet) நடாத்தியமையும் இதற்கு பிரதம விருந்தினராக வடக்கு கிழக்கு மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். மகாலிங்கம் அவர்களையும் அழைத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

## கல்வி வளர்ச்சியும் சமய, கலை, இலக்கிய விழாக்களும்

1950ம் ஆண்டில் 6ம் வகுப்புடன் ஆரம்பிக்கப்பட்ட கல்வி வரலாறு படிப்படியாக வளர்ந்து 1955ல் பத்தாம் வகுப்புவரை உயர்ந்து அவ்வாண்டிலேயே சி.பா.த (S.S.C) பத்திரப் பரீட்சைக்கு மாணவர்களை ஈடுபடுத்தி அதில் நான்கு மாணவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தியும் அடைந்தனர். ஒவ்வொரு வகுப்பிலும் ஒவ்வொரு பிரிவு மட்டும் காணப்பட்டது. 1959 இல் மேற்படி பரீட்சையில் 18 மாணவர்கள் சித்தியடைந்ததுடன் 06 மாணவர்கள் உயர்தர வகுப்பிற்கும் (H.S.C) தகுதி பெற்றிருந்தனர். அந்த அளவிற்கு கல்வி வளர்ச்சியில் மேம்பாடு காணப்பட்டது. பின்னர் அதிபர் திரு.எம்.சச்சிதானந்தசிவம் அவர்களது காலத்தில் உயர்தர கலைப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டபொழுதிலும் ஆசிரிய வளப்பற்றாக்குறை காரணமாக தொடரமுடியாது போனமை துரதிஷ்டமானதே. இதன் பின்னர் ஒரு தசாப்த காலத்தின் பின்னர் 1969 இல் 30 மாணவர்கள் சித்தியடைந்த துடன் அதில் 24 பேர் உயர் கல்விக்கு தகுதி பெற்றிருந்தனர். உயர்தரம் வரை உயர்ந்த வகுப்புக்கள் ஒவ்வொன்றிலும் இரண்டு மூன்று பிரிவுகள் தோன்றி வளர்ச்சியடைந்து மாணவர் தொகையும் அதிகரித்தது. அதிபர்.ரீ.மயில்வாகனம் அவர்கள் காலத்தில் உயர்தர விஞ்ஞான வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. இருப்பினும் மாணவர் தொகையோடு ஆசிரிய வளமும் குறைவாக இருந்தமையினால் உயர்கல்வியானது இடைநிறுத்தப்பட்டது.

அடுத்த தசாப்தத்தின்பின் 1978 இல் நூற்றுபத்து மாணவர்கள் சித்தியடைய அதில் 98 மாணவர்கள் தகுதி பெற்றனர். இதன் பேறாக அதிபர். சீ.நடராஜாவின் காலத்தில் கலை, விஞ்ஞான, வர்த்தக உயர் வகுப்புக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன. வகுப்பின் பிரிவுகளும் அதிகரிக்கலாயின. சாதாரண தர (O/L) உயர்தர (A/L) வகுப்புகட்கான கருத்தரங்குகளும், பயிற்சி வகுப்புக்களும் நடாத்தப்பட்டன. 1980ம் ஆண்டில் இருந்துதான் இப்பாடசாலையில் இருந்து மாணவர்கள் க.பொ.த (உ/த) பரீட்சைக்குத் தோற்றினார்கள்.

இதன்பேறாக பௌதீக விஞ்ஞானப் பிரிவில் இருவரும், வணிகப் பிரிவில் ஒருவரும் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகினர். பின்னர் 1987ல் க.பொ.த(சா/த) பரீட்சையில் இருந்து 88 மாணவர்கள் உயர்தர வகுப்பிற்கு தகுதி பெற்றனர். இந்தத் தொகையானது 1992ல் 90 ஆகவும் 1997ல் 124 ஆகவும் அதிகரித்து கல்வி வளர்ச்சிப் போக்கை எடுத்துக் காட்டியது. இருப்பினும் மாணவர் தொகையிலும் (O/L) சாதாரண தர வகுப்பின் பிரிவுகளின் எண்ணிக்கையிலும் அதிகரிப்பைக் காட்டின.

1980ல் உயர்தரத்தில் 3 பேராக இருந்த பல்கலைக்கழகத் தெரிவு 1983ல் 10 மாணவராக அதிகரித்தது. 1984ல் முதல் முறையாக மருத்துவ பீடத்திற்கு ஒரு மாணவர் தெரிவாகியமை பெருமை தேடித்தந்தது. இதனைத் தொடர்ந்து 1988 முதல் 1998 வரையிலான 10 ஆண்டுகளில் பல்கலைக்கழகத் தேர்வுக்கான வளர்ச்சிப்படிகளை அவதானிக்கும் பொழுது சகல துறைகளுக்கும் அதிக எண்ணிக்கை இல்லாவிட்டாலும் மாணவர்கள் தெரிவாகிக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

க.பொ.த (உ/த) ஆரம்பிக்கப்பட்டு 1988ம் ஆண்டு வரை மருத்துவத்துறைக்கு ஏழு மாணவர்களும், பொறியியல் துறைக்கு 11 மாணவர்களும் உட்பட எல்லாமாக 72 மாணவர்களும் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகி இருந்தமை இக்கல்லூரியின் உயர்கல்வி வளர்ச்சியினை எடுத்துக் காட்டுவதாக உள்ளது.

மேற்குறித்த தரவுகளின் அடிப்படையில் பார்க்கும்பொழுது மாணவரது கல்வி வளர்ச்சியில் க.பொ.த(சா/த) பரீட்சைப் பெறுபேறுகளை சிறந்த வளர்ச்சி வீதத்தை எடுத்துக் காட்டுகின்றன. இருப்பினும் உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகள் நகர்ப்புறப் பாடசாலைகளின் பெறுபேறுகளோடு போட்டிபோட முடியாவிடினும் ஓரளவிலான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகல விதமான வீட்டுப் பாவனைப் பொருட்களையும் சில்லறையாகவும், மொத்தமாகவும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ள ஒரே இடம்.

# அமீர் ஸ்டோர்ஸ்

கல்முனை.

இவர்கள்தான் BCC Products இற்கான கல்முனை ஏஜென்ட் ஆகும்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# DISCIPLINE

Discipline is the foremost requisite for a sound value and good moral characterized life. Even though today's world has been experiencing the most modernized lifestyle with the advancement of technical revolution, it is still in a sorry state to say that the discipline is hardly to be seen. Without discipline one can't lead peaceful and calm life how much of he or she has the modernized life. To say this we have ample examples. If we consider the present situation of the developed western countries, we will definitely get to know about their barbaric day to day life. The inevitable reason for this is the lack of discipline in their culture. This leads these countries with the high rating violence in the globe.

Now think of our country. Who or what is the reason for our dilapidated condition? Definitely the indisciplinary national leaders and the governments should shoulder the responsibility for this state of affairs. Today anyone hardly sees discipline in our politico-socio process. That 's why we, Sri Lankans are reversing to the stone-age life style with much of evidence.

Can't we put an end to all these? There is an affirmative answer to this question. Every Sri Lankan should think about the present precarious position of our motherland and try their best to be more disciplined and more honourable in their every effort and routine. Especially the student mass should pay more attention on this line. Because they are the pillars or the corner stones of their country's stability. Apart from this, the students of a country should be considered as the taproot or the backbone of the country. Students are not only meant for merely acquiring knowledge but also to cultivate a good moral conduct and good manners. Schools play a vital role to mould a student to some extent, but the homes, where a child or student spends more time may influence much on him.

Students spend meagre six hours a day with or under the guidance of teachers and the rest at their homes more properly under the watchful eyes of their parents. So, the parents should share the big slice of responsibility here. In schools, apart from the designated curriculum the extra curricular activities and the co-curricular activities are taught to the students with the aim of



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

reaching higher qualities in their moral and even in their physical attitudes. Such qualities will definitely lead a student to a disciplined bounded life. If every student fulfils this need then they will lead their country for a bright future without any hindrance along with their glorious personal life.

Now let's have a look on the disciplinary structure of our school. As seen in the other schools, the Board of Discipline consists of the Class Teachers, Monitors, Prefects, Sectional Heads, Vice and Deputy Principals and Principal. The minor disputes and mischievousness among the students are solved by the respective class teachers. If it is not so, such offences are brought to the sectional heads or to the Deputy Principal. Yet the severe offences are to be brought to the Board of Discipline. In case of this, after a careful and rational examination into the offences, the punishment or the remedial actions are levelled against to the offenders.

To avoid such a situation, the school authority has implemented many rules and regulations to be followed by the students and all the students are expected to bound to the rules and regulations. The students failed in this, have been removed from their school stint without any hesitations for the sake of other students and school. Almost all the principals were very strict on this matter and the present principal is also doing so. That's why our school was able to produce and has been producing many good results and outcomes in both curricular and extra curricular activities with much pride.

Hence, I am very proud of serving in this school during the period of Golden Jubilee Celebration and I wish and pray for more success in future also.

**By : Mr. M. Sivapalan**
Teacher of English.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை வளர்ச்சியில் மாணவ தலைவர்களின் பங்களிப்பு

இன்று பொன்விழாப் பூண்டு நிற்கும் காரேறு மூதூராம் காரைதீவின் விபுலானந்த மத்திய கல்லூரியின் சிரேஷ்ட மாணவ தலைவனாக இருப்பதில் நான் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன். 15.01.1950ம் ஆண்டில் 50 மாணவர்களைக்கொண்டு ஆங்கில கனிஷ்ட பாடசாலையாக ஆரம்பித்த இப்பாடசாலை இன்று 1400 மாணவர்களையும் 55 ஆசிரியர்களையும் கொண்ட ஒரு மத்திய மகா வித்தியாலயமாக திகழ்கின்றது. இதற்குக் காரணம் இப்பாடசாலையை வழி நடத்திய அதிபர்களும், ஆசிரியர்களும், நலன்விரும்பிகளும் அத்துடன் இப்பாடசாலைக்கு இதில் கற்ற மாணவர்கள் ஈட்டிக் கொடுத்த பரீட்சைப் பெறுபேறுகளுமாகும்.

இப்பாடசாலையின் வளர்ச்சியை நோக்கும் போது 1960ம் ஆண்டில் ஆங்கிலக் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. அதன்பின் 1976ம் ஆண்டில் அதிபராக இருந்த திரு.ரீ.மயில்வாகனம் அவர்களின் கால கட்டத்தில் மாணவத் தலைவர்கள் தெரிவு செய்யப்பட்டு பாடசாலை மாணவர்களின் ஒழுக்கம், சீருடை, கல்வி விளையாட்டு, உடற்பயிற்சி, சுத்தம் போன்றவை கவனிக்கப்பட்டு வந்தன.

01.01.1979 முதல் திரு. சீ. நடராசா அதிபராக இருந்த காலத்தில் உயர்தர வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. இக்காலத்தில் நிர்வாகத்தை திறம்பட நடாத்துவதற்கு அதிக எண்ணிக்கையான மாணவ தலைவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன் (உ/த) யூனியனும் ஆரம்பிக்கப்பட்டன. அதன் மூலம் பாடசாலைக்கு மேலும் பல பணிகள் செய்து முடிக்கப்பட்டன.

தற்போது மாணவ தலைவர்கள் மொத்தம் 44 பேர் உள்ளனர். இவர்களில் 21 பேர் ஆண்கள், 23 பேர் பெண்களாவர். இவர்களால் பின்வரும் கடமைகள் நிறைவேற்றப்படுகின்றன. பாடசாலை மாணவர்கள் சப்பாத்து, கழுத்துப்பட்டி, கல்லூரிச்சின்னம், சிகை அலங்காரம் போன்றவை ஒழுங்காகப் பேணப்படலை அவதானித்தல், பூந்தோட்டம் செய்தல் ஆகியவற்றைக் கவனித்தல், காலை ஒன்றுகூடல், உடற்பயிற்சி, முக்கிய நிகழ்ச்சிகள் போன்றவற்றில் மாணவர்களின் ஒழுக்கங்களைக் கவனித்தல், தாமதமாக வரும் மாணவர்களைக் கவனித்து மண்டபப் பொறுப்பாசிரியரிடம் ஒப்படைத்தல், ஆளுமைப்பண்பினால் மாணவர்களைக் கட்டுப்படுத்தல், ஆசிரியர் கூட்டம் நடைபெறும் போது வகுப்பொழுங்கை நிலைநாட்டல், முதலுதவிகள் மேற்கொள்ள வேண்டியவிடத்து ஆயத்தமாக இருத்தல், மாணவ தலைவர்கள் தமக்கு வழங்கப்பட்ட பணிகளை திறம்படச் செய்வதை உறுதிப்படுத்தவும் மேற்பார்வை செய்யவும் சிரேஷ்ட மாணவர்தலைவர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் சிரேஷ்ட ஆசிரியர்களினால் மேற்பார்வை செய்யப்படுகின்றார். தமது பணிகளை திறம்படச் செய்யும் மாணவர் தலைவர்கள் இனங்காணப்பட்டு கௌரவிக்கப்படுகின்றனர்.

இவ்வாறு அதிபரினால் ஊக்கப்படுத்தப்படுவதனால் மாணவ தலைவர்கள் தமது பணிகளை ஒழுங்காகச் செய்து வருகின்றனர். இதனால் பாடசாலையின் வளர்ச்சியில் முன்னேற்றம் ஏற்பட்டு வருகின்றது. எனவே மாணவர்களின் பணி தொடர வேண்டும். பாடசாலையும் மென்மேலும் வளர வேண்டும். இதற்கு இறைவன் அருள்புரிய வேண்டுமென கூறி உதவியும் ஒத்தாசையும் தந்த அதிபர், ஆசிரியர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

**செல்வன். எஸ். ராதீந்**

*சிரேஷ்ட மாணவ தலைவன்*
*விபுலானந்த மத்திய கல்லூரி,*
*காரைதீவு*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபுலானந்தாவின் வளர்ச்சியில் மாணவரின் பங்களிப்பு

''முத்தமிழ் வித்தகன்'' சுவாமி விபுலானந்தர் புகழ் ஈழம் முதல் இமயம் வரை பரவியது. அதே போன்று காவல் தெய்வம் கண்ணகி கோயில் கொண்டு காத்து நிற்கும் எமது காரேறு மூதூராம் காரைதீவில் விபுலானந்தன் திருநாமம் தாங்கி வானுயர் மாடிக்கட்டிடங்களுடன் உயர்ந்து நிற்கின்றது. எம் விபுலானந்தா மத்திய கல்லூரி அழியாச் செல்வமாம் கல்விச் செல்வத்தை கசடறக் கற்று, போட்டிகள், பரீட்சைகள், மூலம் தமது திறமைகளை வெளிப்படுத்தி நிற்கும் மாணவச் செல்வங்களினால் மற்றைய கல்லூரிகளிலும் திறமை பெற்றுத் திகழ்கின்றது. இத்தகைய சிறப்பு வாய்ந்த இக்கல்லூரியானது ஐம்பது ஆண்டுகளைப் பூர்த்தி செய்து இன்று பொன்விழாக் காணும் புதுப் பொலிவுடன் பூரித்து நிற்கின்றது.

சுவாமி விபுலானந்தரின் கல்விக் கொள்கையின் அடிப்படையில் கல்வியோடு ஒழுக்கத்தையும், சமயப் பண்புகளையும் ஊட்டி மாணவரின் ஆளுமை முழுமை பெற இங்கு கல்வி புகட்டப்படுகின்றது. சுவாமி விபுலானந்தர் ஊட்டி வளர்த்த கல்விக் கொள்கை இங்கு பயன்படுத்தப்படுவதே இக்கல்லூரியின் சிறப்பாகும். மத்திய மகா வித்தியாலயமாக வளர்ந்து பல படிமுறை வளர்ச்சியைக் கண்டு தன் கல்விக் கரங்களை எல்லாத் திசைகளிலும் பரவ விட்டு, திறமை மிக்க மாணவச் செல்வங்களைக் கொண்டு இன்று விபுலானந்தா மத்திய கல்லூரியாக மேலோங்கி நிற்கின்றது.

அதிபர்கள், ஆசிரியர்கள், நலன்விரும்பிகள், பாடசாலை அபிவிருத்திச் சபையினர், அரசியல் பிரமுகர்கள் ஆகியோரின் பங்களிப்பால் மட்டும் இக்கல்லூரி பொன்விழாக்காணும் சிறப்பைப் பெற்றிடவில்லை. அதற்கு மேலாக இக்கல்லூரியில் கல்வி கற்ற, கற்கின்ற மாணவரின் பங்களிப்பாலும் இந்நிலை பெற்றுள்ளது. ஒரு கல்லூரியில் மாணவரின் கற்கும் திறன், முயற்சி, பரீட்சைப் பெறுபேறுகள், ஒழுக்கம், நற்பண்புகள் என்பனவும் கல்லூரியின் வளர்ச்சிக்கு முக்கியமானதாகும்.

ஒரு கல்லூரியின் வளர்ச்சியை மதிப்பிடுவதற்கு அதன் பௌதீக வளங்கள் மட்டுமன்றி பரீட்சைப் பெறுபேறுகளும் பாடவிதான, இணைப்பாடவிதான அபிவிருத்தி என்பனவும் கருத்தில் கொள்ளப்படுகின்றன. இணைப்பாடவிதான அபிவிருத்தியிலும் மாணவர்கள் முன்னின்று தமது திறமைகளை வெளிப்படுத்தியுள்ளனர். மேலும் தமிழ், ஆங்கில தினப் போட்டிகளில் மாகாண, தேசிய மட்டங்களிலும் பங்குபற்றி பரிசில்களைப் பெற்றிருப்பது மாணவரின் பெருமையை பறை சாற்றுவதுடன், இக்கல்லூரியின் தரத்தையும் தேசிய மட்டத்திற்கு உயர்த்தி நிற்கின்றது.

மேலும் விளையாட்டுப் போட்டிகளிலும், மாவட்ட, மாகாண, தேசிய மட்டப் போட்டிகளிலும் பங்குபற்றி மாணவர்கள் பல பரிசில்களைப் பெற்றுள்ளனர். அத்துடன் எமது கல்லூரி மாணவர்கள் வேறுபல போட்டிகளிலும் பங்குகொண்டு தங்கப் பதக்கத்தையும், பணப்பரிசில்களையும் பெற்றுள்ளமை இக்கல்லூரியின் தரத்திற்கு மணிமகுடம் சூட்டியதுபோல உள்ளது.

இக்கல்லூரியின் வளர்ச்சியில் மாணவர்களின் பங்களிப்பானது இங்கு இயங்குகின்ற இந்துமாமன்றம், மாணவ மன்றங்கள், சென்ஜோண்ஸ் அம்புலன்ஸ், சாரணியம், பாண்ட் வாத்தியக்குழு என்பவற்றின் மூலம் மேலும் பிரகாசிக்கின்றது. அத்துடன் மாணவரின் திறமையை வளர்க்க ஊக்கமளிக்கும் பொருட்டு இம்மலரானது வெளியிடப்படுகின்றது.

மேலும் ஐம்பது வருட வளர்ச்சியில் நாலாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் க.பொ.த(சா/த) பரீட்சையிலும் 20 வருடங்களில் எழுநூற்றுக்கு மேற்பட்டமாணவர்கள் க.பொ.த(உ/த) பரீட்சையிலும் சித்தியடைந்துள்ளனர். நூற்றுக் கணக்கானோர் பல்கலைக்கழகம் சென்றுள்ளனர். மருத்துவம், பொறியியல், கணக்கியல் போன்ற துறைகளில் ஐம்பதிற்கும் மேற்பட்ட மாணவர்கள் பட்டம் பெற்றுள்ளனர். அத்துடன் கலை, வர்த்தகத் துறைகளிலும் அதிகமானோர் பட்டம்பெற்று ஆசிரியராக, எழுதுவினைஞராக, கணக்காளராகவென எல்லாத் துறைகளிலும் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் சிறப்பாக பணியாற்றி கல்லூரியின் சிறப்பை மட்டுமல்லாது நாட்டின் மதிப்பையும் தமிழினத்தின் பெருமையையும் உலகெங்கும் பறைசாற்றி வருகின்றனர்.

ஆண், பெண் இருபாலாரும் கல்வி கற்கும் கல்லூரியாக இருப்பதினால் இருபாலாரின் ஒழுங்கு நடவடிக்கைகளை பேணுவதற்கும், மாணவரின் சகல நலன்களையும் கவனிப்பதற்குமாக அதிபர், ஆசிரியர்களின் கீழ் மாணவர் தலைவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். ஆண்களைக் கவனிக்க சிரேஷ்ட மாணவர் தலைவனும், பெண்களைக் கவனிக்க சிரேஷ்ட மாணவ தலைவியும் நியமிக்கப்பட்டு அவர்களின் கீழ் 40 ற்கும் மேற்பட்ட மாணவ தலைவர்களும் நியமிக்கப்பட்டு பாடசாலை ஒழுங்கு முறைகள் திறமையாக செயற்படுத்தப்படுகின்றன.

சிரேஷ்ட கல்லூரியாக இருந்த இக்கல்லூரி நிலையத்தை மகாவித்தியாலயமாக தரமுயர்த்திய பெருமை அதிபர் திரு. எம். சச்சிதானந்தசிவம் அவர்களையே சாரும். இதனை மத்திய மகாவித்தியாலயமாக தரமுயர்த்தி பௌதீக வளங்களையும் அதிகரித்து க.பொ.த(உ/த) விஞ்ஞான, வர்த்தக, கலைப்பிரிவுகளை ஆரம்பித்த பெருமை அதிபர் சி. நடராஜா அவர்களையே சாரும். பொன்விழாக் காணும் விபுலானந்த மத்திய கல்லூரியின் அதிபராய் இன்று விளங்குபவர் திரு. சீ. அருள்மொழி அவர்களே. அவரின் சேவையை நினைவுகூர பொன்விழா மண்டபமும், பொன்விழா மலரும், கலை கலாசார போட்டிகள், பரிசளிப்பு விழா என்பனவும் இடம்பெறவிருக்கின்றன.

பொன்விழாக் காணும் விபுலானந்த மத்திய கல்லூரி சிரேஷ்ட மாணவ தலைவியாக கடமையாற்றுவதை பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன். இப்பொன்விழா சிறப்பாக நடைபெறுவதற்கும் விபுலானந்தாவின் புகழ்மேலும் வளர்ச்சி அடையவும் மாணவச் செல்வங்களாகிய எமது பூரண ஒத்துழைப்பை நல்குவோம் என உறுதி பூணுவோமாக.

**" வாழ்க விபுலானந்தா வளர்க மாணவர்தம் தொண்டு "**

**ஆக்கம் :**

**செல்வி. பிரசாந்தினி விஜயரெத்தினம**

*சிரேஷ்ட மாணவ தலைவி*

*விபுலானந்த மத்திய கல்லூரி*

*காரைதீவு.*

# விபுலானந்த மத்திய கல்லூரியும் நாமும்

கவினுறு கிராமமாகிய காரைதீவிற் பிறந்து தமிழ் கூறும் நல்லுலகிற்கு அழியாப்புகழ் சேர்த்த முத்தமிழ் வித்தகன் விபுலானந்தனின் பெயர் தாங்கி நிற்பது விபுலானந்த மத்திய கல்லூரி. இது கிழக்கிலங்கையின் முதன்மைக் கல்லூரிகளுள் ஒன்று; ஐம்பது ஆண்டுகாலம் வரலாற்றின் தடம் அழியாப் பதிவுகளை, படிமங்களை ஏற்படுத்தப் போதுமான காலமாகும்.

***"கடந்த காலமென்பது உண்மையில் நிகழ்ந்ததே.***
***ஆனால் வரலாறு என்பது யாரோ ஒருவர் எழுதியதே"***

- ஏ. விற்னி பிரவுண்

இந்த வகையில் விபுலானந்த மத்திய கல்லூரி பொன்விழாக் காண விழைவது சாலப் பொருத்தமானதாகும். முன்னர் இக்கிராம மக்களின் கல்வித் தேவையை நிறைவு செய்ய இரு பாடசாலைகளே இருந்தன. ஒன்று சுவாமி விவேகானந்தரின் சிஷ்யையாகிய மேலை நாட்டைச் சேர்ந்த சகோதரி அவபாமியா அம்மையாரால் 1912ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இராம கிருஷ்ண மிஷன் ஆண்கள் பாடசாலை. மற்றையது, இராம கிருஷ்ண சங்க பெண்கள் பாடசாலை. இது 1928ம் ஆண்டு தைப்பொங்கல் தினத்தன்று சுவாமி யதீஸ்வரானந்தா அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இக்கிராமத்திலுள்ள கற்றவர்கள் ஆங்கிலம் கற்கக் கூடிய பாடசாலை ஒன்று இருந்தால் ஆங்கிலத்தையும், அதன்மூலம் உயர்கல்வியையும் இக்கிராம மாணவர் பெற வசதியுண்டாகும் என எண்ணினர். அக்கால நிலைமையில் வசதி படைத்தோரின் பிள்ளைகள் மாத்திரம் நகர்ப்புற பாடசாலைகளில் ஆங்கிலக் கல்வியைக் கற்றனர். ஆங்கிலம் கற்கும் விருப்புடைய ஏனையோர் மூன்று மைல் தூரம் தினமும் நடந்து சென்று கல்முனையிலுள்ள வெஸ்லி உயர்தர பாடசாலை, சென் மேரிஸ் பாடசாலை (கார்மேல் பாத்திமா கல்லூரி) ஆகிய பாடசாலைகளில் கற்று வந்தனர்.

1943 இல் கன்னங்கரா அறிக்கையின் அடிப்படையில் அரசின் கனிஷ்ட பாடசாலை (அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி - தேசிய பாடசாலை) 06-10-1946 இல் ஆரம்பிக்கப்பட்டது. நிந்தவூர் அரசினர் கனிஷ்ட பாடசாலை (அல்-அஸ்றக் மத்திய மகா வித்தியாலயம்) 01-09-1946 இல் ஆரம்பிக்கப்பட்டது. இச்சந்தர்ப்பத்தில் இக்கிராமத்தைச் சேர்ந்த அரச உத்தியோகத்தர்களும், அரசினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை ஆசிரியர்களும், இக்கிராமத்தில் ஆங்கிலங் கற்கக் கூடிய அரசினர் கனிட்ட பாடசாலையொன்றை உருவாக்கும் பணியில் ஈடுபட்டனர். இதன் பயனாக ஒரு கிடுகுக் கொட்டிலில் ஆரம்பமான இக்கல்லூரி இன்று பல மாடிக் கட்டடங்களை கொண்டு கல்விச்சேவையின் சிகரமாக மிளிருகின்றது.

புதிய பாடசாலையிற் கல்வி கற்கும் ஆர்வத்துடன் இராம கிருஷ்ண சங்க ஆண்கள் பாடசாலையில் 5ம் வகுப்பில் சித்தியெய்திய நாங்கள் அனைவரும் இப்பாடசாலைக்கு வந்தோம். அதேபோல் இராம கிருஷ்ண சங்க பெண்கள் பாடசாலையில் 5ம் வகுப்பில் சித்தியெய்திய மாணவிகளும் வந்தார்கள். நாங்களே பாடசாலையின் முதற்தொகுதி மாணவர்கள். சேர்விலக்கம் 01 ச. சச்சிதானந்தம் எனது சேர்விலக்கம் 12. இது கனிஷ்ட பாடசாலை ஆகையால் வகுப்பு 06 தொடக்கம் 08 வரை கற்கலாம். மாணவர்கள் பாடசாலைக்கு வந்துவிட்டார்கள். அதிபர்கள் நியமிக்கப்படவில்லை. இக்கிராமத்தை சேர்ந்த செல்வி. எம். அழகுமலர், திரு.வீ. வடிவேல் ஆகியோர் சேவை நோக்கிலே இப்பாடசாலையில் கடமையாற்ற வந்து சேர்ந்தனர். இக்கிராமத்தை சேர்ந்த என்.தங்கராசா அவர்கள் 01-02-1950 தொடக்கம் அதிபராக நியமிக்கப்பட்டார்.

கல்வி வசதிகளை மாணவருக்கு ஏற்படுத்தி கொடுப்பதற்காக வசதிக்கட்டணம் அறவிடப்பட்டது. மாணவர்களின் ஆங்கில வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பதற்காக 'Bright Story Readers' எனும் விளக்கப்படங்களுடனும், பெரிய எழுத்திலும், பெரிய ஆங்கில வசன அமைப்பிலுமான கதைப்புத்தகங்கள் நூல் நிலையத்திற்கு புதிதாக வாங்கப்பட்டன. ஆங்கில மொழி மூலம் கற்பித்தல் நடைபெற்றதால் மாணவர் ஆங்கிலத்தில் திறமையுடையவராய் காணப்பட்டனர். அதிபர் திரு.இராசரெத்தினம் அவர்களும், திருமதி இராசரெத்தினம் அவர்களும் மாணவர் மேல் கொண்டிருந்த அக்கறை, அவர்களது கடின உழைப்பு, மாணவரிடம் காட்டும் அன்பு அளப்பரியது.

மாணவர் ஒழுக்கத்திலும், கட்டுப்பாட்டிலும் கூடிய கவனம் செலுத்தப்பட்டது. திரு. திருமேனிப்பிள்ளை ஆசிரியர் பாடசாலை வளவினுள் இருந்த பெரிய புளிய மரத்தில் ஏறிய சில மாணாக்கர்களை தண்டிப்பதற்காக அம்மாணவர்களுக்கு தென்னம் ஓலையால் வால் வைத்து அவர்களை மீண்டும் மரத்தில் ஏறச் செய்த நிகழ்ச்சி இன்னும் என் மனக் கண்ணுட் தெரிகிறது. இதன் பின் அப்புளிய மரத்தில் மாணவர் ஏறுவதில்லை. சிறந்த ஒழுக்கம் பேணப்பட்டமைக்கு எடுத்துக் காட்டாக இதனைக் குறிப்பிட்டேன்.

அதிபரும், அவரது துணைவியாருமே எல்லா வகுப்புக்களையும் கற்பிக்க வேண்டி ஏற்பட்டது. அதிபர் கணிதம், ஆங்கிலம், வரலாறு, புவியியல் ஆகிய பாடங்களை கற்பிப்பார். அப்பாடங்கள் அனைத்திலும் அவருக்கு போதிய புலமை இருந்ததை எண்ணி நாங்கள் வியப்படைவோம். அவரது கையெழுத்து அச்செழுத்துப்போல் இருக்கும். அவரது கையெழுத்தை பின்பற்றி எழுத எம்முட் பலர் முயற்சித்தனர். இரு வகுப்புக்களை இணைத்து இரு வகுப்பிற்கும் பொதுவான அலகுகளைக் கற்பித்தமையை எண்ணும் போது, இன்று பெரிதாகப் பேசப்படும் 'பல்தரக் கற்பித்தல்' என் நினைவிற்கு வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை வேலிகளை நாங்கள் திருத்தினோம். பாடசாலை கூரைக்கு நாங்களே கிடுகு கட்டினோம். அவ்வேளையில் இரவில் காவலுக்காக மாணவர் பாடசாலையிலே தங்கினர். இத்தகைய பல நிகழ்வுகளின் ஊடாக மாணவர் கோட்பாட்டுக் கல்விக்கு மேலதிகமாக வாழக்கை அனுவங்களையும் ஆளுமைப்பண்புகளையும், பெற்றனர்.

திரு.பி. இராசரெத்தினம், திருமதி இராசரெத்தினம் ஆகிய இருவரும் மாற்றலாகிச் சென்றவேளை திருமதி இராசரெத்தினம் ஆசிரியை என்னிடம் ''நீர் ஒவ்வொரு பரீட்சையிலும் முதல் மாணவனாக வந்தீர். எனது மகள் (செல்வி. ஆர். சலாக்கியநிதி) ஒவ்வொரு பரீட்சையிலும் 2ம் பிள்ளையாக வந்தார். நீர் ஒரு போதும் எனது மகள் முதல் மாணவியாக வரவிடவில்லை.'' என்று இன்றும் அக்கூற்றை நினவுபடுத்துகிறேன். அவர்களது ''தொழில் நேர்மை'' என்னை அதிசயிக்கச் செய்கின்றது. அவர்கள் நினைத்திருந்தால் அவர்கள் மகள் ஏதோ ஒரு முறையில் முதல் மாணவியாக வந்திருக்கலாம். இன்று இத்தொழில் நேர்மை (Professional Intergrity) எமது கல்விசார் உத்தியோகத்தர்களிடம், அதிபர், ஆசிரியர்களிடம் எந்தளவு காணப்படுகிறது?

ஆங்கிலத்தில் கற்கும் வாய்ப்பு இப்பாடசாலையில் இன்மையால் நான் கல்முனை பாத்திமாக் கல்லூரிக்குச் சென்றேன். இப்பாடசாலையில் மாணவனாக இருந்த நான் 09-02--1972ல் ஆசிரியராக வந்தேன். இங்கு 09-02-1972 தொடக்கம் 19-01-1973 வரையிலான குறுகிய காலப்பகுதியே கடமையாற்றினேன். அப்போது திருவாளர் கோயில் பரம்பில் (இக்னேசியஸ்) அவர்கள் அதிபராயிருந்தார். தமிழ், சமூகக்கல்வி ஆகிய பாடங்களை 7ம், 8ம், 9ம், வகுப்புகளுக்குக் கற்பித்தேன். இணக்கமான ஆசிரியர் குழாம் இருந்தமையால் விருப்புடன் வகுப்பறைச் செயற்பாடுகளில் செயற்படக்கூடியதாயிருந்தது. தமிழ் மொழித்தின நிகழ்ச்சிகளில் குறிப்பாக மாணவர்களது பேச்சு நிகழ்ச்சிகளுக்குப் பொறுப்பாகவிருந்து செயற்பட்டேன்.

நான் இவ்வித்தியாலயத்தில் 07-04-1975 தொடக்கம் 31-07-1979 வரை அதிபராயிருந்தேன். பாடசாலை ஆசிரியர்களும், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பபினர்களும் பூரண ஆதரவு நல்கினர். பொருட்காட்சியில் எமது மாணவர் 15ற்கும் மேற்பட்ட பரிசுகளைப் பெற்றுக் கொண்டமையும் அத்தோடு இணைந்து நடைபெற்ற கலைவிழாவில் நடன நிகழ்ச்சியில் எமது மாணவிகள் கலந்து பாராட்டும் பரிசும் பெற்றமையும், அந்நடன நிகழ்ச்சிகளை அவ்வேளை சங்கீத ஆசிரியையாயிருந்த செல்வி.பூமணி தயாரித்தளித்தமையும் குறிப்பிடற்குரியன.

1975ல் NCE பரீட்சையில் மாணவர் மிகச் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றிருந்தனர். கல்வி அமைச்சின் வித்தியாபதி திருவாளர் கி.லக்ஷ்மண ஐயர் அவர்கள் 26-02-1976ல் இப்பாடசாலைக்கு வந்திருந்தார். அவரின் சிபார்சின் பேரில் கல்வி அமைச்சின் அனுமதியுடன் HNCE வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. இவ்வகுப்பில் கற்ற மாணவருட் சிலரைக் குறிப்பிடுவதானால் திரு.ரீ.கிருநிவாசன் B.Sc செல்வி. பீ.தயாநிதிB.Sc திருமதி.சாந்தி விவேகானந்தராஜா RMO ஆகியோரைக் குறிப்பிடலாம். இவ்வகுப்பில் பௌதீகம் கற்பிப்பதற்கு ஆசிரியரில்லாதிருந்தது. அவ்வேளை எனக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிமுகமான திரு.இராசையா அவர்கள் கல்வியமைச்சில் கல்வி அதிகாரியாகவிருந்தார். அவர் திரு.எஸ்.புவனேஸ்வரன் B.Sc (Cey.) என்பவரை ஆசிரியராக நியமித்திருந்தார்.

நான் அதிபராயிருந்த காலத்தில் திருமதி.ரீ.சச்சிதானந்தசிவம், திருமதி.எஸ்.சுந்தரலிங்கம், திருமதி.ரீ.சிவபாதசுந்தரம் ஆகியோருடன் உயர்வகுப்பு மாணவிகள் கண்டிக்கு கல்விச்சுற்றுலா சென்றிருந்தனர். அம்பாறை கல்ஓயாவிற்கான ஒரு நாட்சுற்றுலாக்களும் அக்காலத்தில் இடம்பெற்றன. கல்வி அமைச்சர் மாண்புமிகு நிஸ்ஸங்க விஜயரத்தின அவர்கள் இக்கல்லூரிக்கு 08-04-1978 வருகை தந்தமையும் குறிப்பிடக்கூடிய நிகழ்வாகும்.

எனது காலத்தில் விபுலானந்த மகா வித்தியாலயமாக இருந்த இக்கல்லூரியை மத்திய மகா வித்தியாலயமாக்குவதற்கு முன்னாள் அம்பாரை மாவட்ட அபிவிருத்திச்சபை உறுப்பினரும், வளர்ந்தோர் கல்வி அதிகாரியுமான திரு.இ.விநாயகமூர்த்தி அவர்கள் கௌரவ எம். கனகரெத்தினம் எம்.பி. அவர்களுடன் இணைந்து அரும்பாடுபட்டவர். அத்துடன் நான் அதிபராயிருந்த காலம் முழுவதும் எனக்கு ஒத்துழைப்பு நல்கியவரென்பது குறிப்பிடற்குரியது.

1978 நவம்பர் பிற்கூற்றில் புயல்வீசியபோது கிராமமே காடானது. கடற்கரைக்கண்மையில் இருந்ததால் பாடசாலை நிலை மேலும் சேதமடைந்து காணப்பட்டது. திணைக்கள, ஆசிரியர், பெற்றார் உதவியுடன் பாடசாலை மிக குறுகிய காலத்துட் புதுப்பொலிவுடன் திருத்தியமைக்கப்பட்டது. இங்கிருந்து நான் 31-07-1979ல் இடமாற்றம் பெற்றுச் சென்றேன்.

பாடசாலை வளர்ச்சி அவ்வக்கால சூழ்நிலை, சமூக ஒத்துழைப்பு, அரசியல் அனுசரணை, சமூக விழிப்புணர்வு, ஆசிரியர், பெற்றோர் பங்களிப்பு எனப் பல் திறம்பட்ட காரணிகளாற் தீர்மானிக்கப்படுகிறது. மனித நாகரீகம் தொடர்ந்து அபிவிருத்தியடைவதனால் தான் இன்றைய விண்வெளியுகத்திற்கும், தகவல் தொழில்நுட்ப யுகத்திற்கும் வந்துள்ளோம். பாடசாலை அபிவிருத்தியும் இத்தகையதே.

**த. மயில்வாகனம்** *B. A. Dip in Ed,*
*PGDEM, Cert. in MEPP (Manila), SLEAS-I*
(ஓய்வு பெற்ற கல்விப் பணிப்பாளர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருமைக்குப் பெரும்பணிபுரிந்தோர்

அரசியல் சூறாவளியில் அடியுண்டு மன்னார் அடம்பன் மகா வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றிக் கொண்டிருந்த என்னை காரைதீவு விபுலானந்த மத்திய மகாவித்தியாலயத்திற்கு அதிபராகக் கொண்டுவர ஆசைப்பட்ட அன்பர்கள், நண்பர்கள், அபிமானிகள் எனப்பலர். அதைச் செயற்படுத்தியவர்கள் காரைதீவு கிராமாட்சி மன்றத் தலைவர் வினாயகமூர்த்தி ஐயா அவர்களும், அமரர் கௌரவ பொத்துவில் பாராளுமன்ற உறுப்பினர் கனகரெத்தினம் ஐயா அவர்களுமாவர்.

நான் விபுலானந்த மத்திய மகாவித்தியாலயத்தைப் பொறுப்பேற்ற பொழுது அங்கு பல குறைபாடுகள் காணப்பட்டன. ஆசிரியர் பற்றாக்குறை இடவசதிப் பற்றாக்குறை, தளபாடப் பற்றாக்குறை போன்றவை. முயற்சி எடுத்தால் எவற்றையும் நிவர்த்தி செய்ய முடியும் என்பதில் எனக்கு பூரண நம்பிக்கை. ஆசிரியர்களில் சிலர் எனது மாணவர்கள். ஆசிரியர்கட்கும், மாணவர்கட்கும், பெற்றோருக்கும் பாடசாலையை வளம்படுத்த வேண்டும், வெளியே போகாது தங்கள் ஊரிலே தங்கள் கல்வித் தேவைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்னும் உத்வேகம் இருக்கக் காணப்பட்டது. அது எனக்கு உற்சாகமளித்தது. உதவிக்கு கனகரெத்தினம் ஐயா அவர்கள் இருக்கின்றார் என்ற தெம்பும் இருந்தது.

உயர்தர விஞ்ஞான வகுப்புக்களைப் புனருத்தாரணம் செய்தல், விஞ்ஞான கூடம் அமைத்தல், உயர்தர வகுப்பிற்கு ஆசிரியர்களைக் கண்டெடுத்தல், விளையாட்டு மைதானம் ஒன்றை அமைத்தல், மலசலகூட ஒழுங்குகளை ஏற்படுத்தல், மனையியல் கூடம் அமைத்தல், வாசிகசாலை அமைத்தல், பிரார்த்தனை மண்டபம் அமைத்தல் எனப்பல அத்தியாவசிய தேவைகள் ஆராயப்பட்டு முன்னுரிமைப்படுத்தப்பட்டு திட்டமமைத்துச் செயலாற்ற முற்பட்டோம். நான் பின்னணியிலிருந்து ஆலோசனை கொடுக்க கிராமமே என்பின்னால் இருந்து செயற்படுவதுபோல உணர்வுபூர்வமான ஒரு முயற்சி எடுக்கப்பட்டதை அவதானிக்க முடிந்தது.

உயர்தர விஞ்ஞான பாடங்கட்கு ஆசிரியர்கள் இல்லை. குறிப்பாக பௌதீகம், இரசாயனம் ஆகிய பாடங்கட்கு ஆசிரியர்கள் இல்லை. யாழ்ப்பாணத்திலிருந்து இந்தப் பாடங்களில் பட்டம் பெற்றுத் தொழில் இல்லாதிருந்த சிலரை எங்கள் பாடசாலைக்கு கொண்டு வந்தோம். நானும், அவர்களும் எதையெதையோ நாங்களாகவே சமைத்துச் சாப்பிட்டுப் பாடசாலையிலேயே தங்கினோம். உயர்தரவிஞ்ஞானக் கற்றல், கற்பித்தல் வேலைகள் களைகட்டின. வணிகவியலுக்கு யாழ்ப்பாணம் அலெக்சான்றியா கல்லூரியில் கற்பித்துக் கொண்டிருந்த காரைதீவைச் சேர்ந்த எனது மாணவன் ஒருவரை மாற்றி எடுத்தோம். பௌதீகம், இரசாயனவியல், தாவரவியல், விலங்கியல் ஆகிய பாடங்கட்கு தனித்தனி ஆய்வுகூடங்களையும் மாணவர்கட்கு வேண்டிய வகுப்பறைகளையும் கொண்ட உயர்தர விஞ்ஞான கூடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைக்கப்பட்டது. அந்தக் காலகட்டத்தில் அத்தகையதொரு உயர்தர விஞ்ஞானகூடம் கிழக்கு மாகாணத்தில் காரைதீவு விபுலானந்த மத்திய மகா வித்தியாலயத்தில்தான் நிறுவப்பட்டது. அதன் திறப்பு விழாவில் அன்றைய கல்விஅமைச்சர் கௌரவ ரணில் விக்கிரமசிங்க பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

காலக்கிரமத்தில் அனைத்து வகுப்புகட்கும் தேவையான ஆசிரியர்களும், தளபாடங்களும் பெற்றுத் தரப்பட்டன. மனையியல் கூடம் மிகவும் நவீனமாக அமைக்கப்பட்டது. வகுப்பறைக் கட்டிடங்கள் நிறுவப்பட்டன. பாடசாலைக்கென ஒரு விடுதி அமைக்கும் வேலைகளும் ஆரம்பிக்கப்பட்டன. இத்துடன் பாடசாலைக்கென ஒரு வாசிகசாலையும், ஒன்றுகூடல் மண்டபமும் அமைக்கும் வேலைகட்கு ஆரம்ப ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. பாடசாலைக்கு பக்கத்திலிருந்த காணியில் பாடசாலைக்கென ஒரு விளையாட்டு மைதானமும் நிறுவப்பட்டது. கல்வி, விளையாட்டு, ஒழுக்கம் அனைத்திலும் மாணவர்கள் துள்ளுநடை போட்டு வளர்ச்சியடைந்த காட்சி எங்கள் அனைவரையும் ஆத்ம திருப்தியிலும் ஆனந்தத்திலும் ஆழ்த்தியது.

காரைதீவு மக்களும், எங்கள் குடும்பமும் இரண்டறக் கலந்தோம். 1981ம் ஆண்டு இறுதிப்பகுதியில் கல்வி நிருவாக டிப்ளோமா கற்கைக்காக நான் மூன்றுமாதங்கள் புதுடில்லிக்குப் போகவேண்டி ஏற்பட்டது. இந்தக் காலகட்டத்தில் எனது குடும்பத்தில் இடம்பெற்ற ஒரு சம்பவம் எங்கள் வாழ்க்கையில் மறக்க முடியாதது. அதற்காக எங்கள் குடும்பம் காரைதீவு மக்களுக்கு என்றும் கடமைப்பட்டுள்ளது. இந்தக் காலகட்டத்தில் தான் எனது மகள் பெரியவளானாள். நான் காரைதீவிலிருந்தாலும் செய்திருக்க முடியாதளவிற்கு எனது மகளின் பூப்புநீராட்டு வைபவத்தினை காரைதீவு மக்கள் செய்து கொண்டாடினர். அதன் முழுச்செலவையும் அவர்களே பொறுத்தும் கொண்டனர். நான் வீடு திரும்பியதும் முடிந்தவரை அனைத்து மக்களையும் அழைத்து அவர்களோடு உணவருந்தி ஒன்றுகூடினோம். காரைதீவு மக்களுடன் எங்களுடைய இணைப்பு அன்றும், இன்றும் இறுக்கமானது.

உயர்திரு சுவாமி விபுலானந்தரை உலகுக்கு உருவாக்கித்தந்த ஊரில் கல்விப்பணி செய்ய ஒரு சில மாணவர்களை உருவாக்க எனக்கு கிடைத்தது பெரும்பாக்கியமாகவே கொள்ளுகின்றேன். நான் விட்ட இடத்திலிருந்து எனக்குப் பிறகு பதவியேற்ற அதிபர்கள் பாடசாலையை மென்மேலும் வளர்த்துச் செல்கிறார்கள் என்று அறிய பெருமகிழ்ச்சியடைகிறேன்.

***- வாழ்க காரைதீவு மக்கள், வளர்க விபுலானந்த மத்திய கல்லூரி -***

**திரு. க. நடராஜா.** *M.A, SLEAS.*
*முன்னாள் அதிபர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைதீவு விபுலானந்த மத்திய கல்லூரியில் எனது கால எண்ணச் சிதறல்கள்...

''காரேறு மூதூர்'' என அழைக்கப்படும் தமிழ் வளர்த்துப் புகழ் சேர்த்த காரைதீவு கிழக்கே வங்கக் கடலையும், வடக்கே கல்முனைப் பிரதேசத்தையும், தெற்கே நிந்தவூர் பிரதேசத்தையும், மேற்கே வயல்வெளிகளையும் எல்லைகளாகக் கொண்டு அமைந்துள்ள ஒரு பேரூராகும்.

காரைதீவின் கிழக்குத் திசையில் வங்கக்கடலுக்கு அண்மையில் அறிவொளி பரப்பும் ஆலயமாக விளங்குவதே விபுலானந்த மத்திய கல்லூரி, அம்பாறை மாவட்டத்தில் முன்னணிப் பாடசாலையாகத் திகழும் காரைதீவு விபுலானந்த மத்திய கல்லூரியுடன் மேலும் பத்து ஆரம்ப, இடைநிலைப் பாடசாலைகளும் இணைந்து காரைதீவு மக்களுக்குக் கல்வி ஒளியை வழங்கி வருகின்றமையால் இன்றும் காரைதீவில் கல்வியும், சைவமும், தமிழும் மேலோங்கி நிற்கின்றன.

சைவத்தையும், தமிழையும் வளர்த்து யாழ்நூல் தந்த முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் பிறந்த மண் என்ற பெருமையையும், பழமைவாய்ந்த கண்ணகி அம்மன் அருளாட்சி புரியும் புனிதமான மண் என்ற பெருமையும் கொண்டதால் காரைதீவை ''புண்ணிய பூமி'' என்றும் பெருமையுடன் அழைப்பர்.

ஆம் !..... இத்தகைய சிறப்பு வாய்ந்த மண்ணில் வளர்ந்து நின்று ஒளிபரப்பும் விபுலானந்த மத்திய கல்லூரியின் காலச்சுவடுகளை நினைத்துப் பார்ப்பதில்கூட ஒரு மனநிறைவு ஏற்படுகின்றது. நான் அதிபராக கடமையாற்றிய 1983 ஒக்டோபர் தொடக்கம் 1987 ஜனவரி வரையான காலப்பகுதி மிகவும் பிரச்சினைக்குரிய ஒரு காலகட்டமாக இருந்தபோதும், பௌதீகவளங்களையும், ஆற்றல் மிக்க மனிதவளங்களையும் கொண்டிருந்தமையால், இக்காலப்பகுதியில் கல்வி, விளையாட்டு மற்றும் கலைத்துறைகளிலும் நன்கு வளர்ச்சி பெற்றிருந்தது. இதற்குப் பல காரணங்கள் இருந்தாலும், சிலவற்றின் பங்களிப்பு குறிப்பிடக்கூடியன. அவற்றுள்,

- பாடசாலை முகாமைத்துவக் குழு
- நல்ல ஆளுமையுள்ள ஆசிரியர் குழாம்
- ஆற்றலுள்ள மாணவர் தொகுதி
- உயிர்ப்புடன் செயல்பட்ட பாடசாலை அபிவிருத்திச் சபை
- நல்லுறவு பேணும் திணைக்களத் தொடர்பு
- அரசியல் ஆதரவு

## பாடசாலை முகாமைத்துவக்குழு

ஒரு கல்லூரியின் வளர்ச்சிக்கு ஆணிவேராக இருப்பது அக்கல்லூரியின் முகாமைத்துவக்குழு. அந்த வகையில் 1983-1987 காலப்பகுதியில் வினைத்திறன் மிக்கதொரு முகாமைத்துவக் குழுவை அமைத்து என் நிர்வாகத்தை இலகுவாக்கியிருந்தேன். இக்குழுவில் கடமையாற்றிய இரு பிரதி அதிபர்களும் கல்வி அபிவிருத்தியிலும், நிர்வாகச் செயற்பாட்டிலும் கணிசமான பங்காற்றியிருந்தனர்.

பி. பாக்கியராசா நிர்வாகக் கல்வி மேற்பார்வைக்கு பொறுப்பாகவும், எஸ். தட்சணாமூர்த்தி இணைப்பாடவிதானத்திற்குப் பொறுப்பாகவும் இருந்து தியாக மனப்பான்மையுடன் நேர்மையாக என்னுடன் தோள்கொடுத்து உழைத்தவர்கள், இக்கல்லூரியின் வெற்றிக்கு இவர்களது பணி மகத்தானதும், பாராட்டத்தக்கதும் ஆகும். இவர்களுடன் இணைந்து தமது அரிய சேவைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதித் தலைவர்கள் காலஞ்சென்ற என்.மனோகரன், பொன்.தவநாயகம், இரா.கிருஷ்ணபிள்ளை ஆகியோரின் அயராத உழைப்புக்களும் சேர்ந்து இக்கல்லூரியைக் கல்வி உலகில் முத்திரை பதிக்கச் செய்திருந்தது.

## ஆளுமை நிறைந்த ஆசிரியர் குழாம்

எனது காலத்தில் ஏறக்குறைய 45 ஆசிரியர்கள் என்னுடன் இணைந்து கல்விப்பணியை முன்னெடுத்துச் செல்ல உதவியவர்கள். இவர்களில் பெரும்பாலானவர்கள் காரைதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவர்களாக இருந்தமையால், முழுநேரமும் கல்லூரியின் வளர்ச்சிக்குத் தம்மை அர்ப்பணித்துச் செயற்பட்டனர். மிகப் பெறுமதி வாய்ந்த மனிதவளங்களாகிய ஆசிரியர்கள், மாணவர்கள் கல்வித் தரத்தை உயர்த்தக்கூடிய அளவுக்கு ஆற்றலும், ஆளுமையும் உள்ளவர்களாக இருந்தமை காரைதீவுக்கு கிடைத்த ஒரு வரப்பிரசாதமாகும். எத்துறையிலும் குறிப்பாக கணிதத்துறையோ அல்லது கலைத்துறையோ அல்லது விஞ்ஞானத்துறையோ அவற்றிலெல்லாம் தமது திறன்களை வெளிப்படுத்தி தியாக சிந்தனையுடன் கடமையாற்றி வந்தவர்கள்.

## ஆற்றலுள்ள மாணவர்கள்

ஒரு கல்லூரியின் வரலாற்றில் காலமெல்லாம் நிலைத்திருக்க வேண்டிய முக்கிய வளம் ஆற்றலும், நற்பண்புகளும் நிறைந்த மாணவர் தொகுதிகளே. அந்தவகையில் விர்லானந்தாக் கல்லூரியில் எனது காலப் பகுதியில் சுமார் 950 மாணவர்கள் வரையில் கற்று, கற்பதில் ஆர்வம் கொண்டவர்களாக இலக்கை வென்றெடுக்க கூடியதாக இருந்தது.

பாடசாலை நேரங்களில் நான் மாணவர்களுடன் இணைந்து செயற்பட்டதுடன், அவர்களது தேவைகளை இனங்கண்டு, அவற்றை நிறைவேற்றி வைத்ததன் மூலம் ஒரு மனநிறைவையும், மகிழ்ச்சியையும் பெற்றிருந்தேன். எனது மாணவர்களிடம் சென்று அவர்களது குறைகளை நேரடியாகக் கேட்டு அறிந்து உடனுக்குடன் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தேன். குறிப்பாக க.பொ.த உயர்தர மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் நடமாடும் நூலகசேவையை உருவாக்கி அவர்களின் வாசிப்புத் திறனை வளர்த்தெடுத்தேன். அதுவே அவர்களைப் பிற்பகுதியில் தாமாகவே குறிப்புக்களையும், தகவல்களையும் திரட்டுவதற்கு உதவியாக இருந்தது. எல்லா மாணவர்களுக்கும் மாதாந்தப் பரீட்சைகளை நடாத்தி அவற்றின் பெறுபேறுகளை பெற்றோருக்கு அனுப்பி அவர்களுடன் கலந்துரையாடியதன் மூலம் பெற்றோர் மட்டத்திலும் கூட கல்லூரி தொடர்பான விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியமையால் கல்வித்தரம் உயர்வதற்கு வழிகோலியது.

## உயிர்ப்புடன் செயற்பட்ட பாடசாலை அபிவிருத்திச்சபை

ஒரு கல்லூரியின் வளர்ச்சிக்கு உறுதுணையாகவும், பக்கவேர்களாகளாகவும் விளங்குவது அக்கல்லூரியின் பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன்புரிகளை உள்ளடக்கிய பாடசாலை அபிவிருத்திச் சபையாகும். அந்த வகையில் விபுலானந்தா மத்திய கல்லூரியின் அபிவிருத்திச்சபை என்னுடன் இணைந்து உழைத்த ஒரு பெருவிருட்சம். குறிப்பாக அதன் செயலாளராக இருந்த திரு. விஜயரெட்ணம் கல்லூரியின் சகலதுறை சார்ந்த வளர்ச்சிக்கும் என்னுடன் தோள்கொடுத்து உழைத்தவர். இன்றும் அவர் ஒரு உறுப்பினராக கடமையாற்றுகின்றார் என்ற அந்தச் செய்தி என்னைப் புளகாங்கிதமடைய வைத்துள்ளது. அவரது தன்னலமற்ற இந்தச் சேவை கல்லூரிக்குத் தொடர்ந்தும் கிடைக்க வேண்டும் என்பதே எனது பெருவிருப்பாகும்.

## நல்லுறவு பேணும் திணைக்களத் தொடர்பு

எனது காலப்பகுதியில் கல்முனை திணைக்களத்தின் பிரதம கல்வி அதிகாரியாக கடமையாற்றிய எம். ஐ. எம். செரிப் அவர்கள் இக்கல்லூரிக்குத் தேவையான வளங்களையும், ஆலோசனைகளையும் காலத்திற்குக் காலம் வழங்கி, ஒத்துழைப்பு வழங்கி வந்தார். அத்துடன் வட்டாரக் கல்வி அதிகாரியாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமையாற்றிய ஜனாப். ஐ. எம். இஸ்ஸடீன் அவர்களும் காலமும், தேவையும் அறிந்து வேண்டிய உதவிகளை வழங்கியமையினாலேயே இக்கல்லூரி இன்னமும் தலைநிமிர்ந்து நிற்கின்றது எனக் கூறினால் மிகையாகாது.

## சுமுகமான அரசியல் தொடர்பு

இந்தக் காலப்பகுதியில் இக்கல்லூரி செழிப்புற்று வளர்ந்தமைக்கு அப்போதைய பாராளுமன்ற உறுப்பினராய் இருந்த திருமதி. ரங்கா பத்மநாதன் அவர்கள், தனது சகோதரர் திரு. மா.கனகரெத்தினம் அவர்களின் பணியை பின்பற்றி, இக்கல்லூரிக்கு வேண்டிய அனைத்து வளங்களையும் பெற்றுக் கொள்ள உதவியமையும் ஒரு காரணியாக இருந்தது. இக்காலப் பகுதியிலேயே பாடசாலை விடுதி, சிற்றூழியர்கட்கான ஆளணி ஆங்கீகாரம் என்பன கிடைக்கப்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. அதேபோன்று அம்பாறை மாவட்ட சபை உறுப்பினராகக் கடமையாற்றிய திரு. இ. வினாயகமூர்த்தி அவர்கள் விபுலானந்தாக் கல்லூரியின் வளர்ச்சிப்படிக்குப் பக்கபலமாக நின்று அதன் தேவைகளை நிறைவேற்றி வைத்தவர்.

இத்தகைய பெரும் பேற்றினையும், உயர்ந்த வளங்களையும் கொண்ட விபுலானந்தாக் கல்லூரியில் நான் அதிபராக இருந்த அந்தக்காலப்பகுதியில் பாடசாலையின் வினைத்திறனை அதிகரிப்பதற்கு நானும், எனது ஆசிரியர் குழுவினரும் எடுத்த முயற்சிகள் பிற்காலத்தில் அக்கல்லூரியின் கல்வித் தரத்தை உயர்த்தி வைத்தன.

ஆரம்ப பாடசாலைகளில் இருந்து விபுலானந்தா கல்லூரிக்கு மாணவர்களை அனுமதி பெறுவதற்காக விண்ணப்பிக்கும்போது, அவர்களின் முன் அறிவு பரீட்சிக்கப்பட்டு, அவர்கள் எந்தப் பாடத்தில் பின்தங்கியுள்ளனரா என்பதை இனங்கண்டு அதற்கேற்ப பரிகாரக் கற்பித்தல் நடவடிக்கைகளை ஆசிரியர்கள் மேற்கொள்ள வழிகாட்டப்பட்டது. குறிப்பாக இத்தகைய மாணவர் கணிதம், மொழி, ஆங்கிலம் ஆகிய பாடங்களில் குறைவான அடைவைக் கொண்டிருந்தமை என்னால் அவதானிக்கப்பட்டது. இவை தொடர்பாக ஆரம்பப்பிரிவு அதிபர்கள், மற்றும் ஆசிரியர்களுடன் கலந்துரையாடலை மேற்கொண்டதன் மூலம் ஆரம்பக்கல்வி வளர்த்தெடுக்கப்பட்டது.

அதே போன்று க.பொ.த. சாதாரண தர பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு அதனூடாகப் பெற்ற ஊக்குவிப்புக் காரணமாக க.பொ.த உயர்தரத்தில் கலை, வர்த்தகம், விஞ்ஞானப் பிரிவு மாணவர்களில் பலர் விசேட சித்திகளைப் பெறக்கூடியவாய்ப்பு உருவாக்கப்பட்டது.

இத்தகைய வரலாற்றுப் பின்னணியைக் கொண்டு, பொன்விழாவைக் கொண்டாட இருக்கும் விபுலானந்தாக் கல்லூரியின் புகழும், பெருமையும் ஓங்க வேண்டும். ஆற்றல்மிக்க மாணவர்கள் மேலும் மேலும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுச் சாதனைகள் புரிய வேண்டும். இன்று இக்கல்லூரியின் தலைமைப் பொறுப்பை ஏற்றிருக்கும் அதிபர், அவரோடு தோள்கொடுத்து உழைக்கும் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்களுக்கு எனது வாழ்த்துக்களும், பாராட்டுக்களும் உரித்தாகுக.

**திரு. எஸ். மகாலிங்கம்** *(M. A)*
*மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர்*
*இ. க. நி. சே. I*
*மாகாண கல்வித் திணைக்களம்*
*வ. கி. மா, திருகோணமலை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொன்விழாவையொட்டி காரைதீவு விளையாட்டுக் கழகத்தினரால் வழங்கப்பட்ட சீருடைக்கான சின்னத்தை அதிபர் பெறுகையில்



பொன்விழா அதிஷ்ட இலாபச் சீட்டிழுப்பின் போது முதற்பரிசு வழங்குகையில்



பொன்விழா நிகழ்வுகளில் ஒன்றான விஞ்ஞான பொருட்காட்சியை ஜனாப்.எம்.ஏ.எம்.சாபிடீன் வலயக் கல்விப் பணிப்பாளர் பார்வையிடுகையில்



2000 இல் மாகாண மட்டத்தில் பரிசு பெற்ற "The Treasure Island" ஆங்கில நாடகக் குழுவினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




1997ம் ஆண்டு பிரியாவிடை வைபவத்தில் பிரியாவிடை நாயகர்களும், அதிபர், ஆசிரியர், பணியாளர்களும்.



1999ல் ஆசிரியர் தின வைபவத்தின் போது



1997ல் பிரியாவிடை வைபவத்தில் அமரரர் க.தாமோதரம் ஆசிரியர் பொ.சிவநாதன் ஆசிரியருக்கு பரிசில் வழங்குகையில்




1997ல் பிரிவுபசார வைபவத்தில் அமரர் என்.மனோகரன் பிரதி அதிபர் இரா.கிருஷ்ணபிள்ளை. பிரதி அதிபருக்கு வாழ்த்துமடல் வழங்குகையில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SINGER®



பொன்விழாக் காணும்
காரைதீவு விபுலாநந்த மத்திய கல்லூரி
சகல வளங்களும் பெற்று
வாழ வாழ்த்துக்களை
தெரிவித்துக் கொள்கின்றார்கள்.





பொன்விழாக் காணும் காரைதீவு விபுலாநந்த மத்திய
கல்லூரி சகல வளங்களும் பெற்று வாழ
வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றார்கள்.

காரைதீவில் கடந்த கால் நூற்றாண்டுகளுக்கு மேலாக வியாபார சேவையாற்றிவரும் தனியார் வர்த்தக நிறுவனமான **"மக்கள் கடை"** தாபனத்தாரும் அதன் உரிமையாளர் **எஸ். அம்பாரைக்குட்டியும்**


பாடசாலைப் பிள்ளைகளுக்குத் தேவையான அப்பியாசப் புத்தகங்கள், பாடசாலை உபகரணங்கள், வாழ்த்து மடல்கள், இல்லத்தரசிகளுக்குத் தேவையான சகலவிதமான நானாவித பாவனைப்பொருட்கள் மற்றும் ஆடம்பரப்பொருட்கள் அனைத்தையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்



# மக்கள் கடை

மத்திய வீதி, காரைதீவு-01- (கி.மா)

☎ 067-22581





"மக்கள் தேவை உணர்ந்து சேவை வழங்குவது
மக்கள் கடை"

# எனது நினைவுகளில்...

இந்தக் கிராமத்தின் கல்வி வளர்ச்சியை இராமகிருஷ்ணசங்க பாடசாலைகளே அன்று தீர்மானித்த காலகட்டம். இந்த நிலைமையில் 1950களில் இந்த வித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்டது. ஆசிரியரும் சித்த வைத்தியருமான திரு.கு.கதிர்காமத்தம்பி அவர்கள் சுபவேளையில் கால்நட்டு எழுந்த அந்த ஓலைக் கொட்டில் அதன் தொடக்க விழாவில் கலந்து கொண்டவர்களில் யானும் ஒருவன். வித்தியாலய சேர்வுப் பதிவேட்டில் முதல் மாணவனாக திரு. சண்முகம் சச்சிதானந்தன் அவர்களின் நாமம் பதியப்பட்டது. அடியேனது பெயர் 140வது சேர்வு இலக்கத்தில் பதியப்பட்டது. 1953ல் ஆறாவது தரத்தில் கற்றவன் என்ற பெருமையும் எனக்குண்டு.

காரைதீவிலே இருபாலாரும் கற்கும் முதலாவது கலவன் பாடசாலை என ஆரம்பித்த இப்பாடசாலை கல்விக்கு ஓர் வழிகாட்டியாகவும், பல புகழ்பெற்ற பெரியதோர் கல்விக்கூடமென வளர்ச்சி பெற்று தனது பொன்விழாவினை பல வளங்களோடு கொண்டாடி எழுச்சி காணுகின்றது. 1963.07.01ல் இதே வித்தியாலயத்தில் சிற்றூழியனாகும் வாய்ப்பு இறையருளால் எனக்கு கிட்டியது. ஆரம்பகாலம் 24 மணிநேரமும் இயங்கும் ஓர் ஊழியனாகவும், பின்னர் பகுதிநேர ஊழியனாகவும் 33 ஆண்டுகள் இதே வித்தியாலயத்தில் சேவைசெய்து 1996 களில் இளைப்பாறினேன் என்பதைச் சொல்வதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இக்கல்லூரியின் வளர்ச்சியானது பல்வேறு மட்டங்களில் இருந்து வந்தமை என் நெஞ்சில் பசுமையாக நிழலாடுகின்றது. இன்று இந்த ஐம்பதாண்டு நிறைவுவிழாவான பொன்விழாவைக் கண்டுகளிப்பதற்கும் பங்கேற்பதற்கும் என்னை இதுவரை உயிர்வாழவைத்துள்ள அந்த இறைவனைப் போற்றுகின்றேன். இன்று இக்கல்லூரியின் பெயர்விளங்க எழுச்சிகாணும் அதிபர். திரு. செ. அருள்மொழி அவர்களது பெரும்பணியை பெரிதாக மதிக்கின்றேன். உற்ற துணையாகும் ஆசிரியர்கள், ஊழியர்கள் எல்லோர்க்கும் எனது நன்றி கலந்த வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

அறிவிற் சிறியேனான எனக்கும் இப்பெருவிழாவிலும், இந்த மலரிலும் இடமளித்த பெரும் உள்ளங்களுக்கும் எனது உவப்பான நன்றிகள். இன்று பொன்விழாவைக் காணும் இக்கல்லூரி மென்மேலும் வளமெலாம் பெற்றுச் சிறப்புற்று பல நூற்றாண்டு விழாக்களையும் காண வேண்டுமென போற்றி நிற்கின்றேன்.

**திரு. கு. கணபதிப்பிள்ளை**

*இளைப்பாறிய காரியாலய உதவியாளர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# THE ROLES OF THE TEACHER IN THE READING CLASSROOM

*If the goal communicative language teaching is to have one's students become communicatively competent, then, what roles should the teacher play in enabling his or her students to become communicatively competent in reading?*

*01. The teacher should be **a planner**. This means that he or she must be responsible for students' learning both inside and outside of class. In order to do this, he or she must know the needs and wants of the students in reading English.The teacher should specify students' objectives in behavioural and measurable terms and look for a variety of materials and teaching aids for achieving these objectives. The teacher must think of different activities for the whole class, small groups, pairs and individuals. If the teacher fulfils his role, students will learn according to an appropriate syllabus.*

*02. The teacher acts as **a counsellor**. He or she should create an atmosphere of friendliness and trust by listening to students, accepting their ideas or opinions, and if they have any problems finding ways to solve them. In this way, students will feel relaxed, confident, assured and not embarrassed. This behaviour can definitely lower the students' affective filter which, in turn, may enhance learning.*

*03. The teacher is **a supporter.** He or she should promote students' self-reliance by encouraging students to work towards independence. In this way, students will develop to the fullest of their ability.*

*04. The teacher is **a motivator or stimulator.** The teacher should foster student expectations about the reading and arouse their interest to read. This can be done by asking them warm-up questions or giving them a purpose for reading. In this way, students will enjoy learning language and develop a positive attitude towards reading.*

*05. The teacher is **a promoter.** He or She should promote thinking skills by encouraging students to participate in discussions and decision-making. Students will, thereby, be equipped with skills they can use their whole life long.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. *The teacher is* ***a language instructor.*** *Even as a reading teacher, he or she cannot avoid teaching language. This can be done by presenting new vocabulary and teaching language patterns and reading strategies appropriate to a particular genre. Teachers should also use English in class because this is additional language input for the students. Apart from this, teacher should correct students' mistakes in language production but only if the mistakes obstruct communication. In this way, students will learn about language usage while using the language in a reading class.*

07. *The teacher is* ***a director.*** *The teacher should supervise learning by explaining how students should do specific activities, keeping them constantly engaged in doing reading tasks. The teacher should also allow time for students to work at their own pace or, if a specific amount of time is required for an activity, to watch the time. The teacher should also make students use the target language and have students get information from reading on their own.*

08. *The teacher is* ***a monitor.*** *This involves going round the class while the students do their reading activities in order to observe their performance, listen to them and give advice when needed.*

09. *The teacher is a co-communicator. By working directly on a one-to-one basis with students, the teacher becomes a partner in communication.*

10. *The teacher is* ***an evaluator.*** *He or she should judge the students' performance by helping them to see if they have completed their tasks successfully, finding out how well they have done and providing feed back. This serves not only to evaluate students, but helps teachers to evaluate their teaching materials and activities to check whether they have reached the teaching objectives or not.*

*If the teacher fulfils these rules in the class, students will become more efficient readers. They will be provided with opportunities to use the language for a communicative purpose fulfilling the aim of communicative language teaching.*

**N. Thiyagarajah**
Teacher of English.
Km/ Vipulananda Central College
Karaitivu.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரீட்சை செயற்குழு
## விபுலாநந்த மத்திய கல்லூரி
## காரைதீவு.



**காப்பாளர்**

திரு. செ. அருள்மொழி
(அதிபர்)

**செயலாளர்**

திரு. ம. ரவீந்திரன்
(பிரதிஅதிபர்)

**இணைச்செயலாளர்கள்**

திரு. செ. மணிமாறன்
திரு. இ. ரகுபதி

**ஆலோசகர்கள்**

திரு. தி. வித்தியாராஜன்
திரு. பொ. பத்மநாதன்
திரு. செ. சிவராஜா
திரு. பொ. மலர்வண்ணன்
திரு. மா. கிருபானந்தன்

**உதவியாளர்**

திரு. க. பாக்கியராஜா

### செயற்பாடுகள்

1. பாடசாலைமட்ட கணிப்பீடு செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தலும், மாதாந்த அறிக்கையை பெறலும்.
2. பாடமேம்பாட்டு செயற்திட்டத்தை நடைமுறை படுத்தத் தேவையான செயற்பாடுகளை மேற்கொள்ளல்.
3. ஒவ்வொரு தவணை இறுதியிலும் பரீட்சையை நடாத்துதல்.
4. தவணைப்புள்ளி, மாதாந்தப்புள்ளி, அலகுப்புள்ளி அட்டவணைகளை தொகுத்து கோவைப்படுத்தல்.
5. மாணவர்களினால் செய்யப்பட்ட உபகரணங்களை காட்சிப்படுத்தி இறுதியில் கண்காட்சியொன்றை நடாத்த ஏற்பாடு செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டு செயற்குழு
## விபுலானந்த மத்திய கல்லூரி
## காரைதீவு.



**காப்பாளர்**

திரு.செ.அருள்மொழி (அதிபர்)

**செயலாளர்**

திரு.செ.மணிமாறன்

**பொருளாளர்**

திரு.ம.ரவீந்திரன்
(பிரதிஅதிபர்)

**ஆலோசகர்கள்**

திரு.ம.சுந்தரராஜன்
திரு.இ.ரகுபதி
திரு.பொ.மலர்வண்ணன்
திரு.கே.புண்ணியநேசன்
திரு.மா.கிருபானந்தன்
திரு.சி.சிவபரன்
திருமதி.க.தில்லையம்பலம்
திருமதி.ம.சண்முகநாதன்
திருமதி.பா.சுந்தரலிங்கம்
திருமதி.தே.சரவணமுத்து
திருமதி.மோ.ஹரிகரன்
செல்வி.ஏ.இராஜேஸ்வரி

### செயற்பாடுகள்

1. பாடசாலைமட்ட, வலயமட்ட விளையாட்டுப் போட்டிகளுக்கு மாணவர்களைத் தயார்படுத்தி அழைத்துச் செல்லல்.
2. வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியினை முன்னின்று நடாத்துதல்.
3. இல்ல விளையாட்டுப்போட்டிக்கான உடற்பயிற்சிக் குழுவொன்றை தயார்படுத்தி பயிற்சியளித்தல்.
4. உதைபந்தாட்டம், வலைப்பந்தாட்டம், கிரிக்கட், எல்லே ஆகிய விளையாட்டுக்குரிய குழுக்களுக்கான பயிற்சியளித்தலும், அவர்களை போட்டிகளுக்கு அழைத்துச் செல்லலும்.
5. பாடசாலைக்குரிய பாண்ட் வாத்தியக்குழுவை வினைத்திறனான முறையில் பயிற்சியளித்தல்.
6. பாடசாலையில் நடைபெறும் விளையாட்டுடன் சம்பந்தமான சகல செயற்பாடுகளுக்கும் பொறுப்பாக இருத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாரணர் இயக்கம்
## விபுலானந்த மத்திய கல்லூரி
## காரைதீவு.



**காப்பாளர்**
திரு.செ.அருள்மொழி (அதிபர்)

**செயலாளர்**
திரு.செ.சிவராசா

**பொருளாளர்**
திரு. செ.மணிமாறன்

**உறுப்பினர்கள்**
செல்வன்.ச. கிருஷாந் (தலைவர்)
செல்வன்.க.அமிர்தப்பிரகாஷ் (செயலாளர்)
செல்வன்.ச.மயூரன்
செல்வன்.ம.குமுதன்
செல்வன்.அ.சுதர்சனன்
செல்வன்.சித்திநிரோஜன்
செல்வன்.தி.ரெசோக்
செல்வன்.த.ஜெயனன்
செல்வன்.ம.சஞ்சீவ்
செல்வன்.வே.சுபாகரன்
செல்வன்.கு.சதீஸ்காந்தருபன்
செல்வன்.அ.செல்வகுமார்
செல்வன்.கி.பிரியந்தன்

**செயற்பாடுகள்**

1. மாணவர்களை சாதி, மத, பேதமற்று சமுதாயத்திற்கு பயன்படும் வகையில் வழிப்படுத்தல்.
2. பொறுப்புக்களை ஏற்று நடத்தும் பாங்கை வளர்த்தல்
3. ஒற்றுமையையும், தன்னம்பிக்கையையும் மாணவர்களிடையே வளர்த்தல்.
4. பரஸ்பர புரிந்துணர்வு, வெற்றி, தோல்வி போன்றவற்றை மதிக்கச் செய்தல்.
5. பெரியோர்களையும், முதியோரையும் மதிக்கும் நல்ல பண்புகளை வளர்த்தல்.
6. ஒழுக்கமுள்ள மாணவர் சமுதாயத்தை கட்டியெழுப்புதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது பாடசாலை சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் அணியினர்



**ஆசிரியர்கள் :**

செ.அருள்மொழி, எம்.ரவீந்திரன், எஸ்.தில்லையம்பலம், பொ.மலர்வண்ணன், ம. சுந்தரராஜன், அ.இராஜேஸ்வரி, ச. ராதீவ்

**மாணவ/மாணவிகள் :**

அ.சுஜமதன், பா.கீர்த்தனன், ஜே.அன்ரனிபயஸ், த.மோகன்சங்கர், ச.கிருசாந், வே.ஜனார்த்தனன், பா.சுஷ்யந்தன், ச.லோசாந்தன், ப.சிவதர்சன், அ.வாகீசன், வு.மிரோஜன், யோ.வகிதரன், பு.மயூரவேல், ச. ராதீவ்

து. ஹேமலதா, லோ.சுவர்ணா, தி.மேனகா, ச.நவலோஜினி, ந. உஷாதர்சஷிகா, லோ.கல்பனா, அ.மிரியாழினி, க.தேவதர்ஷிகா, ம.பெரசிகலா, ம.நிருபா, சு.ஜசோதா, ச.சுதாஜினி, சா.பிரபாஜினி, உ.உதயதர்ஷினி, வே.ராஜசுகந்தினி, சா.பிரதீபா, இ.ராஜகிரிஜா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது பாடசாலை பாண்ட் வாத்திய அணியினர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை அபிவிருத்திச் சங்க முன்னாள் செயலாளரிடமிருந்து அறிக்கை

கற்புக்கரசி கண்ணகி கோயில் கொண்டு அருள்புரியும் எமது காரைதீவு மண்ணிலே, முத்தமிழ் வித்தகர் விபுலானந்தர் பிறந்து எமது மண்ணின் பெருமையை நாடளாவிய ரீதியில் இமயம் வரை சென்று பரப்பினார். அத்தகைய புகழ்பெற்ற வித்தகனின் நாமம் தாங்கிய காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரி தன் மகத்தான கல்விப் பணியில் வளர்ச்சி பெற்று, ஐம்பது ஆண்டுகள் நிறைவு செய்த பூரிப்பில் நிற்கும் இவ்வேளையில் அக்கல்லூரி வெளியிடும் பொன்விழாச் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்க கிடைத்த சந்தர்ப்பத்தை பெரும்பேறாக கருதி மகிழ்ச்சியடைகிறேன்.

ஒரு பிரதேசத்தின் அபிவிருத்திகளும், கலாச்சார வளர்ச்சிகளும் அப்பிரதேசத்தில் அமைந்துள்ள கல்லூரிகளின் வளர்ச்சியோடு தொடர்புடையவை. இந்த வகையில் எமது கல்லூரியின் வளர்ச்சி மூலம் எம் பிரதேசம் மேன்மையடைகிறது என்பதில் நாம் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

இன்று எமது கல்லூரி பௌதீக வளங்களில் வளர்ச்சி பெற்று பலமாடிக் கட்டிடங்களோடும், ஆய்வுகூடங்களோடும் மிளிர்கின்றது. மாத்திரமன்றி, கல்வி வளர்ச்சியிலும் இப்பிரதேசத்தின் முன்னோடிப் பாடசாலைகளில் ஒன்றாக விளங்குகின்றது. ஒவ்வொரு வருடமும் பல மாணவர்களைப் பல துறைகளில் சிறப்பாக விஞ்ஞானம், பொறியியல் பாடத்துறைகளில் சர்வகலாசாலைகளுக்கு தேர்ந்தெடுக்கச் செய்கின்றது. இந்த முன்னேற்றங்களுக்கு காரணமாக இருந்த அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்களோடு பெற்றோர்களும், நலன்விரும்பிகளும் இன்று பெருமகிழ்ச்சியடைகிறார்கள். கல்வியோடு மாத்திரமல்லாமல் புறக்கிருத்திய துறைகளிலும் இன்று முன்னேற்றமடைந்து வருவதையிட்டு நாமெல்லாம் பெருமைப்படுகிறோம்.

இச்சந்தர்ப்பத்திலே, கடந்த காலங்களில் இப்பாடசாலையின் வளர்ச்சியில் மிக அக்கறை கொண்டு பெரும் சேவைகள் செய்த நம் ஊர்ப் பிரமுகர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், அரச உத்தியோகத்தர்கள் அனைவரையும் நன்றியோடு நினைவு கூருகிறோம்.

இனிமேல் வரும் காலங்களிலும் இந்தக்கல்லூரி சுவாமி விபுலானந்தரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி இன்னும் பல துறைகளிலும் முன்னேற்றமடைந்து மேலும் சிறந்த மாணவர்களை உருவாக்கி அளப்பரிய சாதனைகளை நிலைநாட்ட எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிய வேண்டுமென ஆசிகூறி பிரார்த்திக்கின்றேன்.

வணக்கம்

இவ்வண்ணம்

**சி. தங்கவேல்** *(T.A)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்விழாக் காணும் விபுலானந்தாவின் வளர்ச்சியில் பாடசாலை அபவிருத்திச் சங்கத்தின் பங்கு

வரலாற்றுக் கண்ணோட்டத்தில் 50 ஆண்டுகளைக் கடந்து பொன்விழாக் காணும் விபுலானந்தா மத்திய கல்லூரி கிழக்கிலங்கையின் ''கலங்கரை விளக்காக'' விளங்கிய, சுவாமி விபுலானந்தரின் திருநாமம் தாங்கி இன்று தலைநிமிர்ந்து நிற்கின்றது. இத்தனைக்கும் அதன் வளர்ச்சிக்கு உழைத்தவர்களின் பெயர்களை அட்டவணை இட்டுக்காட்ட முடியாவிட்டாலும் கூட பொதுவாக அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், சமயப் பெரியார்கள், பாடசாலை அபிவிருத்திச் சபையினர், பழைய மாணவர் சங்கம், அரசியல்வாதிகள், நலன்விரும்பிகள் எனக் குறிப்பிடுவது சாலப் பொருந்தும்.

விபுலானந்தாவின் வளர்ச்சியில் அன்று முதல் இன்றுவரை பாடசாலை அபிவிருத்திச் சங்கம் கூடுதலான பங்களிப்பைச் செய்து வருகின்றது. கல்லூரி அதிபர்களே அபிவிருத்தி சபைத் தலைவராய் இருந்து அதன் வளர்ச்சிக்கு பங்காற்றி வருகின்றனர். அதிபர்கள் செய்கின்ற சேவைக்கு பாடசாலை அபிவிருத்திச் சங்கம் என்றும் உறுதுணையாக உள்ளது. அத்துடன் செயலாளரின் பங்களிப்பு அதிபரை ஊக்குவிக்கின்றது. அத்துடன் ஏனைய உறுப்பினர்களின் பணியும் சேர்ந்து ஒரு கல்லூரின் வளர்ச்சிக்கு தனது பூரண பங்களிப்பை நல்குகின்றது.

பொன்விழாக் காணும் விபுலானந்தாவின் வளர்ச்சியில் திரு.என்.தங்கராசா, திரு.பி.இராஜரெத்தினம், திரு.எஸ்.கே.கந்தப்பு, திரு.எம்.ஏ.செபமாலை, திரு.எம்.சச்சிதானந்தசிவம், திரு.யோகம் வேலுப்பிள்ளை, திரு.சீ.ரி.கோயில் பரம்பில் இக்னேசியஸ், திரு.ரீ.மயில்வாகனம், திரு.பி.இராஜதுரை, திரு. வி. ரி. செல்லத்துரை, திரு.எஸ்.பாக்கியராசா, திரு.ரீ.சண்முகரெத்தினம், திருமதி.எம்.சத்தியதேவா, திரு.சீ.அருள்மொழி ஆகியோர் அதிபர்கள் வரிசையில் முன்னின்று உழைத்தவர்களாவர். இவர்களுடன் திரு.வே.தம்பிராஜா, திரு.எஸ்.சிவசம்பு, திரு.கே.முத்துலிங்கம் ஆகியோரும் அதிபராக அரும்பணி ஆற்றியமை இன்றும் நினைவு கூரத்தக்கது..

அடுத்து பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளரின் வரிசையில் அமரர்.எஸ்.தெய்வநாயகம்(கூட்டுறவுப் பரிசோதகர்), திரு.கே.விஜயரெத்தினம் (கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்), திரு.கே.மகாலிங்கசிவம்(முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்), திரு.எஸ்.தங்கவேல் (தொழிநுட்ப உத்தியோகத்தர்), திரு.எஸ்.மகேசன்(பொறியிலாளர்) ஆகியோரின் பங்கும் பணியும் மகத்தானவை.

காரைதீவுக் கனிஷ்ட வித்தியாலயத்தின் முதல் அதிபர் திரு.என்.தங்கராசா அவர்களாகும். பின் சிரேஷ்ட வித்தியாலயமாக, அரசாங்க மகாவித்தியாலயமாக, மத்திய மகா வித்தியாலயமாக, இன்று விபுலானந்த மத்திய கல்லூரியாக தரமுயர்ந்து நிற்கின்றது. திரு.எம்.சச்சிதானந்தசிவம் அதிபராயிருந்த காலத்தில் அரசாங்கத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவி கிடைக்காதபோதும், பாடசாலைக் கட்டிடம் அமைப்பதற்குத் தேவையான செங்கற்களைத் தாமே உற்பத்தி செய்து பெரியதோர்கட்டிடம் அமைத்துச் சாதனை புரிந்தார்.

ஆங்கிலக்கல்வி விருத்திக்குக் கூடிய பங்களிப்புச் செய்ததோடு விஞ்ஞானக் கல்வியையும் அறிமுகம் செய்து வைத்தார். விஞ்ஞான ஆய்வு கூடம் ஒன்றையும், நூல் நிலையம் ஒன்றையும் அமைத்தார். கலை, விஞ்ஞான, வர்த்தக கண்காட்சி ஒன்றையும் ஒழுங்கு செய்த பெருமை இவருக்குண்டு. அத்துடன் காரைதீவின் வளர்ச்சி சிதறிப்போகக் கூடாது என்பதற்காகவும், ஆங்கில விஞ்ஞானக் கல்வி முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டுமென்பதற்காகவும், காரைதீவு மகா வித்தியாலயம் தவிர்ந்த ஏனைய வித்தியாலயங்களிலுள்ள ஐந்தாம் வகுப்பிற்கு மேற்பட்ட சகல மாணவர்களும் மகாவித்தியாலயத்திலேயே கல்விபயில வேண்டுமென்ற கொள்கை உடையவராயிருந்தார்.

கல்வி அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெற்று க.பொ.த(உ/த) கலை, விஞ்ஞான வகுப்புக்களை ஆரம்பித்தார். இன்று உயர்தர கலை, விஞ்ஞான, வர்த்தக வகுப்புக்கள் நடைபெற்று பொறியியல், மருத்துவம், கணக்காளர் போன்ற துறைகளுக்கு மாணவர்கள் பல்கலைக்கழகம் சென்று பட்டம் பெறுவதைக் காணும்போது மனம் பெருமிதமடைகிறது.

திரு.சீ.நடராசா அதிபரின் காலத்தில் கல்லூரியின் வளர்ச்சி மிகச்சிறப்பாக அமைந்திருந்தது. நவீன இரண்டுமாடி விஞ்ஞான கூடம், மேல்மாடியுடன் கூடிய ஒன்றுகூடல் மண்டபம், எட்டு வகுப்பறைகள் கொண்ட இரண்டு மாடிக்கட்டிடம் என்பன கட்டப்பட்டன. காரைதீவு விளையாட்டு மைதானமும், கல்லூரி மைதானமும் இணைக்கப்பட்டுகனகரெத்தினம் விளையாட்டரங்கும் அமைக்கப்பட்டது. அத்துடன் தொகுதிக்கு ஒரு மத்திய மகா வித்தியாலயம் என்ற அடிப்படையில் எமது கல்லூரியும் மகா வித்தியாலயமாகத் தரமுயர்த்தப்பட்டது. அதிபர் சீ.நடராசாவிற்கு பக்க பலமாக பொத்துவில் பாராளுமன்றப் பிரதிநிதியாக இருந்த அமரர் திரு.எம்.சி.கனகரெத்தினம் அவர்களும், முன்னாள் கிராமாட்சி மன்ற முதல்வர் திரு.இ.விநாயகமூர்த்தி அவர்களும், அம்பாறை மாவட்டமேலதிக அரச அதிபரும், காரைதீவு கிராமாட்சி மன்ற விசேட ஆணையாளருமாகவிருந்த திரு.அமுதசாகரன் அவர்களும், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரும், அதன் பொறுப்பாளராயிருந்த நானும் கல்லூரி வளர்ச்சியில் பங்கு கொண்டோம்.

அன்று க.பொ.த.விஞ்ஞான உயர்தரவகுப்பிற்கு ஆசிரியர்கள் இல்லாமையினால் மாணவர்கள் விடுகைப் பத்திரம் எடுத்துக் கொண்டு வெளிப் பாடசாலைக்குச் செல்ல முயன்ற வேளை அவற்றைத் தடுக்க அதிபர் திரு.சி.நடராசா அவர்களும், அமரர் திரு.எம்.சி. கனகரெத்தினம் அவர்களும் அம்பாறை மாவட்ட தேசிய வீடமைப்புத் திணைக்கள முகாமையாளரான திரு.கே.பத்மநாதன் அவர்களும், நானும் திருக்கோவிலுக்குச் சென்று இரவோடிரவாக திரு.ஆர்.மலர்ராஜன் ஆசிரியர் அவர்களை அழைத்து வந்ததை இன்றும் எண்ணிப்பார்க்கிறேன்.

விபுலானந்த மத்திய கல்லூரியில் சுற்றுமதில் இல்லாத காலத்தில் கிராம முன்னேற்றச் சங்கத்தின் உதவியோடும், மேலதிக அரச அதிபர் திரு.அமுதசாகரன் அவர்களின் அனுசரணையோடும், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவியோடும், அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், நலன் விரும்பிகள் ஆகியோரின் ஒத்துழைப்போடும், சிரமதானம் மூலம் தென்புறம் உள்ள சுற்றுமதிலை அமைத்தோம்.

அதிபர் திரு.ரீ.மயில்வாகனம் அவர்களின் காலம் முதல் அதிபர் திரு.எஸ்.மகாலிங்கம் அவர்கள் காலம் வரை மிக நீண்ட நாட்கள் விபுலானந்தா மத்திய கல்லூரியின் வளர்ச்சிக்கு பாடசாலை அபிவிருத்திச்சங்க செயலாளராக இருந்து என்னால் இயன்ற சேவையைச் செய்ய முடிந்ததை நான் செய்த பெரும் பேறாகக் கருதுகின்றேன். பொன்விழாக் காணும் விபுலானந்த மத்திய கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினராக இன்று இருந்து எனது பங்களிப்பை மென்மேலும் நல்கக் கிடைத்த சந்தர்ப்பத்தையிட்டு நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இன்று பொன்விழாக் காணும் விபுலானந்தாவின் அதிபர் திரு.செ.அருள்மொழி அவர்களும், பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் திரு.எஸ்.மகேசன் அவர்களும் வயதில் குறைந்தவர்களாயிருந்தாலும் சேவையில் சிறந்து விளங்கி பொன்விழா நிகழ்ச்சிகளை மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்து வருகின்றனர். அவர்களோடு இணைந்து பாடசாலை அபிவிருத்திச்சங்கத்தினரும் தமது பங்களிப்பை நல்கி வருகின்றனர்.

விபுலானந்தாவின் கல்விப்பணி பல நூற்றாண்டுகள் தொடரவும் பொன்விழா நிகழ்ச்சிகள் சிறப்புற அமையவும் பாடசாலை அதிபர், ஆசிரியர், மாணவர், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், அரசியல்வாதிகள், நலன்விரும்பிகள், சமயப்பெரியார்கள், பழைய மாணவர் சங்கம் மட்டுமல்லாது சகலரும் தம்மால் இயன்ற உதவிகளை வழங்கி மேலும் சிறப்புற உதவுவோமாக.

"வாழ்க விபுலானந்தா"
"வளர்க அதன் பணி"

**திரு.க.விஜயரெத்தினம்** (பி.ஏ)
*முன்னாள் பாடசாலை அபவிருத்திச்சங்க செயலாளர்.*
*விபுலானந்தா மத்திய கல்லூரி*
*காரைதீவு.*



அமைச்சரான திரு.தயாரத்ன அவர்களின் விஜயத்தின் போது.




பிரதியமைச்சராகவிருந்த திருமதி.ராஜமனோகரி புலேந்திரன் உரையாற்றுகையில்



திருமதி.ரங்கநாயகி பத்மநாதன் (M.P) உரையாற்றுகையில்



கல்வி அமைச்சராகவிருந்த போது ரணில் விக்கிரமசிங்கவின் விஜயம்



அமைச்சரான A.R.மன்சூர், திவ்வியநாதன் ஆகியோரின் வருகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரும்பு அலுமாரிகள் - கபட் வகைகள் -
குளிர்சாதனப் பெட்டிகள் - அலுவலக மேசை,
கதிரை - மேசை பேன் - சீலிங்பேன்
வகைகள், SONY T.V, டெக் வகைகள் -
றைஸ் குக்கர், கேஸ் குக்கர் வகைகள் -
பிளாஸ்டிக் கதிரை, மேசை மற்றும் Booster,
வயர் வகைகள்

போன்றவற்றை சில்லறையாகவும் மொத்தமாகவும்
பெற்றுக் கொள்ள

நாட வேண்டிய இடம்

USHA
JEWEL HOUSE
SHOW ROOM
RICE MILL

MAIN STREET - SAINTHAMARUTHU
Tel : 067 - 29092 / 21328 / 21204 / 50260

தவணை முறையிலும் சகல பொருட்களையும்
உடன் பெற்றுக் கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்விழாக் கொண்டாடும் விபுலானந்தாவுக்கு
எமது உளம் நெகிழ்ந்த வாழ்த்துக்கள்!

# எஸ். எம். மலர்' சென்ரர்

உங்களுக்குத் தேவையான வீட்டுப் பாவனைப் பொருட்கள், பாடசாலை உபகரணங்கள், அழகு சாதனப் பொருட்கள், பாதணிகள் மற்றும் பல பொருட்களை பெற காரைதீவில் நாடவேண்டிய நம்பிக்கையான நிலையம்

**எஸ். எம். மலர்ி சென்ரர்**
**சாரதா வீதி,**
**காரைதீவு-01.**



மாணவ மணிகளே!

எதிர்கால நம்பிக்கை நட்சத்திரங்களே!

உங்கள் எதிர்கால இலட்சியங்கள் எமது கரங்களில்

# VIPULANANDA ACADEMY

அறிவுக் கண்களைத் திறக்க ஒரே திறவுகோல்
புதிய சகத்திரத்தின் ஒரே கல்வி நிறுவனம்
O/L & A/L பரீட்சைகளா?
துரித மீட்டல் பயிற்சிகளா?
நவீன கல்விநெறிசார் கருத்துப் பிரதிகளா?
எல்லாவித கல்வித் தேவைகட்கும் நீங்கள்
என்றும் நாடுங்கள்

பல சாதனைகளை கணித, விஞ்ஞான துறைகளில் ஈட்டிக் காட்டிய பட்டறிவுமிக்க ஆசிரிய மணிகளின்

# விபுலானந்தா கல்வியகம்

## காரைதீவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்விழாக் காணும் எமது விபுலானந்தா

விபுலானந்தாவே
இன்று
பொன்விழாக்காணும்
பெண் நீ

சமுதாயத்தின்
வர்ணவர்ண கனவுகளுக்கு
வரலாற்றில - பல் ஆயிரம்
முத்துக்களை
சொரிந்துகொண்டிருக்கிறாய்

சாதனைகளில்
எவரெஸ்டுக்கே
ஏறிவிட்டாய் - நீ
நீண்ட உன் வாழ்க்கையில்
நைல்நதியை
எஞ்சிவிட்டாய்

நீ பிரசவிப்பதெல்லாம்
புத்திஜீவிகளே
சமுதாயக்கண்ணியத்தை
காத்துக்கொடுத்த
காரைதீவின் வரலாற்றில்

வலிமைகுன்றாவேலி
என்பதில்
தமிழர் தம் சமுகமே
பெருமிதமடைகின்றது
அறிவால்
சமுதாயத்தின்
அறியாமைக்கதிர்களை
அறுத்துப்போட்ட நீ
ஒரு தங்க அரிவாள்

மருத்துவமும் பொறித்துவமும்
மற்றுமுள முகாமைத்துவம்
எஞ்சினியர் டொக்டர்
முகாமையாளர்கள்
பட்டதாரிகள்
என்று
உருவாக்கிவிட்டாய்
உன் புத்திரர்களை

நீ இலக்கிய
மாமணிகளையும்
உன் உதரத்தில்
இருந்துதானே
ஈன்றெடுத்தாய்
கல்வித்துறையில்
மட்டுமா
சிங்கங்களாக்கினாய்
மாற்றினாய்
உன் சென்மபுத்திரர்களை

விளையாட்டு உலகில்
விண்தொட்ட வீரர்களாய்
ஒளியூட்டும்
தங்கப்பதக்கங்களையும்
பெறுவதற்கு
அவர்களை மாற்றிவிட்டாய்
விபுலானந்தாவே நீ

விபுலானந்தாவே
வித்தகனின் நாமத்தை
ஆடையாகப் போர்த்திய
நீ
போட்ட அரைச்சதத்தில்
பெற்ற ஓட்டங்கள்
எல்லாமே
சரித்திரத்தின்
அழியாச்சுவடுகள்.

விபுலானந்தாவே நீ
இதுவரை குவித்த
வென்ற ஓட்டங்கள்
ஈன்ற பிள்ளைகள்
ஒவ்வொன்றையும்
உலகமே போற்றுகிறது

பொன்விழாக்காணும்
விபுலாநந்தாவே
இன்றும்பல்லாயிரம்
நம்பிக்கை நட்சத்திரங்களை
உருவாக்கிடு
இதற்கு என்
மனமார்ந்த வாழ்த்துக்கள்
வாழ்க விபுலானந்தா
வளர்க உன் கல்விப்பணி



கவியாக்கம் :

**எஸ். சிவராஜா** (ஆசிரியர்)
பழைய மாணவர் சங்க உப செயலாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A TEACHER'S SERVICE AND THE EXPECTATION OF THE SOCIETY

Education is not only acquiring knowledge but also gaining experience to solve our problem and overcome our difficulties, which we have in our day-to-day life. Education becomes meaningful when it is applied in a proper way. It is said that teaching is a noble profession. So, a teacher is expected to play a vital role in learning-teaching process. Besides, the society also expects the contribution of a teacher in the educational affairs for the betterment of the students.

Many psychologists have criticized about the role of a teacher in teaching in various ways. The society believes that the teacher is the only person who knows everything. With this confidence, the people in the society send their children to school believing that the teachers will make them good citizens. So, a teacher has more responsibility in moulding the character of the students. To make the learning-teaching process successful, I personally feel the physical presence of a teacher is very important. In addition, he must use the effective methods of teaching using various audio-video aids. Some psychologists have revealed that only the teaching aids would be enough for a child to learn besides a teacher. But, these aids will only be supplementary for learning.

An educationalist from the United States of America. Dr. Sydney Rosks had vividly stated in his book that a teacher should possess five special characteristics. He also says a good teacher must himself cultivate good positive attitude in his mind to fulfill the needs of the society and be aware of inculcating knowledge, skill and attitude in the mind of the children. He must also know how to develop himself. The society expects that a teacher should have the ability in decision-making to give impartial judgment when problems arise in the society.

A good teacher is expected to have a good rapport with the students so that they will always have trust on him. He should be able to guide the students in a correct path. That is why; the society blames the teachers when their children don't learn properly. So, he should first win the heart and confidence of the students. If not, they will begin to hate their teachers. This may even cause dropout of the pupils. Further, no teachers should always find fault with the children. Praising and rewarding is another key for a teacher to make students interested in learning. So, they must be praised in order to get rid of their weakness of bad mannerism. What I am trying to say is that no teachers should injure the character of any children. I can simply give you an example. The cow eats grass and gives us pure sweet milk. If a drop of poison is mixed with such milk, it becomes useless for none. So, the society will gain nothing from a teacher who is like the poisoned milk.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*It is suitable to look at the points stated by a British Professor Sir Ronald Cook in his book "The activities of the best Professional". He says that it is not only important but also steady to render a good service to the society by broadening knowledge and the mind. An efficient professional should pay more attention to his duties and responsibility than his rights. He must be deeply aware of techniques to do his service effectively. So, the opinion expressed by Sir Ronald Cook is more suitable for those who are carrying out teaching as a profession. The society has a full confidence on the teachers. Therefore, the parents in a society specially in developing countries, give their small children in the hands of the teachers and eagerly await for a good result. This is quite common even in Sri Lanka, except in the urban areas.*

*Considering the professional skills of a teacher at the root level, everyone should think of his psychological effects, the difficulties, the life struggle and the ways to solve these problems he faces in the society. Particularly, the illiterate parents don't generally realize these difficulties. They just think that their children totally depend on the teachers. They always dream that it is the teacher who should make their children to lead a happy and prosperous life, which they have not experienced. So, they give pressure to the teacher to carry a big burden on his shoulders.*

*When a teacher handling a classroom where there are fifty students, he has only two eyes to look at those hundred eyes while the hundreds eyes will be looking at two eyes. So, he must be very vigilant and careful to make himself fit and clever enough to respond to any students, particularly the mischievous ones. Though the students don't frankly criticize their teachers, they will be observing them in every matter.*

*I would also like to touch on the current child-killing situation, which is prevailing in every nook and corner of the country where the society doesn't think of it seriously. Most of the parents believe that if their children start learning at the very early stage before they are matured enough, they can complete their higher education successfully within a short period and will fulfill their expectation. Because of this keenly desire, they force their children to attend the Pre-schools and the private tuition classes even at the early stage where they are over-loaded giving heavy work. In the past, children attended private classes only for certain subjects. But, as it has become a fashion, almost all the children, even from the poorest of the poor family go to the tuition classes and pay for the tutors who are very much interested in making money luring the innocent children. These poor children gain nothing losing their money. Moreover, most of the Educational Institutes with commercial purposes, don't take care of the physical and the psychological development of the children.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*It is true that the teachers do their service for salary. This is what the society always states. It also censures that most teachers in many schools don't perform their duties with an open heart. In their point of view, there is little fact. In the primitive periods, the society gave the teachers some reward, but not the salary. As a result, he was leading a simple life with hardship. But, in the modern world, he is considered to be a respectable important person in a society. He has various needs to be fulfilled. He can't only rely on the society. So, he is now paid by the state to which he has to answer. In addition, in order to make the society not to interfere directly in teacher's affairs, the Administrative Organization in the school observes and supervises the teachers. To support this Educational Administrative Organization, the School Development Societies have been formed to perform certain functions along with the head of the schools.*

*It is generally spoken that this School Development Society sometimes criticizes the teachers. But, in fact, what this society should do is to make steps to organize meetings on and off to build up a bridge between the parents and the teachers for mutual understanding. At this juncture, it should take incentive measures to commend the teachers who are really rendering a sincere service to the nation. I think these meetings will definitely provide opportunities for the parents and the society to extend their gratitudes to the dedicated teachers. If the society fails to do so, a teacher himself becomes selfish.*

*In conclusion, I would like to entreat all the parents that they should never fail to attend all sorts of functions and meetings held in school to exchange their views with the teachers and to give the verbal commendation with rewards to the teachers. So, it is the duty of each and every parent, teacher and the society to make a firm link among themselves to uplift the learning-teaching process of the students in order to make them good citizens of the country. So, let's all work together to achieve the ultimate goals.*

**Mr. K. Punniyanesan**
Teacher of English
Km/ Vipulananda Central College
Karaitivu.

***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளரின் அறிக்கை

காரைதீவு மத்திய கல்லூரிக்கு ஒரு நீண்ட சுவையான வரலாறு உண்டு. அதனை இங்கு இவன் கூறப்போனால் இடம் போதாது. அப்படி வரலாறு கண்ட கல்லூரியின் பொன்விழா மலருக்கு எழுதக் கிடைத்தது எனது பாக்கியமே. 1950ம் ஆண்டுமுதல் 1963ம் ஆண்டுவரை எனது மனைவியும், 1958ம் ஆண்டு முதல் 1963ம் ஆண்டுவரை நானும் இக்கல்லூரியின் மாணவர்கள்.

வடகிழக்கு மாகாணங்களில் உயர் கல்வி பயிலும் மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளில் உள்ள மாணவர்களைத் தமிழ் அமைப்புக்கள் பலாத்காரமாக இராணுவப் பயிற்சிக்கு வாகனங்களில் ஏற்றிச் சென்ற இக்கட்டான காலம் 1989. காரைதீவு மததிய கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளராக என்னால் முடிந்த பணிகளை அமரத்துவம் அடைந்த அதிபர் திரு.பி. பாக்கியராஜா, அதிபர் த. சண்முகரெத்தினம் ஆகியோரோடு இணைந்து செயற்பட்டேன். அந்த எட்டு ஆண்டுகளும் குறிப்பிடும் படியான அபிவிருத்தியை கல்லூரி அடைந்தது. அந்த எட்டு ஆண்டுகளுள் என்னால் மறக்க முடியாத காலம் 1989ம் ஆண்டுதான். I.P.K.F. என அழைக்கப்படும் இந்திய அமைதி காக்கும் படையின் அனுசரணையுடன் சில தமிழ் அமைப்புக்கள் பாடசாலை மாணவர்களை பலாத்காரமாக இராணுவப் பயிற்சிக்குப் பிடித்துக் கொண்டு சென்றார்கள். இச்செயலால் வடகிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களது கல்வி மிக மோசமாகப் பாதிக்கப்பட்டது. மாணவர்கள் வரவு வடகிழக்கில் குறைந்தது. இவ்வேளையில் என்னைப் பாடசாலை அபிவிருத்தி சங்கச் செயலாளராக நியமித்தார்கள். அப்போது அதிபராக அமரர் திரு.பொ.பாக்கியராசா அவர்களும், பிரதி அதிபராக திரு.இரா.கிருஷ்ணபிள்ளை அவர்களும் கல்லூரியில் இருந்தார்கள். அதிபருடன் நாங்கள் இருவரும் கல்முனை இராணுவ முகாமில் தலைமை அதிகாரியைச் சந்தித்தோம். ஓர் பகிரங்கக் கூட்டத்தை ஒழுங்கு செய்து எமது மாணவர்களை யாரும் பிடிப்பதில்லை என அமைப்பாளர்களிடமிருந்து உறுதி பெற்றோம். தொடர்ந்து எமது கல்லூரி மாணவர்களுக்கு விஷேட அடையாள அட்டை வழங்கினோம். விஷேட அடையாள அட்டை வழங்க திரு.எம்.இரவீந்திரன், திரு.வ.வசந்தாதித்தன் இருவரும் அயராது உழைத்தார்கள்.

இக்கட்டான கால கட்டங்களில் பிற மாவட்டங்களுக்கான கல்விச் சுற்றுலாக்கள் மேற்கொள்ள இயலாத நிலைமைகளில் மாணவர்கட்கு தேவையான பாதுகாப்புக்களை வழங்கி கூடவே சென்று அவை வெற்றிகரமாக நிறைவேறுவதற்கு உதவியுள்ளேன். அகதி முகாமாக இருந்த பாடசாலையை அதிபர்.திரு.சண்முகரெத்தினம் அவர்களது உற்சாகத்துக்கு துணையாக இருந்து புதிய ஆராதனை மண்டபம், மூன்று மாடிக் கட்டிடம் என்பவற்றைப் பெற்றோம். கனடிய உயர்ஸ்தானிகரை அழைத்து வந்து சுமார் 5 இலட்சம் பெறுமதியான விஞ்ஞான உபகரணங்கள் மற்றும் காப்பகப் பெட்டகம் என்பன பெற்றோம்.

இக்கல்லூரியானது பல சோதனைக் காலங்களை எதிர்நோக்கிய போதிலும் பல்வேறு சாதனைகளைப் புரிந்தமை பாராட்டப்படவேண்டிய ஒன்றாகும். ஒரே சந்தர்ப்பத்தில் ஏழு மாணவர்களது தந்தையாக இருந்ததுடன் செயலாளராகவுமிருந்த நான் இக்கல்லூரியின் அபிவிருத்திகளையிட்டு பெருமிதமடைவதோடு மென் மேலும் இக் கல்லூரி கல்விவானில் பிரகாசிக்க வேண்டுமென வாழ்த்தியமைகின்றேன்.

- நன்றி -

**திரு. கு. மகாலிங்கசிவம்**
*முன்னாள் பாடசாலை அபிவிருத்தி சங்கச் செயலாளர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதிபடைத்த விபுலானந்தா

காரேறு மூதூராம் காரைதீவு
கலையாளுங் கண்ணகியின் காவலூ ராம்
சீரேறும் மருதமொடு நெய்தலேந்தும்
சிறப்பாய்வில் பிறந்த முனி விபுலானந்தன்
பாரேறும் புகழ்கூட்ட சான்றோர் வாழும்
பதியாகும் நிலையினிலே விபுலானந்தா
பேரேறுங் கல்லூரி ஐம்பதாண்டுப்
பெரிய விழாக் காணுகின்ற பெருமையன்றோ!

என்னும் கவிதை வாழ்த்துடன் கூடிய ஆரம்பம், விதிபடைத்த விபுலானந்தா என்னும் தலைப்புக்கு விளக்கம் கூறுவதாக அமையும். விதிபடைத்தது மட்டுமல்ல, விதிபடைக்கின்ற, விதிபடைக்கும் விபுலானந்தா என்னும் வீங்குணர்வால் இக்கட்டுரை விரிவடைகின்றது. வித்தியாலயம் ஒன்றின் வளர்ச்சி உயர்ச்சி மேம்பாடு அது அமைந்துள்ள ஊர் இடம்சூழல் அங்குள்ள மக்களின் வாழ்வு என்பவற்றை பொறுத்ததாகவே காணப்படும். இக்கல்லூரிக்கு பொருத்தமுற இவை வாய்த்திருப்பதால் தான் அரசினர் கலவன் பாடசாலையாக ஆரம்பித்து இன்று விபுலானந்தா மத்திய கல்லூரியாக பரிணமித்து அம்பாரை மாவட்டத்தில் வரலாற்றுப் புகழ் படைத்திருக்கின்றது.

கிழக்கிலங்கையில் எந்த மண்ணுக்குமில்லாத மகிமை, பெருமை மகோன்னத நிலை காரைதீவு மண்ணுக்குண்டு. முத்தமிழ் வித்தகர் விபுலானந்தர், நல்லுயர்வுத் துறவி நடராஜானந்தா, அன்புச்சித்தர் ஆனைக்குட்டிச் சுவாமி ஆகியோரின் வாழ்வுக்குரிய மண்ணானதால் ஆய்வுக்குரியதாகி விட்டது. இதனால் அறிவுக்குப் பஞ்சமில்லை, செறிவுத்திறமைகளுக்குப் பஞ்சமில்லை எனவே, இவற்றுக்கெல்லாம் தெரிவத்தாட்சியாகத் திகழ்ந்து, பொன்விழாவில் தெளிவுகூட்டி, பொலிவுற்று விளங்குவது விபுலானந்தா மத்திய கல்லூரியாகும்.

பல்கலைக்குரிய கோயிலாக, பகுத்தறிவுச் செழிப்புக்குரிய ஆலயமாகக் காணப்படும் இக்கல்லூரியில் கற்பதற்கும், கற்பிப்பதற்கும் வாய்ப்பு கிடைப்பது பெரும் வரப்பிரசாதமாகும். இக்கல்லூரியில் 12 வருடங்களுக்கு மேலாக சேவை செய்யும் பாக்கியம் எனக்கு கிடைத்தது.

என்னிடம் கல்வி கற்ற பல நூற்றுக்கணக்கானோர் நான் பிறவூரைச் சேர்ந்தவன் என்பதை முற்றாக நம்ப மறுக்குமளவுக்கு காரைதீவில் உணர்வுபூர்வமாய், உறவு கலந்து உரிமையோடு வாழ்ந்ததனால், மண்ணின் மைந்தர்களில் முன்னோடிகளில் ஒருவனாக மதிக்கப்பட்டேன். இந்நிலைக்கு என்னை வழிப்படுத்தியது இந்த மத்திய கல்லூரியே. கற்பித்தலில் ஒழுக்க கட்டுப்பாட்டில் காந்தமாகிப் பிள்ளைகளைக் கவர்ந்து கொள்ளும் எனது கற்பித்தல் ஆற்றல், திறமை, வெல்லுந்திறன் வாய்ந்த பல்கலைத்திறமைகள் பளிச்சிட்டு வெளிஇடங்களிலெல்லாம் பரவி நிற்கக் களமாக என்னை உயர்த்தி நின்றது இந்த விபுலானந்தா மத்திய கல்லூரியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கல்லூரியில் எனது 12 வருட காலசேவை தொடர்ச்சியற்றதாக மட்டக்களப்பு மாவட்டத்திற்கு இடைக்கிடை மாற்றங்கிடைத்ததால் நான்கு அதிபர்களின் தலைமையில் மூன்று கட்டமாக அமைந்தது. முதலாம் கட்டம் மதிப்பிற்குரிய இக்னேசியஸ், கோயில் பரம்பில், மதிப்புக்குரிய த. மயில்வாகனம் அவர்களின் கீழ் 1971.08.05 தொடக்கம் 1975.07.06 வரை உதவி ஆசியராகச் சேவை செய்தேன். இரண்டாம் கட்டம் மதிப்புக்குரிய க. நடராஜா அவர்களின் கீழ் 1980.03.10 தொடக்கம் 1986.01.26 வரை பகுதித் தலைவனாகப் பணியாற்றினேன். மூன்றாம் கட்டம் மதிப்புக்குரிய பொ.பாக்கியராசா அவர்களின் கீழ் 1986.10.27 தொடக்கம் 1989.04.24 வரை பிரதி அதிபராக பெருந்தொண்டாற்றக்கூடிய பேறு கிடைத்தது.

திருவாளர் நடராசா அவர்களின் இத்தகைய சாதனைகளுக்கு உந்து சக்தியாக இருந்தவர்கள் மூவர். இவர்களில் வலது கரமாக இருந்தவர் பொத்துவில் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த கௌரவ. ம. கனகரெத்தினம் அவர்கள். தம்பிலுவில்லுக்கா, அக்கரைப்பற்றுக்கா, காரைதீவுக்கா மத்திய கல்லூரி விபுலானந்தா மத்திய கல்லூரித் தரம் என்னும் இழுவையில் காரைதீவுக்கே மத்திய கல்லூரி அந்தஸ்த்தைப் பெற்றுத் தந்து இக்கல்லூரியின் நிலையை உயர்த்தியவர் இந்தப் பெருமகனார். அவர் மறைந்தாலும் காரைதீவின் உணர்வோடு, இக்கல்லூரியின் உயிரோடு கலந்து உயர்ந்து நிற்பவர் அவர்.

திருமதி. ரங்கநாயகி பத்மநாதன் அவர்கள் அடுத்த கரமாக அண்ணன் விட்ட இடத்தில் இருந்து கல்லூரியின் அபவிருத்தியிலே முக்கிய பங்காற்றினார். உதவிக்கரங்களான இவ்விருவரையும் இயக்கிய உந்து சக்தியாகத் திகழ்ந்தவர் முன்னாள் உள்ளூராட்சி மன்ற முதல்வர் உயர்திரு. இளையதம்பி வினாயகமூர்த்தி அவர்கள். அவர் வாழும் காலத்தில் நாமும் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்ற பெருமை எமக்குண்டு. காரைதீவின் வரலாறு எழுதும் போது அதில் விபுலானந்த மத்திய கல்லூரியின் வளர்ச்சிக் காலம் இடம்பெறும் போது உயர்திரு வினாயகமூர்த்தி அவர்கள் அங்கெல்லாம் உயர்ந்து நிற்பார்.

திருவாளர் நடராசா அவர்களையடுத்து அதிபர் பதவியை ஏற்றுக் கொண்டவர் திருவாளர் பாக்கியராசா அவர்கள். திரு நடராசா அவர்களின் சாதனைகள் நொய்ந்து விடாது கட்டிக்காத்து பாக்கியராசா அவர்கள் க.பொ.த(சா/த), க.பொ.த(உ/த) பெறுபேறுகளில் இக்கல்லூரி அம்பாரை மாவட்டத்திலே முன்னிலை வகித்து மருத்துவத்துறை, பொறியியல் துறை ஏனைய பல்கலைக்கழகத்திற்கும் மாணவர்கள் தெரிவான தலைமைத்துவத்தைக் கொடுத்தார். இன்று மட்டுமல்ல எண்ணிப் பார்க்கும் இந்த இமாலயத் தொண்டிலே பிரதி அதிபராக இருந்த நானும், ஏனைய ஆசிரியர்களும் பங்காளராக எண்ணி இறும்பூதெய்துகின்றோம்.

**பொன். தவநாயகம்**
*ஓய்வு பெற்ற அதிபர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் நினைவில் கந்தப்பு வாத்தியார்

உள்ளத்தில் உள்ள சில சுவையான அனுபவங்களை பிறருடன் பகிர்ந்து கொள்வதிலும் ஒரு தனி இன்பம் உண்டல்லவா? யான் கல்விபயில்வதற்கு இப்பாடசாலைக்கு வந்த காலத்தில் அதாவது 1955 என நினைக்கின்றேன். 1960 வரை இங்கு அதிபராக இருந்தவர் திரு. எஸ். கே. கந்தப்பு அதிபர் அவர்களாவர். அக்கால கட்டங்களில் எம் கிராமம் அவ்வளவு விழிப்புணர்வு பெறவில்லை என்றே கூறலாம். காரைதீவும் கல்வித்துறையும் கரங்கள் பற்றாத ஒரு துர்ப்பாக்கிய நிலை. கல்வியில் ஆர்வமுடைய விரல்விட்டெண்ணக் கூடிய ஒரு சிலர் நகர்ப்புறங்களுக்கு விஞ்ஞான, ஆங்கிலக் கல்விக்காகத் தமது பிள்ளைகளை அனுப்பி வந்த காலம்.

திருவாளர் கந்தப்பு அதிபர் அவர்கள் யாழ்/நெல்லியடியை பிறப்பிடமாய்க் கொண்டவர். எமது வித்தியாலயத்தின் முன்னோடிகளான அரசினர் பாடசாலை தலைமை ஆசான்கள் பலர் அவருக்கு நெருங்கிய நண்பர்களாக இருந்ததோடு பக்க பலமாகவும் இருந்தனர். தினசரி மாலை வேளையில் அவர்கள் ஒன்றுகூடி பாடசாலையின் அபிவிருத்திகள் , மாணவர் நலன்கள் பற்றி கலந்துரையாடுவது வழக்கம்.

இரவு வேளைகளில் மாணவர்களுக்கு ஆங்கில பாட போதனைகட்கான ஒழுங்குகளும் இவ்வாறே தீர்மானிக்கப்பட்டவையாகும். கட்டிட வசதிகள் மிகக் குறைந்திருந்த அக்கால கட்டத்தில் கிழக்கு மேற்காக இரண்டு ஓலைக் கொட்டில்களே பாடசாலை மண்டபங்களாகும். அதிபர் விடுதி இல்லாத நிலை. இந்த நிலையில் அதிபர் கந்தப்பு அவர்களும் ஊரில் வாடகை வீடுகளிலேயே இருந்து வந்தார். ஆனால் பிற்பாடு அதிபர் விடுதியொன்று அமைக்கப்பட்டு அதில் அவர் வாசஞ்செய்து வந்தார்.

நெற்றியில் மூன்று விரல்களினாலான விபூதிப்பட்டை, வேட்டி, வாலாமணி ஆகிய சுதேசிய உடை, மொத்தத்தில் எளிமையான தோற்றம், ஒரு சைவ உணவுக்காரர், யாழ்ப்பாணப் பேச்சுத்தமிழ் கேட்பதற்கு சுவாரசியமானது, ஒரு சிறந்த ஆங்கில ஆசானாகத் திகழ்ந்தார்.

மிகவும் முயற்சியுள்ள யாழ்-விவசாயிகளின் அனுபவம் அவரிடம் நிறையக் காணப்பட்டது. ''வெம்பு'' எனும் பாலைநிலத்தை பசுந்தரையாக மாற்றிய விவசாய வித்துவானாக அவர் காணப்பட்டார். செயற்கை உரங்களில்லாத அக்கால் கட்டத்தில் காவிளா, கிளிசீறியா, காய்ந்த பனையோலைகள் போன்ற பசுந்தாட் பசளைகளைக் கையாண்டு வெங்காயம், மரக்கறி வகைகள், என்பவற்றை நிறைய உற்பத்தி செய்து வெற்றி கண்டார். நம்மவர்களென்றால் இந்த வெம்பு நிலத்தில் பயிர்வரமாட்டாதென்றே கூறிவிடுவர். பனந்தோப்பு என்று சொல்லக் கூடியதாக பாடசாலைவளவு காணப்பட்டது. ஒரு சில வேளைகளில் நான் எண்ணுவதுண்டு. கந்தப்பு சேருக்கு அவரது நெல்லியடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேசத்தை இந்த இடம் மானசீகமாகவாவது நினைவூட்டலாமென்று. இந்த மீட்டல்களில் நானும் எனது பாடசாலை நண்பர்களும் (தெறுக்கணிச்ச கூட்டம் உட்பட) பனங்கிழங்கு, மரவள்ளிக்கிழங்கு அவித்துச் சாப்பிட்டதும் நினைவுக்கு வருகின்றது.

வேலிகள் என்றால் கீரிமிலாறுகளை வரிசையாக நிறுத்திக்கிட்டி வைத்து இறுக்கப்பட்ட வேலிகளைத்தான் குறிப்பிடலாம். இதற்கென தோணாக்கரைகளில் சென்று கீரிமிலாறு வெட்டி இழுத்து வருவதும், சித்தானைக் கோயிலுக்கப்பால் முஸ்லிம் பகுதிகளிலிருந்து வாளிவாளியாக மாட்டெரு சுமந்து வந்தவற்றையும் பசுமையாக நினைக்கின்றேன். இரவுப் படிப்புக்கு ஆங்கிலம் கற்கச் செல்லும் மாணவர்களோடு செல்வதற்கு எனது பெற்றார் என்னை அனுமதிக்காதது மனதில் கவலைதான். அதற்குக் காரணம் அடுத்த நாளில் வகுப்பறைகளில் நண்பர்கள் பேசும் சுவாரசிய அனுபவங்கள் நாம் பங்குபற்றவில்லையே என்ற அங்கலாய்ப்பு. நண்டடித்த கதை, தென்னந்தோப்புக்களில் இளனி தேங்காய் பிடுங்கியது, செம்புச் சதத்தால் தேங்காய் துருவி ரொட்டி போட்டது. இன்னும் இருக்கிறது. குறும்புத் தனங்களில் சிறப்பு பயிற்சி பெற்ற எனது கடும்போக்கு நண்பர்களில் ஒருவராவது குறிப்பிடத்தக்க கல்வி இலக்கினை அடைய முடியாமற் போனதும் துரதிஷ்டவசமானதே.

பாடசாலை வளாகமென்றால் ஆலமரம், தென்னந்தோப்பு, பனந்தோப்பு, தேத்தாமரங்கள் இவ்வாறு இரவுப் படிப்புக்குச் செல்வோர் செல்லையாவருடைய தோட்டத்தில் சென்று அதிபருக்குத் தெரியாமலே இரவுகளில் மரத்தில் ஏறி இளனி பிடுங்குவதை ஒருநாள் அரிக்கேன் லாம்புடன் வந்த அதிபர் குறிப்பிட்ட மாணவர்களைக் கையும் மெய்யுமாகப் பிடித்துவிட்டார். ''உங்க வாங்கோவடா' கள்ள இளனியோ பிடுங்கினீர். உங்களுக்கு உறைக்கத் தரவேணும் வாருங்கோ" என அழைத்துச் சென்று நல்ல தண்டனை வழங்கினார். இன்று சீரணிக்க இயலாத பிரச்சினைகளையும் மாணவர்களது ஏனோதானோ என்ற மனப்பான்மையினையும் எதிர்த்து முத்தவர்களுக்கு பேசும் மனோபாவங்களையும் எண்ணிப் பார்க்கும் பொழுது மனிதன் மாறித்தான் இருக்கிறான் ஆனால், அன்று போல் முன்னேற எண்ணவில்லை என்றே எண்ணத் தோன்றுகிறது. அக்கால மனிதர்களது உயரிய பண்புகள் அவர்களை ஒரு ஆத்ம திருப்தியோடு நிம்மதியாக வாழவைத்தது. இந்த எலக்றோணிக் மிலேனியத்தில் என்னதான் முன்னேற்றத்தைக் கண்டிருந்தாலும் அந்தச் சலனமற்ற மனோ நிம்மதி கிடைப்பது பெரியதோர் வரப்பிரசாதமென்றே கருதலாம்.

''மோனை" என்றுதான் மாணவர்களை அன்போடு அழைப்பார். அவரிடம் யாழ்-மட்டு பிரதேச புறக்கணிப்பை இம்மியளவும் காணமுடியாது. அதிகபட்ச மஞ்சவண்ணாக் காடுகள் மறைந்த காலமும் இவர்காலமே. 1958 களில் நடந்த சிங்களக் கலவரங்களின் பொழுது எவ்வளவு நாசூக்காக அந்தச் சிங்கள் ஆசிரியையைக் காப்பாற்றி அம்பாறை நகருக்கு அனுப்பி வைத்தார். இதற்கெல்லாம் பிரதியுபகாரமாக தமிழர்கட்கு அடுத்த கலவரங்களில் கிடைத்ததென்னவென்பது எமக்குத் தெரியும்தானே.

எது எவ்வாறிருப்பினும் நாம் செய்யும் நன்மைகளுக்கு அழிவே கிடையாது. நாம் கந்தப்பு அதிபர் காலத்தில் பயிலுகையில் அவரது ஏகபுத்திரியாகிய சிவகாமசுந்தரியும் எங்கள் உடன்மாணவி. இந்தப்பெருந்தகை காரைதீவுக்கு செய்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னலமற்ற கல்விச் சேவை அவரது பரம்பரையையே இன்றளவும் நல்வழி சேர்க்கும் என்பதில் எமக்கு திடமான நம்பிக்கை உண்டு. திரு.பூ.சுந்தரம்பிள்ளை (விபுலானந்தரது மருகர்) ஆசிரியர் திரு.இ.பெரியதம்பி ஆசிரியர், திரு.க.பொன்னம்பலம் ஆசிரியர், திருமதி.செல்வநாயகி பரமலிங்கம் ஆசிரியை, திருமதி.சம்பந்தர் புவனேஸ்வரி ஆசிரியை என்பவர்கள் அதிபரது காலத்தில் எமது வகுப்பாசிரியர்களாக இருந்தவர்கள். இவர்களெல்லாம் பின்தங்கிய நிலைமையை மாற்றி புதிய வேகம் காணவேண்டுமென்ற தாகம் கொண்டவர்கள். அதிபருக்கு வலது கரமாக இயங்கி அவர் பணியினையும் முன்னேற்றியவர்கள் எனத் துணிந்து கூறலாம்.

நானும் வகுப்புக்களில் மண்டூகமல்ல. நான் முதலாம் பிள்ளையாக வருவேன் அல்லது நிலஅளவையாளராக இருக்கும் எனது நெருங்கிய நண்பர் திரு.வே.இராசேந்திரன் அவர்கள் வருவார். அந்தளவு அக்கறையோடிருந்தோம். நண்பர் ஆறாம் வகுப்போடு மட்டுநகருக்கு கல்விபயிலச் சென்று விட்டார். இவ்வாறிருந்தும் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் யான் பாடசாலை செல்லவில்லை. மறுநாள் எனது தந்தை கூறியவாசகம் இன்றும் என் நெஞ்சில் புதைந்து கிடக்கின்றது. கந்தப்பு அதிபர் அவர்களைச் சந்தித்த என் தந்தை என்னை அழைத்து அவரிடம் காட்டி ''கண்ணை மட்டும் வைத்துவிட்டு நல்ல உரி உரியுங்கள் ஐயா" எனக் கூறினார். அந்த அளவு முறைகேடாக யான் நடப்பவனல்ல. ஒருமுறை பாண்டிருப்பு திரௌபதியம்மன் ஆலய தீப்பள்ளயதினம் ஆசிரிய ஆசிரியைகளும் நான் மட்டும் பாடசாலைக்குச் சமூகமளித்தேன். அதை எண்ணி பின்னர் நான் வெட்கப்பட்டதுண்டு. இதன் காரணத்தினால் சக மாணவர் என்னைப் புறக்கணித்தமையும் என் நினைவிற்கு வருகிறது.

எனது அந்தநாள் ஞாபகங்கள் திரைப்படமாக நீண்டுகொண்டே செல்கின்றது. இது ஒரு சில வாசகர்கட்கு கசப்பாகவும் இருக்கலாமல்லவா? அன்றும் சில மாணவர்கள் அப்படி இருந்தனர். அது ஆண்டு அறுபதுக்கு முன். இன்று மாணவர் என்ன செய்கின்றனர். கல்வியில் அசிரத்தை காட்டுவது தெரிகிறது. இது பிற்கால வாழ்வினை வெகுவாகப் பாதிப்படையச்செய்யுமென்பது நிதர்சனமாகின்றது. இன்றைய மாணவர் தங்களை மில்லேனிய மாணவர்கள் என எண்ணுகிறார்கள். எத்தனைவிழுக்காடு மாணவர் கரிசனையுடன் உள்ளார்கள். புதியவிழிப்புணர்வு, சிந்தனைவிரிவு, இடையீடிலா ஆர்வம் அவர்களிடம் காணப்படுகின்றதா? இதை வாசிக்கும் மாணவர்கள் தங்களையும் இத்தராசில் எடைபோட்டுப் பார்ப்பீர்களாக.


**காரை. தெ. செல்லத்துரை**

*ஆசிரியர்*

*விபுலானந்த மத்திய கல்லூரி*


*காரைதீவு.*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்தர மாணவர் ஒன்றியம்
## விபுலானந்த மத்திய கல்லூரி
## காரைதீவு.



**காப்பாளர்**
திரு.செ.அருள்மொழி (அதிபர்)

**ஆலோசகர்கள்**
திரு.ம. ரவீந்திரன் (பி. அதிபர்)
திரு.சு. தில்லையம்பலம்(பி. அதிபர்)
திரு.சீ. திருச்செல்வம் (ப.தலைவர்)
திரு.தி. கிரிநிவாசன் (பி.ப.தலைவர்)

**உறுப்பினர்கள்**
ம. சசிப்பிரியன் (தலைவர்)
கே. மேகலா (செயலாளர்)
என்.எழில்வேந்தன் (பொருளாளர்)
இ. பிரதீபராஜ்
கி. ராகுலன்
யோ. குமணராஜ்
அ.ஹரிப்பிரதாபன்
பி. லிங்கேந்திரா
செ. நிறோசன்
மு.தனுஷியா
யோ. சேதுபாலினி
சி. சிறிப்பிரியா
சி. பகீரதி
வீ. பிரதீபா
ச. ஜெயவதனி


**செயற்பாடுகள்**

1. மாதமிருமுறை கூடி கல்வி தொடர்பான பிரச்சினைகளை ஆராய்தல்.
2. உயர்தர மாணவர்களை ஒன்றிணைத்து விளையாட்டு சுற்றுப் போட்டிகளை நடாத்துதல்.
3. பாடசாலைவிட்டு விலகிச் செல்லும் பழைய மாணவர்களுக்கு விருந்துபசாரங்களை நடாத்துதல்.
4. வருடாந்த ஒன்றுகூடலுக்கு பிரதேசத்தின் ஏனைய கல்லூரிகளின் உயர்தர மாணவர் ஒன்றிய பிரதிநிதிகளையும் அழைத்து புரிந்துணர்வை ஏற்படுத்தல்.
5. உயர்தர மாணவர்களுக்கான இலவசக் கருத்தரங்குகளையும், போட்டிகளையும் நடாத்துதல்.
6. பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகும் மாணவர்களை பாராட்டி கௌரவித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்தர மாணவர் கலாமன்றம்
## விபுலானந்த மத்திய கல்லூரி
## காரைதீவு.



**காப்பாளர்**
திரு.செ.அருள்மொழி (அதிபர்)

**ஆலோசகர்கள்**
திரு.ம. ரவீந்திரன் (பி. அதிபர்)
திரு.சீ. திருச்செல்வம் (ப.தலைவர்)
திரு.தி. கிரிநிவாசன் (பி.ப.தலைவர்)

**உறுப்பினர்கள்**
அ. ஹரிப்பிரதாபன் (தலைவர்)
த. ஜெகதீஸ் (செயலாளர்)
ம. தனுஜா (பொருளாளர்)
இ. பிரதீபராஜ்
க. வினோதரன்
க. ஜெகன்
ந. பிரதீபன்
எம். ஜீவனந்
செ. நிறோசன்
வி. சந்திரிகா
யோ. சேதுபாலினி
கி. கிருஷ்ணகுமாரி
ப. கீர்த்தனா
ந. பிரதிபா
ப. ஜெயதர்சினி

## செயற்பாடுகள்

1. மாதமொரு முறை கலைவிழாவை நடாத்துதல்.
2. மாணவர்களுக்கான சஞ்சிகை வெளியிடுதல்.
3. மாணவர்களது ஆக்கத்திறன் வெளிப்பாட்டினை விருத்தி செய்யுமுகமாக விவாத அரங்கு, கவியரங்கு, புதிர்ப்போட்டி போன்றவற்றை நடாத்துதல்.
4. உள்ளூர், வெளியூர் கலைஞர்களை அழைத்து வந்து மாணவர்களுடனான கலந்துரையாடல்களை ஏற்படுத்தல்.
5. பிரதேசத்தின் ஏனைய பாடசாலை கலைவிழாக்களுக்கு நிகழ்ச்சிகளை தயாரித்து வழங்குதல்.
6. கலை இலக்கிய முயற்சியில் தேசிய மட்டத்தில் ஈடுபடுகின்ற மாணவர்கள், ஊர் பிரமுகர்கள் ஆகியவர்களை பாராட்டி கௌரவித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1999ல் இடம்பெற்ற பரிசளிப்பு விழாவில் கல்லூரி மாணவிகளின் நடனம்



1999 நவராத்திரி விழாவில் ''வாணி பூமிக்கு வந்தாள்'' வில்லிசை.



ஆண்டு 10 மாணவர்களின் ஒலுவில் துறைமுக சுற்றுலா.



உயர்தர மாணவர் ஒன்றுகூடல் 2000ல் இடம்பெற்ற நாடகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




முதலாவது விஞ்ஞான பொருட்காட்சியொன்றில் இடம்பெற்ற விண்வெளிக் கலமொன்றின் மாதிரி உரு.



கைப்பணிப் பொருட்காட்சியில் கைப்பணி ஆசிரியை திருமதி.ந.கந்தவனம் அவர்களும் மாணவர்களும்.



விபுலானந்த கலாலய திறப்பு விழா வைபவத்தின் போது நடைபெற்ற ''ஸ்ரீவள்ளி'' நாட்டுக்கூத்து குழுவினர்.




"WUSC" நிறுவனத்தால் நடாத்தப்பட்ட ''குளிரூட்டலும் வளிச்சீராக்கலும்" பயிற்சி வகுப்பின் சான்றிதழ் வழங்கும் வைபவத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*A. Mohamed Riyas*
**Proprietor**

# BESTOR

*Dealers in : Exclusive Ready Made Garments, Imported Sports Clothes & Sports Goods.*





**89/3, Bus Stand.**
**Kalmunai.**
**Dial : 067-20175**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்விழா சிறப்புற வாழ்த்துக்கள்

உங்களுக்குத் தேவையான
அன்றாடப் பாவனைப் பொருட்களையும், பைசிக்கிள் உதிரிப்
பாகங்களையும், மின் உபகரணங்களையும்
நியாய விலையில் பெற
என்றும் நாடவேண்டிய
ஒரே இடம்

# MAHARAJI CENTRE

**Central Road, Karaitivu-08.**
**T.P : 067 - 50472**



**With Best Complements From :**

# Mowlana Pharmacy

Wholesale & Retail Western Medicines

**Address :**

Mowlana Pharmacy
52, Main Street, Kalmunai.
Tel : 067-29394.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறும்பூதெய்துகிறேன்

இமயத்தலையில் தமிழ் முத்திரை பொறித்த ஈழக்கரிகாலனாம் விபுலானந்த அடிகளாரின் திருநாமம் தாங்கிக் கன்னல் விளை தன் பதியாம் காரேறுதீவில் பணிபுரியும் இவ்வித்தியாலயத்தின் பொன்விழாச் சிறப்பு மலரில் என்னையும் உடன்சேர்த்துக் கொண்ட விழாக்குழுவினர்க்கும் அதிபர், ஆசிரியர், பெற்றோர் ஆகியோர்க்கும் முதற்கண் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்று வானுயர் மாடிக்கட்டிடங்களையும், பயிலும் மாணவர்க்கு எவ்வகை வளங்கள் வேண்டுமோ அவ்வகை வளங்கள் எல்லாம் பெற்று கல்வித் துறையில் உயர்நிலையாம் பல்கலைக்கழகம் செல்லும் பொறியியல், மருத்துவம் போன்ற இன்னோரன்ன துறைகளில் மாணவர்களை உருவாக்கி உயர்நிலை பெறும் இந்நிலையம் எனது பிள்ளைப்பிராயத்தில் சுமார் 65 ஆண்டுகளுக்கு முன்னர் எவ்வகைத்தன்மை கொண்டிருந்தது என்பதை என்மனக் கண்முன் மீட்டுப் பார்க்கிறேன்.

நான் சிறுவனாக இருந்த காலத்தே வித்தியாலயம் அமைந்துள்ள இடம் மஞ்சவணாக் காடுகளும், நீள் முட்பாதைகளும் நிரம்பிய காடுகளாய் இருந்த போது வடபுறத்தே ஒரு மணற்பாதையும், கிழக்குப்புறத்தே இடுகாடும் சுடுகாடும், தெற்கே நீண்டு வளர்ந்து நிழல் பரப்பி நின்ற புளிய மரமும், மேற்கே தின்றாலும் தெவிட்டாத மகிழைமரமும் வானுயர்ந்த பனை, தென்னை மரங்களும் இடையிடையே மேடும் பள்ளமும் ஆன நிலப்பரப்பும் சிறியவர்கள் தனித்துச் செல்ல முடியாதென பிசாசுகள் நடமாடும் இடம் என பெற்றோர்களால் எச்சரிக்கப்பட்ட கரைச்சயை அண்டிய மண்வளமற்ற இடமாக இருந்தமை இன்றும் என்மனக்கண் முன் காட்சி அளிக்கின்றது.

1950ம் ஆண்டளவில் மறுமலர்ச்சி காரணமாக சர்வதேச மொழியாம் ஆங்கிலத்தை மையமாகக் கொண்டு கற்கை நெறியை நடத்த கனிஷ்ட பாடசாலை (யூனியா ஸ்கூல்) என்னும் நாமத்தோடு கிராமங்கள் தோறும் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டபோது இக்கிராம மக்களின் பூரண ஒத்துழைப்போடு என்னால் ஏலவே விபரிக்கப்பட்ட நிலையில் இருந்த இடத்தின் ஒரு பகுதியில் அன்று கிராம முன்னேற்றச் சங்கத் தலைவராயிருந்த திரு.செ.பொன்னையா என்பவர் தலைமையில் கொட்டகை அமைக்கப்பட்டு அக்காலம் கல்வி இலாகாவின் வித்தியாபதி எனப் பெயர்பெற்ற அருணந்தி என்பவரைக் கொண்டு திறப்புவிழா உற்சவத்தை நடத்தியதோடு ''கிழக்கின் உதயதாரகை'' என வர்ணிக்கப்பட்ட ''திரு.வி.நல்லையா'' மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் அவர்களும் சமூகமாயிருந்தது இன்றும் எனது ஞாபகத்தில் நிழலாடுகின்றது.

ஆரம்பகாலத்தில் ஐந்தாம் வகுப்பிற்கு மேற்பட்ட குறுகிய தொகை மாணவர்களும், ஒருசில ஆசிரியர்களும் கற்கை நெறியை ஆரம்பித்தனர். சில மாதங்களின் பின் அரசாங்கம் இப்பாடசாலையை பதிவு செய்து அதிபர், ஆசிரியர்கள் நியமனங்களை மேற்கொண்டது. கல்வி எனும் பயிருக்கு கண்ணீர் எனும் மழை வேண்டுவது போல சுதந்திர இலங்கையில் அரசியல் வாடை அடியாத எந்தக் கிராமமோ, பாடசாலையோ முன்னேறியதற்கு வரலாறு கிடையாது. இப்பாடசாலைக்கு நியமிக்கப்பட்ட அதிபர்களும், ஆசிரியர்களும் திறமைமிக்கவர்களாக இருந்தபோதிலும் பாடசாலையின் பௌதீக வளங்களை பெற்றுக் கொள்வதில் இருந்த தேக்க நிலை காரணமாகப் பூரண வளர்ச்சி ஈட்ட முடியவில்லை. 1961ம் ஆண்டில் அதிபராக நியமனம் பெற்ற யாழ்ப்பாணத்தை சேர்ந்த ''திரு.எஸ்.சச்சிதானந்தசிவம்'' ஊக்கமும் முயற்சியும் உத்வேகமும் கொண்டு செயற்பட்டமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாகப் புதியதோர் மண்டபம் அமைக்கப்பட்டதோடு சிறிய விஞ்ஞான ஆய்வுகூடம் ஒன்றினையும், நூல்நிலையம் ஒன்றினையும் உருவாக்கி வைத்தார். இவருடைய பதவிக்காலத்தில் கிராமத்தில் அமைந்துள்ள ஏனைய பாடசாலைகளில் ஐந்தாம் வகுப்பிற்கு மேல் சகல மாணவர்களும் மகாவித்தியாலயத்திற்கே அனுப்பி வைக்க வேண்டுமென்ற கிராம மக்களின் தீர்மானத்திற்கிணங்க க.பொ.த சாதாரண தரம் வரை வகுப்புக்கள் வைக்கப்பட்டன.

1970ம் ஆண்டளவில் கல்முனைத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாப் ''எம்.சி.அஹமது'' அவர்களின் உதவியைப் பெற்று இப்பாடசாலையில் கல்வியமைச்சராக இருந்த பதியுத்தீன் முகமது அவர்களை வரவேற்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. அச்சமயம் இக்கிராமத்தின் சூழல் பாடசாலையின் தேவை பற்றிக் கூறப்பட்டதை அடுத்துக் கௌரவ அமைச்சர் அவர்கள் கல்விப் பொதுத் தராதரப்பத்திர உயர்வகுப்பு, கலைவகுப்பு, விஞ்ஞான பிரிவுகளை நடாத்துவதற்கு அங்கீகாரத்தை அளித்தார்.

1977ம் ஆண்டு தொடக்கம் 1990ம் ஆண்டு வரை இக்கிராமத்தின் பொற்காலம் எனக் கூறலாம். இக்காலத்தில் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்ட ''திரு. எம். கனகரெத்தினம் இக்கிராமத்தின் தேவைகள் எவைஎவையுண்டோ அவற்றையெல்லாம் பூர்த்தி செய்ய முன்னின்று உழைத்ததோடு கல்வித்துறையைப் பொறுத்தவரையில் தொகுதிக்கு ஒரு மத்திய மகா வித்தியாலயம் என்ற அரசாங்கத்தின் கொள்கையின் அடிப்படையில் பல சிக்கல்களின் மத்தியில் இப்பாடசாலையை மத்திய மகாவித்தியாலயம் எனத் தரமுயர்த்தச் சிபார்சு செய்தார். காலம் அவரைக் கவர்ந்ததால் அவரின் தங்கை திருமதி. ரங்கா பத்மநாதன் அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினராகித் தன்னால் ஆரம்பிக்கப்பட்ட அபிவிருத்திப் பணிகளில் தொடர்ந்து பங்காற்றினார்.

இப்பாடசாலையின் வளர்ச்சிக் காலத்தில் உத்தமமான உயர்குணங்கொண்ட, எள் என்றால் எண்ணெயையே கொண்டுவரக்கூடிய உற்சாகமிக்க ஒரு அதிபர் பாடசாலைக்கு நியமிக்கப்பட்டார். அவர்தான் ''திரு. சி. நடராஜா'' அவர்கள் பாடசாலையின் தேவையைப் பூர்த்தி செய்வதிலும் மாணவர் கல்வி மேம்பாட்டிலும் மாணவர் ஒழுக்க நெறிகளைக் கடைப்பிடிப்பதிலும் விழிப்புடன் செயற்பட்டதுடன் அரசியல்வாதிகளை மாத்திரம் நம்பியிராது வித்தியாபதி மூலமாக எவற்றைப் பாடசாலையின் வளர்ச்சிக்காகப் பெறவேண்டுமோ அவற்றைப் பெறுவதில் துடிப்புடன் செயற்பட்டவரென்பதை அவருடன் சேர்ந்து உழைத்த எனக்கும் ஓரளவு தெரியும்.

அதிபர்கள் வரிசையில் ஒரு சிலரைக் குறிப்பிட்ட போதும் ஏனையோர் திழைத்தவர்கள் என்பது எனது தீர்மானமல்ல. காலச்சூழ்நிலைக்கேற்ப அவர்கள் தம்மால் இயன்றதைச் செய்தார்கள் என்பதை எவரும் மறுக்க முடியாது. இக்காலங்களில் பதில் அதிபரால் நற்பணியாற்றிய இவர்களை நாம் நினைவுகூர கடமைப்பட்டுள்ளோம். அமரராகிய திரு.சிவசம்பு, திரு.ந.மனோகரன், திரு.பொ.பாக்கியராஜா ஆகியோரையும் இன்றும் எம்முடன் வாழ்ந்து கொண்டிருக்கின்ற திரு.இரா.கிருஷ்ணபிள்ளை, திரு.பொன்.தவநாயகம், திரு.சா.கங்காதரன் போன்ற பலரின் அர்ப்பணிப்பு அரிய சேவைகள் எமது கல்லூரியின் உயர்நிலைக்கு உதவியது என்பதை நாம் மறப்பதற்கில்லை.

என் அன்புக்கும் பண்புக்கும் மதிப்புக்குமுரியவராயிருக்கும் திரு.செ.அருள்மொழி அவர்கள் அதிபராயிருந்து பொன்விழாக் கொண்டாடுவதையிட்டு இறும்பூதெய்துகின்றேன்.

**திரு. இ. விநாயகமூர்த்தி**
*முன்னைநாள் கிராமாட்சி மன்றத் தலைவர்*
*முன்னைநாள் வளர்ந்தோர் கல்வி அதிகாரி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளமுடன் வாழ்கவென்று வாழ்த்துகிறேன்

இயற்கையன்னை இதயமாய்
இன்னிசை தாம் இசைக்க
கூடி நிற்கும் குருவிக்குலம்
கும்மாளம் தாம் போட
இலங்கையின் கிழ்த்திசையில்
இலங்குகின்ற காரைதீவில்
வித்தகனார் நாமங் கொண்டு
விளங்கும் எங்கள் கல்விக்கூடம்

ஐம்பது ஆண்டுகளை
எட்டி நிற்கும் இந்நாளில்
தொடுக்கின்றேன் தமிழ்ப்பா - அது
தொலை நாட்கள் வாழ்ந்திடவே

மாண்புமிகு அதிபரின் சேவைகளை
மனம் மகிழ்ந்து போற்றுகின்றேன்
துணைநிற்கும் ஆசான்களின்
துணையை எந்நாளும் மெச்சுகின்றேன்.

பொன்விழாக் கொண்டாடும்
பொன்னான இந்நாளில்
வளமுடன் வாழ்கவென்று
வாழ்த்தி விடைபெறுகின்றேன்.

அமரர் இளவல்
**ப. வினோத்**

குறிப்பு : 1999ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற திருவாதிரை தீர்த்தத்தில் கடலில் மூழ்கி அகால மரணமடைந்த எமது ஏழு ஜீவன்களில் பாடசாலை மாணவன் செல்வன் ப. வினோத் அவர்களால் இக்கவிதை ஆக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபுலானந்த மத்திய கல்லூரியின் பொன்விழா பொலிவுற்று மணம் வீசட்டும்.

எல்லா வளங்களும் வாய்க்கப் பெற்ற இப்புண்ணிய பூமியிலே உயர்கல்வி கற்பதற்கான ஓர் கல்விக் கூடம் இல்லாது கடந்த ஐம்பது ஆண்டுகளின் முன்னர் இக்கிராமத்து மக்கள் பெரிதும் கஷ்டப்பட்டனர். வசதியும் வளமும் பெற்றிருந்த ஒரு சிலரது பிள்ளைகள் யாழ்ப்பாணம், கொழும்பு, மட்டக்களப்பு போன்ற தூர இடங்களுக்குச் சென்று தங்கள் கல்வி நோக்கத்தை நிறைவு செய்தனர். அந்நிலைமையில் பெரும்பாலான ஏழைமக்கள் தம் பிள்ளைகளது உயர் கல்வியின் அவல நிலைகண்டு எவ்வாறு இதற்கு விடிவு காணலாமென சிந்திக்கத் தலைப்பட ஆரம்பித்தனர். இந்நிலமையினை உணரத்தலைப்பட்ட எமது கிராமத்து புத்திஜீவிகளும், பிரமுகர்களும் இணைந்து செயற்பட்டமையினாலேயே எமது கல்வி நிலையம் அன்று தோன்றிற்று.

1947ம் ஆண்டிலே இத்தேவை உணரப்பட்டிருந்தது. கற்குடாத் தொகுதிக்கான பாராளுமன்ற உறுப்பினரும் தபால் தந்தித் தொடர்புகள் அமைச்சருமாக இருந்த தமிழ் அபிமானி திரு.வ.நல்லையா அவர்களது கவனத்திற்கு இக்கிராம மக்கள் கொண்டு வந்திருந்தனர். பின்னர் அப்பெருமகனதுமுயற்சியினால் கனிஷ்ட ஆங்கில பாடசாலையொன்று (Junior English school) உருவாவதற்கான காலம் கனிந்தது. இப்பாடசாலையானது பின்னர் ஒரு சிரேஷ்ட பாடசாலையாக (Senior school) தரம் உயர்த்தப்பட்டது. பிற்பாடு அரசின் கல்விக் கொள்கைகள் புனரமைப்பு செய்யப்பட்டபோது பல குறுக்கீடுகளுக்கும் தடைகளுக்குமிடையே எமது கிராமம் ஒரு மகாவித்தியாலய அந்தஸ்தினைப் பெற்றுக் கொண்டது. மேலும் அரசியல் சூறாவளிகளுக்குள் அகப்பட்டுக் கொண்டதொரு சூழ்நிலையில் எமது கிராம மாணவர்கள் நிந்தவூர் அல்-அஷ்ரக் மகாவித்தியாலயத்திற்கோ அல்லது சாய்ந்தமருது சாஹிராக் கல்லூரிக்கோசெல்லுமாறு கல்வி இலாகாவினால் பணிக்கப்பட்ட காலம் உருவாகி இருந்ததை யாம் அறிவோம். அவ்வமயம் நான் கிராமச் சங்கத் தலைவராக இருந்தேன். தமிழரசுக்கட்சியின் அப்போதைய தலைவராக இருந்த தந்தை செல்வநாயகம் அவர்களது அனுசரணையுடன் கல்விமா அதிபராக இருந்த கலாநிதி ஆனந்தகுருகே அவர்களை நேரில் சந்தித்து எடுத்த நடவடிக்கைகளின் பேறாக மீளவும் பழையபடி தனிப்பாடசாலையாக இயங்குவதற்கான அனுமதி வழங்கப்பட்டது மட்டுமன்றி இனிமேல் எச்சந்தர்ப்பத்திலும் அவ்வாறான முடிவுகள் எடுக்கப்பட மாட்டாது என்று தந்தை செல்வா அவர்களிடம் உறுதிமொழி வழங்கப்பட்டது. இத்தீர்மானத்தை பாராளுமன்றக் கோவையிலும் இடம்பெறச் செய்தார்.

இன்னும் இக்கல்லூரி பற்றிக் குறிப்பிடும் போடு வெளியூர்களிலும் உள்ளூரிலும் சேர்ந்த பல அதிபர்கள் தியாக மனப்பான்மைமிக்க சேவையை வழங்கி எல்லா வழிகளிலும் அபிவிருத்திப் பணியில் பங்களிப்புச் செய்தமையை கிராமத்தைச் சேர்ந்த நாம் என்றும் மறக்க முடியாது. அம்முயற்சிகளின் பேறாக இக்கல்லூரியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து பல பொறியியலாளர்களும், வைத்திய கலாநிதிகளும், விஞ்ஞான தொழிநுட்பவியலாளர்களும் வெளியேறி இக்கிராமத்திற்கு நற்புகழையும் பெயரையும் சம்பாதித்து தந்துள்ளனர்.

அத்துடன் நான் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கிராமிய அமைப்பாளராக இருந்தபொழுது கௌரவ கலவி அமைச்சராக இருந்த கலாநிதி பதியுத்தீன் முகமது அவர்களுடனும், மறைந்த ஜனாதிபதி பிரேமதாச அவர்களுடனும் தொடர்பு கொண்டு பல ஸ்திரமான நடவடிக்கைகளை எடுத்துள்ளேன். இம்மகாவித்தியாலயத்தின் பெயரை விபுலானந்த மகா வித்தியாலயம் என பெயர் சூட்டப்பட வேண்டும் என்ற பிரேரணையை கிராமாட்சி மன்றத்திலும் அனுமதித்து அப்போதைய அதிபராக இருந்த யோகம் வேலுப்பிள்ளை அவர்களிடம் அப்பணியைச் சமர்ப்பித்து ஆவன செய்யுமாறு கேட்டுக் கொண்டேன்.

தொடர்ந்தும் இக்கலாநிலையத்திற்கும் என்னால் ஆன சகல ஒத்தாசைகளையும் உதவிகளையும் புரிந்து வந்துள்ளேன். விஞ்ஞான ஆய்வுகூடம் இல்லாத துர்ப்பாக்கிய நிலமைகளிலும் பல பொருட்களை எனது செலவில் கூட எடுத்துக் கொடுத்துள்ளேன். எது எவ்வாறு இருப்பினும் இது எமது கிராமத்து இதயம். இதன் வளர்ச்சிக்கு நாம் எல்லோருமே ஒத்துழைப்பை வழங்க வேண்டியது எமது தலையாய கடமை எனலாம். மேலும் இந்தக்கல்லூரி தனது ஐம்பது ஆண்டு காலத்தை நிறைவு செய்து பொன்விழா கொண்டாடி நிற்கும் மகிழ்ச்சிகரமான இவ்வேளையில் பொலிவுற்று மணம்வீசட்டும் என மனமார வாழ்த்தி அமைகின்றேன்.

**டாக்டர். எம். பரசுராமன்**


**சகலவிதமான**

**ஆங்கில மருந்துகளையும்**

**பெற்றுக் கொள்ள**

**Vengadesha Pharmacy**

**KALMUNAI**

**வைத்திய ஆலோசனையுடன்**

**வளங்கப்படுகிறது**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய் போல வாழ்க! வாழ்க! ....

நீர், நெருப்பு, காற்று, நீசர்பயம் இல்லாது
நெஞ்சத்தில் தேக்கி வைத்து நிம்மதியாய் வாழக்
கல்வி யெனும் அமுதைக் கனிவாகப் பிழிந்து தந்த
கல்லூரித்தாயே! கைகூப்பி வணங்குகின்றேன்.

கற்கின்ற காலத்தில் கற்றிட வேண்டுமென்று
கற்றவர்கள் சொன்ன கதைகேட்டுக் கற்றவர்கள்
இப்போதுமிங்கே இனிதாக வாழ்கின்றார்
ஏளனமாய் நினைத்தோர்கள் கண்முன்னே கலங்குகின்றார்.

விதைத்த விதை நீரின்றி விளையாது போனாலும்
பதித்த கல்வி ஒரு போதும் பயனற்றுப் போகாது
குவித்து வைத்த செல்வமும் குறுகிவிடும் ஓர் நாளில்
மதித்து நாம் கற்றுவிட்டால் மாறாது ஒரு போதும்

அகத்தினிலே அழகு பெற அத்தனையும் நீ தந்தாய்
அறியாமை இருள்விலக அறிவெனும் ஒளி தந்தாய்
செல்வத்தில் எல்லாம் சிறந்ததை நீ அளித்தாய்
செல்லுமிடமெல்லாம் சிறப்படைய வழிசெய்தாய்

ஐம்பதைத் தாண்டி ஐசுவரிய வரம் பெற்று
அங்கமெலாம் பொன்விழா அழகு போர்த்தி
செம்பவள வாய்திறந்து சிரிக்கின்ற கோலமிது
செய்தவத்தால் ஊரடைந்த பாக்கியமே வேறில்லை.

வட்டமாய்க் கை கோர்த்து வலம் வந்த நாட்கள்
பட்டமாய் நினைவில் பறக்கிறதே என செய்வேன்
வெட்ட வெளியில் விளையாடி மகிழ்ந்ததெல்லாம்
தொட்டென்னைப் பிரியாது தொடர்கிறதே என் செய்ய.

கல்லூரி வாழ்வில் நான்பெற்ற இன்பமெல்லாம்
எண்ணி மகிழும் இனிதான பொன்நாளில்
என்னையும் மனிதனாய் இம்மண்ணில் வாழவைக்க
எழுத்தென்னும் அறிவூட்டி இணையிலாச் சேவை செய்த

கண்ணின் மணியான கல்லூரி விபுலானந்தா
காலத்தால் அழியாக் காவியமாய் நிலைத்து நின்று
மண்ணில் பல நூறு மகிமைகளைத் தோற்றுவித்து
தன்னிகரில்லாத் தாய்போல வாழ்க! வாழ்க!

**எஸ்.என்.ராஜன்**
*பழைய மாணவன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THE ROLE OF SCHOOL IN MAINTAINING PEACE AND HAPPINESS

It is obviously true that all human beings wish and pray for peace and happiness, which are very essential necessities in the process of life in the world. Peace is the necessary condition for happiness and it cannot be achieved without unity among people, but can we expect more peace and happiness in the world now. Because, various types of wars or a tendency to violence which is the more frequently applied method of resolving disputes, are visible at all level of the social life–personal, national and international. Nevertheless, as we are human beings, it is our bound duty to inculcate the importance of peace to the younger generation at home, schools and other institutions in order to unite all the people without any differences through which we can create a peaceful environment to live in the society or study at the educational institutions with satisfaction at least to some extent.

What are the main obstacles for lacking peace in the world today? The behaviour of man is the main reason, not the religion or the language or the cast. How does man come to have problems of conflict and aggression in society? According to Mr.T. B. H, Ekanayake, ETC Lecturer of Education, the explanation of the feature of his behaviour is that man though potentially capable of reflective activity, many people have not developed it and do not use it to any desirable extent. Only a small number of people in society would demonstrate the possibility of such reflective bahaviour. For instance in Sri Lanka, only a small number of people would recognize the fact that they are basically organic and human. Many would be pre-disposed to describing themselves as Sinhalese, Tamils, Muslims and Burghers. Country language and religion are accidental or circumstantial acquisitions of man. They have grown him after birth. Basically all human beings have the same power of right, but they have conflicts with their fellow beings due to pettiness of thinking and the ultimate destructions burden the innocent poor people not the rich or people who start the conflict or plan and carry out the physical clashes of persons or nations.

Consequently, the Educational Institutions such as schools where a number of scholars and good citizens are created every year, but unfortunately some undesirable citizens also come from the same places because of some incorrect approaches of some parents and teachers. At home some parents genuinely do not take any interest in their children. Parents should be an example to their children. Because every activity of a child comes from his family to him. So, at his residence he has to be well educated and must have compassion in his heart. The duty of his parents is to inculcate him good bahaviours like honesty, chastity, modesty and harmony from his childhood before they

enter school. If the parents never take care of their children at home, they will have ill feelings about others which will break the peaceful environment in society and school.

In schools, almost all the teachers try to help the students to uplift the standard of education and to become knowledgeable good citizens. Unfortunately, few teachers unintentionally damage the minds of some children who have problems at home and in society, due to lack of knowledge in child psychology. For instance, if a child who has a lot of problems at home, is severely punished regularly for not attending to school or not doing assignments, etc, he will definitely become an abnormal person in the society. The teacher may think giving corporal punishment is the only suitable way to correct him and he may become a good student. Though there is a proverb "spare the rod and spoil the child", corporal punishment may be given in a proper way to only the troublesome children not the whole and it should be limited up to a certain age level. If a grown up well-disciplined student is punished severally without valuable reasons, he may get aggression against the staff and school and try to break the peaceful environment in the school. Actually teachers should know the background of his family, lifestyle, education of parents, the economical standard, parents-child relationship, learning atmosphere, education opportunities, love and affection, recognition and acceptance by the parents. Then the teacher may select a suitable teaching method or any approaches to guide and help him. Unlike in the past teachers should not dominate the class, let the students think freely to take a decision and try to motivate them giving incentives. Otherwise all the attempts of the teacher will be in vain.

What are the remedies? First and foremost, every man should accept that he is a human being who has equal rights. If he thinks that he is from a particular community or religion and has more rights which others can't enjoy all problems will arise; as a result, both parties have to be suffer. Then there will be no peace and happiness. People should think that all problems can be solved in a peaceful manner and try to prevent the ways where the innocent poor people suffer. These good thinkings would be inculcated from the infancy at home and school. At home, parents should avoid certain kinds of activities for the benefit of their children. Regular drinkers should sacrifice their enjoyment for the betterment of their beloved children. At the presence of the children, parents should not fight verbally or physically to take a decision or for any other reasons. If they do so, can their children develop peaceful ways to solve any problems in their life? Some parents praise themselves about their nasty activities such as getting through the exams in an illegal way, earning money in an easy way, showing no politeness or sympathy towards the elders or superiors. These activities may induce their children to do some unpleasant activities against the fellowmen, the staff and the administration of school. Though children are restricted to watch some unsuitable programmes at their age, parents should help their children to make use of the electronic media like radio, T.V., etc. to update their knowledge to face the fast moving world confidently. So parents should correct their wrong approaches and try to follow good things for the sake of their children. Parents should be an example for their children in each and every action.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Then the Educational Institutions can play a vital role in developing good spirits in the minds of the children so as to challenge the world confidently. Education is the effective instrument for changing a person or a nation. So Educational institutions are more suitable places to inculcate the importance of unity and then unity will bring peace and happiness throughout life. In schools, students are ever ready to sacrifice themselves especially in a struggle against ignorance, which is the greatest enemy of mankind. Students in schools come from various races, religions and communities study without any differences. So, at this juncture, the duty of the teacher is more essential to guide the children in a correct way to achieve their goals. Almost all the teachers sacrifice their energy to inculcate good spirits and good habits to uplift the standard of education. Some teachers even don't worry about their prestige in helping students in every activity, but teachers who unintentionally hurt the children without having proper knowledge in psychology should try to learn the changes of behaviours at every age level of the students and try to treat the students as students. Those who give physical punishment in some organs like backbone, head, etc must think of their own children or siblings. If their own children or siblings are punished severely and get a permanent illness, will they tolerate and ignore it? So, all the teachers should try to treat the students as their relatives. At some age levels, some students may make some mistakes due to some reasons like bad peer group, broken family, unpleasant environment, etc. They can be punished in such a way to correct their incorrect activities. At this situation, a decision should not be taken to expel the child from school and any decision should be taken collectively for the sake of the child. Is it possible to chase our own child from home for making mistakes? So, collective decision should be taken to decide the fate of the students who make minor mistakes against school or staff or their collegues. In the case of major offence done by students, any punishmaent can be given to them, So, to get over all problems, students should listen to their parents and teachers and try to practise their advice in their life. To guide the children properly, parents and teaches should know the behaviours of the children at every stage so that they can use suitable techniques to solve their problems and help them to become good citizens in the society. Then only we can have the peaceful environment to learn subjects smoothly without hindrance.

Indeed, the main purpose of having peace and happiness is to develop the power of sharing and understanding. These are the important causes of peace. If this pledge is voluntarily and whole heartedly introduced to our budding generation at home and school, we can be sure that we can maintain peace and happiness every where in the world.

**Mr. T. Vithyarajan**
Teacher of English
Km/ Vipulananda Central College
Karaitivu.

# அந்த இனிய நாட்கள்

எமது பிரதேசத்தின் முக்கியமான கல்வி நிலையங்களில் ஒன்றாக இம் மத்திய கல்லூரி விளங்குகின்றது. யானும் காவலாளியாக கடமையேற்று இன்று ஓர் அலுவலக ஊழியனாக சேவையாற்றுகின்றேன். எனது வாழக்கையை இப்பாடசாலையானது வெகுவாகச் செப்பனிட்டுள்ள தென்றுதான் கூற வேண்டும். கடந்த கால நிகழ்வுகளையும் அனுபவங்களையும் மீட்டுப் பார்க்கும் பொழுது உள்ளத்தில் ஒருவித புளகாங்கிதம் ஏற்படுகிறது.

இப்பாடசாலை ஒரு சிரேட்ட பாடசாலையாக இருந்தபொழுது நான் ஆரம்ப கால மாணவர் வரிசையில் ஒருவராயிருந்துள்ளேன். வசதிகள் மிகவும் குறைந்த நிலையில் கல்வியின் அருமை கிராமத்தவரில் பெரும்பான்மையோரால் உணரப்படாத நிலையில் இப்பாடசாலையில் கல்வி கற்றமை இன்றும் என் நெஞ்சில் பசுமையாக உள்ளன. எனது மாணவப் பிராயத்தில் சந்தித்த அந்த அதிபர் ஒருவரை மட்டுந்தான் இன்றும் ஊர்மக்கள் ''பிறின்சிப்பல்'' என்ற பட்டப்பெயராலேயே அழைப்பது பெருமைக்குரியதோர் விடயமாகும். அவர் வேறுயாருமல்ல திரு. சச்சிதானந்தசிவம் அதிபர் அவர்களே ஆவர். பின்னடைந்து முன்னேற்றமின்றி காணப்பட்ட அந்த நிலையில் முழுமனதோடு முன்னெடுத்துச் செல்ல எண்ணிய அந்தப் பெருமகனை எண்ணி புளகாங்கிதமடைகிறேன். நயினாகாடு சென்று செங்கற்சூளை வைத்து இருவாரங்கள் வனவாசஞ் செய்தது எனக்கும் சகமாணவர்க்கும் இனிய நாட்களாக எண்ணத் தோன்றுகிறது. இதன்மூலமாக பழைய அலுவலகக் கட்டிடம் கட்டப்பட்டது.

இதன்பின்னர் அதிபராயிருந்த சீ. நடராஜா அவர்களது காலத்தில் நூறு ரூபா வேதனம் பெறும் ஓர் இரவு நேரக் காவலாளியாக கடமைபுரிந்த நான் பிரச்சினைக்குரிய வன்முறைகள் தாண்டவமாடிய காலகட்டங்களில் கூட எனது உயிரையும் துச்சமென எண்ணி நான் பிறந்த இந்த தாய்மண்ணுக்காக இத்தாபனத்தின் மதிப்புமிக்க பல சொத்துக்களைப் பாதுகாத்துக் கொடுத்து வந்தேன். பின்னர் காவல் துறையில் நிரந்தரமானதோர் ஊழியனாகி தரமுயர்த்தப்பட்டு மூன்று ஆண்டு காலம் தனி மரமாய் நின்று பல சிரமங்களைச் சமாளிக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டேன்.

இருபது வருடங்களை இதே பாடசாலையில் கழித்த நிலையில் இன்று ஓர் அலுவலக உதவியாளராக இந்த இரண்டாயிரமாம் ஆண்டில் கடமையாற்றிக் கொண்டிருக்கின்றேன். ஓய்வு பெற்ற பின்னரும் கூட இப்பாடசாலைக்கு என்னாலான உதவிகளைச் செய்ய வேண்டுமென்ற நன்றி உணர்வு எனது ஆத்மாவை உறுத்திக் கொண்டிருக்கின்றது. சுருங்கக் கூறினால் உயிருக்குயிராக இத் தாபனத்தை நேசித்தேன். அது என்னையே ஆக்கிரமித்து விட்டது. சுருங்கச் சொன்னால் விபுலானந்தாவையும் என்னையும் யாராலுமே பிரிக்க முடியாது.

ஐம்பது ஆண்டுகளைப் பூர்த்தி செய்து, ஏனைய தலைசிறந்த கல்வி நிலையங்களில் ஒன்றாகத் தன்னையும் முத்திரை பொறித்து நிற்கும். இந்த மத்திய கல்லூரியின் மங்களகரமான இந்தப் ''பொன்விழா'' நாளில் இதயம் கசிய விபுலானந்தாவை வாழ்த்தி விடைபெறுகின்றேன்.

**திரு. செ. தியாகராசா**
*அலுவலக உதவியாளர்*
*கமு/ விபுலானந்த மத்திய கல்லூரி*
*காரைதீவு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் வங்கி ஆசிரியர்களுக்கென அறிமுகப்படுத்தியிருக்கும் "குருசெத" (ஆசிரிய நலன்) கடன் திட்டத்தின் மூலம் இப்போது பதினைந்து இலட்சம் ரூபாய் (15,00000/=) வரை கடன் பெறும் வாய்ப்பு.

வீடு, காணி, கொள்வனவு செய்ய, வீடு கட்ட, வீடு திருத்த, திருமணம், வீட்டு உபகரணங்கள் கொள்வனவு செய்ய மற்றும் குடும்ப உறுப்பினர்களின் சுயதொழில், விவசாயம், முச்சக்கர வண்டி கொள்வனவு அல்லது வேறு தேவைகளுடன் விரைவான கடன்.

**நாடுங்கள்**

அண்மையில் உள்ள **மக்கள் வங்கி** கிளையை

**கூறுங்கள்**

**உங்கள் தேவையை.**

**சுபீட்சமாக்கிக் கொள்ளுங்கள்**

- உங்கள் எதிர்கால வாழ்க்கையை.

**மக்கள் மனமறிந்த வங்கி**
**மக்கள் வங்கி**

விளம்பர அனுசரணை :

மக்கள் வங்கி

காரைதீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளமைக்கு எழிலூட்டும்

தங்க வைர நகைகளுக்கு

# கொழும்பு கோல்ட் ஹவுஸ்

CGH

22

அழகிய தங்க வைர நகைகள்

பெற்றுக் கொள்ள சிறந்த இடம்



## கொழும்பு கோல்ட் ஹவுஸ்

79, மெயின் வீதி, கல்முனை.




தற்கால நாகரீகத்திற்கேற்ற

வகையில்.......

வண்ணத் தங்க நகைகளுக்கும்

வடிவான அமைப்புகளுக்கும்,

குறித்த தினத்தில் பெற்றுக்கொள்ளவும்



T.P : 067-2479

ஒரே இடம் ஒரே பார்வை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் இலக்கிய மன்றம்
## விபுலானந்த மத்திய கல்லூரி
## காரைதீவு.



**காப்பாளர்**
திரு.செ.அருள்மொழி (அதிபர்)

**செயலாளர்**
திரு.தெ.செல்லத்துரை

**பொருளாளர்**
திரு.து.யோகநாதன்

**ஆலோசகர்கள்**
திரு.செ.மணிமாறன்
திரு.செ.சிவராசா
திருமதி.மோ.ஹரிகரன்
திருமதி.ச.பிரபாகரன்
திருமதி.ச.சுந்தரநாதன்
திருமதி.சு.சண்முகநாதன்
திருமதி.பு.ஜெயகணேஸ்
திரு.இ.கோபாலசிங்கம்
திருமதி.பீ.பரமலிங்கம்
செல்வி.கி.ஜெயமதி
செல்வி.கே.சோமாவதி

**தலைவர்** : பா.கீர்த்தனன்
**செயலாளர்** : ச.கிரிசாந்
**பொருளாளர்**: சா.பிரபாஜினி

## செயற்பாடுகள்

1. தமிழ் இலக்கிய மாணவர் மன்ற அமைப்பொன்றை வருட ஆரம்பத்தில் ஏற்படுத்தல். இதில் தலைவர், செயலாளர், பொருளாளர், நிர்வாக உறுப்பினர்களாக ஒவ்வொரு வகுப்புகளிலுமிருந்து ஒரு ஆணும் ஒரு பெண்ணுமாக வகுப்பு 06 முதல் வகுப்பு 11 வரை இருப்பர்.
2. மாதந்தோறும் வரும் இரண்டாவது வியாழக்கிழமைகளில் மாணவர் பிரதிநிதிகள் மூலம் மன்றச் செயலாளர் நிகழ்ச்சிகளை பெற்று மாணவர் முத்தமிழ் மன்றத்தை நடாத்துதல்.
3. போட்டி நிகழ்ச்சிகளாக கட்டுரை/விவாதம்/நாடகம் என்பவற்றை தரங்களுக்கேற்ப மேற்கொள்ளல்.
4. வருடந்தோறும் நிகழும் தமிழ்த்தினப் போட்டிகளை ஒழுங்கு செய்தல்.
5. பாடசாலைமட்ட/வலயமட்ட/மாகாணமட்ட போட்டிகளுக்கு மாணவர்களை தயார்படுத்தி அவர்களை குறித்த இடங்களுக்கு அழைத்துச் செல்லல்.
6. வருட இறுதியில் நடைபெறும் வைபவங்களுக்குத் தேவையான கலை, கலாச்சார அம்சங்களை வழங்குதல்.
7. ஆண்டிறுதியில் நடைபெறும் கலை விழாவிற்கான நிகழ்ச்சிகளைத் தயாரித்தல்.
8. பிரபலியமான கலைஞர், எழுத்தாளர் ஆகியோரை மாணவர்க்கு அறிமுகப்படுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆங்கில இலக்கிய மன்றம்
## விபுலானந்த மத்திய கல்லூரி
## காரைதீவு.



**காப்பாளர்**

திரு. செ. அருள்மொழி (அதிபர்)

**செயலாளர்**

திரு. ந. தியாகராசா

**பொருளாளர்**

திரு. க. புண்ணியநேசன்

**ஆலோசகர்கள்**

திரு. த. அருணாசலம்
திரு. தி. வித்தியாராஜன்
திரு. பி. சிவநாதன்
திரு. பொ. மலர்வண்ணன்
திருமதி. தி. பத்மநாதன்
செல்வி. இ. இந்துஜா
திரு. வே. குகனேந்திரராஜா

**தலைவர்** : ப. சிவதர்சன்
**செயலாளர்**: க. தேவதர்சிகா
**பொருளாளர்** : ச. ராதிவ்

## செயற்பாடுகள்

1. ஆங்கில இலக்கிய மாணவர் மன்ற அமைப்பொன்றை ஏற்படுத்தல். இதில் தலைவர், செயலாளர், பொருளாளர், நிர்வாக உறுப்பினர்கள் உட்பட 16 மாணவர்கள் இடம்பெறுவர்.
2. மாதமொருமுறை வரும் மூன்றாவது வியாழக்கிழமையில் நிகழ்ச்சிகளை மாணவர்களிடம் இருந்து தொகுத்து மாணவர் மன்றத்தை வழிகாட்டுதல்.
3. ஆங்கில இலக்கியப்போட்டி நிகழ்ச்சிகளை தவணையில் ஒரு முறை மாணவரிடையே நடாத்துதல்.
4. ஆங்கிலமொழிக்கான பாடசாலைமட்ட/வலயமட்ட/மாகாணமட்ட போட்டிநிகழ்ச்சிகளை தயார்படுத்தி மாணவர்களை தயார்படுத்தி அழைத்துச் செல்லல்.
5. வருட இறுதியில் நடைபெறும் கலைவிழாவிற்கான நிகழ்ச்சிகளை தயார்படுத்தல்.
6. பாடமேம்பாடு, ஒப்படைமூலம் பெறப்பட்ட பொருட்களைக் கொண்டு கண்காட்சியொன்றை நடாத்துதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணித விஞ்ஞான மன்றம்
## விபுலானந்த மத்திய கல்லூரி
## காரைதீவு.



**காப்பாளர்**
திரு.செ.அருள்மொழி (அதிபர்)

**செயலாளர்**
திருமதி.க.வேதாசலம்

**பொருளாளர்**
திரு.தி.கிரிநிவாசன்

**ஆலோசகர்கள்**
திருமதி.க.தில்லையம்பலம்
திருமதி.ம.சண்முகநாதன்
திருமதி.தே.சரவணமுத்து
திருமதி.பா.சுந்தரலிங்கம்
திருமதி.க.சிதம்பரநாதன்
திருமதி.வி.இலங்கநாதன்
திரு.ம.சுந்தரராஜன்
திரு.மா.கிருபானந்தன்
திருமதி.க.உதயமோகன்
திருமதி.இ.யோகநாதன்
செல்வி.அ.இராஜேஸ்வரி
செல்வி.வி.தர்சினிதேவி
செல்வி.தி.வனஜா

**தலைவர்** : யோ.வகிதரன்
**செயலாளர்:** ம.அருள்குமரன்
**பொருளாளர்** : ச.நிவேதிகா

## செயற்பாடுகள்

1. விஞ்ஞான கணித மாணவர்மன்ற அமைப்பொன்றை ஏற்படுத்தல். இதில் தலைவர், செயலாளர், பொருளாளர், நிர்வாக உறுப்பினர்கள் உட்பட 16 மாணவர்கள் இடம்பெறுவர்.

2. மாதமொருமுறை வரும் முதலாவது வியாழக்கிழமையில் நிகழ்ச்சிகளை மாணவர்களிடம் இருந்து தொகுத்து மாணவர் மன்றத்தை வழிகாட்டுதல்.

3. விஞ்ஞான/கணித போட்டிகளை மாணவர்களிடத்தே ஏற்படுத்தல்.

4. விஞ்ஞான/கணித பாடசாலைமட்ட/வலயமட்ட/மாகாணமட்ட போட்டிகளுக்கு மாணவர்களை தயார்படுத்தி, அவர்களை அழைத்துச் செல்லல்.

5. வகுப்பறையில் பெற்ற பாடமேம்பாடு, ஒப்படைப் பொருட்களைக் கொண்டு வருட இறுதியில் கண்காட்சியை நடாத்துதல்.

6. வருட இறுதியில் நடைபெறும் கலைவிழாவிற்கான நிகழ்ச்சிகளை தயார்படுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துசமய மன்றம்
## விபுலானந்த மத்திய கல்லூரி
## காரைதீவு.



**காப்பாளர்**
திரு.செ.அருள்மொழி (அதிபர்)

**செயலாளர்**
திரு. செ.மணிமாறன்

**பொருளாளர்**
திருமதி.பா.சுந்தரலிங்கம்

**ஆலோசகர்கள்**
திரு.பொ.மலர்வண்ணன்
திருமதி.பா.சுந்தரலிங்கம்
திருமதி.க.நடராசா
திருமதி.சோ.வினாயகமூர்த்தி
திருமதி.ந.பரமேஸ்வரன்
திருமதி.ச.பிரபாகரன்
திருமதி.சு.தியாகராசா
திருமதி.ம.இராசமாணிக்கம்
திருமதி.ஜே.நந்தினி
செல்வி.ச.பகீரதி

**தலைவர்** : அ.வாகீசன்
**செயலாளர்**: ம.சஞ்சீவ்
**பொருளாளர்** : யோ.கல்பனா

## செயற்பாடுகள்

1. இந்துசமய மாணவர்மன்ற அமைப்பொன்றை ஏற்படுத்தல். இதில் தலைவர், செயலாளர், பொருளாளர், நிர்வாக உறுப்பினர்கள் உட்பட 16 மாணவர்கள் இடம்பெறுவர்.

2. மாதமொருமுறை வரும் நான்காவது வியாழக்கிழமையில் நிகழ்ச்சிகளை மாணவர்களிடம் இருந்து தொகுத்து மாணவர் மன்றத்தை வழிநடாத்தல்.

3. சமயசம்பந்தமான போட்டிகள், நாயன்மார் பற்றிய உரைகளை காலைக்கூட்டத்தில் நடாத்துதல்.

4. நாள்தோறும் நற்சிந்தனைகளை மாணவர்களுக்கு வழங்குதல்.

5. இந்துசமய கலாசார பாடசாலைமட்ட, வலயமட்ட, மாகாணமட்ட போட்டிகளை வழிநடாத்தலும், மாணவர்களை கூட்டிச் செல்லலும்.

6. வருடந்தோறும் விவேகானந்தசபை மற்றும் சமயம் தொடர்பான பரீட்சைகளை நடாத்துதல்.

7. வருடந்தோறும் சரஸ்வதிபூசையை முன்னின்று நடாத்துதல்.

8. வருட இறுதியில் நடைபெறும் கலைவிழாவிற்கான நிகழ்ச்சிகளை தயார்படுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுற்றாடல் மன்றம்
# விபுலானந்த மத்திய கல்லூரி
# காரைதீவு.



**தலைவர்**

திரு.செ.அருள்மொழி (அதிபர்)

**செயலாளர்**

திருமதி.ப.பாலசுப்பிரமணியம்

**பொருளாளர்**

திரு.பொ.மலர்வண்ணன்

**ஆலோசகர்கள்**

திரு.இ.ரகுபதி
திரு.ஆ.ஆனந்தசிவராசா
திரு.ச.அற்புதநாதன்
திருமதி.தி.பத்மநாதன்
திருமதி.ச.குணசேகரம்
திருமதி.சு.தியாகராசா
திருமதி.க.இராஜேந்திரன்

**தலைவர்** : ச.சித்திநிரோசன்
**செயலாளர்**: த.மோகன்சங்கர்
**பொருளாளர்** : ம.நிருபா

## செயற்பாடுகள்

1. சுற்றாடல் மாணவர் மன்ற அமைப்பொன்றை ஏற்படுத்தல். இதில் தலைவர், செயலாளர், பொருளாளர், நிர்வாக உறுப்பினர்கள் உட்பட 16 மாணவர்கள் இடம்பெறுவர்.

2. சுற்றாடல் தொடர்பான போட்டி நிகழ்ச்சியை மாணவர்களிடையே தவணை இறுதியில் நடாத்துதல்.

3. உலக சுற்றாடல் தினத்தை பாடசாலை மட்டத்தில் சிறப்பாக கொண்டாடல்.

4. சுற்றாடலுடன் தொடர்பான பாடசாலை மட்ட, வலய மட்ட, மாகாணமட்ட போட்டிகளுக்காக மாணவர்களை தயார்படுத்தலும் அவர்களை அழைத்துச் செல்லலும்.

5. வருட இறுதியில் நடைபெறும் கலைவிழாவிற்கு சுற்றாடல் சம்பந்தமான நிகழ்ச்சிகளை தயார்படுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாய மன்றம்
## விபுலானந்த மத்திய கல்லூரி
## காரைதீவு.



**காப்பாளர்**

**திரு. செ. அருள்மொழி**
(அதிபர்)

**செயலாளர்**

**திருமதி. தி. பத்மநாதன்**

**பொருளாளர்**

**திரு. இ. ரகுபதி**

**ஆலோசகர்கள்**

**திரு. பொ. மலர்வண்ணன்**
**திருமதி. ப. பாலசுப்பிரமணியம்**

**தலைவர் : சு. தயாபரன்**
**செயலாளர்: வை. பிரேமவாகினி**
**பொருளாளர் : ஆ. ரஜீவன்**

### செயற்பாடுகள்

1. விவசாய மாணவர் மன்ற அமைப்பொன்றை ஏற்படுத்தல். இதில் தலைவர், செயலாளர், பொருளாளர், நிர்வாக உறுப்பினர்கள் உட்பட 16 மாணவர்கள் இடம்பெறுவர்.

2. விவசாயப்போட்டி நிகழ்ச்சிகளை செயற்பாடு ரீதியாக மாணவர்களிடையே தவணை இறுதியில் நடாத்துதல்.

3. பூந்தோட்டங்களை வகுப்பு ரீதியாக ஏற்படுத்தி போட்டிகளை வகுப்புகளிடையே ஏற்படுத்தல்.

4. வருடந்தோறும் ஒக்டோபர் 20ம் திகதியை விவசாய மாணவர் தினமாக கொண்டாடல்.

5. விவசாயத்துடன் தொடர்பான பாடசாலைமட்ட/ வலயமட்ட/மாகாணமட்ட போட்டிநிகழ்ச்சிகளுக்காக மாணவர்களை தயார்படுத்தலும், அவர்களை அழைத்துச் செல்லலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொன்விழா கட்டுரை, பேச்சு, கவிதைப் போட்டி முடிவுகள் 2000

### பேச்சுப் போட்டி

**கனிஷ்ட பிரிவு**

முதலாம் இடம் - செல்வி. ந. விஜயானந்தி
இரண்டாம் இடம் - செல்வி. ச. பிரசாந்தி

**இடைநிலைப்பிரிவு**

முதலாம் இடம் - செல்வி. க. தேவதர்சிகா
இரண்டாம் இடம் - செல்.வி. லோ. சுவர்ணா
மூன்றாம் இடம் - செல்வன். ம. சஞ்சீவ்

**சிரேஷ்ட பிரிவு**

முதலாம் இடம் - செல்வன். ம. சசிப்பிரியன்
இரண்டாம் இடம் - செல்வி. வி. சந்திரிகா
மூன்றாம் இடம் - செல்வன். இ. பிரதீபராஜ்

### கட்டுரைப் போட்டி

**கனிஷ்ட பிரிவு**

முதலாம் இடம் - செல்வி. வி. பிரபாலினி
இரண்டாம் இடம் - செல்வி. உ. உதயநிலா
மூன்றாம் இடம் - செல்வி. ச. நிதர்சனா

**இடைநிலைப்பிரிவு**

முதலாம் இடம் - செல்வி. வை. பிரேமவாகினி
இரண்டாம் இடம் - செல்வி. உ. உதயதர்சினி
மூன்றாம் இடம் - செல்வி. சு. ஜசோதா

**சிரேஷ்ட பிரிவு**

முதலாம் இடம் - செல்வி. அ. கல்பனா
இரண்டாம் இடம் - செல்வி. தி. அருணா
மூன்றாம் இடம் - செல்வி. இ. ராதிகா

### கவிதைப் போட்டி

**கனிஷ்ட பிரிவு**

முதலாம் இடம் - செல்வி. கு. கேதுஜா
இரண்டாம் இடம் - செல்வி. கு. துவாரகா
மூன்றாம் இடம் - செல்வி. நி. நிறோஜா

**இடைநிலைப்பிரிவு**

முதலாம் இடம் - செல்வி. ந. லாவண்யா
இரண்டாம் இடம் - செல்வி. அ. அகல்யா
மூன்றாம் இடம் - செல்வி. பா. அனுஜா

**சிரேஷ்ட பிரிவு**

முதலாம் இடம் - செல்வி. சி. பகீரதி
இரண்டாம் இடம் - செல்வி. மு. தனுஷியா
மூன்றாம் இடம் - செல்வி. பொ. விஜேந்தினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பொன்விழாக் கட்டுரைப்போட்டியில் ஆரம்பப் பிரிவில் முதலாமிடம் பெற்ற கட்டுரை*

# பொன்விழாவும் - மாணவர்களும்


செல்வி. வி. பிரபாலினி
தரம் - 07.


ஐம்பது ஆண்டுகள் நிறைவெய்தும் போது அது பொன்விழாவாக கொண்டாடப்படுகின்றது. அவ்வரிசையில் முத்தமிழ் வித்தகனின் திருநாமம் தாங்கி கல்விப் பயிர் வளர்த்து நிற்கும் எமது விபுலானந்தா மத்திய கல்லூரி பல இடர்களையும், இன்னல்களையும் கடந்து பொன்விழாக்காணும் பொலிவுடன் பூரித்து நிற்கின்றது. இங்கு சுவாமி விபுலானந்தர் போற்றி வளர்த்த கல்விக் கொள்கைகள் பின்பற்றப்படுவதே இதன் சிறப்பாகும்.

அதிபர், ஆசிரியர்கள், நலன்விரும்பிகள், அரசியல் பிரமுகர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் ஆகியோரின் பங்களிப்புடனும், கல்வி கற்ற, கற்கின்ற மாணவர்களின் திறமையினாலும், அயரா முயற்சியாலுமே இன்று பொன்விழாக் காணும் உயர்வினைப் பெற்றிருக்கின்றது என்பதை எவரும் மறந்துவிட முடியாது. அதிபர்கள், ஆசிரியர்கள் எவ்வளவு திறமை வாய்ந்தவராகவும் இருப்பினும் மாணவர்கள் ''எழுத்தறி வித்தவன் இறைவன் ஆவான்" எனும் பதத்தைப் போற்றி, ஆசிரியரை மதித்து, ஆசிரியர்களின் அன்பைப் பெற்று திறமையை வளர்த்துப்பேர் பெறுவானேயாகில் அந்த மாணவர் குழாத்தினால் தான் ஒரு பாடசாலை மேன்மை அடைய முன்வரும் என்பதை எவரும் மறுப்பதற்கில்லை.

1950ம் ஆண்டு ஓலைக் கொட்டகையில் ஒரு சில மாணவர்களுடன் கனிஷ்ட வித்தியாலயமாக ஆரம்பிக்கப்பட்டது. பின் சிரேஷ்ட வித்தியாலயமாக, மகா வித்தியாலயமாக, மத்திய மகா வித்தியாலயமாக எனப்படிப்படியாக வளர்ச்சிகண்டு, விபுலானந்தர் புகழ் பாரேங்கும் பரவியது போன்று அவர்தம் திருநாமம் தாங்கிய இப்பாடசாலை ராஜநடை போடுகின்றது. ஐம்பது வருட வரலாற்றில் எத்தனையோ சிறப்புக்களைக் கண்டுவிட்டது. க.பொ.த. சாதாரணம், உயர்தரம் ஆகிய பரீட்சைகளில் மாணவர்கள் சிறப்புச் சித்தியடைந்து உள்ளனர். நூற்றுக்கும் அதிகமானோர் பல்கலைக்கழகம் சென்று பட்டம் பெற்று மருத்துவர்களாக, ஆசிரியர்களாக, பொறியியலாளராக பலதுறைகளிலும் பங்காற்றி வருகின்றனர்.

தமிழ்த்தினம், ஆங்கிலதினம், விளையாட்டுப்போட்டிகள், போட்டிப்பரீட்சைகள், பாண்ட வாத்தியக்குழு, சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் ஆகிய அனைத்திலும் மாணவர்கள் பங்குபற்றி மாகாண, தேசிய மட்டங்களிலும் பரிசிலைப் பெற்றுள்ளனர் என்பதை நோக்கும் போது மாணவர்களின் கற்கும் திறனும் எவ்வளவு மேலோங்கியுள்ளது என்பதை அவதானிக்கலாம். பொன்விழாக்காணும் எமது கல்லூரியில் கல்வி கற்கின்ற மாணவர்கள் மேலும் தமது திறமைகளை நிலைநாட்டி நூற்றாண்டு விழாவினையும் கண்டு மகிழ இறைவன் அருள்புரிவாராக.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பொன்விழாக் கட்டுரைப்போட்டியில் இடைநிலைப்பிரிவில் முதலாமிடம் பெற்ற கட்டுரை*

# காரைதீவின் கல்வி வளர்ச்சியில் விபுலானந்தாவின் பங்கு

**செல்வி. வை. பிரேமவாகினி**
**தரம் - 10.**

தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்கின்ற உயர்ந்தவனாலேயே இவ்வுலகம்வாழ்ந்து கொண்டிருக்கின்றது என்ற தெளிவான உண்மையை பழந்தமிழ் இலக்கியமமாகிய புறநானூறிலே இனம்பெருவழுதி எனும் புலவர் அழகாக எடுத்துக் கூறுகின்றார். அத்தகைய உயரிய பண்பினை உடையவர்கள் எமது அதிபர்களும் ஆசிரியர்களும். தனித்துண்ணாத தருமசீலர்களும் ஆணவத்திற்கு ஆட்படாத அன்பர்களும் உலக மாந்தரின் நன்மைக்காகப் பேராட பிறர் அஞ்சுவதற்கு தாமும் அஞ்சி சோர்ந்து இருக்காத துணிவுள்ள தூயவர்களும் ஆகிய ஆசிரியர்கள் வாழ்வதனாலேயே மாணவர்களாகிய நாங்களும் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இக்கிராமமும் முன்னேறிக் கொண்டிருக்கின்றது. அத்தகைய ஒளி தீபங்களாகிய அதிபர்களும், ஆசிரியர்களும், மாணவர்களும் அதாவது காரைதீவின் கல்விக் களஞ்சியமாகிய விபுலானந்த மத்திய கல்லூரியானது காரைதீவின் கல்வி வளர்ச்சிக்கு ஆற்றிய பங்கினை அறிய நாம் நிச்சயம் வரலாற்று ஏடுகளை புரட்ட வேண்டியுள்ளது.

சைவமும் தமிழும் தழைத்தோங்கி சமரசம் நிலவுகின்ற கிராமம் காரைதீவு. வித்தகன் விபுலானந்த அடிகளைப் பெற்றதும் ஆலயங்களையும், ஆன்மீக மடங்களையும் அணைத்ததுவும், கண்ணகை அம்மன் அருள் பெற்றதும், கற்றவரைக் கணிசமாகக் கொண்டதும், கல்விச்சாலைகள் பலதை தனதாக்கி கொண்டதுமான காரைதீவு பண்டைய பெருமை மிக்கதாகும். இக்கிராமத்தின் கலங்கரை விளக்கமாக மிளிர்வது விபுலானந்தா என்றால் அது மிகையாகாது.

அன்று கடற்கரைக்கு அண்மையிலே பற்றைகள் மத்தியிலே வெம்பு வளவிலே ஒற்றை ஓலைக் கொட்டிலிலே ஐம்பதுக்கும் குறைவான மாணவர்களோடு ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை இன்று ஆலமரமாய் நிழல்தரு பெருவிருட்சமாய் பலமாடிக் கட்டடங்களோடும் ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்களோடும் பலதர உயர்தர வகுப்புக்களோடும் காட்சியளிக்கும் பாங்கினைக் காண காலப் பெட்டகத்தின் கதவினை திறந்து பார்க்க வேண்டியது அவசியம்.

இப்பாடசாலையின் முதல் அதிபராக என். தங்கராசா அவர்கள் நியமிக்கப்பட்டார். அவரோடு எம்.அழகுமலர், வடிவேல் ஆகியோர் காணப்பட்டனர். அன்று யூனியர் ஆங்கிலப் பாடசாலையாக இருந்த இப்பாடசாலையை அரசாங்கப் பாடசாலையாக மாற்றவும் சில ஆசிரியர்கள் அயராது பாடுபட்டனர். அவர்களின் முயற்சியால் இப்பாடசாலை அரசாங்கப் பாடசாலையாக மாற்றப்பட்டது. அதன் பின் கந்தப்பு என்பவர் அதிபரானார். அவரின் கீழ் கடமையாற்றிய பெரியதம்பி, செல்வநாயகி ஆகிய ஆசிரியர்கள் அதிபரின் செயற்பாடுகளுக்கு உறுதுணை புரிந்ததோடு அன்றைய மாணவ சமுதாயத்தின் மத்தியில் மறைந்து காணப்பட்ட திறமைகளை இனங்கண்டு ஏற்றம் பெறச் செய்தவர்களும் ஆவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று ஆசிரியர் பற்றாக்குறை காணப்பட்டதால் சில ஆசிரியப் பெருமக்கள் தாமாகவே முன்வந்து வகுப்புக்களை நடாத்தி மாணவர்களை பரீட்சைக்கு அனுப்ப முன்னின்று உழைத்தனர். இவ்வாறான பெருந்தன்மை உடைய ஆசிரியர்களாலும், காரைதீவு மக்களினதும் அயராத முயற்சியினாலும் இப்பாடசாலை மத்திய மகா வித்தியாலயமானது.

அறியாமையை விரட்டுவதற்கும் அறிவொளியை பரப்புவதற்கும் கிராமப்புறங்களில் மட்டுமல்லாது பட்டணங்களில் இருந்தும் ஆசிரியர்கள் வரவழைக்கப்பட்டனர். இதனால் மாணவர்களுக்கு பிரத்தியேக வகுப்புக்களும் நடாத்தப்பட்டது. இதனால் மாணவர்களின் க.பொ.த. சாதாரண தர பரீட்சைப் பெறுபேறுகளும் சிறப்பாக காணப்பட்டது. 1979 இல் முதன் முதலாக க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு மாணவர்கள் தோற்றினர். அத்தோடு பாடசாலையை விட்டு வெளியேறிய மாணவர்களுக்கு மாலைநேர பயிற்சி வகுப்புக்களும் நடாத்தப்பட்டன. அத்தகைய வகுப்புக்களாக மின்இணைப்பு, தட்டச்சு, சுருக்கெழுத்து என்பன நடாத்தப்பட்டன.

1987 தொடக்கம் 1991 வரை கடமையாற்றிய திரு.பி.பாக்கியராசா அவர்களின் கீழ் கடமையாற்றிய திரு.என். மனோகரன், திரு. இரா. கிருஷ்ணபிள்ளை ஆகியோர் இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு ஏணிப்படியாய் நின்று உதவினர். இக்கால கட்டத்தில் பாடசாலை பெருவளர்ச்சி கண்டதோடு மாணவர் தொகையும், ஆசிரியர் தொகையும் அதிகரித்தது. பல்கலைக்கழகத்திற்கும் மாணவர்கள் தெரிவாகினர்.

இந்நிலையிலே கணணி அறை, மூன்று மாடிக்கட்டடம், ஆராதனை மண்டபம், என்பவை கட்டப்பட்டன. இவ்வாறு பல சாதனைகளை நிலைநாட்டிய திரு.சண்முகரெத்தினம் அதிபரின் பின் ஆசிரியர்களான திரு. கே. முத்துலிங்கம், திரு.எஸ்.கந்தசாமி ஆகியோர் இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு உறுதுணையாய் நின்றனர்.

1996 இல் திருமதி எம்.சத்தியதேவா அவர்கள் பொறுப்பேற்றார்கள். இவரே இப்பாடசாலையில் முதல் பெண் அதிபராக இருந்தவரும் ஆவார். இவரின் அளப்பரிய சேவைக்குப்பின் இப்பொழுது பணிபுரிந்து கொண்டிருக்கும் அதிபர். சீ. அருள்மொழி அதிபரானார். இப்பாடசாலையின் பொன்விழாக் காணும் பெருமை இவரையே சாரும்.

இந்தவகையில் நோக்கும்போது 1980 இல் மூன்று பேரை பல்கலைக்கழகத்திற்கு அனுப்பிய எமது பாடசாலை 1985 இல் ஒரு மாணவனையும், 1998 இல் மருத்துவத்துறைக்கு 03 பேர், பொறியியல் துறைக்கு நால்வர் உட்பட எல்லாமாக 79 பேரை பல்கலைக்கழகத்திற்கு தெரிவாக்கியமை இப்பாடசாலையின் உயர்ந்த முயற்சியையும், உன்னத தேவையையும் எடுத்துக் காட்டுகின்றது.

இப்பாடசாலையில் கல்வித் துறையில் மட்டுமன்றி இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்கும் ஊக்கமளிக்கப்படுகின்றது. அத்தகைய செயற்பாடுகளாக பரிசளிப்பு விழா, தமிழ்த் தினப் போட்டி, ஆங்கில தினப் போட்டி, நாடகங்கள், வில்லுப் பாட்டுக்கள் என்பன ஆகும். இவ்வாறு மாணவர்களுக்கு ஊக்கமளிக்கப்படுவதன் மூலம் பாடசாலையை விட்டு வெளியேறிய பின் மாணவர்கள் இதனைச் செயற்படுத்துவதற்கு பாடசாலை ஒரு முன்னோடியாக திகழ்கின்றது. அத்தோடு மாணவர்களுக்கு அதாவது எங்கள் கிராமத்தின் எதிர்காலச் சமுகத்திற்கு ஒழுக்கம், கீழ்படிவு, பிறர்க்கு உதவி செய்யும் மனப்பாங்கு என்பவற்றையும் பாடசாலை வளர்ச்சி அடையச் செய்கின்றது.

இவற்றோடு எம்கிராமத்தில் உள்ள பொறியியலாளர்கள், வைத்தியர்கள், கணக்காளர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் போன்றோரை உருவாக்கிய பெருமையும் எங்கள் பாடசாலைக்கு உரியது என்பதை யாராலும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. ஆகவே காரைதீவு சமுகத்திற்கு எமது பாடசாலை ஆற்றிய சேவையை எங்களது மக்கள் ''உப்பிட்டவரை உள்ளளவும் நினை'' என்பதற்கமைய எங்கள் வாழ்நாளில் மறக்க மாட்டார்கள் என்பது உண்மை. எங்கள் காரைதீவாகிய கழனியினை மாற்றியுழுக்கி வரப்பிட்டு ஏணி பெற்ற வாழ்க்கையினை எருவிட்டாக்கும் உழவன் எங்கள் விபுலானந்தா. விபுலானந்தா வாழ்க. வளர்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றும் ..............

இன்றும் ..............

என்றும் ............

சக்தி ! சக்தி ! சக்தி !



ஓவியக்கலை புகைப்படக்கலையானது
அது வாழ்வின் பிரிக்க முடியாத சக்தியாகிவிட்டது.
மங்களகரமான வைபவங்களா? உத்தியோக தேவைகளா?
நீங்கள் நாடவேண்டிய சிறந்த தாபனம்

# சக்தி ஸ்ரூடியோ

பிரதான வீதி, காரைதீவு.

வாடிக்கையாளரின் திருப்தி - எங்களது இலட்சியம்

உரிமை:- பி. கோவிந்தசாமி

பரம்பரை பரம்பரையாக சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இயற்கை மூலிகைகள் அடங்கிய ஔஷதங்களைக் கொண்டு சிறந்த முறையில் சிகிச்சை அளிக்கப்படும்.

# இ. எம். சித்த ஆயுர்வேத வைத்தியசாலை

பிரதான வீதி, காரைதீவு.

தொடர்பு கொள்ள :

வைத்தியர். திருமதி. எம். பத்மநாதன் (டி.ஏ.எம்)


பதிவு இல : 9139

☎ 067-50629

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# AM Jewelers

அணங்கிற்கு அழகு கூட்டுவது புன்னகை
அழகுக்கு அழகூட்டுவது பொன்னகை
"அசல்" என்பது புன்னகை
**AM** என்பது அசல்



புத்தம் புதிய நவீன வடிவமைப்புக்கள் !
தரமான பத்தரை மாற்று !!
வாடிக்கையாளர் மனமகிழ்வு
எங்கள் பூரிப்பு !!!
காலம் உணர்ந்த கண்ணிய சேவை.





## தங்க நகை மாளிகை

**Address :**

**S. Amaranath**
**A. M. Jewellery**
**171/4, Sea Street,**
**Colombo-11**





T.P : 01-330746 01-430320

*பொன்விழாக் கட்டுரைப்போட்டியில் மேற்பிரிவில் முதலாமிடம் பெற்ற கட்டுரை*

# "விபுலானந்தா அன்றும் இன்றும்"


**செல்வி. அ. கல்பனா**

**தரம் - 12 (விஞ்ஞான பிரிவு)**


இமிழ் கடல் உலகில் அமிழ்தென சிறந்த தமிழின் பெருமையை தரணிக்கு உணர்த்தியவன் முத்தமிழ் முனிவன் விபுலானந்தன். இப்புகழ் பெற்ற விபுலானந்த அடிகள் மீன்பாடும் தேனாடாம் மட்டுமா நகரின் தெற்கே செந்தமிழும் செந்நெல்லும் சிறந்து விளங்கும் காரேறும் மூதூராம் காரைதீவினிலே அவதரித்தது உலகறிந்த விடயம். அப்படிப் புகழ் பெற்ற அடிகளாரின் புனிதநாமத்தை தாங்கி இன்று தன்னிகரற்று தலைநிமிர்ந்து நிற்கும் எம் பாடசாலையின் வரலாற்றின் சில ஏடுகளைப் புரட்டிப் பார்த்தால்.....

இலங்கைக்கும் ஐரோப்பியர்களின் வருகையினால் திண்ணைப் பள்ளிக் கூடங்கள் மறைந்து பாடசாலை முறை ஆரம்பமானது. இதன் நிமித்தம் எம் காரைதீவுக் கிராமத்துக்கும் ஒரு பாடசாலையின் தேவை உருவாகியது. எனவே வங்கக் கடலின் கரையோரத்தில் அமைந்ததுதான் இப்பாடசாலை. காரை மரங்களால் சூழப்பெற்று அடர் காடாய் இருந்த இப்பிரதேசம் மனித நடமாட்டம் மிக குறைந்ததாக காணப்பட்டது. ஒரு சில பகுதிகளில் மட்டுமே மக்கள் வாழ்ந்து வந்தனர். இருப்பினும் இம்மையிலும், மறுமையிலும் பயன்தரக் கூடிய மகத்தான கல்வியின் பெருமையினை கற்றுணர்ந்த ஒரு சில பிரமுகர்களின் விடாப்பிடியான முயற்சியினாலும் பொதுமக்களின் நெற்றி வியர்வை முத்தாய் பனிக்க அந்தக் காட்டு நிலம் அழிக்கப்பட்டு நன்நிலமானது.

மேலும் பாமரனும் பண்டிதனாக வேண்டும் என்ற ஆவலினால் ஆயிரத்து தொள்ளாதயிரத்து ஐம்பதாம் ஆண்டு ஜனவரி மாதம் பதினைந்தாம் திகதி (1950-01-15) கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர் திரு. செ. பொன்னையா அவர்களின் தலைமையில் செயற்பட்ட கிராமப் பிரமுகர்களினால் முன்வைக்கப்பட்ட யோசனைகளின் பிரகாரம் தொன்னோலை கொண்டு வேயப்பட்ட ஒரு கொட்டில் உருவானது. மூன்று மாணவர்களுடனும் ஆறு ஆசிரியர்களுடனும் கடமையாற்றினார். அன்று இப்பாடசாலை கனிஷ்ட பாடசாலையாக இருந்தது.

அன்று முதல் இப்பாடசாலையானது பல்வேறு அதிபர் பெருமக்களின் முயற்சியால் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளரத் தொடங்கியது. இக்கல்லூரியின் முதல் அதிபராக இருந்த திரு.ந.தங்கராஜா அவர்களின் முயற்சியாலும் அவரின் பின் வந்த அதிபர்களான திரு.பீ.இராஜரெட்ணம், திரு.எஸ்.கே. கந்தப்பு, திரு.எம்.ஏ. ஜெபமாலை, திரு.எம்.சச்சிதானந்தம், திரு.யோகம் வேலுப்பிள்ளை, திரு.கோயில் பரம்பில், திரு.ரீ.மயில்வாகனம், திரு.பி. இராஜதுரை, திரு.வீ.ரி.செல்லத்துரை, திரு.சி.நடராஜா, திரு.எஸ்.மகாலிங்கம், திரு.பி.பாக்கியராஜா, திரு.த.சண்முகரெத்தினம், திருமதி.எம்.சத்தியதேவா, திரு.செ.அருள்மொழி ஆகிய அதிபர்களதுவிடாமுயற்சி இப்பாடசாலையை உருவாக்குவதில் முக்கிய பங்குவகிக்கின்றது.

இவற்றில் அதிபர் நடராசா அவர்களின் காலத்திலேயே இப்பாடசாலை துரித முன்னேற்றம் கண்டது. மேலும் அதிபர் சச்சிதானந்தம் அவர்களின் காலமும் பொன்னானது. அதாவது இப்பாடசாலையின் கற்காலம் இவர் காலம் எனலாம். இவரது காலத்தில் மாணவர்கள் நயினாகாடு சென்று செங்கல் வெட்டி அங்கு சூளையில் வேகவைத்து கொண்டு வந்து ஒரு விஞ்ஞான கூடம் கட்டப்பட்டதாக கூறப்படுகின்றது. இவ்வாறு இப்பாடசாலையின் புகழ் எட்டுத் திக்கும் பரவ பல வெளியூர்களிலிருந்து வந்த மாணவர்களுக்காக ஒரு விடுதியும் அமைக்கப்பட்டது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் ஆயிரத்து 1987ல் அதிபர் திரு.பி. பாக்கியராஜா அவர்களின் முயற்சியால் ஆராதனை மண்டபத்துக்கு அடிக்கல் நடப்பட்டது. அத்துடன் இரண்டு மாடிகள் கொண்ட ஒரு கட்டடமும் அடிக்கலிடப்பட்டது. அத்துடன் கணனி அறைக்கும் அடிக்கல் நடப்பட்டதாக கூறப்படுகின்றது.

அத்துடன் அதிபர் திரு. த. சண்முகரெத்தினம் அவர்களது காலமும் மகத்தானதே. அன்று ஒரு சிறு கிணறையே சகல மாணவர்களும் பயன்படுத்த வேண்டியிருந்தது. ஆனால் அதிபரின் உறுதியான முயற்சியின் பிரகாரம் குழாய் நீர் விநியோகம் உட்பட மூன்று மாடிக்கட்டடமும் கட்டப்பட்டது.

இன்று பாடசாலையின் முயற்சிகளில் முன்னிற்பவர் அதிபர் திரு.செ.அருள்மொழி அவர்களாவர். ஒரு கட்டடத்துடன் மிளிர்ந்த இப்பாடசாலையை பன்முகப்படுத்த முயற்சித்த ஒரு அதிபர் எனலாம்.

இவ்வாறு எமது பாடசாலை ஐம்பது வயதை கடந்துவிட்டது. ஆனால் அந்த ஐம்பது வயதில் கொண்ட பெயரோ பல. முதலில் கனிஷ்ட பாடசாலையாவும், சிரேஷ்ட பாடசாலையாகவும், விபுலானந்த மத்திய மகா வித்தியாலயமாகவும் பின் விபுலானந்த மத்திய கல்லூரியாகவும் பெயர் பூண்டுள்ளது. 1960 இல் கலைப்பிரிவும், 1982 இல் விஞ்ஞான, வர்த்தக பிரிவுகளும் ஆரம்பிக்கப்பட்டன.

மேலும் ஓர் முக்கியமான விடயம் எமது விளையாட்டு மைதானமாகும். அடர் காட்டினை அன்று அழித்ததன் பயன் இன்று அம்பாரை மாவட்டத்திலேயே பெரிய மைதானமாக திகழ்கின்றது. இவ்வாறு எம் பாடசாலையின் வரலாறுகளைக் கூறிக் கொண்டே போகலாம்.

இன்றைய காலத்தில் எம்பாடசாலை சகல துறைகளிலும் முன்னிற்பது சகலரும் அறிந்த விடயம். இன்று 1500 மாணவர்களுடனும், 60 ஆசிரியர்களுடனும், பதின்மூன்று கட்டடங்களுடனும் காட்சி தருகின்றது. விபுலானந்தா நினைவு மண்டபம் மூன்று மாடிகளுடனும், கனகரெத்தினம் விஞ்ஞான கூடம் இரண்டு மாடிகளுடனும், ஆராதனை மணடபம், நடராஜானந்தா மண்டபம், பொன்னையா மண்டபம், ஔவை மண்டபம், பெற்றாராசிரிய சங்க மண்டபம் என கூறிக் கொண்டு போகலாம்.

எம் பாடசாலை ஒரு சகலகலா வல்லவன் என்றால் இதில் ஐயமில்லை. சமய நிகழ்ச்சிகள் உட்பட விளையாட்டுத் துறையிலும் பெயர் பெற்றது. இன்று எம் பாடசாலையிலிருந்து அகில இலங்கைவரை பல தேசிய மட்டங்களிலும் கூட மாணவர்கள் மெய்வல்லுனர்களாயிருக்கிறார்கள் என்பது யாவரும் அறிந்ததே. மேலும் தமிழ்த்தினப்போட்டிகள், ஆங்கிலதினப்போட்டிகள் உட்பட பல போட்டிகளிலும் அகில இலங்கை மட்டம் வரை புகழ்பெற்றுள்ளார்கள்.

மேலும் பல்கலைக்கழகம் செல்வோர் வீதத்தை நோக்கும் போது தவறாது பல்கலைக்கழகத்திற்கு மாணவர்கள் தெரிவாகுவதை காணலாம். அத்துடன் நூலக வசதிகளையும் இப்பாடசாலை கொண்டிருப்பதால் மேலதிக விடயங்களை மாணவர்கள் அறியக்கூடியதாயுள்ளது. இதன் பயன் சிலகால இடைவெளியின் பின் கல்விப் பொதுத்தராதரப் பரீட்சையில் எல்லாப் பாடங்களிலும் ஒரு மாணவி அதிவிசேட சித்தியை பெற்று ஓர் சாதனையை நிலைநாட்டியுள்ளார். இதற்கு பிரதியுபகாரமாக தற்போதைய அதிபர் திரு. அருள்மொழி அவர்கள் தங்கப் பதக்கம் அணிவிக்கவிருப்பது ஏனைய மாணவர்களுக்கு ஓர் ஊக்குவிப்பாகும். மேலும் 'வாரம் ஒரு கேள்வி' என்று ஓர் வினா விடை புதிரை ஆரம்பித்தது மாணவர்கள் ஏட்டுக் கல்வியோடு நின்றுவிடாது பொது விடயங்களையும் தேடும் ஆற்றலை தூண்டுகின்றது. இவற்றுடன் ஒவ்வொரு வெள்ளிவாரமும் கூறப்படும் நற்சிந்தனைகளும் பயனுடையதே.

இவ்வாறு இப்பாடசாலைக்கு துணைபுரியும் அனைத்து இதயங்களுக்கும் நன்றியுணர்வாக இப்பாடசாலை நல்ல பிரஜைகளை உருவாக்குகின்றது. மேலும் இப்பாடசாலை ஒரு தேசிய பாடசாலையாக உருவாக அனைத்து உள்ளங்களும் முன்னிற்க வேண்டும். மேலும் இப்பாடசாலையின் புகழ் எங்கும் பரவ உம் உள்ளங்கரைந்த நல்வாழ்த்துக்கள்.

பொன்விழாக் கவிதைப் போட்டியில் ஆரம்பப் பிரிவில் முதலாமிடம் பெற்ற கவிதை

# பொன்விழாவை நோக்கி

செல்வி. கு. கேதுஜா
தரம் - 07.

விபுலானந்தர் பிறந்த மண்ணிலே
விபுலானந்த மத்திய கல்லூரி - இங்கே
பொன்விழாவை நோக்கி செல்கின்றது - எங்கள்
விபுலானந்த மத்திய கல்லூரி.

புத்தாயிரமாம் ஆண்டாம் இரண்டாயிரத்தில்
பொன்விழா நிகழ்ச்சி இடம்பெறுதே
மதிப்பிற்குரிய எங்கள் அதிபராம் அருள்மொழியும்
மதிப்பிற்குரிய கல்லூரி ஆசான்களும்

அறிவுசால் மாணவச் செல்வங்களும் சேர்ந்தே
செல்கின்றனர் பொன்விழாவை நோக்கி.
ஐம்பது ஆண்டுகள் பூர்த்தியாகும் இவ்வாண்டிலே
கல்விமழை குறைவில்லாமல் பொழியட்டும்

கல்வித் தெய்வமாம்கலை வாணியும்
தங்கியிருப்பாள் நூறாண்டு
கல்விக்கு புகழ்பெற்ற இடமாம்
விபுலானந்த மத்திய கல்லூரி வளம் பெறுக.

முத்தமிழ் வித்தகனின் சத்தான வரங்கள்
இன்னும் நூற்றாண்டு கிடைக்க வேண்டும்
என்றும் அழியாத செல்வமாம் கல்விச்செல்வம்
நன்றே அமையட்டும் நூறாயிரமாண்டுகள்

கல்விக்கு பெயர்பெற்ற இடம்போல
வீரமும் விளங்கட்டும் புகழோடு
அழியாத செல்வங்களை பெற்றிருக்கும் அன்னை
கல்லூரிக்கு என்னவேண்டும் இன்னும்

என்றும் கிடைக்கட்டும் இறையருள்
நன்றே விளங்க வேண்டும் மத்தியகல்லூரி
பொன்விழாவை நோக்கிச்செல்லும் வேளையிலே
கிடைக்கும் அவனருள் நித்தம் நித்தம்.

துன்பமின்றி கல்விமழை பொழியும்போது
வளரட்டும் மாணவச்செல்வங்கள் மேலோங்கி
மாணவர்களை நல்வழிப்படுத்தும் பாடசாலை
வாழ்க வளர்க நூற்றாண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபத்தோராம் நூற்றாண்டிலே
பொன்விழாவை நோக்கிச் செல்லும் மாணவச் செல்வங்கள்
திளைக்கட்டும் நூறாண்டு
அழியாத செல்வங்கள் பெற்று.

குறைவிலாத அரும்பெருஞ் செல்வங்களை பெற்று
வாழவேண்டும் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள்
மிலேனியம் ஆண்டிலே பொன்விழாவை நோக்கி
செல்கின்ற பாடசாலையாம் மத்திய கல்லூரி.

புகழ்பெற்று விளங்கட்டும் காரைதீவில்
பொங்கும் வங்கக்கடலை அண்மித்துள்ள
இக்கல்லூரியை வாழ்த்துவோம்
நூறாண்டுகாலம் வாழ

கலைவாணியின் இருப்பிடம் இதுவென்று
அறிந்தனர் ஆசான் பலர்.
இக்கல்லூரியில் குடிகொண்ட கலைவாணியை
துதிப்போம் நூறாண்டுகாலம் வாழ

இக்கல்லூரியின் ஸ்தாபகராம் ஜே.பி பொன்னையா அவர்களை
மறவோம் மறவோம் வாழ்நாள் முழுவதும்
மாணவர்க்கு நல்லறம் கற்பித்த நல் ஆசான்களை.

*பொன்விழாக் கவிதைப் போட்டியில் இடைநிலைப் பிரிவில் முதலாமிடம் பெற்ற கவிதை*

# புத்தாயிரத்தில் புகும் எமது கல்வியகம்

செல்வி. ந. லாவண்ணியா
தரம் - 09.

மிலேனியம், புத்தாயிரம்,
இரண்டாயிரம், இந்த ஆண்டின் நாமங்கள்
எதிர்வரும் ஆண்டுத் துவக்கம்
இருபத்தோராம் நூற்றாண்டு
எங்கள் விபுலானந்தாக் கல்லூரி
பொன்விழாவுக்கு எழுந்து நிற்கின்றது
எத்தனையோ நெளிவு சுழிவுகளை
ஐம்பதாண்டிலும் கடந்து வந்து
பௌதீக வளங்கள், மாடிக்கட்டடங்கள்
சௌகரியச் சுகிப்புப் படிமங்கள் தாங்கி
புத்தாயிரத்தில் புகுந்து,
எங்கள் மனங்களில் பூத்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரைதீவின் கல்விநிலவாய்,
கருத்தலின் விடிவெள்ளியாய்,
ஓங்கி எழுந்து நிற்கும் அறிவு மூலிகையாய்
வீங்கிப் பருத்து விளைநிலத்தின் பசுமையாய்
அரசோச்சும் எங்கள் கல்லூரியை வாழ்த்துவோம்.
மாணவ முத்துக்களின் வெண்மை உடைக்குள்,
பேணப்படும் இனிய ராகங்களின் சோடனை
ஆசிரிய மணிகளின் அறிவு வெளிச்சத்தில்
பாசத்தின் பகிர்வில் பளிச்சிடும் பெறுபேறு,
ஆசைக் கனவுகளின் அந்தரங்கம் அறிந்து
வீசி விளையாடி வியப்பூட்டும் எங்கள் பூமி
நெய்தல் நிமிர்ந்து வாரியின் ஒலியைக்
கைக்குள் அடக்கி கனத்த இந்தக் கையால்
பெருக்கி, கூட்டி விடைகளை விரித்து,
விண்ணியல் வரைக்கும் நீட்டிய பெருமையில்,
புத்தாயிரத்தில் புகுந்ததெம் கல்வியகம்.
சொத்துக்கள் திரண்ட சுகமான கணிப்பில்
எழுந்து, அடக்கமாய் அசையாத சேவையை
ஊருக்களிப்பதால், உலகமேவியப்பதாய்,
தேரின் கலைநயத் தேடலாய் உலாவரும்
பல்கலை மனிதரைப் பயிற்றும் பாத்திரம்
எவரெவர் வரினும் சேவையும் பணவும்
கவனமும், கற்றுத் தம்மை உயர்த்தினார்.
நம்மவர் உயர்ச்சியில் நாளும் கண்ணியம்
செம்மைகள் பொலியச் சீர்செய்த மண்ணியம்
கல்லும், மண்ணும், மரமும், சாந்தும்
பொதிந்து எழுந்த கலவையுள் விளங்க,
கல்வித் தூரிகை உரசிய சித்திரம்.
கவிந்தெழு நிற்கும் ஆசிரியப் பரம்பரை,
தங்களை தேய்த்துச் சந்தனக் கட்டையால்
எங்கள் மனங்கள் மணக்கப் பூசுவர்.
வாழ்வும், வளமும் இவர்க்கல்லே எமக்கே.
கீழ்ப்படிவு, ஒழுக்கம், சீர்மை, தூய்மை
அனைத்தும் தனக்குள் அடக்கி இறுக்கிய
கல்விக் கூடத்தின் பொன்விழாப் பொலிவும்,
நவீன நூற்றாண்டில் இணையவும்,
சத்தான அடைவுகள் தனித்தன்மை தாங்கி
இத்தரை போற்ற இனிதே வாழிய
எங்கள் கலையகம் - மங்காப் புகழோடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பொன்விழாக் கவிதைப் போட்டியில் மேற்பிரிவில் முதலாமிடம் பெற்ற கவிதை*

# நூறாண்டு வாழ வாழ்த்துகிறேன்!

செல்வி. சி. பகீரதி
தரம் - 13 (விஞ்ஞானப்பிரிவு)

கண்ணகைக் காவல் அருளாலே கனத்த கஷ்டம் துயர்மாய
எண்ணம் யாவும் ஈடேறி இன்பச் சுனைக்குள் நாம் தோய
தண்ணீர் சுரக்கும் ஊற்றாகத் தனது எழுச்சி நிதம் பாய
பண்ணின் பசைக்குள் அப்பிநின்ற விபுலானந்தன் பெயர் பேச.....

காலைக்கதிரின் ஒளிக்கீறும், நீலக்கடலின் வெண்பட்டும்
சீலையாக உடுத்த மங்கை ஓலைக்குடிலில் பிறப்பெடுத்து
மாலை, காப்பு, அட்டிகை, பொன் ஒட்டியாணம் பூட்டியின்று
சீலம் பெற்றுப் பொன்விழாவாம் புனிதத்தீர்த்தமாடுகிறாள்.

கிழக்கே எகிறுங் கடலலைகள் பொருளாகக் கீதமிசைக்குங்கூடமிதில்
பாதம் பட்டோர் புனித முற்றார் பயிலுங்கலைகள் பதியுமிங்கே
வேதம் சொல்லும் பொருளுமிணைந்தோதப் பக்தி ஏறுதல் போல்
நாதத்துள் நற்சடங்கு நடம், நளினம் வளர நூறாண்டு.

குடலைப் பயிரின் மதர்ச்சியிலே திடமாய்க்கடமை, கண்ணியத்தை
விடலைப் பருவத்தோர் வாங்கி விளைவை நிறைவின் அறுவடையாய்
உடைமையாக்கி, உயிர்வாழ்வில் உலகின் பாகமெலாம் பரப்பத்
தடயம் பதித்த தனித்தன்மை பொலிந்து வாழ்க நூறாண்டு.

''கூமர்'' சேர்த்து தேன்வார்க்கும் தேனிச்சேவை ஆசிரியர்
நாமத்துள்ளே இவளடக்கம், இவளுள் அவரின் தொழிலடக்கம்
ஆமைப்படிமம் கல்வியிலே படைத்தல், காத்தல், அருளலெலாம்
நாமும் பெற்று நற்பேற்றில் நடனம் புதுக்க வாழியவே

கெம்பீரத்தின் நிமிர்மாட்சி, காரைதீவின் அரசாட்சி
நம்மாலென்றுமிவள் உயர்ச்சி, நாளும் நிமிரச்சங்கற்பம்
சும்மா செய்து பிழைப்பில்லை, சூரிய சக்தியாய் எறித்து
இம்மாதெழுச்சி பெற மிளிர்வோம், இதயப் பூங்கா மணம் வீச

கேள்வித்துடிப்பில் கால்பதித்துக் கீழோரெல்லாம் மேலோராய்
வாழ்வியலுயர்த்தும் ஏணிகளாய், கரையைக் காட்டுந் தோணிகளாய்
சாளும் பொழுதுங்கற்பித்து மனித நூல்கள் புதுப்பித்தல்
ஆளும் அறிவு வளர ஆசிரியர் வளத்தால் வாழிய நீ

கைம்மாறெதுவும் வாங்காமல் கணக்கு எழுதிக் கேளாமல்
தைமாதத்தில் கலைத்திட்டம் கருத்திலெடுத்து மார்க்கழிக்குள்
பம்மாத்தயாராதெம்முள்ளே நுழைந்து பரீட்சைப் பெறுபேற்றால்
அம்மா அடைவுள் அடங்குமுந்தன் தாயே வளர்க நீ

கொக்கின் துநிறச் சீருடை குழுமும் குலவணைப்பில்
தக்கபடி சிக்கல் போக்கித் தளைந்து அறிவுப்பாலூட்டித் திக்குத் தோறும் தவழவிட்ட
பொன்விழா, கவிதை வரி
பக்கத்திருத்தி மெட்டுட்டிப் பலநூறாண்டு பரிணமிப்பாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவனையாளர்களை பங்குடன்
கவர்ந்து பல்வேறு சேவைகளை
வழங்கும்

# காரைதீவு ப.நோ.கூ.சங்கம்

1. நுகர்ச்சி சேவை
2. மலிவான விலையில் மாதிரிக்கடை விற்பனை சேவை
3. ஒப்பந்த வேலை.
4. வாகனங்கள் சேவை (லொறி, ஆட்டோ
5. கதிரை, பீங்கான்,கூரை சேவை.
6. விவசாய உற்பத்திப் பொருள் கொள்வனவு சேவை.

காரைதீவு ப.நோ.கூ.சங்கம்,
பிரதான வீதி, காரைதீவு.
தொ.இல : 067-29483

உங்களுக்குத் தேவையான பாடசாலை
உபகரணங்கள், அனைத்து வகை காகிதாதிகள்,
துல்லியமான போட்டோ பிரதிகள், ரோணியோ
மற்றும் அச்சடிப்பதற்கு தேவையான மைவகைகள்
போன்ற அனைத்துப் பொருட்களுக்கும்
நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

# National Palace


Main Street, Sainthamaruthu-06.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உச்சங்களை எட்டி நட்சத்திரங்களைத் தொட உங்கள் குழந்தைக்கும் ஒரு வாய்ப்பளியுங்கள்

ஹற்றன் நஷனல்

# சிங்கிதி பத்தும்

## சேமிப்பு சீட்டிழுப்பு 2000

**40** புலமைப்பரிசில்கள் ஒவ்வொன்றும் ரூ.100,000/- பெறுமதியானவை மற்றும் ரூபா. 2 மில்லியன் பெறுமதியான பரிசுகள்

பத்தாயிரம் தொழிநுட்பம் புதிய பரிணாமங்களொடுக்கும். இதனோடு சிறப்புத் தேர்ச்சிகளுக்கான தேவையும் இயல்பாகவே அதிகரிக்கும். இன்னும் பல்வேறு சவால்களுக்கேற்ப மாற்றங்களுக்கு முகங்கொடுக்க உங்கள் குழந்தையும் தயாராக இருக்க வேண்டும். இவற்றை மனதிற் கொண்டு ஹற்றன் நஷனல் சிங்கிதி பத்தும் சீட்டிழுப்பு ஓர் அவசரத் தேவையில் அக்கறை காட்டியது. சிறந்த கல்வியறிவை அத்திவாரமாகக் கொண்டு உங்கள் குழந்தையும் நட்சத்திரங்களைத் தொடுவதற்கு

**20** புலமைப்பரிசில்கள் ஒவ்வொன்றும் ரூ.100,000/- பெறுமதியானவை ஆண்டின் மத்தி மற்றும் ஆண்டிறுதி மாபெரும் சீட்டிழுப்புக்களில் ஒவ்வொரு சீட்டிழுப்பிற்கும்.

ஒவ்வொரு வெற்றியாளருக்கும் ரூ.100,000/- அவரது கணக்கில் வைப்பிலிடப்படும். புலமைப் பரிசிலுக்கான வட்டி மாதாந்தம் செலுத்தப்படும். ரூபா 100,000/- பெறுமதியான தொகையை குழந்தை 18 வயதை அடையும் போது மீளப் பெறலாம்.

**20** கவர்ச்சிகரமான பாடசாலை புத்தகப் பைகள்

ஆண்டின் மத்தி மற்றும் ஆண்டிறுதி கிளை மட்டத்திலான சீட்டிழுப்பில் ஒவ்வொரு கிளைக்கும் 20 பைகள்.

## இவை அனைத்தும் ரூ. 50/- ஆரம்ப வைப்புத் தொகைக்கு.

ரூ. 50/- உங்கள் குழந்தையை சிங்கிதி கணக்கு உடைமையாளராக்குகின்றது. அதிலிருந்து உங்களுக்கு இயலுமான போதெல்லாம் சேமித்து வரலாம். ஏனெனில் 2000 ஜுன் 1ம் திகதி தனது கணக்கில் ரூ. 2500/- கொண்டுள்ள கணக்கு வைப்பாளர் ஆண்டு மத்தி கிளை மட்டத்திலான சீட்டிழுப்பிற்கும், மாபெரும் சீட்டிழுப்பிற்கும் தகுதி பெறுவார். 2000 டிசம்பர் 1ம் திகதி கணக்கில் ஆகக் குறைந்த தொகையாக ரூ. 2500/- இருக்குமாயின் ஆண்டிறுதி கிளைமட்டத்திலான சீட்டிழுப்பிற்கும் ஆண்டிறுதி மாபெரும் சீட்டிழுப்பிற்கும் பங்குபற்ற தகுதி பெறுவார்.

**அதிகம் சேமித்தால் - அதிக வாய்ப்புக்கள்** கணக்கு வைப்பாளர்கள் ரூ.2500/- இன் பெருக்கங்களை தமது கணக்கில் 2000 ஜுன் 1ம் திகதியன்று மற்றும் டிசம்பர் 1ம் திகதியன்று கொண்டிருப்பார்களாயின் ரூ. 2500/-யின் பெருக்கங்களுக்கு மேலதிக வாய்ப்புக்களை பெறுவார்கள்.

இவையனைத்துப் பரிசுகளையும் இன்னும் ரூ.540 இலட்சங்களையும் வெல்லுங்கள்.

ரூ. 10,000/- மேல் தமது கணக்கில் கொண்டுள்ள சிங்கிதி கணக்கு வைப்பாளர்கள் ஹற்றன் நஷனல் பத்தும் விமன 2000 சேமிப்பு சீட்டிழுப்பிலும் பங்குபற்றி ரூ. 540 இலட்சத்துக்கு மேற்பட்ட பரிசுகளையும் வென்றெடுக்க தகுதி பெறுவார்கள்.

ஹற்றன் நஷனல் வங்கி
உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி
இல. 24, பொலிஸ் நிலைய வீதி,
கல்முனை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பொன்விழா பொலிவுற்று மணம் வீச எனது வாழ்த்துக்கள்

முன்னேறிக் கொண்டுவரும் கணனி யுகத்தில்
உங்களுக்குத் தேவையான கணனி சம்பந்தமான அச்சு
வேலைகளை செய்வதற்கு நீங்கள்
நாடவேண்டிய இடம்

# Nithe Computer Land

உடையார் வீதி, காரைதீவு-02.

- ***Computer Printing***
- ***Stencil Cutting***
- ***Racing Printing***
- ***Scanning***



மேற்குறிப்பிட்ட வேலைகளுடன் திருமண அழைப்பிதழ், மரண அறிவித்தல், புத்தகங்கள்,உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான Project வேலைகள், பல்கலைக்கழக மாணவர்களுக்கான ஒப்படை, விளம்பரங்கள் போன்ற சகல விதமான வேலைகளையும் காலதாமதமின்றி செய்து தரப்படும்.

**Contact to :** Arunasalam Nithileswaran,
Udayar Road,
Karaitivu-02.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைதீவு விளையாட்டுக் கழகத்தினர் வாழ்த்துகிறார்கள்

**வித்தகர் விபுலானந்தர் பெயரிலமைந்த கல்லூரியின் பொன்விழா வைபவம் மங்களமாய் அமையட்டும்.**

- கிரிக்கட், பூப்பந்து, கால்பந்து, எல்லே, கரப்பந்து என்பவற்றில் திக்கெல்லாம் புகழ்பரப்பி வெற்றி வீரனாய்த் திகழும் எமது கழகத்தில் இணைந்து விளையாட்டு மூலம் ஒருமைப்பாடு காண உங்களையும் அழைக்கின்றோம்.

- வாழ்வின் மக்கள் கூடும் எந்தவைபவமாயினும் எங்களிடம் நாற்காலிகள், கூடாரங்கள் உண்டு.

- மக்களின் அறிவுப்பசி தீர்க்க அருமையான நூலகம். எவ்வித கட்டணங்களும் இல்லை.

## நீங்கள் நாடவேண்டிய இடம்

**இயற்கை எழில்கொஞ்சும் ஏரிக்கரையில் அமைந்த**

# KARAITIVU SPORTS CLUB
# &
# KARAITIVU COMMUNITY CENTRE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Academic Achievement
# G.C.E. (O/ L)Examination Analysis

**Institution Established 0n : 15-01-1950**
**Sat For the G. C. E. (O/L) for the first Time : December 1955**

| Year | No. Sat | No. Pass | Names of the Student | Best Result |
|---|---|---|---|---|
| 1955 | 07 | 04 | Data is not clear | |
| 1956 | 15 | 04 | | |
| 1957 | 16 | 05 | | |
| 1958 | 30 | 12 | | |
| 1959 | 45 | 18 | | |
| 1960 | 40 | 16 | V. Thirugnasampanthan | 4C, 1S |
| 1961 | 33 | 09 | K. Kathiresan | 1D, 2C, 4S |
| 1962 | 45 | 16 | K. Lillymalar | 5C, 1S |
| 1963 | 33 | 12 | S. Annamma | 1D, 2C, 4S |
| 1964 | 28 | 15 | A. Vasanthathevy | 1D, 4C, 3S |
| 1965 | 71 | 24 | C. Ananthaledchumy | 3C, 4S |
| 1966 | 34 | 14 | A. Thirunavukkarasu | 1D, 3C, 2S |
| 1967 | 33 | 11 | P. Kamalaambigai | 1D, 3C, 2S |
| 1968 | 38 | 27 | K. Muthulingam | 4C, 3S |
| 1969 | 76 | 30 | K. Muthulingam | 1D, 5C |
| 1970 | 79 | 53 | A. Saththiyavathi | 1D, 4C, 2S |
| 1971 | 56 | 35 | I. C. Placid Vimalarajan | 1D, 5C, 1S |
| 1972 | 70 | 36 | K. Parimala | 1D, 5C. 1S |
| 1973 | 84 | 61 | M. Sivayogarasa | 2D, 4C. 2S |
| 1974 | 106 | 59 | P. Palasuntharam | 2D, 3C, 3S |
| 1975 | 66 | 35 | S. Santhirakanthan | 2D, 5C, 1S |
| 1976 | 169 | 97 | V. Sathiyamoorthy | 3D, 2C, 2S |
| 1977 | Cyclone | - | --- | ---- |
| 1978 | 173 | 110 | T. Nesarani | 6D, 1C, 1S |
| 1979 | 156 | 78 | K. Elil Rajani | 5D, 3C |
| 1980 | 113 | 51 | T. Gowrikanthan | 2D, 5C, 1S |
| 1981 | 88 | 38 | R. Wilson Kamalarajan | 6C, 1S |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| Year | No. Sat | No. Pass | Names of the Student | Best Result |
|---|---|---|---|---|
| 1982 | 131 | 70 | T. Sutharsan | 5D, 2C, 1S |
| 1983 | 144 | 82 | S. Vasanthy | 4D, 4C |
| 1984 | 136 | 98 | T. Gnanavinthan | 5D, 3C |
| | | | V. Jeevaranee | 5D, 3C |
| | | | K. Rethnarathy | 5D, 3C |
| 1985 | 172 | 121 | S. Premakanthan | 3D, 5C |
| | | | A. Subakaran | 3D, 5C |
| 1986 | 166 | 80 | T. Kangatharan | 8D |
| 1987 | 162 | 88 | V. Gamini Yayanath | 5D, 3C |
| | | | V. Niranjanathas | 5D, 3C |
| | | | P. Rasamohan | 5D, 3C |
| 1988 | 126 | 67 | K. Nagamany | 5D, 1C |
| | | | M. Thavanayagam | 5D, 1C |
| 1989 | 162 | 78 | M.A. Ajentha | 7D, 1C |
| 1990 | 103 | 68 | S. Lohendraraj | 6D, 2C |
| | | | G. Suthagini | 6D, 2C |
| | | | R. Vathsala | 6D, 2C |
| | | | M. Zarmila | 6D, 2C |
| 1991 | 148 | 65 | S. Ilango | 4D, 2C |
| 1992 | 167 | 94 | S. Subajini | 6D, 1C. 1S |
| 1993 | 169 | 89 | V. Varothayan | 4D, 3C, 1S |
| 1994 | 151 | 76 | A. Pratheepan | 6D, 2C |
| 1995 | 147 | 75 | V. Tharsinithevy | 7D, 1C |
| 1996 | 129 | 77 | M. Thamaraivathani | 4D, 4C |
| 1997 | 151 | 124 | T. Sangeetha | 7D, 1C |
| 1998 | 150 | 86 | V. Sureshkumar | 7D, 1C |
| | | | R. Rathika | 7D, 1C |
| | | | V. Thadchayani | 7D, 1C |
| 1999 | 125 | 119 | M. Thanusiya | 10D |

**N.C.G.E. Results**

| | | |
|---|---|---|
| 1975 | P. Santhini | 3A, 3B, 4C |
| 1976 | A. Varatharajan | 6A, 3B. 1C |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| Year | Physical Science | | | Bio Science | | | Arts | | | Commerce | | | Total | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | No. Sat | No. Pass | No. Qual | No. Sat | No. Pass | No. Qual | No. Sat | No. Pass | No. Qual | No. Sat | No. Pass | No. Qual | No. Sat | No. Pass | No. Qual |
| 1980 | 05 | 03 | 02 | 11 | 02 | 01 | - | - | - | 06 | 03 | 02 | 22 | 08 | 05 |
| 1981 | 06 | 03 | 02 | 16 | 04 | 01 | 03 | 01 | - | 08 | 06 | 01 | 33 | 14 | 04 |
| 1982 | 11 | 04 | - | 34 | 03 | 02 | 29 | 15 | 06 | 10 | 06 | 03 | 84 | 28 | 11 |
| 1983 | 03 | 01 | - | 13 | 01 | 01 | 14 | 08 | 03 | 04 | - | - | 34 | 10 | 04 |
| 1984 | 03 | 01 | - | 13 | 01 | 01 | 14 | 08 | 03 | 04 | - | - | 34 | 10 | 04 |
| 1985 | - | - | - | - | - | - | 09 | 06 | 03 | - | - | - | 09 | 06 | 03 |
| 1986 | 05 | 01 | 01 | 36 | 08 | 05 | 11 | - | - | 06 | - | - | 58 | 09 | 06 |
| 1987 | 06 | 04 | 03 | 24 | 08 | 03 | 20 | 13 | 10 | 13 | 09 | 09 | 63 | 34 | 25 |
| 1988 | 06 | 04 | 02 | 22 | 11 | 05 | 24 | 17 | 08 | 27 | 19 | 12 | 79 | 51 | 27 |
| 1989 | 02 | - | - | 14 | 09 | 08 | 23 | 11 | 03 | 20 | 10 | 02 | 59 | 30 | 13 |
| 1990 | 03 | 02 | 01 | 19 | 07 | 04 | 22 | 09 | 07 | 17 | 15 | 13 | 61 | 33 | 25 |
| 1991 | 02 | 01 | 01 | 16 | 03 | 01 | 14 | 05 | 05 | 17 | 16 | 13 | 49 | 25 | 20 |
| 1992 | 04 | 04 | 02 | 14 | 10 | 05 | 30 | 17 | 12 | 26 | 17 | 12 | 74 | 48 | 31 |
| 1993 | 07 | 04 | 01 | 13 | 11 | 07 | 32 | 17 | 11 | 10 | 06 | 03 | 62 | 38 | 22 |
| 1994 | 05 | 02 | - | 19 | 15 | 05 | 27 | 19 | 14 | 16 | 11 | 09 | 67 | 47 | 28 |
| 1995 | 16 | 05 | 04 | 14 | 05 | 03 | 26 | 21 | 18 | 33 | 29 | 20 | 89 | 60 | 45 |
| 1996 | 22 | 10 | 09 | 14 | 07 | 04 | 34 | 27 | 15 | 32 | 27 | 21 | 102 | 71 | 49 |
| 1997 | 15 | 10 | 04 | 16 | 13 | 06 | 24 | 23 | 18 | 23 | 16 | 12 | 78 | 62 | 40 |
| 1998 | 11 | 07 | 06 | 20 | 17 | 09 | 49 | 40 | 25 | 25 | 19 | 08 | 105 | 83 | 48 |
| 1999 | 09 | 09 | 03 | 18 | 11 | 05 | 41 | 26 | 13 | 37 | 24 | 11 | 103 | 70 | 32 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# Admission to various Universities from our School

| S.No | Year 2000 | Name of Student | Faculty |
|---|---|---|---|
| 01. | 1980 | N. Kugathasan | Physical Science |
| 02. | 1980 | P. Thayanithy | Physical Science |
| 03. | 1980 | S. Thiruchelvam | Commerce |
| 04. | 1981 | T. Perinparajah | Commerce |
| 05. | 1981 | T. Nesarani | Biological Science |
| 06. | 1981 | T. Kirinivasan | Physical Science |
| 07. | 1981 | N. Kalaimathy | Physical Science |
| 08. | 1982 | S. Pusparani | Dental |
| 09. | 1982 | V. Vasanthathithan | Arts |
| 10. | 1983 | S. Shanthiravasanthy | Physical Science |
| 11. | 1983 | K. Maheswaran | Biological Science |
| 12. | 1983 | K. Jeyagowri | Biological Science |
| 13. | 1983 | R. Rajini | Biological Science |
| 14. | 1983 | M. Kundrakumaran | Commerce |
| 15. | 1983 | K. Thevamohan | Commerce |
| 16. | 1983 | T. Perabaharan | Arts |
| 17. | 1983 | S. Thevathas | Arts |
| 18. | 1983 | K. Yogeswaran | Arts |
| 19. | 1983 | T. Gowrikanthan | Medicine |
| 20. | 1983 | S. Manimaran | Arts |
| 21. | 1983 | T. Thangavel | Arts |
| 22. | 1983 | S. Thevarajah | Arts |
| 23. | 1983 | P. Pathmanathan | Arts |
| 24. | 1983 | R. Kalaivani | Arts |
| 25. | 1983 | T. Shanthakumary | Arts |
| 26. | 1984 | M. Kalamany | Arts |
| 27. | 1985 | M. Sotheeswary | Arts |
| 28. | 1986 | R. Rajeswary | Biological Science |
| 29. | 1987 | P. Kugathasan | Commerce |
| 30. | 1987 | T. Gnanavinthan | Engineering I |
| 31. | 1987 | R. Ravichandran | Engineering I |
| 32. | 1987 | T. Sriram | Physical Science |
| 33. | 1988 | K. Thadchanamoorthy | Physical Science |
| 34. | 1988 | V. Jeevarani | Medicine |
| 35. | 1988 | V. Kulendran | Commerce |
| 36. | 1989 | T. Kangatharan | Medicine |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# PREMISES OF KM / VIPULANANDA CENTRAL COLLEGE
## KARAITIVU




Scale: 40 Feet to one Inch

Extent - 02 A 02 R 03 P

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Sornam JEWELLERS

## கல்முனை நகரிலே !

- ❖ பலரும் பாராட்டும் பாரம்பரிய அணிகலன்களின் எழில் அரங்கம்
- ❖ பொன்னொளிச் சுடர் பரப்பும் புதுவித நகைகளின் புகழரங்கம்
- ❖ கண்களைக் கவரும் கனக நகைகளின் காட்சியரங்கம்
- ❖ நம்பிக்கையூட்டும் நாணயமுடைய நகையரங்கம்
- ❖ தரமிக்க தங்க நகைகளைத் தாராளமாகத் தரும் தன்னிகரில்லா அரங்கம்



*சொக்க வைக்கும் தங்க நகை உலகின் சொர்க்காபுரி*

Sornam JEWELLERS

# சொர்ணம் ஜுவலர்ஸ்

# සොර්ණම් ජුවලර්ස්

**Batticaloa : 33, Main Street, Tel.: 065-22715**
**Kalmunai : 212, 214, Main Street, Tel.: 067-29121, 29860**
**Kalmunai : 59, Batticaloa Road, Tel.: 067-20191.**

GOLDENE OFFSET, 105, MAIN STREET, KALMUNAI. TEL.: 067-20617

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org